வரு. 76 இல. 04 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2024 ஜனவரி 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 28 Sunday, 2024







/ Thinakaran.lk / ThinakaranLK



04 பெலியத்தையை உலுக்கிய பாதாள உலகக் கொலைகள்



05 வரிச்சுமையை குறைக்க விரைவில் நடவடிக்கை



12 சனத் நிஷாந்தவின் மரணம் 2024 இல்! ஏற்கனவே கணித்த ஜோதிடர்



24 இலங்கை கிரிக்கெட்டும் யாப்பு மாற்றமும்

## இந்திய உயர்ஸ்தானிகர்–அமைச்சர் பந்துல சந்திப்பு



இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தையொட்டி இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்த 'ஷிரிங்கர் எய்ட் கிளாசிக்கல் இந்திய நடன மரபுகளின் இணக்கம்' என்ற இசை நிகழ்ச்சி அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் உரையாடிய போது...

IMF மறுசீரமைப்பு செயல்முறையின்

## கண்காணிக்கும் பொறுப்பு சாகலவிடம் ஒப்படைப்பு



சர்வதேச நாணய நிதியத்தில் நாட்டின் மறுசீரமைப்பு செயற்பாடுகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்பதை கண்டறியும் பொறுப்பு தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு பிரதானி பீட்டர் ப்ரூவர் மற்றும் குழுவினர், இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்த செயற்பாடுகளில் திருப்தியடைவதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஆகியோருக்கு அறிவித்துள்ளனர்.

விரயம், மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது சர்வதேச நாணய நிதியத்தால் (அரசு கண்டறிதல்) அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட முக்கிய பாத்திரமாகும். சர்வதேச நாணய நிதியத்தின் இந்த நோக்கங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படுமா? என்பதை 06

## 76ஆவது சுதந்திரதின நிகழ்வில் சிறப்பு அதிதியாக தாய் பிரதமர்



இலங்கையின் 76ஆவது சுதந்திர தின விழாவில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் (Srettha Thavisin) சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். இந்நிலையில், தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் (Srettha Thavisin) எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது அவரது மற்றொரு நோக்கமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் (Srettha Thavisin) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

2024ஆம் ஆண்டின் தேசிய சுதந்திர தின விழாவில் கலாசார பேரணிகளின்றி முப்படையினரின் அணிவகுப்புகள் மட்டும் இடம்பெறும் விதத்தில் காலியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுதந்திர தினத்துக்கு வரும் அதிதிகளுக்கு வழங்குவதற்காக விசேட நினைவு மலரொன்றை தயாரித்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் அதனை நினைவுச்சின்னமாக தயாரிக்குமாறு அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். சிங்களம், 06

# 2024க்குள் துறைமுகத்தில் 20,000 வேலைவாய்ப்புகள்



### சுமார் 15,000 நேரடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



2024ஆம் ஆண்டு இறுதிக்குள் துறைமுக அதிகார சபையுடன் தொடர்புடைய சுமார் 20,000 வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியுமென துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சட்டத்தரணி நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக முனையத்தின் பணிகளையும் அதானி நிறுவனம் பூர்த்தி செய்து வருவதாகவும், 580 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் முனையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பணிகள் நிறைவடைந்ததன் பின்னர், துறைமுகத்திலேயே சுமார் 5,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும், அது தொடர்பாக சுமார் 15,000 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர், அதிகரித்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பெறக்கூடிய விதத்தில் வேலைவாய்ப்புகள் அனைத்தும் தனியார்துறை மூலம் அதிகளவில் உருவாக்கப்படுமென்றும் கூறினார்.

குறிப்பாக, துறைமுக அதிகாரசபை கடந்த வருடம் 90 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதாகவும், அதிலிருந்து ஊழியர் சம்பளம், அரச வரிகள் 06

## நெடுஞ்சாலை விபத்துகள் தடுப்பு நிபுணர் குழுக் கூட்டம் நாளை

### போக்குவரத்து அமைச்சர் பந்துல ஏற்பாடு

கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற 02 விபத்துகளால் உயிரிழப்புகள் ஏற்பட்டதன் காரணமாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை முழுமையாக ஆராய்ந்து தீர்வுகளை முன்மொழிவதற்காக நாளை 29ஆம் திகதி திங்கட்கிழமை விசேட கூட்டமொன்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இவ்விசேட கூட்டத்தை கூட்டுவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் 06


சிறைச்சாலைகளில் இடநெருக்கடி

## அரசுக்கு சொந்தமான 2 கட்டடங்களை சிறைச்சாலைகளாக மாற்ற தீர்மானம்

### அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ



அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு கட்டடங்களை சிறைச்சாலைகளாக மாற்றியமைக்க நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக, அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். 06



06 கச்சதீவு அந்தோனியார் உற்சவம்
இலங்கை – இந்திய பக்தர்கள் 8,000 பேருக்கு இம்முறை அனுமதி

## வட்டி வீதங்களை குறைக்க தவறும் வங்கிகளிடம் விளக்கம் கோரப்படும்



### மத்திய வங்கி தெரிவிப்பு

வட்டி வீதங்களை குறைக்க தவறும் வங்கிகளிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்குமாறும், குறைக்கப்பட்ட வட்டி வீதங்களுக்கமைய வங்கிகளுக்கு வழங்கிய அறிவித்தலின் பிரகாரம் பல வங்கிகள் செயற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஆளுநர், சில வங்கிகள் அதனை நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தார். ஆனால் சில வங்கிகள் அதை இதுவரை கையாளாததால் விளக்கம் கோரியுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் காரணமாக வட்டி வீதங்களை விரைவாக குறைக்கும் நோக்கில் அவ்வாறு செய்துள்ளதாக ஆளுநர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின்

## பொதுச் செயலாளர் பதவிக்கு குகதாசன் சண்முகம் தெரிவு

### பொதுச் சபையில் 112 பேர் ஆதரவு



மட்டக்களப்பு விசேட நிருபர்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தின் படி கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு குகதாசன் 06

## எங்கள் கருத்து...

### சமூக சீரழிவுகள் தொடர இடமளிக்கப்படலாகாது!

நாட்டில் இடம்பெறுகின்ற பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாகவும் சமூக ஊடகங்கள் மீதுதான் மக்கள் குற்றம் சுமத்துகின்றார்கள். சமூக ஊடகங்கள் காரணமாகவே இக்காலத்தில் மக்கள் மத்தியில் பலவிதமான குற்றச்செயல்கள் பெருகியுள்ளதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

சமூக ஊடகம் என்பது 'கடிவாளம் இல்லாத குதிரை' என்பது பொதுவான கருத்து ஆகும். கட்டுப்படுத்துவதற்கு 'கடிவாளம்' இல்லாத குதிரை தறிகெட்டுச் செல்வதைப் போன்று, சமூக ஊடகங்களும் ஒழுக்கவிழுமியங்களை மீறியவாறு சென்று கொண்டிருப்பதையே நாம் காண்கின்றோம்.

சமூக ஊடகங்கள் வாயிலாக நமது மக்களிடம் வந்து சேருகின்ற நல்ல விடயங்கள் மிகச் சொற்பம் என்றே கூற வேண்டும். தீய விடயங்களே அதிகளவில் வந்து சேருகின்றன. சமூகத்துக்குத் தீங்கான விடயங்கள் மக்களிடம் வந்து சேருவதுடன் மாத்திரமன்றி, அவ்வாறான தீயபழக்கவழக்கங்கள் எமது சமூகத்துக்குள் பரவி வருவதையும் காண முடிகின்றது.

பாலியல் குற்றங்கள் பெருகுவதற்கு சமூக ஊடகங்கள் வழியேற்படுத்திக் கொடுப்பதாக பரவலாகக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் உண்மை உள்ளது. தவறான நபர்களுடன் நட்பை ஏற்படுத்தி ஏமாந்து போனவர்கள் அநேகர். உண்மை நட்பென்று நம்பி திருமணமும் செய்து கொண்டு, இறுதியில் தமது வாழ்க்கையையே இழந்தவர்கள் ஏராளம்.

முகநூல் வாயிலான நட்பை நம்பி பெருந்தொகைப் பணத்தை இழந்தவர்கள் பற்றி நாம் ஊடகங்களில் அறிகிறோம். முகநூல் மூலமான தொடர்பினால் 06



06 தனுஷ்கோடி–இலங்கைக்கிடையே 25,000 கோடி ரூபாவில் பாலம்
சாத்தியக்கூற்றை ஆய்வு செய்ய இந்திய மத்திய அரசு தீர்மானம்



06 இராஜாங்க அமைச்சர்
சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியை இன்று

அல்கைதாவுக்கு உதவியதாக

## இலங்கையர் நால்வருக்கு சிவப்பு பிடியாணை



அல்கைதா அமைப்புக்கு உதவியதாக கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களை கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசிங்க நேற்று முன்தினம் (26) சிவப்பு பிடியாணை (Red Notice) பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார். பயங்கரவாத தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கைக்கமைய மேலதிக நீதவான் 06

எம்முடன் இணைந்து பணியாற்ற

## தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரனை வரவேற்கின்றோம்

### சுரேஷ் பிரமேச்சந்திரன்



ஐக்கியத்தை விரும்பும் இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தம்முடன் இணைந்து கைகோர்த்துப் பயணிக்க தாம் வரவேற்பதாக, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாக அதன் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். 06

## மீண்டும் இந்திய முட்டை இறக்குமதிக்கு அனுமதி

### ச.தொ.சவில் 43 ரூபாவுக்கு விற்பனை



மீண்டும் இந்திய முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந்திய முட்டை இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்தும் தீர்மானத்துடன் முட்டை விலை உயர்வால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். 06

# தென்மாநிலங்களைக் குறிவைத்து பிரதமரின் தேர்தல் பயணம்

இந்தியா ஒரு நோக்கு
வாராந்த அலசல்

நந்தவனம் சந்திரசேகரன்





இந்தியாவின் தென்மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மற்றும் தெலுங்கானாவுக்கு இந்தியப் பிரதமர் அண்மைக் காலமாக அரசின் நலத்திட்டங்களை தொடங்கி வைக்க அடிக்கடி வந்து போகிறார். நாட்டின் பிரதமர் என்ற முறையில் வந்து போவதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்கலாம். மக்களவைத் தேர்தல் இன்னும் இரண்டு மாதத்தில் வர இருக்கும் சூழலில் வந்து போவது தான் அவதானிக்கப்பட வேண்டியதாக உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் தென் மாநிலங்களின் மீது இல்லாத அக்கறை இப்போது வரக்காரணம் என்ன? பாரதிய ஜனதா கட்சிக்கு தென்மாநிலங்களில் முக்கியத்துவம் இல்லை என்பதே முக்கிய காரணம். இந்தி பேசும் வடமாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சிக்கு முழு ஆதரவு இருக்கிறது, இந்த ஆதரவை வைத்து மூன்றாவது முறையும் நரேந்திர மோடி பிரதமராக வரக்கூடிய வாய்ப்பும் நிறைய இருக்கிறது. ஆனால் தென்மாநிலங்களின் ஆதரவுடன் அதிக இடங்களை வென்று, கூடுதல் பலத்துடன் ஆட்சியமைக்க வேண்டும் என்பதே பிரதமரின் அரசியல் கணக்காக இருக்கிறது.

கூடுதலாக தற்போது அயோத்தியில் இராமர் கோயிலை கட்டியுள்ளதை வைத்து, மத அடிப்படையில் உணர்வுபூர்வமாகவும் ஆதரவு திரட்ட முயற்சி செய்து வருகிறார். ஆந்திர மாநிலம் ஸ்ரீசத்யசாய் மாவட்டத்தில் அமைந்துள்ள லேபாக்ஷி வீரபத்ரர் கோயிலுக்குச் சென்று பிரதமர் வழிபாடு நடத்துகிறார். புராணக் கதைகளின் படி சீதையைக் கடத்திய இராவணனால் படுகாயமடைந்த ஜடாயு கழுகு விழுந்த இடமே லேபாக்ஷி. இத்தகைய சிறப்பு வாய்ந்த கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் இராமரைப் புகழ்ந்து தெலுங்கில் பாடப்பட்ட சிறப்புப் பாடல்களை பிரதமர் நரேந்திர மோடி கேட்டதுடன் இராமாயணத்தைத் தழுவிய பொம்மலாட்ட நிகழ்வையும் கண்டு ரசித்துள்ளார்.

பிரதமரின் கோடீஸ்வர நண்பர் என்று ராகுல் காந்தி விமர்சிக்கும் அதானியை வைத்து அண்மையில் காங்கிரஸ் ஆட்சியமைத்த தெலுங்கானா மாநிலத்தில் ரூ 12.400 கோடி முதலீடு செய்திருப்பது அரசியல் மட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குஜராத்தை தலைமையிடமாகக் கொண்ட அதானி குழுமம், இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் நிறுவனமாக திகழ்ந்து வருகிறது. பிரதமரின் மறைமுக ஆதரவு நிறுவனம் என காங்கிரஸ் கட்சியால் விமர்சனம் செய்யப்பட்ட அதானி குழுமம், தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைத்த ஒரு மாத காலகட்டத்திலேயே ரூ 12.400 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருப்பதன் பின்னனியிலும் பாரதிய ஜனதா கட்சி இருக்கிறது என்று விமர்சனம் எழுத்துள்ளது.

தமிழ்நாட்டுக்கு கடந்தாண்டு டிசம்பர் மாதம் திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையம் திறப்பதற்கும், ஜனவரி மாதம் சென்னையில் தொடங்கப்பட்ட கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளைத் தொடக்கி வைப்பதற்கும் என பிரதமர் மோடி தமிழ் நாட்டுக்கு இரண்டு முறை வந்து போயிருக்கிறார். இரண்டாவது முறையாக வந்தபோது, ஜனவரி 22 ஆம் திகதி இராமர் கோயில் குடமுழுக்கை முன்னிட்டு இராமாயண காவியத்தில் முக்கியத்துவம் பெற்ற ஸ்ரீரங்கத்திற்கும், இராமேஸ்வரத்திற்கும் சென்று வழிபாடு செய்துள்ளார். இதை முன்னிட்டு தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியினரும், தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியும். கோயில்களை சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். ஏற்கனவே சுத்தமாக இருக்கும் கோயில்களை சுத்தம் செய்து விளம்பரம் தேடுவதாக தமிழ்நாட்டில் இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு இவர்களை நகைச்சுவையாக விமர்சனம் செய்திருந்தார்.


இது பற்றி கவலைப்படாமல் தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமை, நடிகை குஷ்பு போன்றவர்கள் கோயில்களை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர், நரேந்திர மோடியின் இந்தப் புனிதப் பயணத்தை முன்வைத்து அவருடைய கடவுள் பத்தியை பாராட்டி பலரும் பொதுவெளியில் தங்கள் கருத்தைப் பதிவு செய்தனர். பிரதமரின் கேரளப் பயணம்தான் அங்கே பெரியளவில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. கேரளா மாநிலம் காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் மாறி மாறி ஆட்சி செய்யும் மாநிலம். அங்கே பாரதிய ஜனதா கட்சிக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. இந்த நிலையில் இந்துத்துவ தேசியம் பேசும் பாரதிய ஜனதா கட்சி, அண்மைக் காலமாக தன்னை அனைவருக்குமான கட்சியாக முன்னிறுத்த முயன்று வருகிறது. அதன் ஒரு பகுதியாகக் கேரளத்தில் கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் இறங்கி இருக்கிறது.

கேரளாவில் முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி கே.ஜே அல்போன்ஸ், காங்கிரஸ் தலைவர் ஏ.கே.அந்தோணியின் மகன் அனில் அந்தோணி. முன்னாள் டி.ஜி.பி. ஜேக்கப் தாமஸ் ஆகியோர் ஏற்கனவே பாரதிய ஜனதா கட்சியில் கிறிஸ்தவர்களின் முகமாக இருந்து வருகின்றனர். இந்நிலையில் கேரள மாநிலத்தில் உள்ள கிறிஸ்தவ மக்களைக் கவர்வதற்காக சிநேக யாத்திரை என்ற பெயரில் கடந்த டிசம்பர் மாதம் தொடர் இயக்கத்தை பாரதிய ஜனதா நடத்தியது.

அதையொட்டி அக்கட்சியின் மாநிலத் தலைவர் கே.சுரேந்திரன். சீரோ மலபார் கிறிஸ்தவப்பிரிவின் முன்னாள் தலைவர் கர்தினால் ஜோர்ஜ் ஆலஞ்சேரி, வராப்புழா லத்தீன் ஆர்ச் டயோசீஸ் தேவாலையத்தின் பேராயர் ஜோசப் களத்திபரம்பில் ஆகியோரைச் சந்தித்தார். இதன் தொடர்ச்சியாக கடந்த மாத இறுதியில் பிதமர் நரேந்திர மோடி அளித்த கிறிஸ்துமஸ் விருந்தில், பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த கிறிஸ்தவ மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். பிரதமர் அளித்த விருந்தில் பாதிரியார்கள் பங்கேற்றதை கேரள கலாசாரத்துறை அமைச்சர் சஜி செரியன் கடுமையாக விமர்சித்திருந்தார். மணிப்பூர் கலவரத்தை கண்டுகொள்ளாத பாஜக அரசு அளித்த விருந்தில் கிறிஸ்தவ தலைவர்கள் கலந்து கொண்டது முறையல்ல என்று தனது கருத்தை தெரிவித்திருந்தார். கேரள மாநிலத்தில் அரசியலும் மதமும் எப்போதுமே கைகோர்த்து செயல்பட்டு வந்திருக்கின்றன. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வெற்றிகளுக்குப் பின்னால். கிறிஸ்தவர்கள் பின் துணையுடன் கூடிய கேரள காங்கிரஸ் கட்சியும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியும் முக்கியமான காரணிகள் என்று சொல்லலாம். காங்கிரஸ் கட்சி சிறுபான்மையினரைத் தங்களுடன் இணைத்துக் கொள்கிறது என்றால். மார்க்சிஸ்ட் கட்சி ஜாதிய ரீதியிலான வாக்கு வங்கியால் தன்னை வலிமைப்படுத்திக் கொள்கிறது. உயர் ஜாதி நாயர் பிரிவினரின் அமைப்பான என்எஸ்எஸ் எனப்படும் நாயர் சர்வீஸ் சொசைட்டியும் ஈழவர்களின் அமைப்பான ஸ்ரீநாராயண தர்ம பரிபான சங்கம் எனப்படும் எஸ் என் டி பியும் தேர்தல் வெற்றி தோல்விகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சமய நம்பிக்கைகளைப் பாதுகாக்க அரசியல் சாசனம் சிறப்பு உரிமைகளை வழங்கி இருக்கிறது. அதனை பாஜக உள்ளிட்ட இந்து இயக்கங்கள் விமர்சித்து வருகின்றன. இந்துக்களை மதமாற்றம் செய்ய சிறுபான்மையினர் பிரசாரம் செய்வதாகக் குறை கூறியும் மக்களை பெரும்பான்மை, சிறுபான்மை என்று பிரிக்கக் கூடாது என்றும் பிரசாரம் செய்துதான் நாட்டில் பெரும்பான்மையாக உள்ள இந்து மக்களின் ஆதரவை பாஜக பெற்றிருக்கிறது. இதை வைத்தே பல்வேறு மாநிலங்களிலும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அக்கட்சியின் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மத ரீதியான வேறுபாடுகளை மீறி கிறிஸ்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் கோவா, நாகாலாந்து, மணிப்பூர், மேகாலயம், போன்ற மாநிலங்களில் பாஜக வென்றிருக்கிறது. அதே போல வட மாநிலங்களில் இஸ்லாமியர்களிடையேயும் கூட பிரதமர் மோடிக்கு செல்வாக்கு ஏற்படுத்தும் முயற்சியிலும் முனைந்திருக்கிறது. கேரளத்தில் கிறிஸ்தவ வாக்கு வங்கியை குறிவைத்து பாஜககாயை நகர்த்த முற்பட்டிருப்பது கடுமையான விமர்சனங்களையும் எதிர்விளைவுகளையும் ஏற்படுத்துவதில் வியப்பில்லை. காங்கிரஸின் அசைக்க முடியாத வாக்கு வங்கி என்று கருதப்பட்ட கிறிஸ்தவர்கள், இடது ஜனநாயக முன்னணியையும் பாஜகவையும் நோக்கி நகர்வது அந்தத் கட்சியை அதிர்சிக்குள்ளாக்கி இருக்கிறது. சிறுபான்மையினர் என்கிற போர்வையில் எல்லா சலுகைகளையும் பெற்று முஸ்லிம்கள் வளர்ந்து வருவதை கேரளத்தில் கிறிஸ்தவ சமுதாயம் அச்சத்துடன் பார்க்கத் தொடங்கி இருக்கிறது. முஸ்லிம்கள் அதிகம் வாழும் மலப்புரம், கோழிக்கோடு, காசர்கோடு மாவட்டங்களை உள்ளடக்கி தங்களுக்குத் தனியாக மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்கிற இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் இளைஞர் அணியின் கோரிக்கை மிகப்பெரிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. காங்கிரஸ் கட்சி அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் அளித்து ஊக்குவிக்கிறது என்கிற கருத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் அதிகரித்து வந்திருப்பதன் விளைவுதான் அதைக் கட்டுக்குள் கொண்டுவர பாஜகவுடன் கிறிஸ்தவர்கள் சமரசம் செய்து கொள்ள முன்வந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. கேரளத்தைப் பொறுத்தவரை சுமார் 15 சதவீத வாக்குகளை பாஜக பெற்று வருகிறது. ஆனால், அக்கட்சியால் அங்கு எந்த ஒரு தொகுதியிலும் வெல்ல முடியவில்லை. அதற்கு கேரளத்தில் மக்கள் தொகை பகுப்பே காரணம். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அங்கு இந்துக்கள் 54.7 சதவீதம், முஸ்லிம்கள் 26 சதவீதம், கிறிஸ்தவர்கள் 18.4 சதவீதம் உள்ளனர்.

மாநில மக்கள் தொகையில் சுமார் 45 சதவீதத்துக்கும் மேல் சிறுபான்மையினர் உள்ளதால் பாஜக வால் அங்கு வெல்ல முடியவில்லை. மத்திய கேரளமான எர்ணாகுளம், இடுக்கி, பத்தனம்திட்டா ஆலப்புழா, கோட்டையம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் கிறிஸ்தவர்கள் பெருமளவில் உள்ளனர். இந்த மாவட்டங்களில் மட்டும் 42 தொகுதிகள் உள்ளன. தவிர மாநிலம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் பரவலாக உள்ளார். ஏற்கனவே உள்ள இந்து ஆதரவு வாக்குகளுடன் கிறிஸ்தவர்களின் ஆதரவும் கிடைத்துவிட்டால் பல தொகுதிகளில் வென்று விட முடியும் என்று பாஜக திட்டமிடுகிறது. பிரதமார் நரேந்திர மோடியின் கேரளப் பயணத்தின் பின்னணியும் இதுதான். பிளவுபடும் காங்கிரஸ் வாக்கு வங்கியால் பயனடையப் போவது பாரதிய ஜனதா கட்சியா அல்லது மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆளும் இடது முன்னணியா என்பதை வரவிருக்கும் மக்களவைத் தேர்தல் தான் தெரிவிக்கும். பிரதமரின் தென்மாவட்டப் பயணத்தின் நோக்கமும் எந்தளவுக்கு கைக் கொடுக்கும் என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

# 'காலத்தின் கால்கள்' வாசிக்க வேண்டிய நல்லதொரு நூல்




இக்பால் அலி நாடறிந்த நல்ல கவிஞர். இலங்கையின் குறிப்பிடத்தக்க ஓர் எழுத்தாளர். சிறுவர் இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடு காட்டி வருபவர். இவற்றோடு, பிரபல ஊடகவியலாளராகவும் விளங்குகிறார். அவரது முதல் நூல் தொடக்கம் சில நூல்களுக்கு நான் அணிந்துரை வழங்கியுள்ளேன். அவரது இன்றைய வளர்ச்சி கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்நூலுக்கும் அணிந்துரை வழங்குவதில் உவகை கொள்கிறேன்.

இக்பால் அலியின் ஆக்கங்கள் தற்போது பலராலும் சிலாகித்துப் பேசப்படுகின்றன. இலக்கிய, ஊடகத்துறைகளில் அவர் நாடறிந்த முக்கியஸ்தராக விளங்குகிறார். அவர் பற்றிப் பல்வேறு விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் சபா. ஜெயராசா, தமது சிறுவர் இலக்கியம் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"நவீன அறிவியலின் பரிமாணங்களைச் சிறுவருக்கு அறிமுகம் செய்யும் முயற்சிகளும் தமிழில் முன்னெடுக்கப்பட்டன. அறிவியற் செய்திகளைக் கூறவரும்பொழுது அழகியற் பண்புகளைச் சுருக்கிவிடமுடியாது. அவ்வாறான ஆக்கங்களை அதிக கவனத்துடன் மேற்கொள்ளல் வேண்டும். இந்த முயற்சியை மேற்கொண்டவர்களுள் அய்யாசாமி, இக்பால் அலி, வாகரைவாணன், மு. பொன்னம்பலம், கண்டி மு. இராமச்சந்திரன், இ. சிவானந்தன், செ. யோகநாதன், கோகிலா மகேந்திரன், க. குணராசா முதலியோர் தனித்துவம் பெறுகின்றனர்." இன்னொரு விமர்சகரான சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் கோட்டி திருமுருகானந்தம் ஞானம் இதழில் எழுதிய 'ஞானம் – கலை இலக்கியச் சஞ்சிகை கவிதைகள் ஒரு கண்ணோட்டம்' என்ற தமது கட்டுரையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்: "பழைய தலைமுறைக் கவிஞர்களில் எம். ஏ. நுஃமான், சி. சிவசேகரம், சோலைக்கிளி, மேமன் கவி, இக்பால் அலி முதலானவர்களின் கவிதைகள் பாடுபொருள், எடுத்துரைப்பு முறைகளில் தனித்தன்மையுடன் விளங்குகின்றன." இவ்வாறு, தமது படைப்பிலக்கியத் திறனால் பலரது பாராட்டுகளையும் இக்பால் அலி பெற்றுவருகிறார்.

இக்பால் அலியின் படைப்புகள் பற்றி இலங்கையின் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவியர் இருவர், தமது பட்டப்படிப்புக்கு ஆய்வு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எம். எப். எப். பர்ஹத், இக்பால் அலி கவிதைகள் – ஓர் ஆய்வு என்ற தலைப்பிலும், பாத்திமா அஸ்மா இக்பால் அலியின் சிறுவர் இலக்கியப் பணிகள் – ஓர் ஆய்வு என்னும் தலைப்பிலும் சிறந்த ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர். பல்கலைக்கழக மட்டத்திலும் இக்பால் அலி கவனிப்புப் பெற்ற ஒருவராக விளங்குவது மகிழ்ச்சிக்குரியது. இக்பால் அலியின் இலக்கிய முயற்சிகள் தொடர்பாக தமது ஆய்வேடுகளை எழுதிய அந்த இரு பல்கலைக்கழக மாணவிகளையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்ட விரும்புகிறேன். இக்பால் அலியின் இன்னொரு சிறப்பு, பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளமையாகும். அது ஒரு சிறந்த பணி. அத்தகைய ஒரு முயற்சியாகவே இந்நூலும் அமைந்துள்ளது. பலரின் பல்வேறு நூல்கள் பற்றிய சிறந்த மதிப்பீடுகளாக இந்நூலில் உள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன. நூல் மதிப்பீடுகளின் ஊடாகத் தமது கருத்துகளையும் நூலாசிரியர் பதிவு செய்கிறார். எடுத்துக்காட்டாக, எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமாவின் புதையல் தேடி என்னும் நூலின் தலைப்புப் பற்றி அவர் கூறுவன மனங்கொளத்தக்கவை: "இந்நூலின் தலைப்பு மிகவும் அருமையானது. இதனை 'புதையலைத் தேடி; என்று தலைப்பை இட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமென நான் கருதுகின்றேன்." இந்நூலாசிரியர் இந்நூலில் இடம்பெறும் இன்னொரு நூல் பற்றிய மதிப்பீட்டில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "இனவாதம் நல்ல மனிதர்களையும் ஈரமில்லாத மனிதர்களாக மாற்றிவிடும். சிலர் இதனை அரசியல் இலாபத்திற்காகச் செய்கிறார்கள். மனிதர்களிடம் உள்ள மனிதநேயம் கொல்லப்பட்டு மனித மிருகங்கள் உலாவிக்கொண்டிருக்கின்றன. சகவாழ்வு இல்லை. நல்லிணக்கம் இல்லை.

நேர்மை இல்லை. நீதி இல்லை. இளகிய மனங்கள் இல்லை. எல்லாம் இருண்ட மனங்கள் தான் தெரிகின்றன. யுத்தக் கெடுபிடி வாழ்விலிருந்து ஓய்வு பெற்றாலும் ஈரமில்லாத இதயங்களோடு சேர்ந்து வாழவேண்டிய ஒரு துரதிர்ஷ்டமான வாழ்க்கை முறைமையிலிருந்து விடுபடாமல் இருப்பதையும் அதற்கு என்றும் ஓய்வு இல்லை என்பதையும் காட்டுகின்றன கவிஞரின் கவிதைகள்." இது, எம். ஐ. அஷ்ரப்பின் இன்னும் உயிரோடு என்ற கவிதைத்தொகுதிக்கான இக்பால் அலியின் மதிப்பீட்டின் ஒரு பகுதி. இவ்வாறு, தாம் மதிப்பீட்டுக்காக எடுத்துக்கொண்ட ஒவ்வொரு நூல் பற்றியும் சிறந்த கருத்துகளை இந்நூலில் பதிவுசெய்துள்ளார். அது பாராட்டத்தக்க அம்சமாகும். இந்நூல் மூலம் பலரை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் இக்பால் அலி, இயல்பாகவே தம்மையும் சிறப்பாக அடையாளப்படுத்துகிறார். அந்த அடையாளப் படுத்தலின் மூலம், அவர் மேலும் மேன்மை பெறுகிறார். அந்த மேன்மை, மேலும் கலை இலக்கியத்துறைகளிலும், ஊடகத்துறையிலும் அவர் உற்சாகமாக உழைப்பதற்கு ஊக்கத்தைக் கொடுக்கும். எப்போதும் பயனுள்ள நல்லவற்றைச் செய்யவேண்டும் என்ற நல் எண்ணத்தில் உழைக்கும் இக்பால் அலி, மென்மேலும் சிறந்து உயர மனமார வாழ்த்துகிறேன்!

பேராசிரியர் துரை. மனோகரன்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்



# பேச்சால் மட்டுமல்ல செயலாலும் கிண்ணத்தை வெல்வதற்கு 4 ஆண்டுகளுக்கான உரிய செயற்திட்டம்

**வெறும் வார்த்தைகளால் அநேகவற்றை சொல்லலாம்.**
**அதற்கு செயல் வடிவம் கொடுக்க தெளிவான திட்டம் அவசியம்.**

கிரிக்கட் உலகக் கிண்ணத்தை மீள வென்று கொடுப்பதாக இவ்வருட ஆரம்பத்தில் விளையாட்டுத்துறை அமைச்சு நாட்டுக்கு உறுதியளித்தது. அதற்காக 22 அம்சங்கள் அடங்கிய செயற்திட்டம் தற்போது வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

உரிய உட்கட்டமைப்பு, திறமை, குழு மற்றும் பயிற்சி ஆகியவற்றை சரியாக பின்பற்றி, அதற்கான ஆரம்பத்தை களத்திலிருந்து முன்னெடுத்து சிறந்த பெறுபேறுகளை பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**4 ஆண்டுகளில் மீளவும் உலகக்கிண்ணத்தை வெல்லக்கூடிய நிலையான பயணத்தை ஆரம்பிக்க தற்போது தயாராக இருக்கின்றோம்.**

கிண்ணத்திற்கான ஓட்டம் 2027

விளையாட்டுத்துறை அமைச்சு
*நாட்டிற்காக களத்தில்*

Sri Lanka Cricket




# இலங்கை பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் வழங்கும் தலைமைத்துவம்

## உகண்டா ஜனாதிபதி புகழாரம்

வீழ்ந்து கிடந்த இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகள் இலங்கையில் நல்ல முன்னேற்றத்தை எட்டியுள்ளது. ஒன்றரை வருடங்கள் என்ற மிகக் குறுகிய காலத்தில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய ஜனாதிபதியின் முயற்சிகள், உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைகளையும் யோசனைகளையும் மட்டும் வழங்குபவர் அல்ல. அவர் தனது பரிந்துரைகளையும் யோசனைகளையும் யதார்த்தமாக்கிய ஒரு நடைமுறை சாத்தியமான தலைவராகவும் இருக்கிறார்.

2022ஆம் ஆண்டு இலங்கையின் வரலாற்றில் மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. நவீன கடன் நெருக்கடிக்கு இலங்கை ஒரு உதாரணம். இதனால் இலங்கையின் தலைவிதியை கணிக்கக் கூட முடியாமற் போனது என உலக பொருளாதார நிபுணர்களில் பெரும்பாலானோர் கருதினர். தவறான, தூரநோக்கற்ற பொருளாதாரக் கொள்கைத் தீர்மானங்களால் இந்த நிலை ஏற்பட்டது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த கணிப்புகளை எல்லாம் புரட்டிப்போட்டு, நவீன கடன் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுத்தார். இதனால் உலக நாடுகளின் கவனத்தை இலங்கை ஈர்த்தது.

அதனால்தான் பல வளர்ந்து வரும் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த ஆர்வம் காட்டினர். அந்த வாய்ப்புக்களை ஜனாதிபதி பயன்படுத்தினார். ஆபிரிக்க நாடுகளின் பல தலைவர்களையும் பிரதிநிதிகளை சந்தித்து முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

குறிப்பாக உகண்டா அதிபர் யோவேரி முசெவேனி, தென்னாபிரிக்க அதிபர் சிரில் ராமபோசா, தான்சானியா பிரதமர் காசிம் மஜாலிவா, பஹாமாஸ் பிரதமர் பிலிப் ஈ. டேவிஸ் (Philip E. Davis), எத்தியோப்பியாவின் பிரதமர் அபி அகமது (Abiy Ahmed), பெனின் குடியரசின் உப ஜனாதிபதி மரியம் சாபி தலதா (Mariam Chabi Talata) ஆகியோரை ஜனாதிபதி சந்தித்தார். குறிப்பாக வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப ஜனாதிபதி வழங்கிய தலைமைத்துவத்தை உகண்டா ஜனாதிபதி பாராட்டினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் ஆபிரிக்க கண்டத்துடனான உறவுகளை மீள வலுப்படுத்துவதற்கும் ஜனாதிபதியின் அர்ப்பணிப்பு ஆபிரிக்க அரச தலைவர்களின் விசேட பாராட்டைப் பெற்றது.

அணிசேரா நாடுகளின் 19ஆவது உச்சி மாநாடு மற்றும் சீனாவின் 3ஆவது தென்துருவ உச்சி மாநாடு ஆகியவற்றில் பங்கேற்பதற்காக மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் உகாண்டாவிற்குச் சென்றிருந்தார். சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் 54ஆவது ஆண்டுக் கூட்டத் தொடரில் பங்கேற்ற பின்னர் ஜனாதிபதி உகண்டா சென்றிருந்தார்.

### உலக பொருளாதார மன்றம்

உலகின் சக்திவாய்ந்த பொருளாதாரம் கொண்ட நாடுகளின் தலைவர்கள், உலகின் முன்னணி நிறுவனங்களின் உரிமையாளர்கள், தலைமை நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பொருளாதார வல்லுநர்கள் பங்கேற்கும் உலகப் பொருளாதார மன்றத்தின் உச்சி மாநாடு ஆண்டுதோறும் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடத்தப்படுகிறது.

இம்முறை நடந்த உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து கொண்டார். இதன்போது எதிர்கால நோக்குடன் இலங்கை மேற்கொண்டு வரும் பொருளாதார சீர்திருத்த செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி உலக தலைவர்களுக்கு விளக்கினார்.

உலகப் பொருளாதார மன்றம் என்பது அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் நிகழ்ச்சி நிரல்களை வடிவமைப்பதற்காக ஆண்டின் தொடக்கத்தில் உலகின் முக்கிய நாடுகளின் உயர்மட்டக் கூட்டமாகும். சர்வதேச நிறுவனங்கள், உலகளாவிய, நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் கல்வி நிறுவனங்களும் இதில் பங்கேற்றன.

மேலும், சுவிஸ் ஆசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த Green Tech Forum மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய உரையை நிகழ்த்தியிருந்தார். "எரிசக்தி பாதுகாப்பான இலங்கைக்கான பாதையை வகுத்தல்" என்ற தலைப்பில் உரையாற்றிய ஜனாதிபதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும், சுவிஸ் ஆசிய வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து இலங்கை முதலீட்டு சபை ஏற்பாடு செய்திருந்த வர்த்தக வட்ட மேசை கலந்துரையாடலிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றார்.

இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி தனியாக பயணிக்கவில்லை. இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் தலைவர்கள், முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலரும் இணைந்துகொண்டனர்.

### அணிசேரா நாடுகளின் மாநாடு

சுவிட்சர்லாந்தில் நடந்த உலக பொருளாதார மன்றத்தின் உச்சி மாநாட்டை முடித்துக் கொண்டு அணிசேரா நாடுகளின் மாநாட்டிலும், G77 மற்றும் சீனாவின் 3ஆவது தென்துருவ மாநாட்டிலும் பங்கேற்பதற்காக ஜனாதிபதி உகண்டா பயணமானார்.

"பகிரப்பட்ட உலகளாவிய செழுமைக்கான ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல்" என்ற தொனிப்பொருளில் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் 19ஆவது அமர்வு உகாண்டாவின் கம்பாலாவில் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமானது.

பொது விதியை மாற்றுவதற்கான கூட்டு முயற்சியை வலியுறுத்துவதற்காக இந்த மேடையை ஜனாதிபதி பயன்படுத்தினார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பூகோள அரசியல் பிரச்சினைகள், குறிப்பாக காசா, இஸ்ரேல், பாலஸ்தீனம் போன்றவற்றில் என்ன நடக்கிறது. வளரும் நாடுகள் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நகர்வுகள், கடனில் சிக்கித் தவிக்கும் நாடுகளை விடுவிக்க எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள், காலநிலை மாற்றம் உள்ளிட்ட விடயங்களை சர்வதேசத்தின் மத்தியில் ஜனாதிபதி விரிவாக பேசியிருந்தார்.

மேலும், டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகள் மற்றும் பேரழிவு தரும் ஆயுதங்களின் பயன்பாடு ஆகியவை அணிசேரா அமைப்பைச் சேர்ந்த வளரும் நாடுகளுக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் இடையே ஆழமான சமத்துவமின்மையை உருவாக்கியிருப்பதை சுட்டிக்காட்டினார். சிறந்த உலகத்தை உருவாக்க, இந்த சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். இவை அனைத்தும் இலங்கையின் மட்டுமன்றி அணிசேரா நாடுகளின் பொது நலன் கருதிய விடயங்கள் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். ஜனாதிபதியின் இந்த விரிவான உரையை அணிசேரா நாட்டுத் தலைவர்கள் பாராட்டினர்.

### G77 மற்றும் சீனாவின் 3ஆவது தென்துருவ மாநாடு

G77 மற்றும் சீனாவின் 3ஆவது தென்துருவ நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் வளரும் நாடுகளின் மிகப்பெரிய கூட்டணியாகும். உலகின் தென்துருவ நாடுகள் தங்கள் கூட்டுப் பொருளாதார நலன்களை வெளிப்படுத்தவும் மேம்படுத்தவும் இதன்மூலம் வழி ஏற்படுகிறது. அத்துடன் ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்குள் சர்வதேச பொருளாதார பிரச்சினைகளை விவாதிக்கவும், தென்துருவ நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்படுத்தவும் இந்த மாநாடு வழி ஏற்படுத்தியிருந்தது.

வர்த்தகம், முதலீடு, நிலையான வளர்ச்சி, காலநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் அதன் 134 உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் அதன் 3ஆவது தென்துருவ மாநாடு 'யாரையும் கைவிடக் கூடாது' என்ற கருப்பொருளின் கீழ் கூட்டப்பட்டது.



மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகளாவிய நிதிக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்தும், G77 மற்றும் சீனா குழு உருவாக்கத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த தருணத்தில், பலதரப்பு வளர்ச்சியடையும் மிகப்பெரிய குழுவாக ஒன்றிணைந்து செயல்படுவது குறித்தும் பேசினார். உறுப்பு நாடுகள் எதிர்நோக்கும் பல சவால்களை முறியடித்து, தென்துருவ நாடுகளின் நிலைப்பாட்டை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதன்படி, இலங்கை மற்றும் அதன் அனைத்து அங்கத்துவக் கட்சிகளின் எதிர்கால தலைவிதியை மேம்படுத்துவதற்காக "G77 மற்றும் சீனா" குழுவின் 3ஆவது உச்சிமாநாட்டின் மேடையையும் ஜனாதிபதி பயன்படுத்தினார். அந்த நோக்கத்திற்காக, தற்போது தேவையான சீர்திருத்தங்கள் அனைத்து தரப்பினரின் கவனத்தையும் ஈர்த்தது.

உண்மையில், உலகத் தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த உலகத்திற்கான எதிர்கால நோக்குகள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

### ஆபிரிக்கா இலங்கையின் பழைய நண்பன்

இலங்கைக்கும் ஆபிரிக்கக் கண்டத்திற்கும் இடையில் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. ஆப்பிரிக்கா முழுவதும் நிறவெறி மற்றும் இனவெறியை ஒடுக்குவதற்கான ஆதரவு மற்றும் பாலஸ்தீன போராட்டத்துக்கு ஆதரவு உள்ளிட்ட பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. 1976 செப்டெம்பரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 31ஆவது அமர்வில் அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்றுக்கொண்டிருந்தது. அணிசேரா இயக்கத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முக்கிய பங்காற்றியபோதும் இந்த ஒத்துழைப்பு மேலும் வளர்ந்தது.

மேலும், ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும், இலங்கையும் ஆபிரிக்காவும் பரஸ்பரம் ஒத்துழைத்துள்ளதுடன், தற்போது இலங்கை 42 ஆபிரிக்க நாடுகளில் ஆறு வதிவிட தூதரகங்களுடன் இராஜதந்திர உறவுகளை பேணி வருகின்றது.

ஆபிரிக்க பிராந்தியத்துடன் இலங்கை வலுவான பிணைப்பைக் கொண்டுள்ளது.

தற்போது எந்தவொரு நாடும் தனித்து நிற்க வாய்ப்பில்லை. இனி அப்படியொரு விடயத்தைப் பற்றி யோசிப்பது கூட முட்டாள்தனம் என்ற அளவுக்கு உலகளாவிய ஒழுங்கு மாறிவிட்டது. எனவே இப்போது நாடுகளின் ஒற்றுமையில் தங்கள் சொந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது குறித்த செய்தியை உகாண்டாவில் ஜனாதிபதி உலகிற்கு வழங்கினார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த இராஜதந்திர திறமையானது தற்போது இலங்கை எதிர்நோக்கும் சவாலையும் உலகளாவிய பொதுவான சவாலையும் ஒழுங்கமைப்பதில் வெளிப்பட்டது.

### மூலோபாய நுட்பம்!

வடஅமெரிக்கா, ஐரோப்பா என்று இருந்த உலகப் பொருளாதார மையம் இப்போது ஆசியாவை நோக்கியும் ஆப்பிரிக்கக் கண்டத்தை நோக்கியும் நகர்ந்து வருவதில் நாட்டம் காட்டுகிறது. உலகப் பொருளாதாரத்தில் இந்தியா மற்றும் சீனா தலைமையிலான ஆசிய வல்லரசுகள், நாளுக்கு நாள் தங்கள் பங்கை அதிகரித்து வருவது இதை மேலும் உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் ஆபிரிக்க நாடுகளும் கணிசமான அளவு வளர்ச்சியை அடைந்து வருகின்றன. ஆபிரிக்கக் கண்டம் தற்போது நிலையான வளர்ச்சிக்கான மாற்றியமைக்கும் நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுகிறது என்பது தெளிவாகிறது. அத்துடன் ஆபிரிக்க ஒன்றியத்தின் நிகழ்ச்சி நிரல் 2063 அடுத்த 50 ஆண்டுகளுக்கான கண்டத்தின் வளர்ச்சி அபிலாஷைகளை கோடிட்டுக் காட்டுகிறது.

ஆசியா தலைமையிலான தென்துருவ நாடுகள் மட்டுமல்ல, உலகளாவிய வடக்கு நாடுகளும் விரைவான வளர்ச்சியை நோக்கி நகரும். இதன்போது ஆபிரிக்க கண்டத்துடன் மூலோபாய கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கான திட்டங்களை அந்த நாடுகள் வகுக்கும் என்பது இரகசியமல்ல. எனவே, இலங்கை ஒரு மூலோபாய அணுகுமுறையில் இருப்பதால், இலங்கையை ஆசியாவின் முக்கிய விநியோக மையமாக மட்டுமல்லாமல், உலகப் பொருளாதாரச் சங்கிலியின் மையமாகவும் மாற்ற ஜனாதிபதி முயற்சிக்கிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நோக்கத்திற்காக பல நிதி, சட்ட மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை முன்னெடுத்துள்ளார். எனவே, அது தொடர்பாக ஆபிரிக்காவின் முக்கியத்துவத்தை சரியாக மதிப்பிட வேண்டும். அதற்கு ஆபிரிக்காவை சரியாக பயன்படுத்த வேண்டும்.

ஜனாதிபதியின் உகண்டா விஜயமானது ஆபிரிக்க பிராந்தியம் மற்றும் அதன் பொருளாதார மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இலங்கை மற்றும் ஆபிரிக்க நாடுகளில் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் மிக முக்கியமான மற்றும் பயனுள்ள பலன்களுக்காக நீண்டகால உறவுகளை கட்டியெழுப்ப உதவியது என்று கூறலாம்.

இந்த முயற்சியின் மூலம், ஆபிரிக்க நாடுகளுக்கான இலங்கையின் அணுகலை விரிவுபடுத்துவதுடன், இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவதன் மூலம், தற்போது ஆரம்ப நிலையில் இருக்கும் ஆபிரிக்க பிராந்தியத்துடனான பொருளாதார உறவு, குறிப்பிடத்தக்க மற்றும் பரஸ்பர நன்மைகளைத் தரும்.

இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் புதிய வெளியுறவுக் கொள்கையானது, ஆபிரிக்க பிராந்தியத்துடனான தனது நீண்டகால நிலைப்பாட்டை வலுப்படுத்துவதை ஜனாதிபதியின் ஆபிரிக்கப் பயணம் பிரதிபலித்தது.

**வீ.ஏ.கே.**

---



# பெலியத்தையை உலுக்கிய பாதாள உலகக் கொலைகள்

களுத்துறை எதனமடலவில் பாதாள உலகின் முக்கிய குற்றவாளியான சமயங் உள்ளிட்ட ஐந்து பாதாள உலகத்தினர் மற்றும் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகளைக் கொலை செய்து சிறைச்சாலை பஸ்ஸின் மீது 2017ம் ஆண்டு பெப்ரவரி 23ம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் பாதாள உலகத்தினரின் அவ்வாறான தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் அது "அபே ஜனபல வேகய" கட்சியின் தலைவர் சமன் பிரசன்ன பெரேரா எனும் ரோயல் பீச் சமன் உள்ளிட்ட ஐந்து பேரை பெலியத்த அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் வைத்து கொலை செய்த சம்பவமாகத்தானிருக்கும்.

அன்று அங்கொட லொக்காவுடன் இணைந்து மாகந்துரே மதுஷ் டுபாயிலிருந்தே அந்தத் தாக்குதலை முன்னெடுத்திருந்தார். பாதாள உலகத்தினரின் அதிகாரத்திற்காக இடம்பெற்ற சண்டையின் விளைவாக நடந்த இந்தக் கொலையானது பொலிஸ் மற்றும் இராணுவ சீருடையில் வந்து மேற்கொள்ளப்பட்டதால் அது பாதுகாப்புத் தரப்பினருக்கு சவாலான ஒன்றாக இருந்தது. இச்சம்பவம் இடம்பெற்று சுமார் 7 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்று வரைக்கும் அந்தத் தாக்குதலில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தலைமறைவாகவே உள்ளனர். அவர்கள் யாரென்று இதுவரைக்கும் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போனதே இதற்குக் காரணமாகும்.

களுத்துறை எதனமடலவில் தாக்குதலைப் பின்தள்ளி பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற இந்த தாக்குதல் நாடு முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன், நாடு பூராகவும் உள்ள பாதாள உலகத்தினர் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு எதிராக பொலிஸார் முழுப் பலத்தையும் பிரயோகித்து நடவடிக்கையை முன்னெடுத்த நிலையில் பொலிஸாரும் இதனால் திகைத்துப் போயுள்ளனர்.

தங்காலை நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதக் கொலையுடன் தொடர்புடைய வழக்கில் ஆஜராவதற்காக வெள்ளை நிற டிபெண்டர் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த சமன் பெரேராவை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் டுபாயில் வசிக்கும் முக்கிய பாதாள உலக குற்றவாளியும், போதைப்பொருள் வியாபாரியுமான கொஸ்கொட சுஜீத்தின் ஒப்பந்தத்தின் கீழ், அவரது முக்கிய உதவியாளரான புஸ்ஸே ஹர்ஷாவின் திட்டத்தின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டுள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது.

தன்னை ஒரு வர்த்தகரைப் போன்று சமூகத்தில் காட்டிக் கொண்டு சில பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் பாதாள உலகக் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்த சமன் பெரேரா எனப்படும் ரோயல் பீச் சமனே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். அவர் ரத்கம விதுர எனும் பாதாள உலகக் குற்றவாளியுடன் இணைந்து கொஸ்கொட சுஜியின் அடியாட்கள் மற்றும் உறவினர்களையும் கொலை செய்து தென்னிலங்கையில் பாதாள உலக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அடித்தளமிட்டுக் கொண்டிருந்த வேளையில் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரத்கம விதுர தற்போது வெளிநாட்டிலிருக்கிறார். அவர் இத்தாலியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனிடையே அவர் ஐரோப்பிய நாடுகளிடையே சுற்றித் திரிவதாகவும் தகவல்கள் உள்ளன. அரசியல் பலமும் குறைவின்றி கிடைக்கும் ரத்கம விதுர, கொஸ்கொட சுஜியின் குடும்பத்தினர் மற்றும் அடியாட்கள் மீது அண்மையில் தாக்குதல் மேற்கொள்ளத் தொடங்கியிருந்தான். அவனுக்கிருந்த அரசியல் பலம் முன்னரை விட தற்போது கூடுதலாக கிடைப்பதே இதற்கு காரணமாகும். அதேபோன்று கொஸ்கொட சுஜிக்கும் பாதுகாப்பு தரப்பினரோடு நெருங்கிய தொடர்புள்ளது. சில பொலிஸ் உயர் அதிகாரிகள் துபாயிலிருக்கும் அவனோடு தொலைபேசியில் தொடர்புகளை மேற்கொள்வதும் பரகசியமாகும்.



சமன் பெரேரா எனப்படும் ரோயல் பீச் சமன் கடந்த 22ம் திகதி தனது அடியாட்களையும் டிபெண்டர் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு 2022ஆம் ஆண்டு ஜூன் 05ம் திகதி தங்காலை மொரகெட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணையில் கலந்து கொள்வதற்காக தங்காலை நீதிமன்றத்திற்கு சென்று கொண்டிருந்தான். குடாவெல்ல பிரதேசத்தை ஆட்டிப் படைத்த குடாவெல்ல அசேல அன்று கொலை செய்யப்பட்டது ஹரக் கட்டா துபாயிலிருந்து வழங்கிய ஒப்பந்தத்தின் அடிப்படையிலாகும். அசேல என்பவன் ஹரக் கட்டாவின் நெருங்கிய சகாவாகும்.

சமன் பெரேரா எனும் ரோயல் பீச் சமன் உயர்மட்ட அரசியல்வாதிகளின் ஆசீர்வாதத்துடன் அரசியல் பலத்தையும் கொண்டிருந்துள்ளார். சில இனவாத சிங்கள அமைப்புகளையும் அந்த அரசியல்வாதிகளின் ஆலோசனைகளின் பிரகாரம் முன்னெடுத்துச் சென்றதும் சமனாகும். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அரசியல் கட்சி ஒன்றைக் கூட விலைக்கு வாங்கி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதும் அந்த அரசியல்வாதியின் ஆசீர்வாதத்துடனேயாகும். அந்நேரம் முக்கிய குற்றவாளியாக கருதப்பட்ட சமன் பெரேரா எனப்படும் ரோயல் பீச் சமனைப் பற்றி அரச புலனாய்வு சேவை பெரியதொரு அறிக்கையைக் கூட தேர்தல் ஆணைக்குழுவியிடம் கையளித்திருந்தது.

அது அப்போது ஜனாதிபதி வேட்பாளராக வேட்புமனுவைச் சமர்ப்பித்திருந்த சமன் பெரேராவின் குற்றப் பின்னணி பற்றிய அறிக்கையாகும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்கா அன்று தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளே சமன் பெரேராவின் ஊழல்கள் அடங்கிய அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது குற்றவாளி ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக வருவதைத் தடுப்பதற்கேயாகும். அந்த நேரத்தில், சமன் பெரேரா எனப்படும் ரோயல் பீச் சமன் நீதிமன்றத்தின் முன் குற்றவாளிகளாக நிரூபிக்கப்படாததால் அந்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிப் போனது.

ஜனாதிபதி தேர்தலில் அன்று போட்டியிட்ட சமன் மறைமுகமாக உதவி செய்தது பிரபலமான ஒரு வேட்பாளருக்காகும். அந்த வேட்பாளரிடமிருந்து பெரும் பாதுகாப்பு அவருக்கு கிடைத்ததே அதற்கு காரணமாகும். பாரியளவிலான விருப்பு வாக்குகளை அன்று சமன் பெறாவிட்டாலும் அவரது எதிர்பார்ப்பாக இருந்தது சமூகத்திற்கு முன்னால் தான் ஒரு அரசியல்வாதி என்பதை காட்டுவதேயாகும். பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் நாட்டின் பெயர் போன முக்கிய தேரர்களுக்கும் வேட்பாளராகும் வாய்ப்பு கிடைத்தது சமன் பெரேராவின் அபே ஜனபல கட்சியிலாகும். அந்தத் தேர்தலில் எந்த ஆசனங்களையும் வெற்றி கொள்ள இந்தக் கட்சியால் முடியாமல் போனாலும் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான இடம் அக்கட்சிக்கு கிடைத்தது. அந்த ஆசனத்தை கைப்பற்றிக் கொள்வதற்காக கட்சியின் உறுப்பினர்களுக்கு இடையே பெரும் போராட்டம் இடம் பெற்றது. கடைசியில் அந்த ஆசனம் அத்துரலிய ரத்ன தேரருக்கு வழங்கப்பட்டது. அவர் என்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவது அந்த ஆசனத்தின் ஊடாகும். அந்த பாராளுமன்ற உறுப்பினர் ஆசனத்தைக் கைப்பற்றுவதற்கும் சமன் பெரேரா முயற்சிகளைச் செய்தார். அதனைத் தொடர்ந்தே அத்துரலிய ரத்ன தேரர் தனக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக சமன் பெரேராவுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்தார். அந்நேரத்தில் சமபெரேராவுக்கு பலத்த அரசியல் பலம் இருந்ததால் குறைந்தபட்சம் அத்துரலிய ரத்ன தேரரின் முறைப்பாடு விசாரணைக்கும் கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை.

குடாவெல்ல அசேலவின் கொலை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கும் போது நாட்டில் வேறு அரசியல் கலாசாரமே இருந்தது. ரோயல் பீச் சமன் பெரேராவுக்கு அதுவரைக்கும் புகலிடமாக இருந்த அரசியல்வாதிக்கு சமன் பெரேரா போன்றவர்களைக் காப்பாற்றாமல், நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கால அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த நேரத்தில்தான் ஒரு அரசியல் மாற்றம் இடம்பெற்றது. அதன் காரணமாக சமன் பெரேரா போன்றவர்கள் கருவேப்பிலைகளாக மாறினார்கள்.

அன்று பொலிசாரால் கைது செய்யப்பட்ட சமன் பெரேரா எனும் ரோயல் பீச் சமன் உள்ளிட்ட தரப்பினர் குடாவெல்ல அசேலவின் கொலை தொடர்பில் சந்தேக நபர்களாக தங்காலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்கள். நீண்ட காலமாக விளக்கமறியலில் இருந்த சமன் உள்ளிட்ட தரப்பினருக்கு பிணை வழங்கப்பட்டு பல சந்தர்ப்பங்களில் வழக்கு விசாரணைகளுக்காக தங்காலை நீதிமன்றத்திற்கு வந்து சென்றார்கள். இதனை அறிந்து கொண்ட கொஸ்கொட சுஜீ சமன் பெரேரா எனப்படும் ரோயல் பீச் சமனை பழிவாங்கத் தீர்மானித்தான்.

அன்று 22ஆம் திகதி ரோயல் பீச் சமன் உள்ளிட்ட ஐவரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த துப்பாக்கிதாரி அந்த ஜீப்பிலேயே தப்பிச் சென்றது பெலியத்தை திசையிலாகும். பெலியத்தையிலிருந்து ஹக்மனை ஊடாக கம்புறுபிட்டிக்குச் சென்ற ஜீப் நகரில் தரித்து நின்றது துப்பாக்கிதாரி ஜீப்பிலிருந்து இறங்கிக் கொள்வதற்காகும். அவனது புகைப்படமும் சீசீடீவி கெமராவில் பதிவாகியுள்ளதோடு, புகைப்படம் தெளிவானதாக இல்லை.

இராணுவ விஷேட படையணியிலிருந்து தப்பி வந்துள்ள அவன், கடுவலை சமயங்கின் கூட்டத்தில் இருந்த ஒருவனாகும். அந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் அகுரஸ்ஸையில் இறங்கியதன் பின்னர் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சமன் எனப்படும் அளுத்கமையைச் சேர்ந்த நபருடன் தனது வீட்டுக்குச் சென்ற சமன் குமார துப்பாக்கியை தனது வீட்டிலே மறைத்துக் கொண்டார்.

**கயான் குமார வீரசிங்க**
**தமிழில் : எம். எஸ். முஸப்பிர்**






# மக்கள் மீதான வரிச்சுமையை குறைக்க விரைவில் நடவடிக்கை

## பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே வழங்கிய பேட்டி

**மக்கள் மீதான வரிச்சுமையைக் குறைப்பதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ள பெறுமதிசேர் வரி மற்றும் ஏனைய வரிகள் மக்களுக்கு பெரும் சுமையாக உள்ளன. இந்த வரி அறவீடுகளால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பை அரசாங்கம் உணரவில்லையா?**

பதில்: நாங்கள் நன்றாக உணர்கிறோம். இது பற்றி நாம் எப்பொழுதும் கலந்துரையாடுவோம். இங்கே பிரச்சினை வரி அல்ல. வரி பற்றிய கொள்கை மற்றும் வரி விதிப்பு முறை என்பனவே கவனிக்கப்பட வேண்டியவை ஆகும். விதிக்கப்படும் வரிகளில் பெறுமதிசேர் வரி, வருமான வரி, மாதாந்த சம்பளம் மற்றும் வங்கி வைப்புக்கள் மீதான வரிகள் என்பன அடங்குகின்றன. உண்மையில் எடுத்துக் கொண்டால், வரி செலுத்த வேண்டிய 105,000 பேரில் 31,000 பேர் மட்டுமே வரி செலுத்துகின்றனர். இதில் கவனம் செலுத்தி வருமான வரி செலுத்தாதவர்களை வருமான வரி செலுத்த வேண்டியவர்களாக மாற்ற வேண்டும். இதன் ஊடாகவே அரசாங்கத்தின் உண்மையான வரி வருமானத்தை அதிகரிக்க முடியும்.

**கே: அது அரசாங்கத்தின் தவறு. வரி ஏய்ப்புச் செய்பவர்கள் நீண்ட காலமாகத் தலைமறைவாக இருப்பது ஏன்?**

பதில்: புதிய முறையின்படி, வரி செலுத்துவதைத் தவிர்க்கும் தொழிலதிபர்கள் மற்றும் நபர்களைக் கண்டறிய முடியும். வரி செலுத்தாதவர்களை அப்போது எளிதில் அடையாளம் காண முடியும். அதற்காக வருமான வரி சட்டத்திலும் திருத்தம் செய்தோம். மற்றைய நாடுகளைப் போல, எதிர்காலத்தில், வரி ஏய்ப்பு செய்பவர்களை நேரடியாகக் கண்டுபிடிக்கும் முறைகளைக் கொண்டு வருவோம்.

**கே: வரி மறுசீரமைப்புக்களை அரசாங்கமே உரிய நேரத்தில் கொண்டு வர வேண்டாமா? வர்த்தக வரிகள், வருமான வரிகளை அரசாங்கம் முறையாக வசூலிக்காமல் பொதுமக்களை பாதிக்கும் வகையில் பெறுமதி சேர் வரி போன்றவற்றின் ஊடாக அவர்களை ஒடுக்குவதற்கு வரிகளை அறிமுகப்படுத்துகிறதா?**

பதில்: இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பல தடவைகள் கலந்துரையாடியுள்ளோம். எந்த விருப்பமும் இல்லாமல் வரியையும் அதிகப்படுத்த வேண்டியுள்ளது. ஜனாதிபதியினாலும் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

இலங்கை இனிமேலும் கடன் வாங்கிய வாறு பயணிக்க முடியாது. வரிகளை வசூலிக்காமல் அரசு ஊழியர்களுக்கு எப்படி சம்பளம் கொடுப்பது? ஓய்வூதியம் எவ்வாறு வழங்கப்படுகிறது? மக்களுக்கு மானியம் வழங்க வேண்டும். வரிப்பணம் இல்லாமல் அனைத்து சமூகநலப் பணிகளையும் அரசால் செய்ய முடியாது. அதுதான் யதார்த்தம்.

**கே: சர்வதேச நாணய நிதியம் தவிர, ஆசிய அபிவிருத்தி வங்கியிலும் அரசாங்கம் கடன் பெற்றுள்ளது அல்லவா?**

பதில்: ஆம்... ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் மூலம் நமது பொருளாதார நிலையை மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது பொருளாதார நெருக்கடிக்காக எடுக்கப்பட்ட முடிவு ஆகும்.

**கே: சர்வதேச நாணய நிதியம் அந்தக் கடன்களில் திருப்தி அடைகிறதா?**

பதில்: சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் விரைவாக மீண்டெழுந்த நாடு இலங்கை என்பதை அவர்களே தெளிவாகக் கூறியுள்ளனர். அந்த வகையில் இலங்கைக்கு தமது பாராட்டுக்களை சர்வதேச நாணய நிதியத்தினர் தெரிவித்துள்ளனர்.

**கே: இவ்வாறு மக்களிடம் இருந்து வரிகளை வசூலிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் காட்டுகிறதா?**

பதில்: இல்லை. சர்வதேச நாணய நிதியமும் மக்கள் மீது சுமையை ஏற்படுத்த விரும்பவில்லை.

**கே: பல அரசாங்க நிறுவனங்கள் மூலம் வரி ஏய்ப்பாளர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுவதில் உண்மை உள்ளதா?**

பதில்: ஆம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்க மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பான உண்மைகளை நாங்கள் தொடர்ந்து கூறி வருகிறோம். அந்த நிறுவனங்களின் மோசடி மற்றும் ஊழல்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டும். வரி நிலுவையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**கே: அரசாங்க வங்கிகளில் பங்குகளைக் கொண்டுள்ள பல தொழிலதிபர்கள் உள்ளனர். அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து வசூலிக்க ஏன் வழியில்லை?**

பதில்: ஆம், அது உண்மைதான். அரசாங்க வங்கிகளில் இலட்சக்கணக்கில் கடன் வாங்கித் திருப்பிச் செலுத்தாத தொழிலதிபர்கள் இருக்கிறார்கள். கடன் வாங்கிய பின்னர் தொழில்கள் வங்குரோத்தாகி விட்டன என்று காட்டுகிறார்கள். ஆனால் நல்ல இலாபம் ஈட்டும் வேறு தொழில்கள் உள்ளன. எதிர்காலத்தில் இதுபோன்ற வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் அனைவரும் வரி செலுத்துவதையும், வங்கிக் கடன் செலுத்துவதையும் தவிர்க்கின்றனர்.

**கே: சாதாரண நபர் ஒருவர் வங்கியில் இரண்டு இலட்சங்களைக் கடனாகப் பெறுவதாயின் பல ஆவணங்கள் கோரப்படுகின்றன. இதற்குப் பல பிணைகள் கேட்கப்படுகின்றன. ஆனால் எந்தவித பிணையும் இன்றி கடன்களைப் பெற்றவர்களிடமிருந்து பணம் மீட்கப்படவில்லையே?**

பதில்: அதைத்தான் நான் முன்பே சொன்னேன், அரசு நிறுவனங்களில் ஊழல் அதிகாரிகள் நிறைந்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். தனியார் வங்கிகளில் அந்த நிலை இல்லை.

**கே: ஒரு மக்கள் பிரதிநிதி என்ற வகையில், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து மகிழ்ச்சியடைகின்றீர்களா?**

பதில்: 70 வீதமாக இருந்த பணவீக்கம் இன்று 5 வீதமாகக் குறைந்துள்ளது. நானூறு என்று இருந்த டொலர் இன்று சுமார் 320 ஆகக் குறைந்துள்ளது. டொலர் கையிருப்பு அதிகரித்துள்ளது. எரிபொருள் உள்ளது, எரிவாயு உள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

**கே: நீங்கள் முன்னர் அமைச்சுப் பதவிகளை வகித்திருந்தாலும் தற்போதைய அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே அங்கம் வகிக்கின்றீர்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: நான் ஜனாதிபதியிடம் அமைச்சுப் பதவியைக் கேட்டுச் செல்லவில்லை. கட்சிக்காக அதிகம் பேசுபவன் நான். மக்களுக்கு சேவை செய்ய எனக்குப் பதவிகள் தேவையில்லை. எனக்கு அமைச்சு இருந்தாலும், இல்லாவிட்டாலும் என்னால் முடிந்ததைச் செய்வேன்.



**நாட்டில் வரி செலுத்த வேண்டிய 105,000 பேரில் 31,000 பேர் மட்டுமே வரி செலுத்துகின்றனர். இதில் கவனம் செலுத்தி வருமானவரி செலுத்தாதவர்களை வருமானவரி செலுத்த வேண்டியவர்களாக மாற்ற வேண்டும். இதன் ஊடாகவே அரசாங்கத்தின் உண்மையான வரி வருமானத்தை அதிகரிக்க முடியும்**

---

# 400 ஆசனங்களை கைப்பற்ற வியூகம் வகுத்துள்ள பா.ஜ.க?

## அயோத்தி இராமர் கோயில் திறக்கப்பட்டதையடுத்து, புதியதொரு திருப்பத்தில் இந்திய அரசியல்!





பாரதிய ஜனதா கட்சியின் பல ஆண்டுகால கனவை நிறைவேற்றி இருக்கிறார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேகம் இந்தியா முழுவதும் ஒரு அரசு விழாவைப் போல ஒளிபரப்பு செய்யப்பட்டு, பா.ஜ.கவின் செல்வாக்கை உச்சத்தில் உயர்த்தி இருக்கிறது.

இந்தியாவில் மாத்திரமன்றி, ஒட்டு மொத்த உலகிலும் வாழ்கின்ற இந்துக்களும் இராமர் கோயில் கும்பாபிஷேக நிகழ்வை உற்றுநோக்கும்படியாக கடந்த பல மாதங்களாக தீவிர பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. உலகெங்கும் வாழ்கின்ற இந்துக்கள் இராமர் கோயில் திறப்பு விழாவை தங்களது நாட்டில் நடைபெற்ற விழாவாகவே எடுத்துக் கொண்டனர்.

வடஇந்தியாவில் இது தனியார் நிகழ்ச்சி போல அமைந்திருக்கவில்லை; அரசியல் விழாபோலத்தான் அமைந்திருந்ததாக எதிர்க்கட்சிகள் விசனம் தெரிவித்திருந்தன. ஆனால் வழக்கம் போல எதிர்க்கட்சிகளின் குரலுக்கு பா.ஜ.க எந்தவிதமான மதிப்பையும் வழங்கப் போவதில்லை. எதிர்வினை ஆற்றப் போவதுமில்லை. தங்களது இலக்கை அடையும் வரை இந்த விவாதங்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி பதிலளிக்கப் போவதில்லை. ஏனெனில் இந்தியாவில் எதிர்க்கட்சிகளின் நிலைமை பலவீனமாகவே உள்ளது.

யார் என்ன சொன்னாலும், நீண்ட கால வாக்குறுதியை பா.ஜ.க நிறைவேற்றி முடித்துள்ளது. இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இந்த எண்ணம்தான் தற்போது உள்ளது. ஆகவே, அந்தக் கட்சியின் தொண்டர்களைத் தாண்டி, வடநாட்டில் உள்ள இராம பக்தர்கள் உற்சாகத்தில் உள்ளனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த உற்சாகத்தை வைத்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 400 ஆசனங்கள் வரை கைப்பற்றுவதற்கு பா.ஜ.க முடிவு செய்துள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்கள் கூறுகின்றன. அதாவது இராமர் கோயில் கும்பாபிஷேக நிகழ்வானது அறுதிப்பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளதாகத் தேர்தல் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

ஆனால் பா.ஜ.க நினைப்பதைப் போல் 50 வீதமான வாக்குகளைப் பெறுவது என்பது சாதாரணமானதல்ல என்றும் சில அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

"இந்த உண்மையை பா.ஜ.க உணராமல் இல்லை. அவர்கள் அதைத் தைரியமாக நம்புவதற்குக் காரணம், அக்கட்சி பலமாக உள்ளது என்பதல்ல; காங்கிரஸ் கட்சி உட்பட இந்தியாவில் எதிர்க்கட்சிகள் பலவீனமாக உள்ளன என்பதால்தான் பா.ஜ.க இத்தனை நம்பிக்கையுடன் உள்ளது" என்கிறார்கள் அவர்கள்.

1984 ஆம் ஆண்டு தேர்தலில் ஒரேயொருமுறைதான் காங்கிரஸ் 400 ஆசனங்களைத் தாண்டியது. அதுவும் இயற்கையாக நடந்த வெற்றியல்ல. அப்போது இந்திரா காந்தியின் படுகொலை நாட்டையே உலுக்கியது. அதில் உருவான அனுதாப அலையின் விளைவாக காங்கிரஸ் இந்த உயரத்திற்குச் சென்றது.

அத்தேர்தலில் காங்கிரஸ் தனது தனிப்பட்ட சாதனையாக 48.1% வாக்குகளைப் பெற்றது. அதற்கு ஒரே காரணம் அனுதாப அலை என்பதைத் தவிர வேறெதுவும் இல்லை.

பா.ஜ.க நாடு முழுவதும் வியாபித்துள்ள ஒரு பெரும் கட்சியென்று கூற முடியாது. பல அரசியல் விமர்சகர்கள், தேர்தல் வியூக நிபுணர்கள், எதிர்க்கட்சியினர் பா.ஜ.கவை வடஇந்தியக் கட்சியாகவே எடைபோடுகிறார்கள்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மொத்தம் 303 இடங்களில் பா.ஜ.க வெற்றி பெற்றது.

இம்முறை பா.ஜ.கவுக்கு எதிர்வரும் தேர்தலில் இராமர் கோயில் திறப்பு விழா சில சாதகமான சூழல்களை ஏற்படுத்தித் தந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. அதாவது தொழில் வாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, மாநிலக் கட்சி எம்.பிக்களுக்கு எதிரான மனநிலை, மத்திய அரசுக்கு எதிராக இருந்துவந்த மனநிலையை இந்த இராமர் விழா நடுநிலையாக்கி இருக்கிறது என்பதே உண்மை. அது பா.ஜ.கவுக்குப் பெரிய பலம்.

இதைப் போன்று 'ஹிந்தி பெல்ட்' இல் உள்ள மற்றைய மாநிலங்களான ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், டெல்லி, ஹரியானா, உத்தரகண்ட், இமாச்சலப் பிரதேசம் ஆகியவற்றில் பா.ஜ.க தனது இடங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வாய்ப்பை இந்த இராமர் நிகழ்வு மேம்படுத்தி உள்ளதென்றுதான் கூற வேண்டும்.

பீகார் மாநிலம் மட்டுமல்லாமல் பஞ்சாப், மகாராஷ்டிரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும் கூட்டணிக் கட்சிகள் சில வெளியேறியுள்ளதால், இந்த 2024 தேர்தலில் பா.ஜ.க கூடுதலான இடங்களில் போட்டியிடும் வாய்ப்பை அளித்துள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டில், பா.ஜ.க மொத்தம் 435 இடங்களில் போட்டியிட்டது. அது இந்த முறை 475 தொடக்கம் 500 வரை உயரலாம் என்கிறார்கள் தேர்தல் வியூகம் வகுப்பவர்கள்.

இதன் மூலம் கட்சியின் வாக்கு சதவீதம் நாடு முழுவதும் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. வாக்கு சதவீதத்துடன் வேட்பாளர் எண்ணிக்கையையும் இது அக்கட்சிக்கும் வழங்கும் என்றே சொல்லலாம்.

மேலும் இந்த முறை தேர்தலில் கர்நாடகாவில் மதச்சார்பற்ற ஜனதா தளம் (ஜே.டி.எஸ்) உடனான பா.ஜ.க கூட்டணி, தெலுங்கானா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலிருந்து முன்பைவிட பா.ஜ.கவுக்குக் கூடுதல் இடங்களைப் பெற்றுத் தரும் என்று இந்திய தேர்தல் நிபுணர்கள் சொல்கிறார்கள். இன்றைய கருத்துக் கணிப்புகளின்படி பார்க்கும் போது, பா.ஜ.க தனது பழைய 303 எண்ணிக்கையை எளிமையாக எட்டிவிடலாம் என நம்புகிறது. அதற்கு இராமர் கோயில்தான் வழி ஏற்படுத்தித் தந்துள்ளது.

அப்படி என்றால் பழைய இடங்களை விட பா.ஜ.கவுக்கு இந்தக் கூடுதலான 38 இடங்கள் எங்கு கிடைக்கும்? அசாம் (1), சத்தீஸ்கர் (2), கோவா (1), ஜார்க்கண்ட் (2), கேரளா (1), மகாராஷ்டிரா (1), மத்திய பிரதேசம் (1), ஒடிசா (6), தெலுங்கானா ( 1), உத்தரப் பிரதேசம் (8), யூனியன் பிரதேசங்கள் (2), மேற்கு வங்கம் (12) ஆகிய மாநிலங்களிலிருந்துதான் அந்த இடங்களை பா.ஜ.க பெறவுள்ளதாகக் கருத்து கூறுகிறார்கள் தேர்தல் நோக்குனர்கள்.

ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் பி.ஜே.டியை ஆதரிக்கும் வாக்காளர்கள் நரேந்திர மோடிக்கு வாக்களிப்பார்கள் என்று பா.ஜ.க நம்புகிறது. 2019 இல் ஒடிசாவில் பி.ஜே.டி 12 இடங்களையும், பி.ஜே.பி 8 இடங்களையும், காங்கிரஸ் ஒரு இடத்தையும் வென்றன. மூன்று இடங்களில் பி.ஜே.பி 35,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதற்கிடையில் மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கும் காங்கிரஸுக்கும் இடையேயான கூட்டணி தொகுதிப் பங்கீடு குறித்த குழப்பம் நிலவி வருகிறது. அடுத்து இந்தியா கூட்டணியிலிருந்து இடதுசாரிக் கட்சிகள் வெளியேறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று சொல்லப்படுகிறது. இந்தப் போக்குகள் பா.ஜ.கவைப் பலமடையை வைக்கும் என்கிறார்கள் அக்கட்சியின் ஆதரவாளர்கள்.



ஆகவே, இப்போதைய அரசியல் கணிப்பாளர்களின் கணக்குப்படி பா.ஜ.க 370 இடங்கள் வரை உயரக் கூடும். அது 400 ஐ தாண்டுவதற்குக் கிழக்கு மற்றும் தெற்கு மாநிலங்களில் வலிமையான கூட்டணிக் கட்சிகளை அரவணைக்க வேண்டும். நவீன் பட்நாயக்கின் கட்சி, ஜெகன் ரெட்டி கட்சி ஆகியவை கடந்தகால மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்துள்ளன. அவை மூலம் இந்த முறை பா.ஜ.க தன் செல்வாக்கைக் கூட்டிக் கொள்ள முயற்சிக்கும். பா.ஜ.கவின் இந்த இலக்கு சாத்தியமாகுமா? அதற்கு விடை கிடைக்கவேண்டும் என்றால் அரசியல் விளையாட்டில் கடைசி நேரம் வரை காத்திருக்கவேண்டும்.

இராமர் கோயில் திறப்பு விழாவைப் பொறுத்தவரை, அதனை ஒரு ஆன்மீக நிகழ்வாக வட இந்தியா பார்க்கிறது. அரசியல் நிகழ்வாக தென் இந்தியா பார்க்கிறது. ஆகவே வடஇந்திய அரசியல் கட்சிகள் நடந்துகொள்ளும் விதமும் தென்னிந்திய அரசியல் கட்சிகள் நடந்துகொள்ளும் விதமும் மாறுபட்டுத்தான் இருக்கின்றன. இராமர் கோயில் நிகழ்வு இந்திய அரசியலை ஒரு புதிய சிக்கலான கட்டத்தில் நிறுத்தியிருக்கிறது.

முஸ்லிம் லீக், இடதுசாரிகளைத் தவிர மற்றைய எல்லாக் கட்சியினருமே பா.ஜ.கவைவிட தாங்கள்தான் உண்மையான இந்து என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். பெரும்பாலான கட்சிகள் இன்று ஏதோ ஒரு கோயிலில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பது இந்திய அரசியல் ஒரு முக்கியமான, சிக்கலான காலகட்டத்தில் இருப்பதைக் காட்டுகிறது.

**எஸ்.சாரங்கன்...**

# உலக வங்கியின் ரூ. 3,000 கடனுதவியில் கண்டி நகரில் பாரிய அபிவிருத்தி திட்டம்

## 2026ஆம் ஆண்டில் நிறைவு செய்ய எதிர்பார்ப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கமைவாக அமுல்படுத்தப்பட்ட பாரிய கண்டி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உலக வங்கியின் 3,000 கோடி ரூபா கடனுதவியுடன் கண்டி மல்டிமோடல் டிரான்ஸ்போர்ட் டெர்மினல் ( Kandy Multimodal Transport Terminal Development Project ) திட்டத்தின் நிர்மாணப்பணிகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கண்டி நகரின் பல்வேறு பகுதிகளில் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ள அனைத்து தற்காலிக பஸ் நிலையங்களையும் ஒரே கூரையின் கீழ் கண்டி ரயில் நிலையத்தை அண்டியுள்ள பழைய குட்ஷெட் பஸ் நிலையத்துக்கு கொண்டு வந்து, பொதுப் போக்குவரத்து சேவைகளை இலகுபடுத்துவதற்கும் நகர வீதிகளுக்கு இடையிலான தேவையற்ற பயணத்தை குறைப்பதற்கும் Kandy Multimodal Transport Terminal Development Project திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் வில்லியம் கோபல்லாவ மாவத்தையை இணைக்கும் 200 மீற்றர் நீளமான மேம்பாலத்தினால் கண்டி பொது வைத்தியசாலை மற்றும் ரயில் நிலையத்துக்கு செல்லும் பயணிகள் மிகக் குறுகிய காலத்தில் இலகுவாக பயணிக்க முடியும்.

இது 193 இடங்களுக்கு 5,000 பஸ் பயணங்களையும், நாளொன்றுக்கு 330,000 பயணிகளையும் கையாளுவதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்த முழு திட்டத்துக்கு உலக வங்கி 69.33 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் நிதி உதவியை வழங்கியுள்ளது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிறுவப்பட்ட திட்ட முகாமைத்துவ பிரிவினால் இத்திட்டத்தின் ஒட்டுமொத்த முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும்.



இந்த திட்டம் ஜனவரி 2024 இல் தொடங்கி 2026 டிசம்பரில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## ஒன்பதாவது பாராளுமன்றின்

# 05ஆவது கூட்டத்தொடர் பெப். 07ஆம் திகதி ஆரம்பம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவதுகூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 07ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 26ஆம் திகதி நள்ளிவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரசியலமைப்பின் 70 (1) உறுப்புரைக்கு அமைய அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு அமைய 09ஆவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர்முடிவுக்குக் கொண்டுவரும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 33 உறுப்புரையின் (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளுக்கு அமைய பாராளுமன்றத்தின் ஒரு கூட்டத்தொடர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு புதிய கூட்டத்தொடர் பெப்ரவரி 07ஆம் திகதி ஆரம்பிக்கும் போது, ஜனாதிபதி பாராளுமன்றத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து, அக்கிராசனத்தை ஏற்று அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பு உள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்கு கொண்டு வரப்படும் போது, பாராளுமன்றத்தினால் முறையாக பரிசீலனை செய்யப்படாத வினாக்கள் மற்றும் பிரேரணைகள் இரத்தாவதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அவை தொடர்பில் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் பாராளுமன்ற இணைப்புக் குழு, உயர் பதவிகள் பற்றிய குழு, விசேட குழுக்கள் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தவிர்ந்த ஏனைய குழுக்கள் புதிய கூட்டத்தொடரில் மீண்டும் புதிதாக நியமிக்கப்பட வேண்டும்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் 2020 ஒகஸ்ட் 20 முதல் 2021 டிசம்பர் 12 வரையும், இரண்டாவது கூட்டத்தொடர் 2022 ஜனவரி 18 முதல் 2022 ஜூலை 28 வரையும் நடைபெற்றது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் 2022 ஒகஸ்ட் 03ஆம் திகதி முதல் 2023 ஜனவரி 27வரை நடைபெற்றது. நான்காவது கூட்டத்தொடர் பெப்ரவரி 08ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், நேற்று முன்தினம் 26ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரும் போது பாராளுமன்றம் 106 நாட்கள் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர்

# சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியை இன்று



கட்டுநாயக்க – கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற கோர விபத்தில் உயிரிழந்த நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேராவின் பூதவுடல் இன்று (28) புத்தளம் ராஜகதலுவ கத்தோலிக்க மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. இவரது பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக சிலாபம், ஆராச்சிக்கட்டுவவிலுள்ள இராஜாங்க அமைச்சரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறக்கும் போது 48 வயதான சனத் நிஷாந்த பெரேரா நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

# தனுஷ்கோடி – இலங்கைக்கிடையே 25,000 கோடி ரூபாவில் பாலம்

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**



தனுஷ்கோடிக்கும் இலங்கைக்குமிடையே இந்திய மதிப்பில் 25,000 கோடி ரூபாவில் கடல் பாலம் கட்டப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கம் ஆய்வு செய்ய தீர்மானித்துள்ளது.

இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை மீட்க இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே இராமரின் சேனையால் பாலம் கட்டப்பட்டது. அனுமன் தலைமையில் வானர சேனைகளால் கட்டப்பட்ட பாலத்தின் வழியாக இலங்கை சென்ற இராமர், இராவணனை வதம் செய்து சீதையை மீட்டு, இராமேஸ்வரம் திரும்பியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

இராவணனை வதம் செய்ததால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்க இக்கடலில் தீர்த்தமாடி சீதை மணலில் பிடித்து வைத்த சிவலிங்கத்தை, இராமர் வழிபாடு செய்ததால் இப்பகுதிக்கு இராமேஸ்வரம் என்ற பெயர் வந்தது என்றும், தனுஷ்கோடி – தலைமன்னாரிடையே கடலிலுள்ள மணல் திட்டுகளே இராமரால் கட்டப்பட்ட சேது பாலம் என்றும் கூறப்படுகிறது. இதனிடையே, தனுஷ்கோடி – தலைமன்னார் (இலங்கை) இடையே கடலுக்கு மேல் பாலம் கட்டும் திட்டம் குறித்து இந்திய – இலங்கை அரசுகள், கடந்த சில ஆண்டுகளாக தொடர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன.

தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்குமிடையிலுள்ள கடலில் 25 ஆயிரம் கோடி ரூபாவில் இத்திட்டத்தை நிறைவேற்ற, கடந்த 02 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை அரசால் திட்டமிடப்பட்டு இந்தியாவின் ஒப்புதலுக்காக காத்திருந்தது. இதனிடையே அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இராமேஸ்வரம் வந்த பிரதமர் நரேந்திர மோடி 21ஆம் திகதி தனுஷ்கோடிக்கு சென்றார். அங்கு அரிச்சல்முனை இராம சேது தீர்த்தக் கடலில் தீர்த்தம் தெளித்து புஷ்பாஞ்சலி செய்து வழிபட்டார்.

பிரதமர் நரேந்திர மோடி வந்து சென்றதை தொடர்ந்து, தனுஷ்கோடி – தலைமன்னாரிடையே பாலம் கட்டும் திட்டம் குறித்து இருநாட்டு அரசுகளிடையே ஆர்வம் அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனையடுத்து கடலில் பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விரைவில் மத்திய அரசு தரப்பில் ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## கச்சதீவு அந்தோனியார் உற்சவம்

# இலங்கை – இந்திய பக்தர்கள் 8,000 பேருக்கு இம்முறை அனுமதி




கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய உற்சவத்துக்கு இம்முறை இந்திய, இலங்கை பக்தர்கள் 8,000 பேரை அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் வழங்கியுள்ளது.

இந்நிலையில் இந்தியாவிலிருந்து வரும் பக்தர்களுக்கான அனுமதியை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களை பெப்ரவரி 06ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு தமிழ் நாட்டு விழா ஒருங்கிணைப்பாளர் பாதிரியார் சத்யதாகு, இந்திய பக்கதர்களுக்கு அறிவித்துள்ளார்.

கச்சத்தீவு புனித அந்தோனியர் ஆலய திருவிழா பெப்ரவரி 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. விழாவின் முதல் நாள் கொடியேற்றம் மற்றும் தேர் பவனி நடைபெறும். இரண்டாவது நாளான 24ஆம் திகதி சிறப்பு திருப்பலி மற்றும் கொடியிறக்கம் நடைபெறும்.

இந்த இரண்டு நாள் திருவிழாவில் இந்திய, இலங்கை பக்தர்கள் 8,000 பேர் கலந்துகொள்ள யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் அனுமதி அளித்துள்ளது. இதன்படி இந்தியாவிலிருந்து 04 ஆயிரம் பக்தர்கள் கச்சதீவு செல்ல அனுமதிக்கப்படவுள்ளனர்.

விழாவில் பங்கேற்க விரும்புவோர் பெப்ரவரி 06ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என விழா ஒருங்கிணைப்பாளர் பாதிரியார் சத்யதாகு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, "கச்சதீவு திருவிழாவுக்கு செல்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, பெப்ரவரி 06ஆம் திகதிக்குள் கொடுக்க வேண்டும். அனுமதி கிடைத்த பக்தர்கள் தடை செய்யப்பட்ட எவ்வித பொருட்களையும் படகில் கொண்டு செல்லக்கூடாது" என்றார்.

## பாணந்துறை, எழுவிலையிலுள்ள

# அலவியா மு. மகா வித்தியாலயத்தில் ரஜப் மாத சிறப்பு மாணவர் மன்றம்

பாணந்துறை, எழுவிலை அஹதிய்யாஹ் பாடசாலை நிர்வாகக் குழுவினர் என்.ஏ.எம். ரிப்தி, எம். பி.எஸ் வாரிஸ், ஜீ.ஏ.எப். சஹ்லினா ஆகியோர் ஏற்பாடு செய்துள்ள ரஜப் மாத சிறப்பு மாணவர் மன்றம் அலவியா முஸ்லிம் மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளாராக ஜீலான் நவோதய கல்லூரி பிரதி அதிபர் நஸீமி யஸ்மின் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## நெடுஞ்சாலை விபத்துகள்...

கலாநிதி பந்துல குணவர்தன, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். கோவிட் 19 தொற்றுக்காலத்தில் நாடு மூடப்பட்டிருந்த போது கட்டுநாயக்கா நெடுஞ்சாலையில் 250 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய செப்புக் கம்பியிலான கட்டமைப்பின் கம்பிகளை திருடர்கள் வெட்டிச் சென்றதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. செப்புக் கம்பிகளுக்கு பதிலாக அலுமினியக் கம்பிகளை பயன்படுத்தி மீண்டும் கெரவலப்பிட்டியிலிருந்து மின் சாரத்தை விநியோகிக்கும் செயல்முறையின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை நாளை நடைபெறவுள்ள விசேட கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு அமைச்சுகளின் செயலாளர்களுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## 2024 க்குள் துறைமுகத்தில்...

மற்றும் செயற்பாடுகளென அனைத்து செலவுகளையும் தவிர்த்து, 23 பில்லியன் ரூபா அல்லது 2,300 கோடி ரூபா நிகர இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் முனையங்களுக்கிடையில் போட்டி உருவாக்கப்பட்டுள்ளதாகவும், தனியார் துறையினூடாக வேலைவாய்ப்பை உருவாக்குவதன் மூலம் ஊழியர்களுக்கு அதிக நன்மைகள் கிடைப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## கண்காணிக்கும் பொறுப்பு...

பரிசீலிக்கும் இரண்டாவது மதிப்பாய்வு மார்ச் மாதம் நடத்தப்பட்ட பின்னர் மூன்றாவது தவணை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுமா? என்பதை கண்டறியும் பொறுப்பை இரண்டாவது மீளாய்வுவரை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் ஒப்படைக்க நிதியத்தின் பிரதிநிதிகள் குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி இரண்டாவது மீளாய்வின் போது, இலங்கையிலுள்ள திறைசேரியிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடயங்கள் தொடர்பிலும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் பொறுப்பேற்பார். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் உட்பட தெரிவு செய்யப்பட்ட பல பகுதிகளுக்கு விஜயம் செய்ததுடன், அனைத்து விடயங்களிலும் வெளிப்படைத்தன்மையுடன் கையாண்ட ஜனாதிபதிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

## மீண்டும் இந்திய முட்டை...

உள்ளூர் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஆராய்ந்ததாகவும், ஆனால் அது நடைமுறைக்கு வராததால், மீண்டும் முட்டைகளை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டதாகவும், அதன்படி, எதிர்வரும் ஏப்ரல் 03 ஆம் திகதி வரை இந்திய முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை ச.தொ.ச விற்பனை கூடங்களூடாக 43 ரூபாவுக்கு மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## இலங்கையர் நால்வருக்கு...

சிவப்பு பிடியாணையை பிறப்பித்துள்ளார். கல்லெலிய, கலகெடிஹேன ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களான தற்போது அவுஸ்திரேலியா மற்றும் சிரியாவில் வசிக்கும் நான்கு பேருக்கே இவ்வாறு சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 76ஆவது சுதந்திரதின...

தமிழ், ஆங்கிலம், தாய்லாந்து ஆகிய மொழிகளில் இலங்கைதாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நினைவுச்சின்னத்தில் வெளியிடுமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## எங்கள் கருத்து...

# சமூக சீரழிவுகள் தொடர இடமளிக்கப்படலாகாது!

பலவிதமான சிக்கல்களில் அகப்பட்டு சீர்குலைந்து போனவர்களின் துயரக்கதைகள் அதிகம்.

அதேசமயம் இன மற்றும் மத ரீதியான வதந்திகளால் குழப்பங்களும் மோதல்களும் உருவாகுவதற்கு சமூக ஊடகங்கள் வழியேற்படுத்திக் கொடுத்துள்ளன. இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் பலவற்றுக்கு சமூக ஊடகங்கள் எண்ணெய் வார்த்திருக்கின்றன.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, எமது சின்னஞ்சிறார்கள் அறியக் கூடாத தகவல்களும் படங்களும் ஸ்மார்ட் தொலைபேசிகளில் தாராளமாகவே வந்துசேருகின்றன. அவர்களது பருவத்துக்கு ஒவ்வாத தீயவிடயங்களும் பாலியல் ரீதியான விடயங்களும் தாராளமாகவே ஸ்மார்ட் தொலைபேசிகளில் வந்துசேருகின்றன. சிறார்கள் மத்தியில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதற்கு இதுவே முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

தகவல் தொடர்பாடலில் இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படுத்தியுள்ள பாரதூரமான எதிர்விளைவு இதுவாகும். இத்தகைய தறிகெட்ட வளர்ச்சிப் போக்கை எவ்வாறு தடுத்து நிறுத்துவதென்று பெற்றோர் மாத்திரமன்றி சமூக ஆர்வலர்கள் அனைவருமே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில்தான் பாராளுமன்றத்தில் நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் சில தினங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது. சைபர் குற்றங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்கு இச்சட்டம் வழியேற்படுத்துமென்று நம்பப்படுகின்றது.

இச்சட்டம் தொடர்பாக எதிரும்புதிருமான கருத்துகள் அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படுகின்றன. ஆனாலும் நம் சமூகத்தை சீரழிவில் இருந்து பாதுகாக்க வேண்டிய தன் கட்டாயத்தை எமது அரசியல்வாதிகள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

## அரசுக்கு சொந்தமான...

தற்போது சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிக்கு தீர்வாகவே இந்நடவடிக்கையை எடுப்பதாகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஹெந்தல பிரதேசத்திலுள்ள சிறுவர் வைத்தியசாலை கட்டடத்தையும் மட்டக்களப்பிலுள்ள பழைய வைத்தியசாலை கட்டடத்தையும் இதற்காக பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், இக்கட்டடங்களை சிறைச்சாலைகளாக மாற்றி, கைதிகளை தங்கவைப்பது தொடர்பாக சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

தற்போது கைதிகளின் எண்ணிக்கை 32 ஆயிரத்துக்கும் அதிகமாயினும், சிறைச்சாலைகளில் சுமார் 13 ஆயிரம் கைதிகளை தடுத்து வைப்பதற்கான இடவசதியே உள்ளதாகவும், நீதி அமைச்சு தெரிவித்தது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'யுக்திய' நடவடிக்கையினால் நாளாந்தம் பலர் கைதாவதுடன், இவர்களில் பலர் நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இதனாலேயே சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், நீதி அமைச்சு தெரிவித்தது.

## தமிழரசுக் கட்சியின் புதிய...

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறிதரனுக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வாழ்த்து தெரிவிக்கின்றது. தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்டு இராஜவரோதயம் இராசமாணிக்கம், வன்னியசிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றோரால் தலைமை தாங்கப்பட்டு, தமிழ் மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த பாரம்பரியமிக்க ஒரு கட்சியின் தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள்.

தமிழரசுக் கட்சி தனித்துநின்று தனது கோரிக்கைகளை வெல்ல முடியவில்லையென்ற காரணத்தால் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவை இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியென்ற அமைப்பை உருவாக்கிய பாரம்பரியமும் தந்தை செல்வா தலைமையில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக பதவியேற்ற பின்னர் சிவஞானம் சிறிதரன் ஐக்கியத்தை பற்றி பிரஸ்தாபித்திருப்பதை நாம் வரவேற்பதுடன், இலங்கை தமிழரசுக் கட்சி எம்முடன் இணைந்து பயணிக்க முன்வர வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்நிலையில் புதிய தலைவர் சிவஞானம் சிறிதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோரை ஒன்றிணைத்து 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்ற தனது விருப்பத்தை ஊடகங்களினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் ஒரு வலுவான அமைப்பை உருவாக்க வேண்டுமென்பதில் தீர்க்கமான சிந்தனையுடன் பயணிக்கின்றது. இதன் அடிப்படையில் ஒரு வருடத்துக்கு முன்னர் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி உருவாக்கப்பட்டு, அது இன்றுவரை தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் புதிய புதிய அமைப்புகள் தொடர்பாக சிந்திப்பதை விடுத்து, ஏற்கெனவே செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஐக்கிய முன்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென்று விரும்புகிறோம்" எனத் தெரிவித்தார்.

## பொதுச் செயலாளர் பதவிக்கு...

சண்முகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மத்திய குழு வின் தீர்மானம் நேற்று பொதுச் சபையின் தீர்மானத்துக்கு விடப்பட்ட போது அவருக்கு 102 பேர் எதிர்ப்பு தெரிவித்தனர். எனினும் அவருக்கு 112 பேர் ஆதரவு தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு இன்று திருகோணமலையில் ஏற்பாடாகியிருந்தபோதும் மாநாடு மற்றுமொரு தினத்தில் நடாத்துவதென நேற்று தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, தமிழரசுக் கட்சியின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா உத்தியோகபூர்வமாக தலைமைப் பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் ஒப்படைக்கவுள்ளார்.

இதனிடையே கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு இன்று நடைபெறுவதை முன்னிட்டு மத்திய செயற்குழுவுக்கான தெரிவுகள் நேற்று (27) திருகோணமலை ஜேக்கப் பீச் றிசோட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் செயலாளராக சண்முகம் குகதாசன், சிரேஷ்ட துணைத் தலைவராக சி.வி.கே.சிவஞானம், ஐந்து துணைத் தலைவர்கள், துணைப் பொதுச் செயலாளர் குலநாயகம், இரண்டு இணைப் பொருளாளர்கள், ஆறு துணைச் செயலாளர்கள் மற்றும் 13 மத்திய குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டன. இறுதியில் மாநாட்டுப் பிரேரணைகளும் தீர்மானங்களும் முன்மொழியப்பட்டன.

பொதுச்சபைக் கூட்டத்துக்கு முன்பாக காலையில் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்ற போதே இந்த தெரிவுகள் இடம்பெற்றன. எனினும் பொதுச் சபைக் கூட்டம் ஆரம்பமானதையடுத்து கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தெரிவு தொடர்பிலேயே இவ்வாறு குழப்பநிலை ஏற்பட்டது.

பொதுச் செயலாளரை தெரிவுசெய்வதற்காக கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்ற போதே, திருகோணமலையை சேர்ந்த குகதாசனை அந்தப் பதவிக்கு நியமிக்க பரிந்துரைக்கப்பட்டது.

இந்நிலையில், பொதுச் செயலாளர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசனின் பெயர் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டது.

341 பேரை கொண்ட பொதுச் சபையில் நேற்றைய கூட்டத்தில் ஓரிருவரை தவிர, அனைவரும் கலந்துகொண்டுள்ளதாக அறிய முடிகிறது. மத்திய குழு மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள முடிவின் பிரகாரம் பொதுச் செயலாளராக குகதாசனின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

சிரேஷ்ட உப தலைவராக சி.வி.கே சிவஞானம், இணை பொருளாளர்களாக ஞா.சிறிநேசன், கனக சபாபதி ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. துணைத் தலைவர்களாக கே.வி.தவராசா, சார்ள்ஸ் நிர்மலநாதன், கலையரசன், அரியநேந்திரன், சத்தியலிங்கம் ஆகியோரும் இணை செயலாளர்களாக சாந்தி சிறிஸ்கந்தராஜா, ரஞ்சனி கனகராஜா, சரவணபவன், சாணக்கியன், சிவமோகன் ஆகியோரின் பெயர்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு இருவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டதாலேயே இருதரப்பினருக்கு இடையில் முறுகல் நிலை தோன்றியது. நிலைமையை விளக்கிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மத்திய சபையின் தீர்மானத்துக்கு பொதுச் சபையில் ஆதரவானவர்களை கை உயர்த்துமாறும் எதிரானவர்களை கை உயர்த்துமாறும் கேட்டுக் கொண்டார். இந்நிலையில் மத்திய குழுவில் பொதுச் செயலாளர் பதவிக்கு குகதாசன் சண்முகம் தெரிவு செய்யப்பட்டமைக்கு ஆதரவாக 112 பேரும் எதிராக 102 பேரும் கை உயர்த்தினர். இதனையடுத்து பொதுச் செயலாளர் பதவிக்கு குகதாசன் சண்முகத்தை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது.



## தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான தெரிவில் நீண்ட நாளாக நிலவி வந்த பரபரப்புக்கு முற்றுப்புள்ளி!

# சவால்கள் நிறைந்த பயணம் ஆரம்பம்!

## தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரன் எம்.பி பொறுப்பேற்றுள்ளது மிகப்பெரும் சுமை! தமிழர் தரப்பிலுள்ள கட்சிகளை ஒன்றிணைத்து பயணம் செய்ய வேண்டியதே அவர் முன்னாலுள்ள பெரும் பொறுப்பு! தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளை ஒருகுடையின் கீழ் கொண்டுவர வேண்டியது சிறிதரன் மேற்கொள்ள வேண்டிய முதல் காரியம்!

வார இறுதி
### அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பரபரப்பான வாக்களிப்பில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைவிட 47 வாக்குகளை அதிகமாகப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைவராகத் தெரிவாகியுள்ளார்.**

தலைவர் பதவிக்கு ஆரம்பத்தில் மும்முனைப் போட்டி நிலவி வந்தது. சிறிதரன், சுமந்திரன் ஆகியோருடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனும் தலைவர் பதவிக்காகக் களமிறங்கியிருந்தார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்காக மூவர் போட்டியிட்டாலும் சுமந்திரனுக்கும், சிறிதரனுக்கும் இடையிலேயே கடுமையான போட்டி நிலவியது. இரு தரப்பினரும் தமக்கு ஆதரவு வேண்டி கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும், அதில் தாக்கம் செலுத்தக் கூடிய புலம்பெயர் சமூகத்தின் மத்தியிலும் பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர்.

அதேசமயம் இவர்களின் ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் இருவர் மீதும் மாறிமாறி வசைபாடும் வகையிலான பதிவுகளை மேற்கொண்டு வந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக தலைவர் பதவிக்கு தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இது கட்சியின் ஜனநாயகத்தைப் பறைசாற்றும் விடயம் எனக் கூறப்பட்டாலும், கட்சியின் ஒற்றுமை மற்றும் பதவிக்கான போட்டி என்பவற்றை வெளிக்காட்டும் ஒன்றாகவே இத்தேர்தல் பார்க்கப்பட்டது.

தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட இரு பிரதான வேட்பாளர்கள் பற்றிய பார்வை வெவ்வேறாக இருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தமிழ்த் தேசியம் பற்றி அதிகம் குரல் கொடுப்பவராகப் பார்க்கப்படுகிறார்.

மறுபுறத்தில் சட்ட நுணுக்கங்கள் மற்றும் சர்வதேச உறவுகள் விடயத்தில் பாண்டித்தியம் பெற்றவராக சுமந்திரன் எம்.பி பார்க்கப்பட்டார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்யவும், தென்னிலங்கை மக்களிடம் தமிழர் தரப்பு கருத்துகளை எடுத்துச் செல்வதற்கும் சுமந்திரனின் தலைமைத்துவம் அவசியம் என்ற கருத்துக்கள் தலைமைத்துவத்துக்கான தேர்தல் காலத்தில் முன்வைக்கப்பட்டன.



இந்தத் தலைமைத்துவப் போட்டியின் காரணமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி பிளவுபடும் ஆபத்து இருப்பதாகவும், தேர்தலின் பின்னர் அக்கட்சி இரண்டாகப் பிரிந்துவிடும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தவிரவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிகளில் ஒன்று என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கூட்டணியாகச் செயற்படுவதில் இந்தக் கட்சி கணிசமான பங்காற்றியிருந்தது.

இருந்தபோதும், கடந்த காலங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுடைய ஒருசில செயற்பாடுகள் அக்கட்சி கூட்டணியின் பங்காளிக் கட்சிகளிலிருந்து சற்று விலகிச் செல்வது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் எடுக்கும் ஒரு சில தீர்மானங்களில் தமிழரசுக் கட்சி உடன்படாமல், தானே தனித்து முடிவெடுத்த சந்தர்ப்பங்களும் இருந்தன.

இலங்கையிலுள்ள தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரமன்றி இதற்கு ஆதரவாக வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்ந்து வாழும் சமூகம் மத்தியிலும் தலைமைத்துவப் போட்டி தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன. ஒரு தரப்பினர் சிறிதரனுக்கு ஆதரவாகவும் மற்றுமொரு தரப்பினர் சுமந்திரனுக்கு ஆதரவாகவும் செயற்பட்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கான தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெற்று புதிய தலைவராக சிறிதரன் எம்.பி தெரிவு செய்யப்பட்டார். இரகசியமாக நடைபெற்ற வாக்கெடுப்பில் சிறிதரனுக்கு ஆதரவாக 184 வாக்குகளும், எம்.ஏ.சுமந்திரனுக்கு ஆதரவாக 137 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. 47 மேலதிக வாக்குகளால் சிறிதரன் தலைவராகத் தெரிவானார்.

குறித்த கட்சியின் வரலாற்றில் போட்டியிட்டுத் தெரிவான தலைவர் என்ற ரீதியிலும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதாலும் சிறிதரன் எம்.பிக்கு பல்வேறு சவால்கள் எதிர்காலத்தில் காத்திருக்கின்றன.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் உள்ளிட்ட ஏனைய தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழர்களின் பேரம்பேசும் பலம் மிக்க தமிழ் அரசியல் தரப்பொன்றைக் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய சுமை அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது என்றுதான் கூறவேண்டியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கருத்துத் தெரிவித்த சிறிதரன் எம்.பி, தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக, 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தமிழ் தேசியவாத சக்திகளின் அணிதிரட்டலை மீளக்கட்டியெழுப்பவும், அனைவரையும் ஒன்றிணைப்பதற்கும் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக வலியுறுத்தினார்.





தமிழ் மக்களின் உரிமைகளுக்காக எத்தகைய விட்டுக்கொடுப்புக்கும் தயாராக இருப்பதாகவும், தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை வென்றெடுக்கும் பயணத்தை நோக்கி அனைவரையும் அரவணைத்து தியாக உணர்வோடு உழைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கூட்டணிக் கட்சிகளுடன் ஜனநாயக ரீதியான உரையாடல்களைத் தொடங்குவதற்கு மற்றைய கட்சித் தலைவர்களைச் சந்தித்து உரையாடவிருப்பதுடன் வடக்கு, கிழக்கில் உள்ள சிவில் சமூகம் மற்றும் தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து அவர்களுடன் வெளிப்படையான ஜனநாயக உரையாடலை உருவாக்கவிருப்பதாகவும் சிறிதரன் எம்.பி தெரிவித்தார்.

"இதற்கும் அப்பால் புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புகளுடன் உரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய ஜனநாயக முன்முயற்சிகள் மூலம், நாம் அனைவரும் ஒரு பொதுவான தளத்தில் கவனம் செலுத்த முடியும். இது கோரிக்கைகளை முன்னெடுப்பதற்கும் பொதுவான அரசியல் கொள்கையை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும்" எனவும் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறிதரன் எம்.பி தெரிவித்தார்.

இதற்கும் அப்பால், இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளுக்கும் பல்வேறு அபிவிருத்திகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கும் மற்றுமொரு தரப்பாக புலம்பெயர்ந்து வாழ் தமிழ் சமூகம் விளங்குகிறது. இவ்வாறான பின்னணியில் புலம்பெயர்ந்துவாழ் தமிழர்களின் ஒத்துழைப்பையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பெற்றுக் கொள்வது முக்கியம் என்றே தமிழர் தரப்பிலுள்ள புத்திஜீவிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

புலம்பெயர்ந்த வாழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு நிலைப்பாடுகளின் அடிப்படையில் அவர்கள் பிரிந்து நிற்கின்றனர். அங்குள்ள ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொருவருக்கு ஆதரவைத் தெரிவிக்கும் நிலைமையே காணப்படுகிறது. அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே சமூகமாகக் கொண்டுவர முடியுமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பொதுவான நிலைப்பாடொன்றை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் புலம்பெயர்ந்துவாழ் தமிழ் சமூகத்தை ஒன்றிணைத்து, அதன் ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என்பது முக்கியமானதாகின்றது. இது விடயத்தில் சிறிதரன், சுமந்திரன் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்படுவதே எதிர்காலத்தில் நன்மையை உருவாக்குவதாக அமையும் என்று தமிழ்ப் புத்திஜீவிகள் கூறுகின்றனர்.

**தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மீதான தென்னிலங்கையின் பார்வை எவ்வாறானதாக இருக்கப் போகின்றது என்பது இப்போதுள்ள முக்கிய வினா! சுமந்திரன் எம்.பியின் அமைதியான அரசியல் மிதவாதப் போக்கும், சிறிதரன் எம்.பியின் தமிழ்த் தேசிய கடும்போக்கும் சமாந்தரமான பாதைகள் அல்ல என்பது வெளிப்படையான உண்மை!**

இதுபோன்ற சவால்களுக்கு தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் முகங்கொடுக்க வேண்டியிருக்கும் நிலையில், தலைமைத்துவத்துக்குப் போட்டியிட்டு தோல்வியடைந்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது வாழ்த்துக்களைப் புதிய தலைவருக்குத் தெரிவித்திருப்பதுடன், அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

'உட்கட்சி ஜனநாயகத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தியுள்ளோம். சிறிதரனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா அவர்கள் வழிநடத்திச் சென்ற கட்சியின் பொறுப்பு தற்பொழுது சிறிதரன் மீது சுமத்தப்பட்டுள்ளது. இது சந்தோசமான விடயம். இந்தப் பயணத்தில் நாம் ஒன்றாகவே பயணிப்போம். தேர்தல் காலத்திலேயே இதனைத் தெளிவாகச் சொல்லியிருந்தோம். என்னுடைய முழுமையான ஆதரவை தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறிதரனுக்கு வழங்குவேன்' என சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

தலைமைத்துவத்துக்குப் போட்டியிட்டிருந்தாலும் ஜனநாயக ரீதியில் வழங்கப்பட்ட தீர்ப்பை ஏற்று தனது பண்பை வெளிப்படுத்தியுள்ளார் சுமந்திரன்.

தலைவர்கள் தமக்கிடையிலான போட்டித் தன்மையை மறந்து ஒன்றிணைந்து செயற்படுவதற்கான நல்லெண்ணத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கும் நிலையில், தலைமைத்துவத்துக்கான போட்டிக் காலத்தில் சமூக ஊடகங்களில் ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொண்டிருந்த அவர்களின் ஆதரவாளர்களும் ஜனநாயக முடிவுக்கு மதிப்பளித்து ஒன்றிணைந்து கட்சியைப் பலப்படுத்துவதற்கு இணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான் தமிழர் தரப்பின் உண்மையான வேண்டுதலாக உள்ளது.

அதேபோல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்து அவர்கள் மத்தியில் காணப்படும் சந்தேகங்களைக் களைந்து கூட்டணியாகச் செயற்படுவதற்கான முயற்சிகளையும் சிறிதரன் எம்.பி மேற்கொள்ள வேண்டும். தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கான போட்டியின் போது வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் தமிழ்த் தேசியம் குறித்த கட்சியின் உணர்வுகள் குறித்து பல்வேறு ஐயப்பாடுகளை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.



இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியம் என்ற விடயத்தில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கு முன்னர் தமிழரசுக் கட்சி தனது கட்சிக்குள் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும். அவ்வாறு கட்சியை வலுப்படுத்திய பின்னரே ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைந்து பயணமொன்றை முன்னெடுக்க முடியும். எனவே, தமிழரசுக் கட்சியின் தலைவருக்குத் தற்பொழுது சவாலான பொறுப்பொன்றே வழங்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இது இவ்விதமிருக்க, தமிழரசுக் கட்சியின் புதிய தலைமைத்துவம் தொடர்பில் தென்னிலங்கையும் கவனம் செலுத்தியிருப்பதைப் பார்க்க முடிகிறது. அக்கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பது தொடர்பில் தென்னிலங்கை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது. இவ்வாறான நிலையில் புதிய தலைவருக்கு தென்னிலங்கைத் தலைவர்கள் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் முன்வைக்கும் விடயங்களை ஒருசில தென்னிலங்கை அரசியல்வாதிகள் இனவாதக் கண்ணோட்டத்தில் பார்க்கும் சந்தர்ப்பங்களைக் கடந்த காலத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எனவே, தமிழரசுக் கட்சியின் தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதால், தமிழரசுக் கட்சி தொடர்பான தென்னிலங்கை அரசியல்வாதிகளின் பார்வையும் அதேபோன்றதாக இருக்குமா என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக இனவாத சிந்தனை கொண்டவர்கள் என்பதே அநேகமான தென்னிலங்கை அரசியல்வாதிகளின் நிலைப்பாடாக உள்ளது. இந்த நிலைப்பாட்டை அவர்கள் தமது தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் அதிகம். எனவே, இதுபோன்ற சவால்கள் குறித்தும் தழிழரசுக் கட்சியின் புதிய தலைமை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறான சவால்களுக்குத் தலைவர் என்ற ரீதியில் அவரால் மாத்திரம் முகங்கொடுக்க முடியாது. இதற்கு அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் அவசியம். இந்த ஒத்துழைப்பை தமிழரசுக் கட்சியின் தலைவர் எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகின்றார் என்பதிலேயே அக்கட்சியின் எதிர்கால ஒற்றுமை தங்கியுள்ளது.

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக தலைவர் பதவிக்கு தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இந்நடைமுறையானது கட்சியின் ஜனநாயகத்தைப் பறைசாற்றும் விடயம் எனக் கூறப்பட்டாலும், கட்சியின் ஒற்றுமை மற்றும் பதவிக்கான போட்டி என்பவற்றை வெளிக்காட்டும் ஒன்றாகவே இத்தேர்தல் நோக்கப்படுகிறது**



# தீங்குகளை கட்டுப்படுத்தும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம்!

**சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக பெருகும் குற்றங்களிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாப்பது அவசியமென்று சமூக ஆர்வலர்கள் அபிப்பிராயம்!**

**பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் (Online Safety Bill) தற்பொழுது நாட்டில் அதிகம் பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது.**

குறித்த சட்டமூலம் தொடர்பில் எதிராகவும், ஆதரவாகவும் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், இச்சட்டமூலம் 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கு ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் பதிவாகியிருந்தன.

கடந்த 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி விசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட இந்தச் சட்டமூலம் முதலாவது வாசிப்புக்காக கடந்த வருடத்தின் ஒக்டோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 45 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

குறித்த சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதாக இல்லாதபோதும், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை உயர் நீதிமன்றம் வலியுறுத்தியிருந்தது. நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலத்தில் 34 திருத்தங்கள் உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

குறித்த சட்டமூலம் ஊடகங்கள், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அங்கீகரிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களுக்கு உட்பட்டதாக இச்சட்டமூலத்துக்கு துறைசார் மேற்பார்வைக் குழு அங்கீகாரம் வழங்கியது.

இதன் அடிப்படையிலேயே கடந்த 23ஆம் 24ஆம் திகதிகளில் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது.

இன மத ரீதியான வெறுப்புகளைத் தூண்டும் வகையில் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட நிகழ்நிலைத் தளங்களின் ஊடாக வெளியிடப்படும் கருத்துக்கள் மற்றும் பிரசாரங்களைத் தடுப்பதே இந்தச் சட்டமூலத்தின் நோக்கம் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு ஆகும்.

இருந்தபோதும் அரசாங்கம் தமக்கு எதிராகச் செயற்படக் கூடிய அனைவரையும் ஒடுக்குவதற்காகவும், அரசியல் ரீதியில் தமக்கு எதிரானவர்களைக் கட்டுப்படுத்துவதற்குமே இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவந்திருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன.

இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டதன் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருக்கின்றனவா இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால், சமூக ஊடகங்களின் செயற்பாடு தொடர்பில் சமூகத்தின் மத்தியில் விமர்சனம் இருப்பதை எவரும் மறுக்க முடியாது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் முன்னேற்றத்தினால் உலகம் உள்ளங்கையில் சுருங்கியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் இலங்கையும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்கள் இன்று நம்முடைய வாழ்க்கையை முழுமையாக ஆட்கொண்டுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட உலகத் தொற்றான கொவிட் தாக்கம் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டின் தேவையை மேலும் அதிகரித்து விட்டது என்றே கூற வேண்டும். குறிப்பாக கல்வித் துறையில் இந்த சாதனங்களின் பயன்பாடு மற்றும் இணையத்தின் தேவை என்பன அத்தியாவசியமாகி விட்டன.



மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் கரங்களிலும் ஸ்மார்ட் தொலைபேசி சாதனங்கள் வந்துவிட்டமையால் அதனால் அவர்கள் பயனடைவது ஒருபுறமிருக்க, அதனைப் பயன்படுத்தி இடம்பெறக் கூடிய துஷ்பிரயோகங்களும் அதிகரித்து விட்டன.

## பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள Online Safety Bill தொடர்பாக எதிரும்புதிருமான வாதப்பிரதிவாதங்கள்!



அது மாத்திரமன்றி பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களும் இந்த சமூக ஊடகங்கள் மற்றும் இணையத் தளத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. இதுகுறித்த முறைப்பாடுகளும் அதிகரித்துள்ளன.

இணையப் பாதுகாப்புக்குரிய நிலையத்தின் தகவல்களுக்கு அமைய 2023 ஆம் ஆண்டில் பதிவான 21 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகளில் சுமார் 5 ஆயிரம் முறைப்பாடுகளைத் தவிர ஏனைய அனைத்து முறைப்பாடுகளும் சமூக ஊடகங்கள் குறித்த முறைப்பாடுகளாக அமைந்துள்ளன.

இணையப் பாதுகாப்பு குறித்த விடயங்களைக் கையாள்வதற்கான ஏற்பாடுகளே குறித்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. எனினும், சமூக ஊடகம் போன்ற தளங்களினால் ஏற்படுகின்ற குற்றங்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான எந்த சட்ட ஏற்பாடும் குறித்த நிறுவனத்திடம் இல்லை.

அது மாத்திரமன்றி இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அரசியல் ரீதியாகவும், வேறு காரணங்களுக்காகவும் ஒருவர் மீது சேறுபூசும் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

கடந்த 2022ஆம் ஆண்டு அரகலய காலப் பகுதியில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியே பல்வேறு தரப்பினர்கள் ஒன்றுகூடினர். குறிப்பாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் தலைவர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு மக்களை ஒன்றுகூடுமாறு அழைப்புக்களும் இந்த நிகழ்நிலைத் தளங்களைப் பயன்படுத்தியே விடுக்கப்பட்டன.

இதனால் சமூக ரீதியாகத் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருந்தது. இது அரசியல் ரீதியான விடயமாகப் பார்க்கப்பட்டாலும் அனைவருக்கும் தனிப்பட்ட வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. எனவே, இவ்வாறான நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நிகழ்நிலைக் காப்புச் சட்டத்துக்கான தேவைப்பாடு பலராலும் எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அவ்வாறாயின் இவ்வாறானதொரு சட்டத்தை எதிர்ப்பவர்கள் யார்? கருத்துச் சுதந்திரத்துக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்றாலும் சமூக ரீதியாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஏற்படுத்தப்படக் கூடிய தீங்கிழைப்புக்களைத் தடுப்பதற்கு விரும்பாதவர்களா இதனை எதிர்க்கின்றனர் என்ற கேள்வியும் எழுகின்றது.

சமூக ஊடகங்கள் மற்றும் நிகழ்நிலைத் தளங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பதை நன்கு உணர்ந்தவர்களே இதனை எதிர்க்கின்றனர். இருந்தபோதும், அரசாங்கம் கொண்டுவரும் புதிய சட்டமானது கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் வகையில் இருக்கக் கூடாது என்பதும் மற்றுமொரு கருத்தாகும்.

இது விடயத்தில் அரசாங்கம் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தியதன் அடிப்படையிலேயே இச்சட்டமூலத்தைக் கொண்டுவந்துள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரையும் சந்தித்து கலந்துரையாடியதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், குறித்த சட்டத்தில் மேலும் திருத்தங்களைக் கொண்டுவர எதிர்பார்த்திருப்பதாகவும், விரைவில் அதனை அமைச்சரவையின் அனுமதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் கூறியிருந்தார். இந்தத் திருத்தங்களின் ஊடாக அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்ததொரு சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தலாம் என்பதே எதிர்பார்ப்பாகும்.

**பி.ஹர்ஷன்...**

# பாலஸ்தீன்–இஸ்ரேல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வலியுறுத்தும் உலகம்



**காஸா மீதான இஸ்ரேலின் யுத்தம் மூன்று மாதங்களுக்கும் மேலாகத் தொடர்கிறது. இந்த யுத்தம் ஆரம்பமானதும் 'இஸ்ரேல் – பலஸ்தீனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும், அதற்கு இறைமையுள்ள பலஸ்தீனத்தின் உருவாக்கமே சரியான தீர்வாக அமையும்' என்ற கருத்தும், இதனை அடிப்படையாகக் கொண்ட வலியுறுத்தல்களும் உலகளாவிய ரீதியில் மேலெழுந்துள்ளன. இப்போர் ஆரம்பமாவதற்கு முன்னர் அவ்வப்போது வலியுறுத்தப்பட்ட இவ்விடயம் தற்போது தொடராக வலியுறுத்தப்படுகின்றது.**

பலஸ்தீன பிரச்சினையானது நேற்று இன்று தோற்றம் பெற்றதல்ல. முதலாம் உலகப் போரின் ஊடாக பலஸ்தீன் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் வந்தது. அதனைத் தொடர்ந்து அன்றைய பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் ஆதர் பல்போர் 1917 நவம்பர் 02 ஆம் திகதி யூத தலைவர்களுக்கு எழுத்துமூலம் அளித்த உறுதிமொழிப்படி பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு நாடுகளிலுள்ள யூதர்கள் பலஸ்தீனுக்குள் குடியேறத் தொடங்கினர். அதற்கு 1948 வரையும் பிரித்தானியா போதிய வாய்ப்புகளை அளித்தது.

இதன் விளைவாக பலஸ்தீனியர்கள் கட்டம் கட்டாக இருப்பிடங்களை இழக்கத் தொடங்கினர். இதற்கு எதிராக 1929 முதல் பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர். ஆனால் 1947 வரையும் இவை எதுவும் பெரிதாக கவனத்தில் கொள்ளப்படவில்லை. இந்நிலையில் 1947 இல் பலஸ்தீன மக்கள் பாரியளவில் வெளியேற்றத்திற்கு உள்ளாகினர். அதுவே 'நக்பா' என நினைவு கூரப்படுகிறது. இருப்பிடங்களை இழந்து வந்த பலஸ்தீனியர்கள் அகதிமுகாம்களில் தங்கும் நிலைக்கு உள்ளாகினர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை பலஸ்தீன், இஸ்ரேல் பிரச்சினைக்கு இரண்டு தனித்தனி நாடுகளின் வடிவத்தில் முதலாவது தீர்வை 1947 இல் வழங்கியது. இஸ்ரேல் யூதர்களின் நாடாகவும், பலஸ்தீன் அரேபியர்களின் நாடாகவும் இருக்குமெனவும் கூறப்பட்டது. இந்த அடிப்படையில் 1948 மே 15 இல் இஸ்ரேலை ஐ.நா. தனிநாடாக அங்கீகரித்தது. ஆனால் பலஸ்தீன் அங்கீகரிக்கப்படவில்லை.

இந்நிலையில் முதலாவது அரபு_ இஸ்ரேல் யுத்தம் 1948 இல் நடைபெற்றது. அதன் பின்னர் 1967 இல் ஆறு நாட்கள் அரபு_ இஸ்ரேல் யுத்தம் இடம்பெற்றது. இந்த யுத்தத்தின் முடிவில் இரு நாடுகள் தீர்வு வலியுறுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட போர் நிறுத்தத்திற்கு அப்பால் மேற்குக் கரை, காஸா மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளைக் உள்ளடக்கி சுதந்திர பலஸ்தீன இராச்சியத்தை உருவாக்கும் திட்டமாக அது முன்வைக்கப்பட்டது.

அதேநேரம் 1973 இல் மூன்றாவது அரபு_ இஸ்ரேல் போர் நடந்தது. அதன் பிறகு, அரபு நாடுகளுடன் இஸ்ரேலுக்கு நேரடிப் போர் நடக்கவில்லை. ஆனால் பலஸ்தீனுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல் இன்னும் தொடரவே செய்கிறது. இந்த எல்லாப் போர்களிலும் பலஸ்தீனியர்கள் தங்கள் வாழிடங்களை இழந்து நிர்க்கதி நிலைக்கு உள்ளாகினர்.

ஐ.நா.வின் தரவுகளின்படி 23 இலட்சம் சனத்தொகையைக் கொண்ட காஸாவில் 18 இலட்சம் பேர் பலஸ்தீன அகதிகளாவர். அவர்கள் 08 பாரிய முகாம்களில் தங்கியுள்ளனர். மேற்கு கரையிலுள்ள 23 அகதி முகாம்களில் 08 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களும், பலஸ்தீனுக்கு வெளியே சிரியாவிலுள்ள 12 முகாம்களில் 5 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களும் லெபனானிலுள்ள 12 முகாம்களில் சுமார் 5 இலட்சம் பேரும் ஜோர்தானிலுள்ள 13 அகதி முகாம்களில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களும் என்றவாறு பலஸ்தீனர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

பலஸ்தீன்இஸ்ரேல் பிரச்சினைக்கு 'இரு நாடுகள் தீர்வு' பல தடவை பரிந்துரைக்கப்பட்ட போதிலும் 1993 இல்தான் பலஸ்தீனமும் இஸ்ரேலும் முதன் முதலாக சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற இந்த ஒப்பந்தமே ஒஸ்லோ ஒப்பந்தமாக விளங்குகிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்குக் கரை மற்றும் காஸா பகுதியை ஆள்வதற்கு பலஸ்தீன அதிகாரசபை உருவாக்கப்பட்டது. என்றாலும் இஸ்ரேல்பலஸ்தீன் பிரச்சினை முடிவுக்கு வந்ததாக இல்லை.

இந்த நிலையில் கடந்த ஆண்டு (2023) ஒக்டோபரில் காஸா மீதான யுத்தம் ஆரம்பமானது முதல் காஸா, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரை, ஜெரூஸலம் ஆகியவற்றை உள்ளடக்கி இறைமையுள்ள பலஸ்தீன் அமைக்கப்பட வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இதற்கு இஸ்ரேல் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இவ்வாறான சூழலில் ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸ், 'பலஸ்தீன மக்களுக்கான நாடு அமைக்கப்படுவதற்கு ஒவ்வொருவரும் அங்கீகாரம் அளிக்க வேண்டும். அதனை நிராகரிப்பதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை உட்பட உலகின் பல நாடுகளும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிலைப்பாட்டிலேயே உள்ளன. ஐரோப்பிய ஒன்றியமும், அணி சேரா நாடுகள் அமைப்பும் கூட அதனையே வலியுறுத்தியுள்ளன.


இந்நிலையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மத்திவ் மில்லர், 'பலஸ்தீன நாடு இல்லாமல் இஸ்ரேலின் நீண்ட மற்றும் குறுகிய கால சவால்களை தீர்க்க வழி இல்லை. காஸாவை மீண்டும் கட்டியெழுப்புதல், காஸாவில் ஆட்சியை நிறுவுதல், பலஸ்தீனிய அரசை நிறுவாமல் காஸாவிற்கு பாதுகாப்பை வழங்குதல் போன்ற குறுகிய கால சவால்களை தீர்க்க அவர்களது நீண்ட கால சவால்கள் தீர்க்கப்பட வேண்டும். அதனை விடுத்து பாதுகாப்புக்கான நீண்ட கால சவால்களை தீர்க்க முடியாது.



**இறைமையுள்ள பாலஸ்தீனத்தின் உருவாக்கமே சரியான தீர்வாக அமையுமென்று சர்வதேசம் வலியுறுத்தல்**

அதனால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இஸ்ரேலுடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இஸ்ரேல் நிறுவப்பட்டதில் இருந்து முகம் கொடுக்கும் சவால்களை சமாளிக்க ஒரு வரலாற்று வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த வாய்ப்பை இஸ்ரேல் பயன்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்' என்றுள்ளார்.





இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இது தொடர்பில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஆனால் இறைமையுடன் கூடிய பலஸ்தீனை உருவாக்கும் திட்டத்தை நிராகரித்த பிரதமர் நெதன்யாகு, பலஸ்தீனியப் பிரதேசங்களின் பாதுகாப்பு கட்டுப்பாடு முழுமையாக இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருப்பது அவசியம் என்றுள்ளார்.

இதேவேளை காஸாவின் எல்லையில் இருந்து காஸாவின் உட்பகுதியாக அரை மைல் தூரத்திற்கு யுத்த சூன்ய பிரதேசமொன்றை அமைக்கும் திட்டத்தை இஸ்ரேல் கொண்டுள்ளது. அத்திட்டத்தை நிராகரித்துள்ள அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் பேச்சாளர் ஜோன் கிர்பி, காஸாவின் நிலப்பகுதியை எந்த வகையிலும் குறைக்க நாம் ஆதரிக்க மாட்டோம். காஸாவின் நிலப்பகுதி குறைக்கப்படுவதை பார்க்க நாம் விரும்பவில்லை என்ற நிலைப்பாட்டில் அமெரிக்கா உறுதியாக உள்ளது என்று கூறியுள்ளார்.

அத்தோடு 'இரு நாட்டு தீர்வு என்பது இஸ்ரேலிய மக்களுக்கு மட்டுமல்ல, பலஸ்தீனிய மக்களுக்கும் நல்லது. ஜனாதிபதி பைடனின் விருப்பத்தில் எதுவும் மாறவில்லை. இது பிராந்தியத்தின் சிறந்த நலன். அந்த இலக்கை நோக்கி செயல்படுவதை அமெரிக்கா நிறுத்தாது. பலஸ்தீனியர்கள் சுதந்திரமான அரசில் அமைதி மற்றும் பாதுகாப்போடு வாழ அனைத்து உரிமைகளையும் கொண்டுள்ளனர் என நாங்கள் நம்புகிறோம். பலஸ்தீன மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காஸாவின் ஆட்சியை நாங்கள் விரும்புகிறோம்' என்றும் கூறியுள்ளார் அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் பேச்சாளர்.


இருந்த போதிலும் இரு நாட்டு கொள்கையைக் கடுமையாக எதிர்த்துவரும் இஸ்ரேல், இப்போர் தொடங்கிய சொற்ப காலம் முதல் காஸா மக்களை வேறு நாடுகளுக்கு இடம் மாற்றும் திட்டத்தை அறிவித்தது. இதற்கு சில ஆபிரிக்க நாடுகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டன. ஆனால் அந்த ஆபிரிக்க நாடுகள் அவ்வாறான எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை என மறுத்த அதேநேரம் இத்திட்டத்திற்கு கடும் எதிர்ப்பும் கிளம்பின. அத்தோடு மௌனம் காத்த இஸ்ரேல், பலஸ்தீன்-இஸ்ரேல் பிரச்சினைக்கு தீர்வு யோசனையை ஐரோப்பிய ஒன்றியம் இருநாட்டு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு முன்வைத்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இஸ்ரேல், மத்திய தரைக்கடலில் செயற்கையாகத் தீவொன்றை அமைத்து அங்கு பலஸ்தீனர்களை குடியமர்த்துமாறு குறிப்பிட்டுள்ளது. இந்த யோசனைக்கும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

பலஸ்தீனில் இருந்து பலஸ்தீனியர்களை வெளியேற்றும் வகையில் இஸ்ரேல் முன்வைக்கும் அனைத்துத் திட்டங்களையும் பலஸ்தீன அதிகார சபை நிராகரித்துள்ளதோடு, பலஸ்தீன் நிலத்தின் சொந்தக்காரர்கள் நாமே. அதன் விடுதலைக்காகவே நாம் போராடுகிறோம்' என்று ஹமாஸின் அரசியல் குழு உறுப்பினர் ஒஸாமா ஹம்தான் குறிப்பிட்டுள்ளார்.

இறைமையுள்ள பலஸ்தீனை உருவாக்கும் திட்டத்தை இஸ்ரேல் எதிர்ப்பதை, பிரித்தானியா, ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்றுள்ளது.

எனினும் இந்த யுத்தம் நிறுத்தப்பட்டு பல தசாப்தங்களாக நீடித்துவரும் பலஸ்தீன்இஸ்ரேல் பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு இறைமையுள்ள பலஸ்தீன் உருவாக்கம் இன்றியமையாததாகும். மக்களின் விருப்பமும் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.



**மர்லின் மரிக்கார்...**

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

# இலங்கை தேசிய தர விருது விழா 2022




## சிறந்த செயல்திறன்

இலங்கை தேசிய தர விருதானது (ளுடுழேயு) சிறந்த செயல்திறனுக்காக இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற அமைப்புகளுக்கு தேசிய அளவில் வழங்கப்படும் மதிப்பு வாய்ந்த விருதாகும். இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் (ளுடுளுஐ) இது நடத்தப்படுவதோடு அமெரிக்காவின் ஆயடஉழடஅ டீயடனசபைந தேசிய தர விருதில் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் அடிப்படையில் செயற்படுத்தப்படுகிறது. முடிவுகளை மேம்படுத்தல் மற்றும் அதிக போட்டித் தன்மைக்கான இலக்குகளை அடைவதற்கு அமைப்பை வலுவூட்டுவது அவ்வாறான மேம்பட்ட வடிவங்களை இணைப்பதற்கு நிறுவனங்களை ஊக்குவிப்பது, சிறந்த செயல்திறனுக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் பற்றிய புரிதலை ஊக்குவிப்பது, போட்டித் தன்மையை மேம்டுத்தும் முக்கிய கருவி ஒன்றாக தரநிலையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த விருதின் நோக்கமாகும்.

# 2022 இலங்கை தேசிய தர விருது விழா
# 2024 ஜனவரி 30ஆம் திகதி மொனாக் இம்பீரியல் ஹோட்டல் வளாகத்தில் நடைபெறும்

### வாழ்த்துச் செய்தி



இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் (SLSI) சிறப்பான, புத்தாக்க மற்றும் தரத்தின் அடிப்படையிலான தனித்துவமான வெற்றிக்கான விருதுகளை, இலங்கை தேசிய தர நிர்ணய விருதான SLNQA இற்கு அமைவாக 27 ஆவது தடவையாகவும் அர்ப்பணிப்புடன் வழங்க கிடைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இலங்கை தேசிய தர நிர்ணய விருதுகள், உலகளாவிய போட்டித் தன்மைக்கு முகங்கொடுத்து முன்னேற்றம் காண்பதற்கான ஊக்குவிப்பாகவும் அமைந்துள்ளன. இதனால் செயற்பாட்டுத் திறன், வாடிக்கையாளர் திருப்தி மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கி வணிகத் துறை இட்டுச் செல்லப்படுகிறது.

இலங்கை தேசிய தர விருதுகள் நிறுவன மேம்பாட்டில் முன்னணி வகிபாகத்தை கொண்டுள்ளது. அதேபோல் தொடர்ச்சியான மதிப்பீட்டு செயல்முறையின் ஊடாக நிலையான முன்னேற்றத்திற்கு வழி செய்வதோடு அதனூடாக, அன்றாடம் உலகளாவிய வணிக சூழலில் ஏற்படும் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் திறனையும் மேம்படுத்துகிறது. இலங்கை தேசிய தர நிர்ணய விருதுகள் என்பது சாதனைகளின் அடையாளமாகவும், உலக அளவிலான ஊக்குவிப்பு முயற்சிகளுக்கான களமாகவும் அமைந்திருப்பதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சர்வதேச அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் உலகளாவிய அளவில் இலங்கையின் வணிக நாமங்களுக்கான மதிப்பையும் மேம்படுத்துகிறது.

புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. இலங்கை தேசிய தர நிர்ணய விருது வென்றவர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அர்ப்பணிப்பிற்காக பாராட்டப்படுகின்றனர். இந்த அர்ப்பணிப்பு இலங்கையின் திறன்மிக்க தொழிற்படை, தொழில் மற்றும் புதிய தொழில்நுட்பத்திற்கான கேந்திர நிலையமாக இலங்கையை அடையாளப்படுத்தி உலகளாவிய முதலீடுகள் மற்றும் ஒத்துழைப்புக்களை ஈர்க்கக்கூடியதாக அமைந்துள்ளது.

இலங்கை தேசிய தர விருதுகளின் 27 ஆவது ஆண்டை நாம் கொண்டாடும் இவ்வேளையில், இந்த வேலைத்திட்டம் பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற வகையில்இ இங்கு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களை வாழ்த்துகிறேன்.

ரணில் விக்ரமசிங்க
ஜனாதிபதி
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
2024 ஜனவரி 12ஆம் திகதி

### கௌரவ அமைச்சரின் ஆசிச் செய்தி



27ஆவது இலங்கை தேசிய தர விருது விழா இடம்பெறும் இந்த சிறப்புமிக்க சந்தர்ப்பத்தில் நான் உங்களை அழைப்பது பெரும் கௌரவம் மற்றும் மகிழ்ச்சியுடனாகும். இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ஆர்வத்துடன் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்த கௌரவமிக்க விழா, வர்த்தகர்களின் சிறப்பை கொண்டாடுவது மாத்திரமன்றி, இலங்கை வர்த்தக மற்றும் தொழில்நுட்ப துறையை புத்தெழுச்சியை நோக்கி கொண்டு செல்லும்போது தரத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்க்கமான பணியும் குறிப்பிடத்தக்கதாகும். இரண்டு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் தர அளவீட்டுக்கான தேசிய முன்னோடியாக பணியாற்றி இருப்பது சிறப்பு மற்றும் புத்தாக்கத்தை தொடர்ச்சியாக வெற்றிபெறச் செய்தாகும். தேசிய தர விருது, அதன் கௌரவமிக்க அனுசரணையின் கீழ், பிரத்தியேக தரங்கள், செயற்பாட்டு செயல்திறன் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலம் வரைவிலக்கணப்படுத்தும் எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதற்கு வர்த்தகங்களுக்கு வழிகாட்டும் வெளிச்சமாக மாறியுள்ளது. இந்த விருதின் இதய ஓட்டத்தில் இருப்பது தரம் என்ற பயண முடிவு அன்றி, செயற்திறன் சிறப்புக்காக, ஆவேசத்துடன் பின்தொடரும் தொடர்ச்சியான பயணம் என்ற ஆழமான புரிதலாகும். இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறும் இந்த கடுமையான மதிப்பீட்டு செயற்பாடு, சுய மதிப்பீடு, மேம்படுத்தல் மற்றும் ஏற்புத்திறன் மரபு ஒன்றை மேம்படுத்தி அமைப்புக்கான நுட்பமான ஆய்வாகவும் செயற்படுகிறது. தொடர்ச்சியான வெற்றிக்கான இந்த அர்ப்பணிப்பு தனிப்பட்ட போட்டித் தன்மையை மேம்படுத்துவது மாத்திரமன்றி, இலங்கையில் ஒட்டுமொத்த பொருளாதார பரப்பையும் முழுமையாக கட்டியெழுப்புவதற்கு காரணமாகிறது. தொழில்துறை இயக்கத்தில் மற்றும் சிறப்பின் உற்சாகமான செயற்பாட்டை நாம் பார்க்கும்போது, பல்வேறு தொழில்துறை ஊடாக விருது வென்ற நிறுவனங்கள் அபரிமிதமான தர நிலையை பெற்றுள்ளன. அவர்கள் சர்வதேச மதிப்பீட்டு அளவை பூர்த்தி செய்தது மாத்திரமின்றி, தரங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அந்த அளவீட்டு அடையாளங்களை தாண்டிச் செல்லும் முன்னோடிகளாக மாறியுள்ளனர். இந்த பின்வாங்காத அர்ப்பணிப்பு காரணமாக இலங்கை தொழில்நுட்ப ரீதியான புத்தாக்கங்களுக்கான கேந்திரமாக நிலைபெற்றிருப்பதோடு, உலகளாவிய அவதானத்தை பெற்று, தொழில்நுட்ப முன்னேற்றத்தில் எமது தேசத்தை முன்னிலைப்படுத்தியுள்ளன.

கௌரவ கனக்க ஹேரத் (பாராளுமன்ற உறுப்பினர்)
தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

### செயலாளரின் ஆசிச் செய்தி



1995ஆம் ஆண்டு தொடக்கம் கட்டளைகள் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இலங்கை தேசிய தர விருது 27ஆவது தடவையாகவும் நடத்தப்படும் இந்த சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் என்ற வகையில் பெரும் மகிழ்ச்சியுடன் நான் இந்த செய்தியை வெளியிடுகிறேன். இந்த விருது விழாவில் வர்த்தகர்கள் இடையே தரத்தின் சிறப்பை பாராட்டுவது மாத்திரமன்றி இலங்கை அரசுக்கு, தொழில்நுட்பத் துறைக்கு மற்றும் எமது நாட்டின் ஒட்டுமொத்த நிதித் துறைக்கும் பெரும் பங்களிப்பு வழங்குகிறது. இலங்கை கட்டளைகள் நிறுவனம் எமது நாட்டு பிரஜைகளுக்கு உயர் தரத்தைக் கொண்ட சேவை வழங்குவதற்கு பிரதான பங்களிப்பைச் செய்கிறது. டிஜிட்டல் மயமாக்கல் மூலம் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்துடன் மக்களின் எதிர்ப்பார்ப்பு மற்றும் தேவைகள் மாற்றத்திற்கு உள்ளாகி இருப்பதோடு வழங்கும் சேவைகள் மற்றும் உற்பத்திகளின் உயர் தரத்தை எதிர்பார்ப்பது முதன்மை பெறுகிறது. இந்த விருதுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கடுமையான மதிப்பீட்டு செயற்பாட்டின் மூலம் அந்த நிறுனத்தில் சிறந்த மரபு ஒன்றை உருவாக்குவதோடு அதன்மூலம் உயர் சர்வதேச தரங்களுடன் முன்னோக்கிச் செல்வதற்கு நிறுவனங்களை ஊக்குவிக்கிறது. இதன்மூலம் இலங்கை பிரஜைகளுக்கு மற்றும் முழு உலக மக்களுக்கும் செயல்திறன், வெளிப்படைத் தன்மையைக் கொண்ட சர்வதேச அளவிலான சேவைகளை வழங்குவதற்கு இருக்கும் திறனை பலப்படுத்துகிறது. இலங்கை தேசிய தர விருது ஒவ்வொரு வர்த்தகத் துறையினதும் முன்னேற்றத்திற்கு அப்பால் முழு பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக பாரிய பங்களிப்பை வழங்குகிறது. விருது வென்ற நிறுவனங்களின் தரம் மற்றும் புத்தாக்கத்திற்கான அர்ப்பணிப்பு அவர்களின் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் பொதுமக்களிடையே இருக்கும் நம்பிக்கை மற்றும் அங்கீகாரம் உயர்கிறது. இதன்மூலம் சாதகமான பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தி உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை கவர்கிறது. இந்த விருது வென்ற நிறுவனங்களின் நிதியியல் ரீதியான வெற்றியை எமது தேசத்தின் முழு பொருளாதார முன்னேற்றத்திற்கு, தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு, வருவாய் ஈட்டுவதற்கு மற்றும் பேண்தகு அபிவிருத்திக்காக சாதகமான சூழலை ஏற்படுத்துகிறது. இலங்கை தேசிய தர விருது தொடர்ச்சியாக 27 ஆவது முறையாக கொண்டாடப்படும் இந்த சந்தர்ப்பத்தில், விருத்துக்கு உரித்தாகும் நிறுவனங்களின் வெற்றி மாத்திரமன்றி அதன்மூலம் எமது தேசத்திற்கு ஏற்படுத்துகின்ற பரந்த தாக்கம் தொடர்பில் பாராட்டுகிறேன். இங்கு பெறப்படுகின்ற வெற்றிகளுடன் இலங்கை நவீன தொழில்நுட்பம் மற்றும் தரங்களில் வலுப்பெற்ற சுபீட்சமான நாடு ஒன்றாக உருவெடுக்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

கலாநிதி தர்மஸ்ரீ குமாரதுங்க
தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர்

### கௌரவ தலைவரின் ஆசிச் செய்தி



இருபத்து ஏழாவது இலங்கை தர விருது விழாவையொட்டி நான் இந்த செய்தியை வெளியிடுவது பெரும் மகிழ்ச்சியுடனாகும். ஐக்கிய அமெரிக்காவின் மெல்கம் போல்ட்ரிஜ் தேசிய தர விருது அளவுகோல் அடிப்படையில் அமைந்த இலங்கை தேசிய தர விருது நிகழ்ச்சி, சிறப்பை நோக்கி சென்ற நிறுவனங்களை பாராட்டுவதற்காக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் மூலம் நடத்தப்படுகின்றது. இலங்கை நிறுவனங்களுக்கு நீடித்த போட்டித் தன்மையை பெறுவதற்கு மற்றும் சர்வதேச அங்கீகாரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்ற சிறப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கு இலங்கை தேசிய தர விருது அறிமுகப்படுத்தப்பட்டது. 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக, இலங்கை தேசிய தர விருது மூலம் நிறுவனங்களுக்கு தமது இலக்கை நோக்கி நெருங்குவதற்கு, விளைவுகளை முன்னேற்றுவதற்கு மற்றும் நிலையான போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய உலக சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் தர பாதுகாப்பு முக்கிய காரணியாக உள்ளது. புதிய தர முகாமைத்துவ கோட்பாடு மற்றும் புதிய தொழில்நுட்ப பயன்பாடு உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைக்கு பிரவேசிப்பதற்கு அவசியமானதாகும். இலங்கை தேசிய தர விருது நிகழ்ச்சி நிறுவனம் ஒன்றின் அபிவிருத்திக்கு தாக்கம் செலுத்தும் அனைத்து அம்சங்களையும் கருத்தில்கொண்டு தமது நிறுவனத்தை உயர் மட்டத்திற்கு இட்டுச் செல்ல வழி ஏற்படுத்துகிறது. தொடர்ச்சியாக 27ஆவது முறையாகவும் நடத்தப்படும் இலங்கை தேசிய தர விருது தொடர்பில் உள்ள பெரும் வரவேற்பும் அதனால் நிறுவனத்திற்கு கிடைக்கின்ற நன்மைகள் காரணமாக இம்முறை தேசிய தர விருதுக்காக வரலாற்றில் அதிகமான அமைப்புகள் பங்கேற்ற ஆண்டாக இது இடம்பெற்றுள்ளது. விண்ணப்பிக்கும் அனைத்து நிறுவனங்களும் இலங்கை தர விருதுகளை வெல்லாதபோதும், அதற்காக விண்ணப்பிப்பதன் மூலம், எம்மிடம் இருந்து கிடைக்கின்ற பின்னூட்டல் அறிக்கை மூலம் நிறுவனம் வெற்றியை நோக்கி இட்டுச் செல்லப்படுகிறது. எனவே இலங்கை தர விருதுக்கு விண்ணப்பிப்பதன் மூலம் நிறுவனங்களின் திறன்கள் மற்றும் மேம்படுத்த வேண்டிய துறைகளை அடையாளம் காண்பதற்கு முடியுமாகிறது. 2022 தேசிய தர விருதை வென்றவர்களின் வெற்றிக்காக எனது மனப்பூர்வ வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

காலநிதி அசங்க ரணசிங்க, தலைவர்
இலங்கை கட்டளைகள் நிறுவனம்

### 2022 இலங்கை தேசிய தர விருது
### 27ஆவது வருடாந்த SLNQA - 2022 வெற்றியாளர் பட்டியல்

| வெற்றியாளர் | விருதுகள் துறை | அளவு |
|---|---|---|
| அசோசியேடட் பட்டரி மனுபக்சரர்ஸ் (சிலோன்) Ltd | உற்பத்தி | நடுத்தரமனது |
| சிலோன் பிஸ்கட் Ltd | உற்பத்தி | பெரியது |
| டிப்பிட் ப்ரொடக்ட்ஸ் பிஎல்சி | உற்பத்தி | பெரியது |
| ஒக்ஸ்போர்ட் கொல்லேஜ் ஒப் பிஸ்னஸ் (Pvt) Ltd | கல்வி | சிறியது |
| தலவாக்கலே டீ எஸ்டேட்ஸ் பிஎல்சி | உற்பத்தி | பெரியது |
| **தேர்ச்சி விருதுகள்** | **துறை** | **அளவு** |
| ஆதித்யா ஆயுர்வேத பிறைவெட் லிமிடெட் | சுகாதார பராமரிப்பு | நடுத்தரமானது |
| செலோஜென் லங்கா பிறைவேட் லிமிடெட் | உற்பத்தி | பெரியது |
| கோட்ஸ் த்ரீட் எக்ஸ்போட்ஸ் (Pvt) Ltd | உற்பத்தி | பெரியது |
| தங்கொட்டுவ போர்சிளைன் பிஎல்சி | உற்பத்தி | பெரியது |
| ஹலால் அங்கீகார கவுன்சில் (உத்தரவாதம்) லிமிடெட் | சேவை | பெரியது |
| ஹேகார்ப் பிஎல்சி | உற்பத்தி | பெரியது |
| எல்.டீ.எல். ட்ரான்ஸ்போமர்ஸ் (Pvt) Ltd | உற்பத்தி | நடுத்தரமானது |
| மெல்ஸ்டா ஹொஸ்பிட்டல்ஸ் ராகம (Pvt) Ltd | சுகாதார பராமரிப்பு | நடுத்தரமானது |
| நெஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிடெட் | கல்வி | பெரியது |
| றோயல் செரமிக்ஸ் லங்கா பிஎல்சி | உற்பத்தி | பெரியது |
| சியரா கேபிள்ஸ் பிஎல்சி | உற்பத்தி | நடுத்தரமானது |
| சித்தாரா லிமிடெட் | உற்பத்தி | நடுத்தரமானது |
| **பாராட்டு** | **சான்றிதழ்கள் துறை** | **அளவு** |
| சியரா கேபிள்ஸ் பிஎல்சி | உற்பத்தி | நடுத்தரமானது |
| பார்ம்கெமி மனுபக்சரர்ஸ் (Pvt) Ltd | உற்பத்தி | நடுத்தரமானது |
| லங்கா ஐஓசி பிஎல்சி சேவை - நடுத்தரமானது கடல்சார் பொறியியல் திணைக்களம் (பொறியியல் பீடம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்) | கல்வி | சிறியது |
| Tos Lanka Co (Pvt) Ltd | உற்பத்தி | நடுத்தரமானது |

### பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி



2022 தேசிய தர விருது விழாவையொட்டி இந்த செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இலங்கையில் உள்ள நிறுவனங்களின் சிறந்த தரத்துடனான செயற்பாடுகளுக்கான அவைகளின் கடப்பாட்டை வருடாந்தம் தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கும் விருதாக இலங்கை தேசிய தர விருது (SLNQA) உள்ளது. இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் (SLSI) ஏற்பாடு செய்யப்படும் இந்த விருது விழா தொடர்ந்து 27ஆவது முறையாக நடத்தப்படுகிறது. இந்த மதிப்புமிக்க விருதுக்கான மதிப்பீட்டு அளவுகோல்கள் அமெரிக்காவின் Malcolm Baldrige தேசிய தர விருது நிகழ்ச்சியில் இருந்து எடுக்கப்பட்டது. தலைமைத்துவம், மூலோபாயம், வாடிக்கையாளர்கள், அளவீடு, பகுப்பாய்வுகள் மற்றும் அறிவு முகாமைத்துவம், தொழில்படை, செயற்பாடுகள் மற்றும் முடிவுகள் உட்பட இந்த மதிப்புமிக்க விருது அளவுகோலின் மதிப்பீட்டு நடைமுறையில் முக்கிய அம்சங்கள் கருத்தில்கொள்ளப்படும். கடுமையான ஐந்து நிலை மதிப்பீட்டு செயல்முறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்கள், நாட்டில் உள்ள மற்ற நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமையும். இலங்கை வர்த்தக சமூகத்துடன் விருது வென்றவர்கள் தமது வெற்றிப் பயணம் தொடர்பில் பகிர்ந்து கொள்ளும்படி நான் அழைப்பு விடுக்கிறேன். இத்தகைய பகிர்வு சிறந்த தொழில் நடைமுறைகளின் தரப்படுத்தலை செயல்படுத்துவதோடு, தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது. இறுதியில், இது நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதாக அமையும். 2022 தேசிய தர விருது நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைத்து வெற்றிகரமான நிறுவனங்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவிக்க நான் இதனை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொள்கிறேன். சிறந்து விளங்குவதற்கான உங்களது அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது மற்றும் நாட்டின் முழு வணிக சமூகத்திற்கும் உத்வேகமாக விளங்குகிறது.

கலாநிதி (திருமதி) சித்திக்க ஜி. செனரத்ன
பணிப்பாளர் நாயகம்/ தலைமை நிர்வாக அதிகாரி
இலங்கை கட்டளைகள் நிறுவனம்

தொழில்நுட்ப அமைச்சு

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**
இல. 17, விக்டோரியா பிளேஸ், அல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08, தொ.பே. 011-267156, 011-2671575 011-22697029
தொலைநகல்: 011-2672617 மின்னஞ்சல்: slsi@slsi.lk இணையதளம்: www.SLSL.lk




# அரங்கேற்றம்



நிருத்ய நர்த்தனாலய நடனப்பள்ளியின் இயக்குனர் சாந்தி கணேசராஜாவின் மாணவியும் கிஷோர் மற்றும் ஜெசிந்தா தம்பதியரின் புதல்வியுமான அஷ்வினியின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 21ஆம் திகதி பிஷப்ஸ் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச ரோட்டறி கழகத்தின் முன்னாள் ஆளுநர் கே.ஆர்.ரவீந்திரன், கௌரவ விருந்தினர்களான எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவட்) லிமிடெ'டின் நிர்வாக இயக்குநர் குமார் நடேசன், திருகோணமலை, வணக்கத்திற்குரிய ஆயர் கலாநிதி சீ.நோயல் இம்மானுவேல், நாட்டிய கலா மந்திர் நடனப்பள்ளியின் இயக்குநர் 'கலாசூரி' வாசுகி ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டதையும், மாணவியின் நடனத் தோற்றத்தையும் காணலாம்.

# "ஹெல கலாகெத" நூல் வெளியீடு




ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர், நடன சிரோமணி விருது வென்ற, மூத்த நடனக் கலைஞர் திருமதி சந்திரகாந்தி ஷில்பாதிபதியினால் உள்ளூர் நடனங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட "ஹெல கலாகெத" எனும் நூலின் வெளியீட்டு விழா போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உள்ளூர் நடனங்கள் உள்ளிட்ட பல்வேறு கலாசார அம்சங்களுடன் வண்ணமயமான இந்த நிகழ்ச்சியின் பிரதான உரையை பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் லயனல் பெந்தரகே ஆற்றினார்.

இலங்கையின் கலை வரலாற்றை மாற்றியமைப்பதில் ஒப்பற்ற பங்களிப்பைச் செய்த கலைஞர்கள் என்ற வகையில் பியசர ஷில்பாதிபா மற்றும் காந்தி ஷில்பாதிபா ஆகியோரின் பணி மிகவும் சிறப்பானது என அங்கு உரையாற்றிய அமைச்சர் குறிப்பிட்டார். எந்தக் கல்வித் துறையில் பயின்றாலும், ஒரு மாணவன் திறமைகளையும் ஆக்கப்பூர்வமான ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள ஆசிரியர்களால் வழிநடத்தப்படுவது ஒரு பாக்கியமாகும். தான் இளைஞனாக இருக்கும் போது நாட்டில் இருந்த அரசியல் கலாசார மற்றும் சமூக உரையாடல்கள் மற்றும் கருத்தாடல்கள் ஊடாக லும்பினி கல்லூரியின் நாடகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு கலைப் படைப்புகள் மீது அதிக கவனம் செலுத்தியதாகவும் அவர் கூறினார். அதன் மூலம் கிடைத்த அனுபவங்களே இன்றும் தனது படைப்புகளுக்கு வழிகாட்டியாக இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அறிஞர்களின் உயர்ந்த படைப்புகளாலும், நல்ல ஆசிரியர்களின் உத்வேகத்தாலும் நல்லதொரு மாணவர் தலைமுறையை உருவாக்கும். அவர்கள் தம்மை தாண்டி திறமைகளாலும், ஆற்றல்களாலும் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைவதைக் காண்பதே ஒரு ஆசிரியருக்குக் கிடைக்கும் உயர்ந்த மகிழ்ச்சி என்றும் அமைச்சர் இதன் போது வலியுறுத்தினார்.

தனது வாழ்க்கை அனுபவங்களை புத்தகமாக தொகுத்து வெளியிடுவதன் மூலம் அந்த அனுபவங்களை தன்னிடம் வரும் மாணவர்களை விட அதிகமானவர்களிடத்தில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும் என்றும், அவர் மேலும் கூறினார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட பேராசிரியர் ஜே. பி. திஸாநாயக்க, பேராசிரியர் பிரனீத் அபேசுந்தர உள்ளிட்ட பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் அறிஞர்கள், கடற்றொழில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி அனுஷா கோகுல, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் நாரகல, பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


**கல்வி அமைச்சு**

**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் (SLIATE)**

SLIATE

## 19 ஆவது டிப்ளோமா பட்டமளிப்பு விழா

SLIATE இன் பின்வரும் நிகழ்ச்சியாளர்களுக்கான 19 ஆவது டிப்ளோமா பட்டமளிப்பு விழாவானது 2024 மே 06 ஆம், 07 ஆம் மற்றும் 08 ஆம் திகதிகளில் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

01. கணக்கியலில் தேசிய உயர் டிப்ளோமா
02. வியாபார நிருவாகத்தில் தேசிய உயர் டிப்ளோமா
03. வியாபார நிதியியல் தேசிய உயர் டிப்ளோமா
04. கட்டிட சேவைகள் பொறியியலில் தேசிய உயர் டிப்ளோமா
05. சிவில் பொறியியலில் தேசிய உயர் டிப்ளோமா
06. பொறிமுறை பொறியியலில் தேசிய உயர் டிப்ளோமா
07. மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியலில் தேசிய உயர் டிப்ளோமா
08. ஆங்கிலத்தில் தேசிய உயர் டிப்ளோமா
09. உணவு தொழில்நுட்பவியலில் தேசிய உயர் டிப்ளோமா
10. தகவல் தொழில்நுட்பவியலில் தேசிய உயர் டிப்ளோமா
11. முகாமைத்துவத்தில் தேசிய உயர் டிப்ளோமா
12. அளவை அளவிடலில் தேசிய உயர் டிப்ளோமா
13. தொழில்நுட்பவியலில் (விவசாயம்)தேசிய உயர் டிப்ளோமா
14. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் தேசிய உயர் டிப்ளோமா
15. செயற்றிட்ட முகாமைத்துவத்தில் தேசிய உயர் டிப்ளோமா
16. பாவனையாளர் விஞ்ஞானம் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பவியலில் தேசிய உயர் டிப்ளோமா

2021 ஆம் கல்வியாண்டில் தேசிய உயர் டிப்ளோமாவை சித்திகரமாக பூர்த்தி செய்த மாணவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் அல்லது கல்விசார் ஒருங்கிணைப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை www.sliate.ac.lk என்ற SLIATE இன் இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி:**

| | |
|---|---|
| மூடும் திகதி | : 2024 பெப்ரவரி 5 |
| பணக்கொடுப்பனவு (தண்டப் பணம் நீங்கலாக) | : 6,500 ரூபா |

**வங்கி விபரங்கள் பின்வருமாறு:**

| | |
|---|---|
| வங்கியின் பெயர் | : மக்கள் வங்கி |
| கிளை | : ஹைபிட் பார்க் கோணர் கிளை, கொழும்பு-02. |
| கணக்கிலக்கம் | : 025-1001-3-3397613 |

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்**
**'ஜனவத்து பியச',**
**டீ.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு - 10**



**இலங்கை வங்கி**

## பெறுமதிமிக்க ஆதனங்கள் விற்பனைக்கு

| ஆதன இலக்கம் | நகரம் | விபரமும் அமைவிடமும் | ஆதனத்தின் வகை | பரப்பளவு |
|---|---|---|---|---|
| OB 1 | தெமட்டகொட | முன்னாள் வரையறுக்கப்பட்ட ஷன்பே ஜீன்ஸ் (தனியார்) நிறுவனம் (தற்போது கலைக்கப்பட்டுவிட்டது) இல. 06 ஆராமயா வீதி, தெமட்டகொட | காணியும் கட்டடமும் | 01 ரூட் 10.09 பேர்ச்சுகள் |
| OB 2 | களுத்துறை | முன்னாள் வரையறுக்கப்பட்ட ஷன்பே ஜீன்ஸ் (தனியார்) நிறுவனம் (தற்போது கலைக்கப்பட்டுவிட்டது) அங்கம்பிட்டிய, மீப்பே, பாதுக்க | காணியும் கட்டடமும் | 02 ஏக்கர்கள் 01 ரூட் 18.0 பேர்ச்சுகள் |

ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து (உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களுக்கான விலைகூறல்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் மீளளிக்கப்படாத கொடுப்பனவாக **2000.00** ரூபாவையும் (VAT@18% + SSCL@2.5%) மீளளிக்கப்படக்கூடிய கொடுப்பனவாக **50,000.00** ரூபாவையும் செலுத்தி **2024.02.15** வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைகூறுவோர், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தொடர்புடைய ஆதன இலக்கத்துடன் **"PROP/02/2024"** எனக் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறையினுள் இட்டு **2024.02.15**ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் **2024.02.16**ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த அலுவலகத்தில் நடைபெறவுள்ள விலைக்கூறல்களைத் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைகூறுவோரால் அனுப்பப்படும் விலைகூறல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு வார நாட்களில் அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும்:**

**முகவரி:** **இலங்கை வங்கி**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு - கையகப்படுத்தப்பட்ட ஆதனங்கள் அலகு,**
**3வது மாடி, தலைமையகம்,**
**"இலங்கை வங்கிச் சதுக்கம்",**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.**

**தொலைபேசி:** **உதவிப் பொது முகாமையாளர் (பெருநிறுவன அறவிடல்) - 011-2386080 / 011-2203410**
**சிரேஷ்ட முகாமையாளர் - 011-2321170 / 011-2203429 / 076-9627068**
**உதவி முகாமையாளர் - 011-2203470 / 0718418898**

**மின்னஞ்சல்:** **mgrforeclosed@boc.lk**

"www.boc.lk" என்ற இணையதளத்தில் விசேட அறிவித்தலின் கீழுள்ள விற்பனைக்குள்ள ஆதனங்கள் பகுதி மற்றும் இலங்கை வங்கி முகநூற் பக்கம் என்பவற்றைப் பார்வையிடவும்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

**தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.**

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

**சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை**

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**மோட்டார் வாகனங்கள்**

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

ISUZU பிரீசர் டிரக் விற்பனைக்கு. 2014 ஒட்டோ பதிவு செய்யப்படாத புதிய மிகச் சிறந்த நிலையில் டிரக், புதிய டயர், டுவல் பிரீசர், 14 1/2 அடி, புல் ஒப்சன். AC, விலை 75 இலட்சம் 077 127 7842 005292

**வேலைவாய்ப்பு**

**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

இறக்குமதி செய்யப்பட்ட கடலுணவு விநியோகிக்கும் கம்பனிக்கு, விற்பனைப் பிரதிநிதி பதவிக்கு வெற்றி டங்கள் உண்டு. 40 வயதிற்கு குறைந்த O/L மற்றும் A/L சித்தியடைந்திருத்தல். விற்பனைத் துறையில் 02 வருடத்திற்கு மேல் அனுபவம் இருத்தல் வேண்டும். உங்களுக்கு மேற்படி தகைமைகள் இருப்பின் உங்களது சுயதரவுப் பத்திரத்தை எமக்கு அனுப்புங்கள். சீபுட் பெக்டரி பிரைவட் லிமிட்டட், இல.315, ஆர்.ஏ.டி. பெல்வத்த, கொழும்பு 03, 0772241914/ hr@foodscopesl.com 006114

புறக்கோட்டை, பிரதான வீதியில் ஓர் அழகு சாதன கடைக்கு விற்பனை ஊழியர் தேவை. 30 வயதுக்குக் கீழ் தொடர்பு 0777433455 (கொழும்பு விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்கது) 005679

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

வீட்டுப் பணிப்பெண் தேவை கொள்ளுப்பிட்டியிலுள்ள வீடொன்றிற்கு வார நாட்கள் (பி.ப.2 பி.ப.6.30), வார இறுதியில் (மு.ப.8 பி.ப.5) பணி புரியும் 2235 வயதுக்குட்பட்ட கொள்ளுபிட்டியை அண்மித்த பகுதியில் வசிக்கும் பெண் தேவை நியாயமான சம்பளம் தரப்படும்.தொடர்புகளுக்கு 0718019797 006134

ϴdz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கடவத்தையில் நடத்திச் செல்லப்படும் Pastry Shop ஒன்றிற்கு Bakery Oven வேலை தெரிந்த ஊழியர்கள் மற்றும் வடை தோசை சமைக்கத் தெரிந்தோர் தேவை. உணவு தங்குமிடம் உண்டு. 011 2924762 006241

காலி பிரதேசத்தில் அவன் பேக்கரிக்கு சிறந்த அனுபவமுள்ள பேக்கறி பாஸ்மார் தேவை சிறந்த சம்பளத்துடன் தங்குமிட வசதியும் உண்டு.0777 2131000759059052 005935

கோவின்ன ஆண்டிஅம்ப லம திதுல பேக் ஹவுஸ் பேக்கரி பாஸ்மார் தேவை. தங்கும் வசதி உண்டு. 0778915985. 006453

**325 தொழில்துறை பொது**

பண்டாரகம, அட்டுளுகமவில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் நிலையத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானோரிடமிருந்து அழைப்புக்கள் உடனடியாக கோரப்படுகின்றன. 1) மேற்பார்வையாளர் (WARDEN) 2) சமையற்காரா் (COOK) 3) பஸ் சாரதி (BUS DRIVER) உணவு, தங்குமிடம் வசதி செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு 0773488939 (MURSHID). 005447



**காணி/தோட்டம்**

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

கிருளப்பொன, கொழும்பு 06, மூன்று படுக்கையறைகள் பகுதி உடைக்கப்பட்ட வீடு உயர்ந்த விலை, ஹைலெவல் வீதிக்கு அருகில் 6 பேர்ச்சுக்கள் 45 மில்லியன் இ. ரூபா எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும் செலுத்தலாம். தரகர் வரவேற்கப்படுகின்றனர். வட்ஸ்அப் 44+07964050738 / 071 1048133 மின்னஞ்சல் londonkove@yahoo.co.uk 004352

ராகம துடுவே கெதர 10 பேர்ச் காணியுடன் நிர்மாணித்தல் காணப்படும். வீடு விற்பனைக்கு உண்டு. 70 இலட்சம். 0764434878. 005315

வெள்ளவத்தை சகல வசதிகளுடன் நீண்ட / குறுகிய கால வாடகைக்கு தலவத்துகொட வீடு விற்பனைக்கு. வாடகைக்கு ELECTRIC பொருட்கள் விற்பனைக்கு. வொஷின் மெசின், குளிர்சாதனம், மியூசிக் பொருட்கள் கார் பாட்ஸ்0766292155 005529

பொரளை கொழும்பு 08, நகரிற்கு அருகில் 1.25 பேர்ச் இரு மாடி வீடு விற்பனைக்கு 2 அறைகள், மண்டபம், சமையலறை/ குளியலறை 0718263118 006043

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

வத்தளை ஹந்தளை, கார்மேல், மா வத்தை. பழைய வீட்டுடன் 40 பேர்ச் காணி மற்றும் 150 சதுர அடி கடை விற்பனைக்கு 0777 120992 நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள உங்களது சொத்துக்களை விற்பனை செய்து தருவதற்கு நம்பிக்கையுடன் பொறுப்பேற்கப்படும். 006118

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

**0777282147** கண்டி குண்டசாலை திகனவிற்கு இடையில் மிகவும் பெறுமதியான சொத்து 50 இடங்களுக்கு மேற்பட்ட அளவில் வீடு ஹோட்டல் பல்வேறு வியாபாரங்கள் தற்போது வேகமாக முன்னேறும் நகரம் 20 மில்லியன் முதல் அதற்கு மேல் விற்பனைக்கு வங்கிக்கடன் உண்டு.0777438169 004281


தினகரன் வாரமஞ்சரி

## சிறு விளம்பரங்கள்

**சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்**

முதல் 15 சொற்களுக்கு **330/-** ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் **000000377** (லேக்ஹவுஸ் கிளை)

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# வாரமஞ்சரி BUDGET aDZ

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

---

**TAX CONSULTANCY SERVICES**
Island-wide service for individuals and businesses
Rs. 10,000/- onwards for Individuals
**COMPANY SECRETARIAL SERVICES**
All related corporate secretarial services annual retainer fee Rs. 15,000/- onwards
RELIANCE BUSINESS PARTNERS (PVT) LTD.
Contact Us:
**0711 22 45 45**

---

**අමානෝ වැහිපිලි සහ සෙවිලි**




වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

---

**MALABE**
Close 800m distance to Malabe town, 8 perch block of land for sale.
076 674 69 69 / 071 79 76 373
077 37 46 989

---

**வீடு விற்பனைக்கு**



**கொழும்பு-04 இல் வீடு விற்பனைக்கு**
2 மாடி வீடு மொட்டை மாடியுடன் (Roof top) 6.2 பே. காணியில், 4 படுக்கையறைகள் மற்றும் 3 குளியலறைகள். சிறந்த குடியிருப்பு பிரதேசம். காலி வீதிக்கும் மற்றும் மரீன் ட்ரைவிற்கும் பாதையுண்டு. சுப்பர் மார்க்கட்டுக்கள், மத தலங்கள், பாடசாலைகள் இன்னும் பலவற்றிற்கு நடைதூரம்.
071 430 68 11

---

**LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD**
(WIJERAMA - CAMPUS ROAD)

A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING A PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.



Only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

---


**மாக்கோல**
கிரிபத்கொட



முதன்மையான காணியில் வீடமைப்பு தொகுதிருபவ் நவீன சுப்பர் ஆடம்பர வீடு. அனைத்து வசதிகளுடன் 10 பேர்ச் காணியில் விற்பனைக்குண்டு.
உரித்தாளரின் இணக்கச் சான்றிதழ்ருபவ் தெளிவான உறுதிகள்
0777 385 824

---


**BATTARAMULLA - THALANGAMA SOUTH**
**HOUSE FOR RENT** MONTH - 70,000/-
3 MONTHS KEY MONEY NEED



2 ROOMS , PANTRY, 3 WASH ROOMS, CAR PORCH
876/1, 6TH LANE PAHALAWELA ROAD, THALANGAMA SOUTH, BATTARAMULLA.
0714 472 211

---

**SOLAR POWERED LUXURY HOUSE FOR SALE IN ATHURUGIRIYA**
- 5K Branded Solar System
- 3 Bedrooms
- 3 Bathrooms (2 with hot water & servant bathroom)
- 7 CCTV cameras
- Modern pantry with 4 burner cooker
- Roller gate with wicket gate
- Washing machine room
- 8.5 Perches
- Fully tiled
- Calm and quiet living environment



- 195 Lacks
0777 901 152

---

**Vacancies available at Kalam Manpower Colombo office**



- Secretary
- Marketing Executive
- Office Assistant

Salary Negotiable

Pls send your CV and contact us
kalammanpower2892@gmail.com
manpowerkalam@gmail.com
Contact :-
0788745138 / 0788419167
No. 79 1/1 (05), Deans Road, Super Market, 02nd Floor, Maradana, Colombo 10, Sri Lanka.

---

**ARIYARATHNE CONSTRUCTIONS**
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
සියලුම ඇලුමිනියම් වැඩ




අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම

**Polycarbonate**
අමානෝ පීලි 0.47 (mm)
නවීන විලාසිතාවේ ග්‍රිල්, ගේට්ටු, අත්වැල්
විශ්වාසයෙන්, වගකීමෙන් හා උසස් නිමාවෙන්...

0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

---

**CANTON FAIR - APRIL 24**
13th APR - 20th APR 2024
Rs. 425.000/-




- Air Ticket - Air China
- 07 nights / 08 days
- Hotel accommodation / Twin Sharing
- China Visa
- Daily Breakfast
- Airport Transfers
- Shuttle Service to Exhibition
- Entrance Pass
- Internal Transfers

01 DINNER AT PEARL RIVER CRUISE - FREE

**YIWU MARKET TOUR**
24TH FEB - 04TH MAR 2024
Rs.345.000/-




INCLUDE
- Air Ticket - Air China
- 09 Nights / 10 days
- 3*** Hotels - Twin Sharing
- Daily Breakfast/ Chinese Visa
- Internal Transfers
- Shipping Assistance

PRODUCTS
Electric & Electronic Appliances
Fancy & Gift Items
Kitchen and Glassware
Stationery/ Fabric/ Shoes

Senerath - 0777 479 400
OVER 15 YEARS EXPERIENCE KURUNEGALA
* Conditions apply *

---

**HOUSE FOR SALE RATHMALANA**
10 PURCHASE
UP STAIR HOUSE FOR SALE
4 Bedrooms, 3 Bathrooms,
1 Servent bathroom , 2 Pantries,
2 Balconies Parking for two vehicles
100m from Galle Road
0775 931 766

---

**BOILERS FOR SALE**



| BOILER 1 | BOILER 2 | BOILER 3 |
|---|---|---|
| Brand - Pirekma | Brand - Thermax | Brand - Thermax |
| Capacity - 3TPH | Capacity - 2 TPH | Capacity - 1TPH |
| Max pressure - 10 bar | Max pressure - 10 bar | Max pressure - 10 bar |


HAYLEYS OWNED PROPERTY
USED IN A COCONUT MILK PROCESSING FACTORY LOCATION : PANNALA, HUNUWILA
CONTACT Gayan - +94 74 213 7628
Madhuwanthi - +94 76 689 7713

---

**Advertise Here**
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

---

**A company owns Land and house for sale**
Akurugoda, Debara wewa, Tissamaharama



Three - 40 perch blocks Plus 1 Acre land with a House and 3 Cabanas

2 lakhs per perch (Negotiable)
Could be sold as one property or as seperate blocks
- Location is close proximity to the main road (5minutes) and hotels Tamarind Tree and Blue Turtle.
- 10 miles to Yala sanctuary / Katharagama.

Contact 077 768 1168

---

**Advertise Here**
வாரமஞ்சரி BUDGET aDZ
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

---

**"STUDY,MIGRATE & SETTLE IN AUSTRALIA"**
YOUR PATH TO PERMANENT RESIDENCY WITH RELIANCE INTERNATIONAL




WE CAN ASSIST WITH FOLLOWING VISAS...
- Skilled Migration
- Business Visas
- Partner Visas
- Parent Visas
- Employment Visas
- Visitor Visas
- Student Visas

LET US GUIDE YOU
RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES
No. 351/1, R A De Mel Mawatha, Colombo 03
Hot Line
+94 767 678 281
+94 115 300 110 | +94 763 434 154
colombo@rimigrations.com www.rimigrations.com

---

**LAND WITH A COMPLETE 3 BEDROOM HOUSE FOR SALE**
**KATHALUWA, AHANGAMA**



**A 49 perch land located in Kathaluwa Ahangama, in the Galle district with a complete 3 bedroom house surrounded with coconut trees situated on a hill.**

Large pantry area, store room, living and dining room. Electricity, water supply and telephone connectivity. Hot water shower. A 10 minutes walk or 750M away from the southern costal area. 200M away from the historical Kathaluwa Old Temple. The temple is renowned for its remarkable Kandyan - style paintings. A Kilometre away from Madol Duwa, a prominent site to visit. Access to supermarkets and restaurants on the sea coast.

SUITABLE FOR SMALL VILLA
The real estate is valued at LKR 22 million. NEGOTIABLE
Dylan 0777 032 540, Binuki 0772 819 542

---



Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
**Marriage Proposals**
Decades of Trusted Service

Pay online and save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# தனித்தேசமாக அமையுமா பாலஸ்தீனம்?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

2023ஆம் ஆண்டின் பின்னரையில் ஏற்பட்ட நீண்ட நெருக்கடியின் தொடர்ச்சியாக, இஸ்ரேல், ஹமாஸ் போரின் வடிவம் நாளுக்கு நாள் வேறுபட்ட பரிணாமத்தை பெற்று வருகின்றது. ஆரம்ப நாட்களில் இஸ்ரேலை சுற்றி மேற்கு நாடுகளின் ஆதரவும், ஹமாஸை சுற்றி அரபு நாடுகளில் இயங்கிய போராட்டக் குழுக்களின் ஆதரவுகளுமே கட்டமைக்கப்பட்டிருந்தது. நீடிக்கும் போர் பாலஸ்தீன மக்களுக்கான சர்வதேச ஆதரவுக்கான சூழலை கட்டமைத்து வருகின்றது. குறிப்பாக 2023ஆம் ஆண்டின் இறுதி வாரத்தில், பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை விவகாரத்தை தென்னாபிரிக்கா அரசாங்கம் சர்வதேச நீதிமன்றத்திற்கு நகர்த்தியுள்ளது. இதன் அரசியல் முக்கியத்துவத்தை கடந்த வாரம் இப்பகுதியில் உரையாடியிருந்தோம். இப்பின்னணியில் தற்போது சர்வதேச அரங்கில் பாலஸ்தீன ஆதரவு அலை ஒன்று எழுச்சி பெறுவதனை சர்வதேச அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இக்கட்டுரை பாலஸ்தீன அரசு தொடர்பாக எழுச்சியுறும் சர்வதேச ஆதரவை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் இஸ்ரேல் மீதான இனப்படுகொலை குற்றச்சாட்டு பாலஸ்தீனத்தின் சர்வதேச ஆதரவுக்கான முதன்மையான விடயமாக காணப்படுகின்றது. சர்வதேச நீதிமன்றம் அதிகாரமற்ற நீதித்துறை என்ற விமர்சனத்தை கொண்டுள்ள போதிலும், சர்வதேச ரீதியிலான அதிர்வலையை உருவாக்கக்கூடியதொரு களத்தை கொண்டுள்ளது. இதனை பாலஸ்தீன விவகாரத்தில் தெளிவாக அறியக்கூடியதாக உள்ளது. ஒக்டோபர் 07அன்று யூதர்களின் குடியேற்றங்கள் மீதான ஹமாஸின் தாக்குதலைத் தொடர்ந்து காஸா நிலப்பரப்பில் 100 நாட்களை தாண்டி இஸ்ரேல், ஹமாஸ் போர் இடம்பெற்று வருகின்றது. இலட்சக் கணக்கான பாலஸ்தீன மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், ஆயிரக்கணக்கான மக்கள் குழந்தைகள் உட்பட உயிர்களை இழந்துள்ளனர். எனினும் சர்வதேச அரங்கில் பாலஸ்தீன மக்களை பாதுகாப்பதற்கான வினைத்திறனான செயற்பாட்டை முன்னெடுத்திருக்க முடியவில்லை. அமெரிக்க தலைமையிலான மேற்கின் ஆதரவு தொடர்ச்சியாக இஸ்ரேலின் காஸா மீதான தாக்குதலுக்கு பலமான ஆதரவை சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தி வந்தது. இது பாலஸ்தீன மக்களின் உரிமைக்குரலை சர்வதேச அரங்கில் தடுத்திருந்தது. எனினும் சர்வதேச நீதிமன்றத்தில் பாலஸ்தீன நிலப்பரப்பில் இஸ்ரேலால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் இனப்படுகொலையை அரங்கேற்றுவதாக சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா முன்வைத்துள்ள குற்றச்சாட்டை தொடர்ந்து பல நாடுகளும் தமது மௌனத்தை கலைத்து, பாலஸ்தீன மக்களின் நீதிக்காக குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.




முதலாவது, மேற்கு ஆசியாவில் சமாதானத்தை உருவாக்குவது குறித்த உரையாடல் ஐரோப்பாவிலிருந்து வருகிறது. அங்கு பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்கள் மேற்கு ஆசியாவின் பிராந்தியத்தில் அமைதிக்காக தெருக்களில் குவிந்துள்ளனர். மேற்கு ஆசியா பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் கொண்டுவருவதில் ஐரோப்பிய ஒன்றியம் ஆக்கப்பூர்வமான பங்கை வகிக்க வேண்டும் என்று பிரஸ்ஸல்ஸில் நடந்த அணிவகுப்பாளர்கள் அழைப்பு விடுத்ததாக சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. போராட்டக்காரர்கள் போர்க்குற்றங்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் யூதஎதிர்ப்பு அல்லது இனவெறியை கண்டனம் செய்வதற்கும் அழைப்பு விடுத்தனர். அணிவகுப்பாளர்களின் இவ்அழைப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைகின்றன. இனவாதம் மற்றும் யூதவிரோதத்தின் சட்டவிரோதம் மற்றும் அழிவுகரமான தன்மையை முன்னிலைப்படுத்துவதே பாலஸ்தீனர்களுக்கு பொருத்தமான நிரந்தரமான தீர்வுக்கான வழிவகையை ஏற்படுத்தக்கூடியதாகும். நாசிக்களின் இனவாத செயற்பாடுகளை பிரசாரப்படுத்தியே யூதர்களுக்கான இஸ்ரேல் எனும் தனித்தேசம் 1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாலஸ்தீரர்கள் தங்கள் இன அடையாளம் அல்லது கலாசாரத்தின் காரணமாக ஒருபோதும் பாகுபாடு காட்டக்கூடாது. அதேவேளை இஸ்ரேலியர்களுக்கும் அதுவே பொருத்தமானதாகும். அவ்வாறான சூழலே மேற்கு ஆசியாவின் அமைதிக்கும் வழிகோலக்கூடியதாகும். இவ்வாறான சூழமைவை தொகுத்தே மேற்கு ஆசியாவின் அமைதியைக் கோரி ஐரோப்பிய மக்களிடையே வலுவான கருத்தியல் எழுச்சி பெற்று வருகின்றது. இதனை வெளிப்படுத்தும் வகையில் மேற்காசிய மோதலில் ஐரோப்பிய அரசியல் இருகூறாக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஸ்பெயினின் கூட்டணி அரசாங்கத்தில் உள்ள சிறுபான்மை இடதுசாரி, பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளது. ஸ்லோவேனியா பாலஸ்தீன உரிமைகள் தொடர்பான சர்வதேச நீதிமன்ற வழக்கு ஒன்றில் சாட்சியமாக ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது. பெல்ஜிய அரசாங்கம் தென்னாபிரிக்க வழக்குக்கு ஆதரவு வழங்கியுள்ளது. இம்மாற்றங்கள் ஐரோப்பாவில் அதிகரிக்கும் பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டையே உறுதி செய்கின்றது.

இரண்டாவது, கடந்த ஜனவரி 20 அன்று உகண்டாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிலும் இஸ்ரேலின் செயற்பாடுகளை கண்டிப்பதுடன், பாலஸ்தீனத்துக்கான தேச அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில், காஸா பகுதியில் இஸ்ரேலின் இராணுவப் பிரசாரத்தை சட்டவிரோதமானது என்றும், பாலஸ்தீன குடிமக்களுக்கு எதிரான கண்மூடித்தனமான தாக்குதல்கள், குடிமக்கள் உட்கட்டமைப்பு மற்றும் பாலஸ்தீன மக்களை கட்டாயமாக இடமாற்றம் செய்வதை கடுமையாக கண்டித்தனர். காஸா பகுதியை அணுகுவதற்கு மனிதாபிமான உதவிக்கு மிகவும் அவசியமான போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் அதே வேளையில், 1967ஆம் ஆண்டு அரபு நாடுகளுடன் ஒரு சுருக்கமான போரில் இஸ்ரேல், காசா, மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமைக் கைப்பற்றியதற்கு முன்னரான எல்லைகளின் அடிப்படையில் இரு நாடுகளின் தீர்வுக்கு ஒரு கூட்டு அறிக்கையில் அழைப்பு விடுத்தது. அத்துடன் நாடுகளின் சமூகத்தில் அதன் சரியான இடத்தைப் பெறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினராக பாலஸ்தீன நாடு அனுமதிக்கப்படுவதற்கான ஆதரவையும் அணிசேரா நாடுகளின் குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இதில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாலஸ்தீன தேச அங்கீகாரத்துக்கான கோரிக்கையை வலுவாக ஆதரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மூன்றாவது, இஸ்ரேல் மீதான சர்வதேச நீதிமன்ற வழக்கில் தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியா முன்னணியில் உள்ளது. நெதர்லாந்தின் ஹேக் நகரை தளமாகக் கொண்ட ஐக்கிய நாடுகளின் முக்கிய நீதித்துறை அமைப்பில், இஸ்ரேலின் நீண்டகால ஆக்கிரமிப்பு பாலஸ்தீனப் பிரதேசம் தொடர்பாக ஒரு தனி நடவடிக்கையினை 2022ஆம் ஆண்டில் நகர்த்தியிருந்தது. டிசம்பர் 30, 2022 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், 'கிழக்கு ஜெருசலேம் உட்பட, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேலின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளால் எழும் சட்டரீதியான விளைவுகள்' என்ற விஷயத்தில் ஐ.நா பொதுச் சபை சர்வதேச நீதிமன்றத்திடம் முறையாக ஆலோசனையைக் கோரியது. சர்வதேச நீதிமன்றம் 2023இல் எழுத்துபூர்வமற்ற அறிக்கைகளை ஏற்றுக்கொண்ட பிறகு, வழக்குக்கான வாய்வழி விசாரணைகள் 2024 பெப்ரவரியில் தொடங்கும். இதில் குறைந்தபட்சம் இந்தோனேசியாவும் ஸ்லோவேனியாவும் பங்கேற்கும். இந்தோனேசியாவின் வெளியுறவு அமைச்சர் ரெட்னோ மர்சுடி விசாரணையின் தொடக்க நாளான பெப்ரவரி19 அன்று வாய்வழி அறிக்கையை வழங்குவதாக அறிவித்தார். மேலும் அவர் சமீபத்தில் ஜகார்த்தாவில் சுமார் 50 சர்வதேச சட்ட வல்லுநர்களைக் கூட்டி அறிக்கைக்குத் தயாராக உதவினார். அத்துடன் ஸ்லோவேனியாவின் வெளியுறவு மற்றும் ஐரோப்பிய விவகார அமைச்சர் டான்ஜா பஜோன், பெப்ரவரி 23 அன்று ஸ்லோவேனியாவும் விசாரணையில் பங்கேற்கும் என்று அறிவித்துள்ளார். சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்துக்கள் அரிதான விதிவிலக்குகளுடன் சட்டபூர்வமாக பிணைக்கப்படவில்லை. வியன்னா சர்வதேச தந்திரோபாயக் கல்லூரியில் உள்ள சர்வதேச மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தின் பேராசிரியரான ஹோல்கர் ஹெஸ்டர்மேயர், அவை இன்னும் சக்திவாய்ந்தவை எனத் தெரிவித்துள்ளார். அதாவது, சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்துக்கள் சட்டபூர்வ எடை மற்றும் தார்மீக அதிகாரத்தைக் கொண்டுள்ளன. அவை பெரும்பாலும் தடுப்பு இராஜதந்திரத்தின் கருவியாகும் மற்றும் அமைதி காக்கும் நற்பண்புகளைக் கொண்டுள்ளன. ஆலோசனைக் கருத்துக்கள், அவற்றின் வழியில், சர்வதேச சட்டத்தை தெளிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அரசுகளுக்கு இடையே அமைதியான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பங்களிக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, சர்வதேச அரங்கில் பாலஸ்தீனத்துக்கான உரிமைக்குரல் வலுவாக எதிரொலிக்க ஆரம்பித்துள்ளமையையே சமகால அரசியல் நிகழ்வுகள் உறுதி செய்கின்றன. அமெரிக்கா முழுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துகின்ற போதிலும், இஸ்ரேல், பாலஸ்தீன விவகாரத்தில் இஸ்ரேல் சார்பு அமெரிக்க கொள்கை தனித்து விடப்படும் போக்கே வலுப்பெற்று வருகின்றது. இப்பந்தியில் முன்னரும் அமெரிக்க தனித்து விடப்படுவது தொடர்பில் ஆழமாக உரையாடப்பட்டுள்ளது.

அதேநேரம் 2024இன் ஆரம்பம் முதல் பாலஸ்தீன தனித்தேச அங்கீகாரத்துக்கான குரல் வலுவாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. முன்னரே 2023 ஜூன், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸை அழைத்து உரையாடிய போது இரு நாட்டு தீர்வுக்கான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார். அதேவேளை 2022இல் நடைபெற்ற அரபு நாடுகளின் சீன உச்சி மாநாட்டிலும் கிழக்கு ஜெருசலேமை தலைநகராக கொண்ட சுதந்திர பாலஸ்தீன அரசை, சீனா ஆதரிப்பதாக ஷி ஜின்பிங் தெரிவித்திருந்தார். இந்த பின்புலத்தில் சமகாலத்தில் அதிகரிக்கப்படும் பாலஸ்தீன தேச அங்கீகாரத்துக்கான உரையாடலை வலுவாக பற்றிக்கொள்ளக்கூடிய வியூகத்தை பாலஸ்தீன அரசும் தன்னகத்தே கட்டமைப்பதிலேயே இறுதி முடிவும் விளைவும் தங்கியுள்ளது. இது விடுதலைக்காக போராடும் ஏனைய தேசிய இனங்களுக்கும் படிப்பினையாக அமையும். அரபு போராட்டக் குழுக்களின் ஒற்றுமையான செயற்பாடு சர்வதேசத்தை பாலஸ்தீன தேச அங்கீகாரத்துக்கான ஆதரவு தளத்திற்கு திசை திருப்பியுள்ளது.

# சனத் நிஷாந்தவின் மரணம் 2024 இல்! ஏற்கனவே கணித்த ஜோதிடர்

**வெறுங்கையுடன் உலகிற்கு வந்து, வெறுங்கையுடனேயே உலகை விட்டுச் செல்லும் வாழ்க்கைப் பயணத்தில் மரணம் எம்மை இவ்வுலகிலிருந்து அழைத்துச் செல்லும் தினத்தை முன்னரே தெரிந்து கொள்ள முடியுமானால் உங்களால் அந்தப் பயணத்தைத் தடுக்க முடியுமா?**











கடந்த 24ஆம் திகதி அதிகாலையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சரும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சனத் நிஷாந்த பெரேராவும் சில காலங்களுக்கு முன்னர், தனது மரணம் தொடர்பில் இவ்வாறான பல கணிப்புகளை அறிந்துகொண்டுள்ளார்.

அவற்றுள் மிக அண்மையில் மாதம்பையைச் சேர்ந்த ஜோதிடர் ஒருவர், 2024ஆம் ஆண்டில் விபத்தொன்றில் அவரது மரணம் நிகழும் என்றும், 2024ஆம் ஆண்டைக் கடந்துவிட்டால் அவர் ஒரு ராஜாவாக மாறும் அளவுக்கு அதிர்ஷ்டமும் சக்தியும் கொண்ட கிரக அமைப்பு உள்ளதாகவும் கூறியுள்ளார். சில நாட்களுக்கு முன்னர் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, ஹலவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற பல அரசியல் கூட்டங்களில் சிரித்துக்கொண்டே இந்தக் கதையை கூறியிருந்தார். காரணம், அவருக்கு ஜோதிடத்தில் அதிக நம்பிக்கை இருக்கவில்லை. எனினும், தனது அரசியல் பயணத்தின் போது, பலதடவைகள் மரணத்தின் வாசலுக்கச் சென்று திரும்பிய அவர், கொலை மிரட்டல்கள், கும்பல் தாக்குதல்கள் என பல சவால்களை எதிர்கொண்டிருந்தார். தனது ஆன்மிக பலமே மற்றும் உடல் பலம் இரண்டையுமே அவர் எப்போதும் நம்பியதாக அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர், கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பின் போது தனக்கு கடுமையான தோஷம் இருப்பதாக ஜோதிடர் ஒருவர் கூறியதாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்திருந்தார்.

"நான் நீண்ட நாட்கள் வாழ மாட்டேன் என்று இரண்டு ஜோதிடர்கள் கூறியுள்ளனர். அரசியலால் நான் மரணத்தின் வாசலுக்கே சென்று திரும்பியிருக்கின்றேன். எனினும் நான் இன்றும் உயிருடன் இருக்கிறேன். அரசியலும் செய்கிறேன். இந்தக் கதைகளால் எனது குடும்ப உறுப்பினர்கள் என்னை அரசியலில் இருந்து விலகச் சொல்கிறார்கள்" என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்திருந்தர். அவர் தனது வாழ்க்கை மற்றும் இறப்பு பற்றிய ஜோதிடர்களின் கணிப்புகளை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், அவர் தனது மனைவி மற்றும் நான்கு குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் தொடர்பிலும் தொடர்ந்தும் சிந்துத்து வந்துள்ளார். அதனால் தான் அவர் தனது ஊடகச் செயலாளரான மூத்த ஊடகவியலாளர் பி.சி. ஹெட்டியாராச்சியிடம் சில காலங்களுக்கு முன் சில விடயங்களைச் சொல்லியிருந்தார்.

"அரசியல் காரணமாக, சில நேரம் த.மு.தசநாயக்காவுக்கு நடந்ததே எனக்கும் நடக்கக் கூடும். நான் இல்லாமல் போனாலும் எனது மனைவியும் குழந்தைகளும் எவ்விதக் கஷ்டங்களுமின்றி வாழ வேண்டும் என்பதற்காகவே நான் வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தேன். எவ்வாறிருந்தாலும் நான் எனது அறுபதாவது வயதில் அரசியலை விட்டு விலகுவேன். அதற்கு இன்னும் 12 வருடங்கள் உள்ளன"

எனினும் விதி அவருக்கு அந்தப் 12 வருடங்களை விட்டு வைக்கவில்லை. கடந்த 15ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா பயணித்த சொகுசு ஜீப் கட்டுநாயக்க கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையின் 11ஆவது கிலோ மீற்றருக் கருகில் விபத்துக்குள்ளானது. அதே திசையில் முன்னால் பயணித்துக் கொண்டிருந்த கன்டெய்னர் கனரக வாகனத்தின் மீது மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான இராஜாங்க அமைச்சர் உயிரிழந்ததோடு, உயிரிழக்கும் போது அவரது வயது 48 ஆகும்.

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதம சட்ட வைத்திய நிபுணர் ரமேஷ் அழகியவண்ண மற்றும் விசேட வைத்திய நிபுணர் வியானி டயஸ் ஆகியோர் தலைமையில் ராகமை போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் போது, விபத்தின் காரணமாக இராஜாங்க அமைச்சரின் தலை, இடது கால் மற்றும் மார்புப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பலத்த காயங்கள் மற்றும் உட்புறமான இரத்தப் போக்கு போன்றவையே மரணத்திற்குக் காரணம் என ராகமை போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி சுதர்சன திசாநாயக்க தெரிவித்துள்ளார். இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு தீராத நோய்களோ, வேறு எந்த நோய்களுமோ இல்லை எனவும் தெரியவந்துள்ளது. என்றாலும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் அவர் மரணத்திற்கு ஆளாக நேரிட்டுள்ளது. அந்த துரதிஷ்டவசமான சந்தர்ப்பம் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் மனைவி மலவி ஆராச்சிகே சாமரி பிரியங்கா (40) இவ்வாறு கூறினார்.

"எனது கணவனுக்கு சாப்பிட, தூங்க, ஓய்வெடுக்க என எதற்குமே நேரமிருக்கவில்லை. நான் குழந்தைகளை கவனித்துக்கொண்டதால், அவர் அரசியலில் முழுமையாக ஈடுபட்டார். பதவிக்கும் சுய நலன்களுக்கும் ஆசைப்பட்டு கட்சி மாறவோ, கட்சிக்கு துரோகம் இழைக்கவோ இல்லை. தனது பிரதேச மக்களுக்காகவே அவர் நீண்ட காலம் பணியாற்றினாலும், நாட்டு மக்களுக்குச் செய்யும் சேவையிலும் அவர் குறைவைக்கவில்லை. பிறப்பால் அவர் ஒரு கத்தோலிக்கராக இருந்தாலும் அவருக்கு இன, மத வேறுபாடுகள் இருக்கவில்லை. புத்தளம் மாவட்டத்தில் எல்லா மதங்களையும், இனங்களையும் சேர்ந்த மக்களுக்கு எவ்வித பாகுபாடுகளுமின்றி எனது கணவர் சேவையாற்றினார். நாட்டில் இடம்பெற்ற போராட்டத்தின் போது எங்கள் வீடு தீக்கிரையாக்கப்பட்டதால் நாம் இருப்பதற்கு வீடில்லாததால் அன்று இரவே நாங்கள் கொழும்புக்கு வர வேண்டியதாயிற்று. சம்பவம் இடம் பெற்ற தினம் உறவினர் திருமணம் என்பதால் குடும்பமாக கலந்து கொண்டு எனது கணவர் வேறு வாகனத்தில் எங்களை கொழும்புக்கு அனுப்பி வைத்தார். அவ்வாறே அவர் வேறொரு திருமணத்துக்குச் சிலாபத்திற்குச் சென்றார். அவ்வாறு சென்று திரும்பிக் கொண்டிருக்கும் போதுதான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது...."

அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. தாயின் மடியில் அமர்ந்திருந்த சிறுவயது மகன், "அம்மா அழாதே" என்று தன் கைகளால் தாயின் கண்களைத் துடைத்துவிட்டு, தன் கண்களில் வழிந்த கண்ணீரைத் தானே துடைத்து, அருகில் இருந்தவர்களின் கண்களையும் கண்ணீரால் நிரப்பினான். அந்தக் குழந்தைகள் தந்தையை இழந்த வேதனையைத் தாங்க முடியாமல் தவிக்கின்றனர்.

குருகமகே சனத் நிஷாந்த பெரேரா 1975ஆம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி ஆராச்சிக்கட்டில் மூன்று சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரியைக் கொண்ட ஐந்து பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இளைய மகனாகப் பிறந்தார். சனத் நிஷாந்த சிறுவயதிலேயே தந்தையை இழந்ததால், அவரது தாயும் மூத்த சகோதரருடன் இணைந்து தொடங்கிய வியாபாரமே குடும்பத்தின் ஒரே வருமானமாக ஆகியது. ஆராச்சிக்கட்டுவ அரசினர் பாடசாலை, ராஜாகந்தலுவ கனிஷ்ட வித்தியாலயம், சிலாபம் சாந்தமரியா ஆண்கள் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயின்ற இவர் தனது இளமைக் காலத்திலிருந்தே சமூக சேவகராகவும் கலைஞராகவும் பிரதேசத்தில் அறியப்பட்டவர். 1996ஆம் ஆண்டு, அன்றைய ஆராச்சிக்கட்டுவ உள்ளூராட்சி மன்றத் தலைவர் கிங்ஸ்லி சரத் ஹேமச்சந்திரவின் வழிகாட்டலின் கீழ் சனத் நிஷாந்த தீவிர அரசியலில் பிரவேசித்தார். அதன்படி 2000ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

2000ஆம் ஆண்டில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் சனத் நிஷாந்தவின் மூத்த சகோதரரான சுமித் கபில பெரேரா உயிரிழந்ததோடு, அவரது இரண்டாவது மூத்த சகோதரரான ஜனத் சமந்த பெரேரா இரண்டு தடவைகள் ஆராச்சிக்கட்டு பிரதேச சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2001ஆம் ஆண்டில் அரசியல் பழிவாங்கல் காரணமாக சனத்தின் வீட்டில் அமைந்திருந்த வியாபார நிலையம் எதிர்த்தரப்பினரால் தீக்கிரையாக்கப்பட்டதால் அவரும், குடும்பத்தினரும் பாரிய நெருக்கடியைச் சந்தித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது இராஜாங்க அமைச்சர் பயணித்த ஜீப் அதிவேகமாக பயணித்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இராஜாங்க அமைச்சரின் சாரதி பிரபாத் எரங்க (29) இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எமது வாகனம் முன்னால் சென்ற கன்டெய்னரை முந்திச் செல்லத் தயாரான போது, வலது பக்கத்தில் வேகமாக வந்த கார் ஒன்று எம்மை முந்திச் சென்றது. அந்த கார் எமது வாகனத்தில் மோதிவிடும் எனப் ப யந்து நான் எமது வாகனத்தை இடது பக்கம் திருப்பினேன். அந்நேரம் எமது வாகன ம் பலத்த சத்தத்துடன் கன்டெய்னர் மீது மோதியது. வாகனம் சுழல்வது போல் இருந்தது. அதன்பிறகு என்ன நடந்தது என்பதை என் னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை"

இரா ஜாங்க அமைச்சரின் வாகனச் சாரதியையும் அவ்வாகனம் மோதிய கன்டெய்னர் வாகனச் சாரதியையும் பொலிசார் கைது செய்துள்ளனர். இராஜாங்க அமைச்சரின் வாகனச் சாரதியின் கவனயீனம் மற்றும் கடுமையான வேகம் என்பன இந்த விபத்திற்குக் காரணமாகியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அமைச்சரின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த அவரது சகோதரர்களில் ஒருவரான ஜகத் சமந்த, தனது சகோதரர் மது அருந்துவதில்லை என தெரிவித்துள்ளார். தனது சகோதரரின் இழப்பு அவரது மனைவி, 12, 10 மற்றும் 9 வயதுகளையுடை மூன்று மகள்கள் மற்றும் ஐந்து வயது மகன் உட்பட குடும்பத்தினருக்கு தாங்க முடியாத இழப்பாகும் என்றும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சரின் மனைவி மலவி ஆராச்சிகே சமரி பிரியங்கா, பம்மல, காக்கப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் முதற் தடவையாக சனத் நிசாந்தவை தேவாலயம் ஒன்றிலேயே சந்தித்துள்ளார். அதற்குச் சில காலங்களுக்குப் பின்னர் அவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரின் கீழ் ஒரு சட்டத்தரணியாகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்துள்ளார். அந்தக் காலத்தில் சனத் நிஷாந்த வடமேல் மாகாண சபை உறுப்பினராக இருந்ததோடு, ஒரு வழக்கு தொடர்பில் சட்டத்தரணியைச் சந்திப்பதற்காக பல தடவைகள் சட்டத்தரணியின் அலுலலகத்திற்குச் சென்று வந்துள்ளார். அவ்வாறு ஒருநாள் சென்றபோது சமரியின் கையிலிருந்த பேனா தவறி சனத் நிஷாந்தவின் காலுக்கருகில் வீழ்ந்துள்ளது. அந்நேரம் கீழே குணிந்து பேனாவை எடுத்துக் கொண்டு நிமிர்ந்த சமரியின் தலையில் கையை வைத்து நல்லா இருங்கள் என சனத் நிஷாந்த ஆசீர்வாதம் செய்துள்ளார். அவ்வாறு ஆரம்பித்த அவர்களது காதல் திருமணத்தில் முடிந்துள்ளது. பின்னர் சில காலம் ஒரு சட்டத்தரணியாக பணியாற்றிய சமரி, கணவரின் ஓய்வில்லாத அரசியல் நடவடிக்கைகளினால் தனது சட்டத்தரணி தொழிலுக்கு விடை கொடுத்துவிட்டு தனது கணவரின் பிரத்தியேகச் செயலாளராகச் செயற்பட்டு வந்துள்ளார்.

"கணவரின் இழப்பு விபரிக்க முடியாத வலியைத் தந்தாலும் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் அவருக்கு பல எதிர்பார்ப்புக்கள் இருந்தன. அவருடைய மரணத்துடன் அவை அழிந்துவிடக் கூடாது. எதிர்காலத்தில் ஒரு சட்டத்தரணியாக தேவைப்பட்டால், அவருக்காக அவரது ஆதரவாளர்களுடன் இணைந்து, அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நான் தயாராக இருக்கிறேன்". கணவரின் இழப்பு தாங்க முடியாத துயரைத் தந்தாலும், கணவனின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உறுதியான உள்ளத்துடன் இருப்பதாகத் தெரிவித்தார். இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக புத்தளம் ஆராச்சிக்கட்டுவவில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எடுத்துச் செல்லப்பட்டு வைக்கப்பட்டிருந்ததோடு, இறுதிக் கிரியைகள் இன்று 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தளம் ராஜகந்தளுவை கத்தோலிக்க மயானத்தில் இடம் பெறவுள்ளன.





சுரேகா நில்மினி இலங்கோன்
தமிழில் : எம். எஸ். முஸப்பிர்




# கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேறிய நிகழ்நிலை காப்பு சட்டமூலம்

லோரன்ஸ் செல்வநாயகம்

சமூக வலைத்தளங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பது நாட்டில் அனைவரதும் எதிர்பார்ப்பு என்பதுடன் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சியிலிருந்தும் பெரும்பான்மையான ஆதரவு கிடைத்தது. எனினும் எந்த வகையிலும் நாட்டு மக்களுக்கான தகவல் சுதந்திரத்தை அல்லது உண்மையை அறியும் சுதந்திரத்தை இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலமானது இல்லாது ஒழித்து விடக்கூடாது என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பு.

இத்தகைய பின்னணியிலேயே அந்த சட்டமூலத்தை திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் முழுமையாக அதில் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்பதால் குறித்த சட்டமூலம் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் 46 மேலதிக வாக்குகளால் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 46 மேலதிக வாக்குகளால் சட்ட மூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது. வாக்களிப்பின்போது 54 பேர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

எதிர்க்கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசினால் கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதம் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய இரு நாட்களாக சபையில் இடம்பெற்றது.

இரண்டாவது நாள் இடம்பெற்ற விவாதத்தின் முடிவில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வாக்கெடுப்பைக் கோரினார். அதனையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பிலேயே 46 மேலதிக வாக்குகளினால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதம் இரண்டாவது தின விவாதத்துக்குப் பின்னர் நிறைவடைந்ததுடன் அதனைத்தொடர்ந்து சட்டமூலத்தை திருத்தங்களுடன் நிறைவேற்ற ஆளும் கட்சி நடவடிக்கை எடுத்தது. அவ்வேளையில் சில திருத்தங்கள் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறுவதாகவும், அரசாங்கம் முறைமைகளை மீறி அந்த திருத்தங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர்க்கட்சியினர் கோசமெழுப்பினர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்டோர் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பி அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு தமது எதிர்ப்பை தெரிவித்தனர். அவ் வேளையில் தெளிவுபடுத்திய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, சட்ட மாஅதிபர் மற்றும் சட்ட வரைபாளர்களின் இணக்கப்பாடு மற்றும் அனுமதியுடனேயே இந்த திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தின்படியே இவை முன்வைக்கப்பட்டுள்ளன. இங்கே சட்ட மாஅதிபரும் இருக்கின்றார். அதற்கிணங்க இது தொடர்பில் குழப்பமடைய தேவையில்லை என்றார்.

எவ்வாறாயினும் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் செயற்பாட்டை கடுமையாக எதிர்த்து ஒழுங்குப் பிரச்சினைகளை முன்வைத்தனர். ஆனால் ஆளும் கட்சியினர் தொடர்ந்தும் எதிர்ப்பு வெளியிட்டதால் அமளிதுமளி ஏற்பட்டது. இதன்போது படைக்கள சேவிதர்கள் உள்ளிட்டோர் செங்கோலுக்கு பாதுகாப்பு வழங்கினர்.

அதேவேளை சபை முதல்வர் திருத்தங்களை முன்வைக்க ஆளும் கட்சியின் எம்.பிக்கள் அவரை சூழ்ந்துகொண்டு அவருக்கு பாதுகாப்பு வழங்கி அவரைத் தொடர்ந்தும் திருத்தங்களை முன்வைக்க உதவினர். எனினும் சபையில் எதிர்க்கட்சியினர் சபைக்கு மத்தியில் வந்து தமது கடும் எதிர்ப்புகளை வெளியிட்டனர். எதிர்க்கட்சியினரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருத்தங்கள் முன் வைக்கப்பட்டு சட்ட மூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது

**அமைச்சர் பந்துல குணவர்தன**

குரோதம், வைராக்கியம் மற்றும் மத ரீதியான மோதல்களை ஏற்படுத்தும் சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகளுக்கு இடமளிக்காது உண்மையை உரிய வகையில் முன்னெடுக்கும் சமூக ஊடக கலாசாரத்திற்கு இடமளிப்பது அவசியம் .

சமூக ஊடகத்தின் செயற்பாடுகள் முக்கியமானவை. எனினும் சமூகத்தில் இரு தரப்பினர் உள்ளனர். ஒரு தரப்பினர் மிகவும் சிறந்த முறையில் இந்த சமூக வலைத்தளங்களை உபயோகிக்கின்றனர். அவர்கள் நாட்டுக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்கும் விதத்தில் இந்த ஊடகங்களை உபயோகிக்கின்றனர். உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் அவ்வாறான செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. அந்த வகையில் சிறந்த வகையில் செயற்படும் சமூக வலைத்தளங்களுக்கு இடமளிப்பதுடன் குரோதம், வைராக்கியம் மற்றும் மத ரீதியான மோதல்களுக்கு வழிவகுக்கும் சமூக ஊடகங்களின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

**ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார:**

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலமானது அவசரமாக கொண்டு வரப்படும் ஒரு சட்டமூலம் அல்ல. கொண்டு வரப்படும் சட்டமூலத்தில் ஏதாவது குறைபாடுகள் காணப்பட்டால் திருத்தங்களை மேற்கொண்டு அதனை பின்னர் நிறைவேற்ற முடியும்.

இந்த சட்டமூலம் அரசாங்கத்தினால் அவசரமாக கொண்டு வரப்படும் சட்டமூலம் என தெரிவிப்பது தவறானது. இது அனைவரும் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ள வேண்டிய விடயம்.

இந்த சட்ட மூலம் முதல் தடவையாக 2016ஆம் ஆண்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பின்னரே அதற்கான குழு அமைக்கப்பட்டது. அதற்கிணங்க 2021ஆம் ஆண்டு ஊடகத்துறை அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பித்து அது தொடர்பில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டு அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இது முக்கியமான சட்டமூலமொன்று. நாட்டில் எங்கும் வாழும் மக்கள் சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா எனக் கேள்வி எழுப்புகின்றனர். அதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஏன் சட்டங்களை கொண்டு வரவில்லை என்றும் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என அனைவரும் கேள்வி கேட்கின்றனர். அந்த வகையில் இந்த சட்டமூலத்தில் குறைபாடுகள் காணப்பட்டால் திருத்தங்களை மேற்கொண்டு அதனை நிவர்த்தி செய்ய முடியும்.

**ஸ்ரீதரன் எம்பி**

கண்களை மூடிக்கொண்டு சட்டங்களை கொண்டு வர முயன்றால் அவ்வாறான செயற்பாடுகள் நாட்டை அதலபாதாளத்திற்கே கொண்டு செல்லும்.





1978ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதன் விளைவை சிங்கள மக்கள் அறிந்திருக்கவில்லை என்பதை சுட்டிகாட்டிய அவர், அரகலயவுக்கு பின்னர் தான் புதிய சட்டம் கொண்டு வர கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், பூனை கண்களை மூடிக் கொண்டு பால் குடிப்பதை போன்று கண்களை மூடிக் கொண்டு சட்டங்களை கொண்டு வந்தால் அது நாட்டை அதலபாதாளத்துக்கே கொண்டு செல்லும் என்றும் தெரிவித்தார். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் என்பன பாரதூரமானவை என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சட்டங்களை கொண்டு வருவதற்கான காரணத்தை ஆழமாக ஆராய வேண்டும். கடந்த 80 வருடங்களுக்கு மேலாக நாட்டில் புரையோடிப் போயுள்ள தமிழ், சிங்கள முரண்பாடு மற்றும் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சிங்கள பெரும்பான்மை தலைவர்கள் தவறியுள்ளார்கள் என்பதை வரலாற்றுச் சம்பவங்கள் சான்றுப்படுத்தியுள்ளன. பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சந்தர்ப்பத்தை அரச தலைவர்கள் புறக்கணித்துள்ளார்கள். ஒருவரது ஆட்சியை பிற தரப்பு எதிர்ப்பதும், அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கடந்த காலத்தை விமர்சிப்பதும் இந்த நாட்டில் பெரும் அநியாயமாக காணப்படுகிறது. ஆகவே இந்த உயரிய சபை பல மனிதர்களையும், எண்ணங்களையும், கண்டுள்ளது.

தமது கருத்தை பொது வெளியில் பதிவு செய்யும் உரிமை மக்களுக்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தை நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. தனி மனித சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகள் இந்த சட்டமூலத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன,

**ரவூப் ஹக்கீம் எம்பி**

சமூக வலைத்தளங்கள் மூலம் அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைத் தடுத்து அரசாங்கத்தின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கான துரும்பாகவே நிகழ்நிலை காப்புச்சட்டமூலத்தை அரசாங்கம் பயன்படுத்த முயற்சிக்கின்றது. சமூக வலைத்தளங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையிலேயே நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை கொண்டுவருவதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களை தடுப்பதற்கு இந்த சட்டமூலத்தை கொண்டுவருவதாக அரசாங்கம் தெரிவித்தாலும் சட்டமூலத்தில் காணப்படும் 57 பிரிவுகளில் 2 பிரிவுகளில் மாத்திரமே பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏனைய அனைத்து விடயங்களும் வலைத்தளங்களை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் வலைத்தளங்கள் ஊடாக தகவல் பரிமாறிக்கொள்ளும் விடயங்கள் தொடர்பிலுமே காணப்படுகிறது. அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றதையும் குறிப்பிட வேண்டும்.

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன**

பொய்யான தகவல்களை பரப்புபவர்களுக்கு தண்டனை வழங்கக் கூடியவகையில் நாட்டில் ஊடக கட்டுப்பாட்டு சட்டம் அவசியமாகும். ஊடகங்களுக்கு முகாமைத்துவமும், ஊடக கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டும். நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் சட்டதிட்டங்கள் கடுமையானதாக இருந்தாலும் ஊடகங்கள் தொடர்பில் கட்டுப்பாடுகள் அவசியம்.

எனது மூத்த மகளின் வீட்டுக்குள் திருடர்கள் நுழைந்துள்ளனர். அரிசி, தேங்காய் போன்ற சமையறையில் இருந்த பொருட்களையே கொண்டு சென்றுள்ளனர். எனக்கு கட்டாரில் அரச தலைவருக்காக வழங்கப்பட்ட பரிசொன்றை பொலனறுவை நூதனசாலையில் வைத்துள்ளேன். ஆனால் ஊடகமொன்றில் காலையில் பத்திரிகை செய்தி வாசிக்கும் போது அரச தலைவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பரிசை தனது மகளின் வீட்டில் வைத்திருந்ததாக கூறியுள்ளார். அது பொய்யாகும். எனக்கு கிடைத்த பொருட்களை நான் நூதனசாலையிலேயே வைத்துள்ளேன். ஆனால் ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தவறானவையாக உள்ளன. இதனை மாற்ற வேண்டும். தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் திகனவில் கலவரம் ஏற்பட்ட போது ஒருவாரத்துக்கு சமூக வலைத்தளங்களை முடக்கினேன். இல்லையென்றால் கலவரம் நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கும். எவ்வாறாயினும் தவறிழைத்தவர்களுக்கு தண்டனை கொடுக்கும் வகையில் சட்டங்கள் இருக்க வேண்டும். ஊடக ஒழுங்குமுறை கட்டுப்பாடு அவசியமாகும். இல்லையென்றால் ஊடக உரிமையாளர்களே நாட்டை நிர்வாகம் செய்யும் நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். சமூக வலைத்தளங்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் அவசியமாகும் .

எனினும் அது தனி மனித சுதந்திரத்தையோ கருத்துச் சுதந்திரத்தையோ மக்கள் தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையையோ இல்லாதொழித்து விடக்கூடாது. அந்த வகையில் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் மூலம் நடைமுறைக்கு வரும் போது, அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனமாக செயல்படுவது முக்கியம் என்பதே யதார்த்தமாகும்.

# மலையக மக்கள் அற்புதமானவர்கள்

## முன்னாள் துணை உயர்ஸ்தானிகர் ஏ. நடராஜன்



கண்டி மற்றும் யாழ்ப்பாண உதவி உயர் ஸ்தானிகராலயத்தின் உதவி உயர்ஸ்தானிகராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள இந்தியாவைச் சேர்ந்த ஏ. நடராஜன் எழுதிய " பொரம் த விலேஜ் டு த குளோபல் ஸ்டேச்" (அனுபவ வாழ்க்கை குறிப்பு) ஆங்கில நூல் வெளியீட்டு விழா 03.02.2024 சனிக்கிழமை பி. ப. 4.00 முதல் 5.30 வரையிலும் பேராதனை தாவரவியற் பூங்காவுக்கு முன்னால் உள்ள பேராதனை ரெஸ்ட் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வார்.

சமூகச் செயற்பாட்டாளர் முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தனின் வரவேற்புரைடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் நூல் பற்றிய கருத்துரையினை பேராதனை பல்லைக்கழக சட்டத் துறைப் பேராசிரியர் நெலும் தீபிகா உடகமவும், நூல் பற்றிய அறிமுகவுரையினை பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சரத் பி. எஸ். அபயக்கோன் மற்றும் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் வி. மகேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்துவர். ஏற்புரையினை நூலாசிரியரும் ஓய்வு பெற்ற தூதுவருமான ஏ. நடராஜன் நிகழ்த்துவார். இந்நூல் வெளியீட்டு விழாவுக்கான ஏற்பாட்டினை கண்டி நகரிலுள்ள பல்வேறு சிவில் சமூக அமைப்புகள் இணைந்து மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலாசிரியரும் கண்டி மற்றும் யாழ்ப்பாண உதவி உயர் ஸ்தானிகராலயத்தின் உதவித் தூதுவராகக் கடமையாற்றி ஓய்வு நிலை பெற்றுள்ள இந்தியாவைச் சேர்ந்த ஏ. நடராஜன் தினகரன் பத்திரிகைக்கு வழங்கி செவ்வி:

**கண்டியில் உதவி உயர்ஸ்தானிகராக கடமையாற்றும் பொழுது எல்லா மனிதர்களுடனும் சமனாக கர்வமில்லாமல் பழகும் எளிமையான ராஜ தந்திரக் கம்பீரமும் எதையும் கூர்ந்து அவதானித்து புரிந்து கொள்ளும் கூரிய புத்தி நுட்பமும் பன்முகப் பார்வையும் கொண்ட உங்களைப் பற்றிய அறிமுகத்தைக் கூற முடியுமா?**

நிச்சயமாக. நான் இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவன். என்னுடைய பள்ளிப் பருவத்தை திருநெல்வேலியில் முடித்துக் கொண்டு அதன் பிறகு இந்தியாவின் தலைநகர் டில்லிக்கு 1983ஆம் ஆண்டு சென்றேன். நான் வெளியுறவுத் துறையில் 1984ஆம் ஆண்டு சேர்ந்தேன். அதன் பிறகு 1985 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட ஒன்பது நாடுகளில் பணிபுரிந்துள்ளேன். யெமன், ஸ்பெயின், சீனா, இந்தோனேசியா, பிரான்ஸ், பூட்டான், இலங்கை போன்ற நாடுகளில் பணியாற்றினேன். குறிப்பாக இலங்கையில் கண்டியில் மூன்று ஆண்டுகளும், இறுதியாக யாழ்ப்பாணத்தில் மூன்று ஆண்டுகளும் பணியாற்றிவிட்டு 2019 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன்.

**நீங்கள் வெளிக் கொணர்ந்துள்ள நூல் குறித்து...**

நான் பல ஆண்டுகள் உயர்ஸ்தானிகராக பணிபுரிந்த அனுபவங்களைப் பற்றி நூல் ஒன்றை வெளிக்கொணர்ந்துள்ளேன். எனது பள்ளிப் பருவம், இளமைக் காலம், எனது குடும்பச் சூழ்நிலை மற்றும் இந்தியத் தூதரகங்களில் பணிபுரியும் போது பெற்ற விசித்திரமான அனுபவங்களைப் பற்றி என்னுடை நூலில் எழுதியுள்ளேன்.

நான் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தமையினால் இந்திய மீனவர் பிரச்சினை, கச்சதீவு, போர்க்காலப் பிரச்சினைகள், இந்திய அமைதிப்படை என யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி என்னுடைய நூலில் சுருக்கமாக எழுதியுள்ளேன்.

**நீங்கள் கண்டியில் பணிபுரிந்த கால கட்டத்தில் உங்களது பணிகள் குறித்து நான் நிறைய செய்திகள் சேகரித்து ஊடகங்களுக்கு வழங்கியுள்ளேன். அன்று அரும்பிய நட்பு நீங்கள் கண்டியில் இருக்கும் வரையிலும் நீடித்து வளர்ந்தது. உங்கள் காலத்தில் நீங்கள் மலையக மக்களுக்கு ஆற்றிய பங்களிப்பு பற்றியும் அவர்களுடைய குணாம்சங்கள் பற்றியும் கூறுங்கள்?**

2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரை கண்டியிலுள்ள உதவித் தூதுவரகத்தில் துணைத் தூதுவராகப் பணிபுரிந்தேன். அங்கு பணிபுரிந்தமையை ஒரு வரப்பிரகாசமாக நான் கருதுகின்றேன். ஏனென்றால் எங்களுடைய மக்கள் அதாவது இந்திய வம்சாவளி மக்கள் அங்கு மத்திய, ஊவா, சப்ரகமுவ , வடமேல் ஆகிய மாகாணங்களில் வாழ்கின்றனர். அதேவேளையில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் ஒரு தொகையினர் வாழ்கின்றனர்.

இவற்றை அவதானிக்கும் பொழுது எனக்கு சந்தோகமாக இருக்கின்றது. நாங்கள் எல்லோரும் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்று அவர்கள் என்னிடம் வந்து கூறும் போது, ஆம், இவர்கள் எங்களுடைய தொப்புள் கொடி உறவுகள் என்றுதான் நான் கருதுவேன்.

அது மட்டுமல்ல அவர்களுடன் சந்தித்துப் பேசிப் பழகும் போது அவர்கள் என்னை ஓர் உறவினராகத்தான் கருதினார்கள். மலையகத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, சிங்களவர்களும் இஸ்லாமியர்களும் என்னை மதித்தார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. அந்தளவுக்கு அழகான பண்பான அற்புதமான மக்கள் மலையகத்தில் இருக்கின்றார்கள். அதற்காக மற்ற நாட்டைச் சார்ந்தவர்கள் கெட்டவர்கள் என்று கூறவில்லை. ஆனால் இவ்வளவு நல்ல குணமுள்ளவர்களை நான் அவதானித்தது இலங்கையில் தான். அதுவும் குறிப்பாக மலையதத்தில் தான். நான் அவர்களிடமிருந்து நல்ல கௌரவத்தையும் நல்ல அனுபவத்தையும் பெற்றுக் கொண்டேன்.

இப்பொழுதும் கூட நான் இந்தியாவில் இருக்கும் போது, மலையகத் தமிழர்களைப் பற்றி யாரும் பேசினால் உடனே நான் இடையிட்டு அந்த மக்களைப் பற்றி அவர்களுடைய நல்ல குணங்களை எடுத்துச் சொல்வதில் எந்த தயக்கமும் காட்டியதில்லை. நாங்கள் நண்பர்களுடனோ அல்லது வேலை செய்யும் இடங்களிலோ பேசும் போது மலையகத் தமிழர்கள் பற்றி மிகவும் பெருமையாகப் பேசுவேன்.

மத்திய மாகாணமாக இருக்கட்டும் ஊவா மாகாணமாக இருக்கட்டும் அல்லது வடமேல் மாகாணமாக இருக்கட்டும் எல்லாத் தோட்டங்களுக்கும் சென்றிருக்கின்றேன். அங்குள்ள தோட்டத் தொழிலாளர்களைச் சந்தித்துள்ளேன். அது மட்டுமல்ல தோட்டத்திற்குள் எங்கெங்கெல்லாம் பாடசாலைகள் இருக்கின்றனவோ அந்தப் பாடசாலைகளுக்குச் சென்று அந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும் சந்தித்துப் பேசும் பொழுது, கண்டியில் இந்திய துணைத் தூதரகம் பல ஆண்டுகளாக இருக்கின்றது. அப்படி இருந்தும் எங்கள் பாடசாலைக்கு வந்த முதல் இந்திய தூதுவர் நீங்கள்தான் என்று கூறும் பொழுது எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கும்.

மலையகத்திலுள்ள பாடசாலைகளுக்கு எங்களால் முடிந்த உதவிகளை குறிப்பாக ஏராளமான நூல்கள் அன்பளிப்பாகக் கொடுத்திருக்கின்றோம். இசைக் கருவிகளை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கின்றோம். விளையாட்டுச் சாதனங்களை ஏராளமாகக் கொடுத்திருக்கின்றோம்.

ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கியிருக்கின்றோம். நான் இருக்கின்ற காலத்தில் மட்டுமல்ல அதற்கு முன்பும் அவ்வாறு வழங்கப்பட்டன. ஊவா மாகாணத்திற்கு 2000 வீடுகளும் மத்திய மாகாணத்துக்கு 2000 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன.

அந்த வகையில் என்னுடைய பங்கும் இருக்கின்றது என்பதை நான் கூறிக் கொள்கின்றேன். இப்படி ஏராளமான செயற்பாடுகள் செய்திருந்தாலும் நான் இன்னும் கொஞ்சம் அதிகமாக செய்திருக்க வேண்டுமோ என்ற குறைபாடு என் மனதிற்குள் இப்பொழுதும் ஓடிக் கொண்டே இருக்கின்றது

**நீங்கள் வடக்கு மாகாணத்தில் ஆற்றிய பங்களிப்பு பற்றிக் கூறுவீர்களா?**

நான் மத்திய மாகாணத்தை விட வடக்கு மாகாணத்தில் அதிகளவு பங்களிப்புச் செய்திருக்கின்றேன். ஒன்று மட்டும் கூறுகின்றேன். கண்டியை விட்டு ஒரு பத்து வருடங்களுக்கு முன்னால் வந்து விட்டேன். இன்றும் மக்கள் என்னை மறக்க வில்லை. நானும் அவர்களை மறக்கவில்லை.

நேர்காணல்: இக்பால் அலி

# பேருவளை, மஹாகொடை சம்சுதீன் வித்தியாலய பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டி

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் பேருவளை, மஹாகொடை மேமா/ களு/ ஐ.எல். எம். சம்சுதீன் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் மீண்டும் பாடசாலையில் ஒன்றுகூடும் முகமாக ஏற்பாடு செய்துள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டி 27ஆம் திகதி ஆரம்பித்தது. தொடர்ந்து 28, 29ஆம் திகதிகளில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.


மேமா/ களு/ ஐ.எல் . எம். சம்சுதீன் வித்தியாலயத்தின் அதிபர் எம். எச். எப். ஷியானா தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பேருவளை பிரதேச கல்விப் பணிப்பாளர் டபிள்யூ.ஏ.ஜே.யூ சோமரத்ன, பேருவளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆகியோர் 27ஆம் திகதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்கள். வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. யூ. விக்ரமாராச்சி, எஸ். ஜெயகுமார், எம். ஐ. எம் இல்யாஸ், சமிந்த வாஸ் ஆகியோர் 29ஆம் திகதி பிரதம அதிதியாக கலந்து கொள்வார்கள். 1992ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரை க.பொ.த. சா. த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள். இவ்வாண்டுகளில் கல்வி பயின்ற மாணவர்களைக் கொண்ட 29 அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் மஹிதி ஹசன் தெரிவித்தார்.



சிலாபம், மாதம்பை அல் மிஸ்பா தேசிய பாடசாலையில் கடந்த 11.01.2024 காலை 8.30. மணியளவில் புதிய அதிபர் மொஹமட் அன்வர் புதிய அதிபராக கடமைகளை பொறுப்பேற்றார். அவரை வரவேற்கும் முகமாக பிரதி அதிபர் நமிஸ் ஆசிரியர் தலைமையிலும் SDC, OBA,MESDA மற்றும் பாடசாலை மாணவர்கள் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். பாடசாலை முன்னாள் அதிபர் சாஹிர்,பிரதி அதிபர் நமீஸ், ஆகியோரையும் படத்தில் காணலாம்




## பிரார்த்தனைகள்



கடலலைகளாக
புரளும் மனம்
உருண்டோடி
உன் பாதக்கரையை
அடைந்த தருணம்,
என் தலைமீது மாற்றினாய்
அழகிய உன் பிறை நிலவை.

முழு நிலவின் பாரத்தைத்
தாங்கியிருக்க மாட்டேன்.
இம்மெல்லிய பிறையொன்றும்
சுளுவாக இல்லை.
தவறவிடாமல்
தாங்கியிருக்கிறேன்,

வரைந்து மறையாத
முதல் கீற்றாக,
தொலைந்த வானின் புதையலாக,
புன்னகையின் மென்குளிர்ச்சியாக
இன்சொற்களின் திகட்டாத நினைவாக.

பெரிய பொறுப்பொன்றை – என்
தலைமீது ஏற்றிவிட்டாய்.
சிந்தையின் ஒரு விள்ளலைக்
கிள்ளி எறிந்துவிட்டாய்.
இன்பத்தைத் தாங்குதல்

இத்தனை மெல்லிய
பாரமா!பிரார்த்தனைகள்

ச. அனுக்ரஹா

## "உண்மைக் கவிஞன்"

பழந்தமிழ்
இலக்கியப்
பழத் தோட்டம்
புகுந்து
தேன்கனிகள்
சாறெடுத்து
தித்திக்கத் தருபவன்!

இரசிக்கும் நெஞ்சும்
ருசிக்கும் நாவும்
கொண்டு
வசிக்க வழி
காட்டுபவன்!

மனிதக் கழுகுகள்
மதங் கொண்டு
பிணந்தின்ன...
புனிதம் காத்திட
புத்துணர்ச்சிப்
பிளம்பாய்
பேனாக்
கலப்பையால்
உழுபவன்!

இரா.ஜெயக்குமார்

## போதையின் விபரீதங்கள்



நிதானங்
கள் நிர்மூலமாகி
அவதானங்கள் அல்
லலாகிடும்
அவதாரம் அர்த்தமற்று
அழிவுகள் அண்மித்திடும்

செய்கையில் சீற்றமும்
பொய்யில் துர்நாற்றமும்
தோன்றிடும்
வாய்மையில் கேலியும்
வாழ்க்கையில் தோல்வியும் ஏறிடும்

வெட்கம் கேள்வியாகி
தர்க்கம் தழைத்திடும்
சொர்க்கம் இதிலென்ற
சொப்பனமும் பிழைத்திடும்

ஏளனங்கள் சூழ்ந்து
ஏகாந்தநிலை முகாமிடும்
வாழணும் எனும் நிலைமாறி
வாழ்வும் சரிந்திடும்

தொட்டிலில் மகிழ்ந்தது பாடை
கட்டிலில் விழுந்திடும்
விட்டில் பூச்சியாய் வாழ்க்கை
விரைந்தே முடிந்திடும்.

விளையாட்டாய் தொடங்கி
விபரீதமாய் ஆகிடும்
வினைகளின் மொத்தமாய்
வில்லங்கம் எகிறிடும்

நிந்தனைகளின் நெருக்குதலால்
சிந்தனைகள் சீரழிந்திடும்
வந்தனங்களின் வலுவிழப்பால்
வரலாறும் மாறிடும்

நிர்க்கதிகள் நிலையாகி
துர்க்குணங்கள் தொடராகிடும்
நற்குணங்கள் நலமிழந்து
நற்பெயரும் புதைந்
திடும்

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்

## மானுடக் காதல்..!

மனித மனங்களிலே
காதலே குளிர்ச்சி!
புனிதமாகியே தரும்
மறு மலர்ச்சி!

மானுடத்தில் கருணையை
மலரச் செய்கிறது!
மனதோடு மனதை
அழகாய் நெய்கிறது!

வானமும் பூமியை
அன்பால் நனைக்கிறது!
வனங்களும் வளங்களால்
மனிதனை இணைக்கிறது!

காதலால் உள்ளங்கள் என்றும்
உல்லாசிக்கின்றன !
உவகையால் உலகம்
இன்றும் நல்லாசிக்கிறது!

காதலின்றேல் வாழ்வின்
பக்கங்களுக்கும் குளுமையில்லை !
காதல் இல்லையென்றால்
மனங்களுக்கும் செழுமை
யில்லை!

காதலென்பது வாழ்வதை
முடிவாக்கும் சாதலல்ல!
வாழவைத்தே உன்னதமாக்கும்
புனிதமே காதலாகும்!

அது முழுவுலகையே
ஆகர்ஷிக்கும் முழுமதி!
இது மனங்களை வருடிச்செல்லும்
செழுமதி !

காதலின் காத்திரம்
வெற்றியின் சூத்திரம்!
மனதை நிரப்பியாளும்
உண்மைப் பாத்திரம்!

தனிமையில் புன்னகைக்க
காரணம் ஆகிடும்!
இனிமையில் நம்மை(த்)
துணையாக்கித் தாவிடும்!

மௌனம் நிலையாகி
பேச்சு மறக்கும்!
யௌவனம் காதலை
தழுவிடச் சிறக்கும்!

சிந்திடும் புன்னகையால்
வாழ்வே நிறைவாகும்!
நொந்திடும் உள்ளமும்
களிப்பில் சிறையாகும்!



உண்மை உன்னதமாகி(த்)
துளிர்க்கும் புனிதம்!
மேன்மை உயர்வாகிக்
களிக்கும் மனிதம்!

மானுடக் காதலுலகை
தன் மொழியால்
வெல்லும்!

ஏறூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்



## நீயழகுதான்

எழில் கொஞ்சும்
இயற்கையின் வனத்தில்
நீயழகா இயற்கையழகா
நீயழகுதான் இயற்கையுடன்
கூடியதால்.

இயற்கையின்
அழகால் உன் விழிகளும்
பிரகாசிக்கின்றன
மரங்களின் கிளைகளுக்கு
முன்னால் உன் அசைவும்
தனியழகுதான்.

இயற்கையின் ரசனையுடன்
நீயொரு தேவதையாய்
ஆழமாய் உள்ளத்தை
வருடி எடுத்து
இயற்கையின் வனத்தினில்
மட்டுமின்றி மனங்களிலும்
நீ ஊடுருவி தவழ்கிறாய்.

சத்தார் எம் ஜாவித்

## தைப்பாவை

தைப்பாவையே
வருகவே
தைப்பொங்கலுடன்
வருகவே
தையலிட்ட
துன்ப புண்கள்
ஆறிடவே
தைஇன்ப
ஔடதமாய்
வருகவே
விதைப்பதை
முளைக்க வை

உழைப்பை
உயர்த்தி வை
விவசாயியை
தலை நிமிர வை
எம் வாழ்வை
செழிக்க வை

இணுவில் வாகீசன்

# வரலாற்றிலேயே மாபெரும் விஸ்தரிப்புக்குள்ளாகும் மஸ்ஜித் குபா

சவுதி அரேபியாவின் மதீனா அல் முனவ்வரா பிரதேசத்தில் காணப்படும் மிகப் பிரபல்யமான பள்ளிவாசல்களில் ஒன்றே மஸ்ஜித் குபாவாகும். மதீனா அல் முனராவை தரிசிக்கச் செல்லும் யாரும் குபா பள்ளிவாசலுக்கு சென்று தொழாமல் திரும்புவதில்லை. அதற்குக் காரணம் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட சிறப்பம்சங்களில் ஒன்று இங்கு காணப்படுவதுதான். இப் பள்ளிவாசலை யார் நாடிச் சென்று ஏதாவது ஒருதொழுகையை தொழுதாலும் பூரண உம்ரா நிறைவேற்றிய நன்மை கிடைக்கும்.

> இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக நிறுவப்பட்ட பள்ளிவாசலாக மஸ்ஜித் குபா காணப்படுவது இதன் மிகப்பெரும் சிறப்பம்சமாகும்.

இன்று உலகின் நாலாபுறங்களில் இருந்தும் மக்காவை அடுத்ததாக இரண்டாம் புனித நகர் மதீனாவை தரிசிக்க வருவோர் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்து வரும் காரணத்தால் அப் பள்ளிவாசலின் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இத்திட்டம் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தற்போது காணப்படும் பரப்பளவை விட 10 மடங்கு பெரியதாக விஸ்தரிக்கப்படவுள்ளது. சல்மான் இப்னு அப்துல் அஸீஸின் திட்டத்தினை கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இளவரசர் முகம்மத் இப்னு சல்மான் தெரிவித்ததோடு இதனை சூழவுள்ள பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்படும் என்பதையும் குறிப்பிட்டார்.

இதன் விஸ்தரிப்பு பரப்பளவு 50,000 சதுர மீட்டர் சுற்றளவை கொண்டதுடன் 66 ஆயிரம் மக்கள் தொழும் அளவுக்கு புனர்நிர்மானம் செய்யப்பட்டு வருகிறது.


மேலும் இத்திட்டத்துடன் இணைந்ததாக தரிசிக்க வரும் யாத்திரிகர்கள் மதீனாவின் புராதன அடையாளங்களை அறிந்துகொள்ளும் முகமாக மதீனாவில் காணப்படும் கிணறுகள், தோட்டங்கள், பயிர்நிலங்கள் என 57 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் அபிவிருத்திசெய்யப்படவுள்ளன.

சவுதி அரேபியாவின் 2030 தொலைநோக்குப் பார்வை எனும் திட்டத்தின் கீழ் இடம்பெறும் இம்மாபெரும் விஸ்தரிப்பானது சவுதி அரேபியாவுக்கு ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரைக்கு செல்லும் பயணிகளின் சௌகரியங்களையும் நோக்கமாக கொண்டுள்ளது.

மஸ்ஜித் குபா ஒர் வரலாற்றுப் பார்வை

அல்லாஹ்வின் இறைத்தூதரான முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டு மதினாவை வந்தடைந்ததும் ஹிஜ்ரி முதலாம் வருடம் ரபீஉல் அவ்வல் மாதம் 12 தொடக்கம் 16 வரை குபா என்ற இடத்தில் தங்கி மஸ்ஜித் குபாவினை நிறுவினார்கள். இதன் ஆரம்ப கட்டுமான பணியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முழுமையாக கலந்து கொண்டு, கற்களை தன் கரங்களால் எடுத்து வைத்தார்கள் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

மதீனா நகரத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள இம் மஸ்ஜித் மஸ்ஜிதுன் நபவிக்கு அடுத்ததாக மிகப்பெரும் பள்ளிவாசலாக காணப்படுகிறது. நபியவர்களுடைய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இம்மஸ்ஜித் குபா உஸ்மான் இப்னு அஃபான் (ரழி) அவர்களின் காலத்தில் மீண்டும் விஸ்தரிக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அதன் பின்னர் உமையா ஆட்சியாளரான வலீத் இப்னு அப்துல் மலிக் அவர்களின் காலத்தில் மதினாவுக்கு பொறுப்பாக இருந்த உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் காலப்பகுதியில் (ஹிஜ்ரி 91 - 93) மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இதன் போது உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் இதற்கு அழகிய தோற்றம் கொண்ட வரவேற்பு வாயில் ஒன்றையும் அதேபோல அழகிய மனாரா ஒன்றையும் நிர்மாணித்தார்கள். இதன் பின்னர் ஹிஜ்ரி 555ஆம் ஆண்டு ஜமாலுத்தீன் அஸ்பஹானி அவர்களாலும் பின்னர் ஹிஜ்ரி 733ஆம் ஆண்டு நாஸிர் இப்னு கலாவூன் அவர்களாலும் அதன் பின்னர் ஹிஜ்ரி 881ஆம் ஆண்டு காய்திபாய் என்பவராலும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.





ஹிஜ்ரி 1388 காலப்பகுதியில் சவுதி அரேபியாவின் ஆட்சியாளரான மன்னர் ஃபஹத் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் காலத்தில் மஸ்ஜித் குபா பாரிய அளவிலான விஸ்தரப்புக்குள்ளானது. இதன் போது பழைய கட்டடங்கள் அனைத்தும் உடைக்கப்பட்டு இதன் பரப்பளவும் பல மடங்கு விஸ்த்தரிக்கப்பட்டது.

மன்னர் ஃபஹத் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் ஆட்சிக்காலத்தில் அனைத்து மக்களையும் கவரக்கூடிய அழகிய தோற்றத்தில் கட்டப்பட்ட இப் பள்ளிவாசலுக்கு 47 மீட்டர் உயரமுடைய நான்கு மினாராக்களும் அமைக்கப்பட்டது.

இறுதியாக தற்போதய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் பணிப்புரையின் கீழ் என்றுமில்லாத அளவு இன்னும் பத்து மடங்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் மதீனாவில் இவ்வரலாற்று முக்கியத்துவமிக்க பள்ளிவாசல் உலக முஸ்லிம்களின் வரவேற்பை பெறும் என்பதில் ஐயமில்லை.

**எம்.எம்.எம்.மன்சூர் (மதனி) MA.**
**அதிபர்,**
**மஃஹதுஸ் ஸுன்னா அந் நபவிய்யா**
**மகளிர் அரபுக் கல்லூரி,**
**காத்தான்குடி.**

# மொழி பெயர்ப்பை ஊக்குவித்தவர் அமரர் டொமினிக் ஜீவா



**கலாபூஷணம் மாவனல்லை எம்.எம். மன்ஸூர்**

மல்லிகைச் சிற்றிதழ் மூலமாக அளப்பரிய இலக்கிய சேவைகள் செய்தவர் டொமினிக் ஜீவா.

முக்கியமாக சிங்கள மொழிக் கதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டு தமிழ் பேசும் மக்களுக்கு சிங்கள இன மக்களின் கல்வி, கலை, இலக்கிய கலாசார விழுமியங்களையும், அதே போன்று தமிழ் பேசும் மக்களது கலை கலாசாரங்களையும், முஸ்லிம்களின் பண்பாடுகளையும் பரஸ்பரம் அறிந்து கொள்ள வழிவகுத்தவர்.

> டொமினிக் ஜீவாவின் மூன்றாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வெளியிடப்படும் கட்டுரை

தனது சிற்றிதழான மல்லிகையை ஆரம்பித்த காலம் தொட்டு மொழி பெயர்ப்பு முயற்சிகளுக்கு முக்கிய இடம் அளித்து வந்துள்ளார். அதேவேளை மொழி பெயர்ப்பு எழுத்தாளர்களை ஊக்குவித்தும் வந்துள்ளார். அதே போன்று மல்லிகையினூடாக எத்தனையோ பல எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளார். இதனை எவரும் மறுப்பதற்கோ மறைப்பதற்கோ இடமில்லை.

டொமினிக் ஜீவாவின் ஐம்பது வருடங்களை நோக்கிய மல்லிகைப் பயணத்தில் ஐம்பதாவது ஆண்டை நிறைவு செய்ய முடியாமல் போனது அவரது துரதிர்ஷ்டம்தான். இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டதனால் அந்த இலக்கை அடைய முடியாமல் போனாலும் அவர் வெற்றிகண்டார் என்பதுதான் உண்மை.

1956ஆம் ஆண்டு சுதந்திரன் இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது எழுத்தாளன் என்ற சிறுகதை முதற்பரிசைப் பெற்றுத் கொண்டது. தினகரன், வீரகேசரி முதலிய நாளிதழ்களில் இவரது கணிசமான சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அதேபோன்று தமிழகத்து இலக்கிய இதழ்களான சரஸ்வதி, தாமரை, சாந்தி, ஆகிய இதழ்களிலும் இவரது சிறுகதைகளும், படைப்புகளும் அதிகம் வெளிவந்துள்ளன. அதேவேளை சமூக' நிழல், கணையாழி, கல்கி, மக்கள் செய்தி, இதயம் பேசுகிறது, சாவி, தீபம், ஜனசக்தி, தீக்கதிர் ஆகிய தமிழகத்தில் இருந்து வெளிவரும் இதழ்களிலும் ஜீவாவின் நேர்காணல்கள் வெளிவந்துள்ளன.

1966ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி மல்லிகை தோற்றம் பெற்றது. அன்று முதல் அதன் பதிப்பாசிரியராகவும் வெளியீட்டாளர், விநியோக மேலாளராகவும் விளங்கினார். மல்லிகை மூலம் ஈழத்து எழுத்தாளர்கள் உருவாகி அவர்கள் வளர்வதற்குரிய பண்ணையை ஏற்படுத்தி, எழுத்தாளர்கள் உருவாவதற்கு வழி சமைத்துள்ளார். இன்றுள்ள பிரபல எழுத்தாளர்களில் அநேகம் பேர் அவரது எழுத்துப் பண்ணையில் உருவானவர்கள் என்பதில் ஐயம் இல்லை. மல்லிகை இதழில் சிறுகதைகள், கவிதைகள், பல்துறைசார் கட்டுரைகள், உலகச் செய்திகள், துணுக்கு கள், திறனாய்வுகள் வாதப் பிரதிவாதங்கள், நூல் மதிப்புரைகள், ஆசிரியர் தலையங்கங்கள், தூண்டில் கேள்வி பதில் என என்னென்ன அம்சங்கள் ஒரு சிற்றிதழில் அமையப் பெற வேண்டுமோ அனைத்தையும் உள்ளடக்கியிருந்தன. ஆனால் தொடர் கதை களோ, நெடுங்கதைகளோ அதில் இடம் பெறுவதற்கு உரிய களம் அமையவில்லை.

காரணம் ஒரு சிற்றிதழில் அவற்றை அடக்க முடியாது என்ற ஒரே காரணத்தினால்த்தான். இவரது இந்தத் துணிச்சலை, தனிமனித செயற்பாட்டை பாராட்டாத இலக்கிய உள்ளங்கள் இருக்க முடியாது.

சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்த எழுத்தாளர்களில் தம்பி ஐயா தேவதாஸ், சினா சுப்ரமணியம், இப்து அஸுமத், செந்தீரன் ஏ.கே. கனகரட்ண , எம்.எல்.எம். மன்சூர், எஸ்.எம்.ஜே. பைஸ்தீன், ஏ.பியதாச, யாதவள், திக்குவல்லை கமால், கனகசபை துரைராஜ், செந்தீரன் பெரி சண்முக நாதன், மாவனல்லை எம்.எம். மன்ஸூர் உட்பட இன்னும் பலர் தமது மொழி பெயர்ப்புப் பங்களிப்பைச் செய்துள்ளனர். மொழிபெயர்ப்புச் சிறுகதைகளைத் தொகுத்து செங்கை ஆழியான் 81 பக்கங்களில் 'சிங்களம் சிறுகதைகள்" என்ற பெயரில் மல்லிகைப் பந்தல் மூலமாக சிறுகதைத் தொகுப்பு ஒன்றை 2004 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

# சாதனை படைத்த கிழக்கு மாகாண பொங்கல் விழா

**கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சமீபத்தில் கிழக்கு மாகாணத்தில் பொங்கல் விழாவை 1008 பொங்கல் பானைகள்,1500 பரத நாட்டிய கலைஞர்கள், 500 கோலங்கள், சிலம்பம், பீச், கபடி, படகோட்டப்போட்டி என பல்வேறு நிகழ்வுகளுடன் இலங்கையில் வரலாறு காணாத வகையில் நடத்தி சாதனை படைத்துள்ளார்.**

**கிழக்கின் பொங்கல் விழா உலக சாதனை பட்டியலுக்கு பரிந்துரைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. உலக சாதனை படைத்த ஒரு பொங்கல் விழாவாக அது மாறியதன் பின்னணி என்ன?**

பொங்கல் விழாவின் போது பல்வேறுப்பட்ட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்களின் கலாசாரத்தை பிரதி பலிக்கும் முகமாக 1008 பொங்கல் பானைகள், 1500 பரதநாட்டிய கலைஞர்கள், 500 கோலங்கள், ஜல்லிக்கட்டு, சிலம்பம், படகோட்டப்போட்டி, பீச் கபடி உட்பட பல்வேறு பட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. அதேபோல் எதிர்காலத்தில் ரம்ஸான், வெசாக் போயா போன்ற நிகழ்வுகளையும் முன் னெடுத்து மத நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் என்பது திண்ணம்.



இலங்கையில் ஜல்லிக்கட்டு எப்படி சாத்தியமானது? என்பது பற்றி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விளக்குகின்றார்.

ஜல்லிக்கட்டு ஒரு தமிழ்க் கலாசார விளையாட்டு. ஜல்லிக் கட்டை தமிழ் நாட்டில் நிலைநாட்ட பல போராட்டங்கள் பல விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அது மாணவர் எழுச்சியுடன் வெற்றி வாகை சூடி தமிழகம் முழுவதும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இலங்கையிலும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை மக்கள் ஜல்லிக் கட்டை தொலைக்காட்சியில் காணக்கூடிய வாய்ப்பு மாத்திரமே இருந்தது. அது மக்கள் மனதில் பெரும் குறையாக இருந்து வந்த நிலையில், அதை நிவர்த்தி செய்யும் முகமாக தமிழ்நாட்டு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்கத்துடன் இணைந்து, வெற்றிகரமாக ஜல்லிக்கட்டை இலங்கையில் நடத்தியதன் மூலம் ஜல்லிக்கட்டுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது.

**இந்தியாவின் மத்திய அரசை ஆளும் பா.ஜ.க வும், தமிழகத்தை ஆளும் தி.மு.க வும் வெவ்வேறு கொள்கையில் இருக்கும் போதும் தாங்கள் ஒருவரை மட்டும் இரு தரப்பினரும் ஆதரிப்பது எப்படி?**

பா.ஜ.க அரசை பொறுத்தமட்டில் இலங்கையில் பல அரசியல் தலைவர்கள் பா.ஜ.கவுடன் தொடர்பில் இருந்தாலும், என்னுடைய கடந்தகால நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, மக்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை என்னால் வழங்க முடியும் என்பதை உணர்ந்து, எனக்கு ஆதரவாக உள்ளனர்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூரும் வகையில் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை ஏற்பாட்டில் முத்திரை வெளியிடும் நிகழ்வு அண்மையில் டெல்லியில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக நான் அழைக்கப்பட்டு, இந்திய தபால் அமைச்சுடன் இணைந்து பா.ஜ.க தேசிய தலைவர் பிபி நாடா முத்திரையின் முதலாவது பிரதியை எனக்கு வழங்கினார். அதன் மூலம் மலையக மக்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் உதயநிதி ஸ்டாலின் தங்களுடைய காளைகளுக்கு தங்க காசை பரிசாக வழங்கினாரா?**

உதயநிதி ஸ்டாலின் அரசியல் மற்றும் சினிமாத் துறைக்கு வருவதற்கு முன் அவருடன் பல வருட காலமாக நட்புப் பாராட்டியுள்ளேன். உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தில் அவரது அமைச்சு ஊடாக சிறப்பாக சேவை செய்து வருகிறார். அதேவேளை விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற வகையில் தமிழ் கலாசார விளையாட்டுகளை ஊக்குவித்தும் வருகிறார்.

அப்படி இருக்கும் சூழ்நிலையில் அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டுக்கு சிறப்பு விருந்தினராக பங்கேற்குமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த ஜல்லிக்கட்டில் எனது காளைகள் வெற்றிபெற்றதையடுத்து உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மூர்த்தி ஆகியோரால் தங்க காசு பரிசாக வழங்கி வைக்கப்பட்டது.

**மலையகத்துக்கு சோனியாகாந்தி அம்மையாரால் முதல் கட்டமாக 4000 வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன. அவ் வீட்டுத்திட்டத்திற்கான ஏற்பாடு தங்களுடையது என்பது அந்த காலப்பகுதிகளில் பேசப்பட்டது. அது உண்மையா?**



இலங்கை அரசாங்கத்தால் மலையக மக்களுக்கு வழங்கப்படும் வீட்டுத்திட்டம் போதுமானது அல்ல என்பதை நன்கு அறிந்து, இ.தொ.காவின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானிடம் இது குறித்து இந்தியா அரசின் உதவியை நாடலாம் என கலந்துரையாடினேன். இ.தொ.காவின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் எனக்கு அனுமதி வழங்கியதை அடுத்து டெல்லியில் உள்ள சோனியாகாந்தி அம்மையாரை 2, 3 முறை சந்தித்து விரிவாக கலந்துரையாடினேன். அக்கலந்துரையாடலில் மலையக சமூகத்தின் பிரச்சினைகளை அவரது நேரடி கவனத்தித்திற்கு கொண்டு சென்றேன். மலையக மக்களின் பிரச்சினைகள் கஷ்டங்களை சோனியாகாந்தி அம்மையாரிடம் விவரித்து மலையக மக்களுக்கு இந்தியா அரசின் உதவி தேவைப்படுகிறது என்பதை தெரியப்படுத்தி, இ.தொ.காவின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவுக்கும் சோனியாகாந்தி அம்மையாருக்குமிடையிலான சந்திப்பினை ஏற்படுத்தி வீட்டுத்திட்டத்திற்கான முதல் கட்ட அனுமதியை பெற்று மலையகத்திற்கான வீடமைப்பு திட்டத்தை பெற்றுக்கொடுத்தோம்.

**மலையகத்திற்காக தாங்கள் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் குறித்து விளக்குக?**

2009ஆம் ஆண்டு ஊவா மாகாணத்தில் நான் தேர்தல் பணியில் ஈடுப்பட்ட போது அடிப்படை தேவைகளில் ஒன்றான மின்சாரம் பதுளை மக்களுக்கு முழுமையாக பெறப்படவில்லை என்பதை தேர்தல் பிரசாரத்தின் போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மேலும் முதியோர் ஊக்குவிப்பு தொகையில் மலையக மக்கள் சட்ட ரீதியாக உள்வாங்கப்படவில்லை என்பதையும் அறிய முடிந்தது. மாகாண ரீதியில் விளையாட்டுத்துறையில் தோட்டப்புற இளைஞர்கள் ஊவா மாகாணத்தில் வாய்ப்புகள் கிடைக்காமல் பின்னடைவை சந்தித்தனர். இது போன்று பல குறைபாடுகள் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்டன. அவை அனைத்தையும் நிவர்த்தி செய்யும் முகமாக மின்சார அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு போன்ற அமைச்சுகள் எனது விருப்பத்திற்கு ஏற்ப எனக்கு வழங்கப் பட்டது. அமைச்சு பதவிகள் 5 வருட காலத்தை கொண்ட போதிலும் 3 வருடங்களில் தோட்டப்புறங்களில் 64 சதவீதமாக இருந்த மின்சாரத்தை 100 சதவீதமாக மாற்றப்பட்டது. தற்போது ஊவா மாகாணத்தில் மின்சாரம் இல்லாத தோட்டப்புறங்கள் இல்லை என்பது வரலாற்று வெற்றி. அதே போல் சமூக சேவை அமைச்சின் ஊடாக பெரும்பான்மை சமூகத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்ட முதியோர் கொடுப்பனவு சுற்றறிக்கையை மாற்றி முதல் முறையாக 14000 முதியோருக்கு ஒரே இரவில் முதியோர் கொடுப்பனவுகளை மாதந்தோறும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன். தோட்டப்புற வீதிகள் அனைத்தையும் மாகாண சபை நிதியூடாக புனரமைக்க வர்த்தமானி வெளியிடப்பட்டது. தோட்ட புறங்களில் முதல் முறையாக கூட்டுறவு சூப்பர் மார்க்கெட் ஆரம்பிக்கப்பட்டது. ஒரே இரவில் உதவியாசிரியர்களாக இருந்த 800 பேரை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கிய ஒரே மாவட்டம் பதுளை மாவட்டம் ஆகும். இது போல் என்னுடைய காலத்தில் கல்விக்காக செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை.

**IMF தங்களுடைய நிர்வாகத்திறனை பற்றி பாராட்டி கருத்து தெரிவித்துள்ளது. இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

IMF ஐப் பொறுத்தமட்டில் நாடு முழுவதும் சென்று இலங்கை தங்களுக்கு செலுத்தவுள்ள கடன் தொகையை எவ்வாறு மீள்செலுத்த போகிறார்கள் என்பதை ஆய்வு செய்வதோடு, மக்களின் இயல்பு வாழ்க்கையை பார்வையிட்டு வருகின்றது. கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் நான் ஆளுநராக பொறுப்பேற்று செய்த வேலைத்திட்டங்கள், எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து முழுமையாக ஆய்வு செய்தனர். கிழக்கு மாகாணம் சீராக செயற்படுவதாக பாராட்டினர். கிழக்கு மாகாணம் முழுமையாக வளர்ச்சி அடைந்தால் இலங்கையில் உள்ள முழுக் கடனையும் கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒரு மாதத்திற்குள் கட்ட முடியும் என்பதை அவர்களிடம் தெளிவுபடுத்தினேன். அதற்கான வேலைத்திட்டங்களின் முன்மொழிவுகளை சமர்ப்பித்தேன்.





# வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரிப்பும் தென் ஆசியாவில் ஏற்பட்ட வானிலை மாற்றங்களும்



இலங்கையில் தற்பொழுது நிலவிவரும் வானிலை நிலைமைகள் வழமைக்கு மாறான ஒன்றாகவே தோன்றுகின்றது. பிரதேச ரீதியான ஒழுங்கற்ற கடும் மழைவீழ்ச்சிப் போக்குகள் வெள்ளப்பெருக்குகள், வரட்சி நிலைமைகள் என வானிலைத் தோற்றப்பாடு மாறுபட்டுவருவதைக் காணலாம். இதனால் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ளதுடன் பயிரழிவுகளும், வாழ்க்கைத் தொழிலில் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளது. அயனப் பகுதியில் உருவாகும் தாழமுக்கங்களின் காரணமாகப் புயல்கள் தோன்றும் போது அவை தென்னாசியப் பகுதிகளில் பாரிய சேதங்களையும், உயிரிழப்புக்களையும் பயிரழிவுகளையும் உருவாக்குகின்றன. இலங்கையில் 1881/1980 காலத்தில் ஏறக்குறைய 12 சூறாவளிகள் ஏற்பட்டுள்ளன. இக்காலத்தில் ஏற்பட்டுள்ள புயல்களில் 80 வீதம் நவம்பர், டிசம்பர் மாதங்களிலேயே ஏற்பட்டன. இப்புயல்களுள் 1907, 1922, 1964, 1978 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட புயல்கள் மிக மோசமான பாதிப்பைக் கொண்டிருந்தன. 1978 நவம்பர் 23 ஆம் திகதி ஏற்பட்ட புயலினால் இலங்கையில் 915 பேர் உயிரிழந்தனர். செறிவான கடும் மழைவீழ்ச்சியுடன் கூடிய வெள்ளப்பெருக்கு பல பகுதிகளையும் மோசமாகப் பாதித்தது.

சூறாவளிகள் மூலம் நவம்பரிலும் வடகிழக்கு மென்சூன் பருவமாகிய டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையுள்ள காலத்திலும் வடக்கு, கிழக்குப் பிரதேசம் மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளாது விட்டால் அப்பிரதேசத்தில் நீர்ப் பற்றாக் குறை ஏற்படும் என ஜோர்ஜ் தம்பையாபிள்ளை (1959) என்பவர் முன்னர் குறிப்பிட்டிருந்தார். தென்மேல் மொன்சூனுடன் ஒப்பிடும் போது வடகீழ் மொன்சூன் காற்றுப் பருவமானது மழைவீழ்ச்சி செறிவு மற்றும் அதன் பொறிமுறை இயக்கத்தைப் பொறுத்த வரை குறைந்தளவான முக்கியத்துவத்தையே இதுவரை காலமும் கொண்டிருந்தது. ஆனால் இன்று பல்வேறு செயன்முறைகளின் காரணமாக குறிப்பாக பல்வேறு தோற்றப்பாடுகளின் இடைத் தாக்கம் காரணமாக இக்குறுகிய பருவகாலம் பல்வேறு சிக்கலான வானிலைத் தோற்றப்பாடுகளைக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

புவியின் மத்தியகோட்டுப் பகுதியில் வடகீழ் காற்றும், தென்கீழ் காற்றும் ஒன்றாகக் கலக்கும் பகுதியாகக் காணப்படுவது ‘இடை அயன ஒருங்கல் வலயம்’ எனப்படும். இவ்வலயம் தற்போது இலங்கைக்கு மேலாக நகர்ந்து தீவின் தென் பகுதியில் நிலை கொண்டிருக்கின்றது. இலங்கைக்கு மேலாக ஒக்டோபர், நவம்பர் மாதத்தில் உருவாகும் இவ்வலயம் இரண்டாவது இடை மொன்சூன் பருவமாகக் கருதப்படுகின்றது. இவ் வலயம் தெற்கு நோக்கி நகரும் போது வங்காள விரிகுடாவிற்கு மேலாகக் காணப்படும் அதிக வெப்பத்தின் காரணமாக தாழமுக்கங்கள் உருவாகுவது வழக்கம். கடல் வெப்பநிலை அடிக்கடி உயர்வதனால் தாழமுக்கங்கள் தோற்றம் பெறுகின்றன.

இந்த ஒருங்கல் வலயத்தின் செல்வாக்கினால் நவம்பர் மாதத்தில் இலங்கையின் மலைநாட்டுப் பகுதிகளில் வழக்கமாக மழைவீழ்ச்சி அதிகமாக இடம்பெறுவதுடன் மாலை வேளைகளில் மிகக் குளிரான நிலைமையையும் உருவாக்குகின்றது. வடக்கு, வடமேற்கு, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட மழைவீழ்ச்சி இடம் பெறும். வடக்கிலும், கிழக்கிலும் குறிப்பாகக் கரையோரப் பகுதிகளில் இக்காலத்தில் மழைவீழ்ச்சி அதிகமாக இருப்பதனைக் காண முடிகின்றது. வளிமண்டலத்தின் கீழ்ப்படையில் குழப்பங்கள் ஏற்படுவதுடன் மழையுடன் கூடிய இடி, மின்னல் தாக்கங்களும் காணப்படும்.





இந்தியாவில் எல்நினோவின் ஆதிக்கம் அண்மைக் காலங்களில் 2002/03, 2004/05, 2006/07, 2009/10, 2014/16, 2018/19 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்றிருந்தது. மொன்சூன் காற்றினைப் பலவீனமடையச் செய்து வரண்ட வானிலையை இந்தியாவிற்கு வழங்கும் எல்நினோவின் தாக்கம் 2023 இல் ஆரம்பித்து விட்டதுடன் அது 2024 மார்ச் வரை நீடிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இருப்பினும் 2023 இல் எல்நினோவின் எதிர்க்கணியத் தாக்கம் பெருமளவில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தவில்லை. மழைவீழ்ச்சியில் அதன் பற்றாக்குறை 36 வீதமாகவே காணப்பட்டது. இதன் தாக்கம் குறைவாகக் காணப்பட்டதற்கும் கடந்த 2023 செப்டம்பரில் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சி கிடைத்தமைக்கும் இந்து சமுத்திர ‘இரு முனைவு’ (Indian Ocean Dipole) என்பதன் தாக்கமே காரணமாக இருந்தது. இதே போன்ற ஒரு நிலைமை 1997 இலும் அவதானிக்கப்பட்டது. எல்நினோ வருடமாக 1997 இருந்தாலும் கூட மொன்சூன் வழமையைப் போன்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய கோட்டுப் பகுதியில் பசுபிக் கடல் மேற்பரப்பு வெப்பநிலை படிப்படியாக உயர்வடைந்துள்ளது. 2023 ஜுலை செப்டெம்பர் காலத்தில் குறிப்பாக, தென்மேல் மொன்சூன் காலத்தில் எல்நினோ விருத்தியடைவதற்கான நிகழ்தகவின் அதிகரிப்பு 50 வீதமாகக் காணப்பட்டது என இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் கூறியது.

சமுத்திர மற்றும் வளிமண்டலச் சுற்றோட்டங்களில் இடம்பெற்று வரும் பாரிய நகர்வுகள் தென்னாசியாவில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தலாம். எல்நினோ தென் ஊசலின் மூன்று வருட குளிர் நிலைமையைக் கொண்ட நீண்ட கால லாநினாவின் (La Nina) வின் தாக்கத்தின் பின்னர் பசுபிக்கில் தற்பொழுது வெப்பநிலைமைகள் உருவாகியுள்ளன. எல்நினோவின் வெப்பக் கட்டம் திரும்ப ஏற்பட்டுள்ளது என்பதனை இது எடுத்துக் காட்டுகின்றது.

பசுபிக் சமுத்திரத்தின் மத்திய கோட்டுப் பகுதியில் சமுத்திர வெப்பநிலைகள் நீண்ட கால சராசரிக்கு மேல் 0.50 C அதிகமாக இருக்கும் போதும் மழை, காற்றுகள் குறைவான வலிமை கொண்டதாகக் காணப்படும் போதும் எல்நினோ நிலைமைகள் இடம்பெறுகின்றன.

லாநினா நிகழும் காலத்தில் நீர் வெப்பநிலையானது வழமையான நிலைமைகளுக்கு மாறாக மிகக் குளிராக இருக்கும். இக்காலத்தில் கடலின் அடித்தளத்திலிருந்து குளிர் நீர் சுழற்சிக்குட்பட்டு பொங்கியெழுந்து மேற்பகுதிக்குக் கொண்டு வரப்படுகின்றது. இந்தியாவின் மாரிப் பருவத்தை உருவாக்கும் காற்றுக்களின் சுழற்சி வேகத்தினையும், திசையையும் மாற்றுவதற்கான ஆற்றலை லாநினா கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எல்நினோ மற்றும் லாநினோ என்பது தென் ஊசலியின் இரு பக்கங்களிலும் உள்ள கூறுகளாகும். வருடாந்தரீதியில் மொன்சூனில் ஏற்படும் மாறுதன்மையானது ஏறக்குறைய 30 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்படுவதுடன் பல காரணிகளிலும் அது தங்கியிருப்பதைக் காணலாம்.


எல்நினோ தென் ஊசலியின் தாக்கங்கள் இந்து சமுத்திர இருமுனைவு, அத்திலாந்திக் சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை மாறுபாடு, வட அத்திலாந்திக்; ஊசலி, பசுபிக்கின் தசாப்தகால ஊசலி போன்றவற்றிலும் மற்றும் குறுங்காலத்தில் ஏற்படும் தூசு முகில்கள் மற்றும் நீர்ப்பாசனப் பாங்குகள் போன்ற உள்ளூர் காரணிகளிலும் தங்கியுள்ளதைக் காணலாம்.

எல்நினோ வானிலைப் பாங்குகளில் படிப்படியான முன்னேற்றம் காரணமாக மொன்சூன் மழை வீழ்ச்சியில் 2023 இல் இருந்து பற்றாக்குறை ஏற்படுமென நிபுணர்கள் எதிர்வு கூறி இருந்தார்கள்.

இதனால் ஏற்படும் காலநிலை மாற்றத்தின் காரணமாக சூழல் தொகுதியில் அழிவு தரும் பாதிப்புகள் ஏற்படலாம். இந்தியாவில் கடந்த 132 வருடங்களுக்கு மேலாகக் காணப்படும் மழைவீழ்ச்சிப் போக்குகளின் அடிப்படையில் பார்க்கும் பொழுது இந்தியாவின் மிக மோசமான வரட்சிகள் எப்பொழுதும் எல்நினோ நிகழ்வுகளுடன் இணைந்திருந்தமை தெளிவாகத் தெரிகின்றது.

1951/2022 காலத்தில் 15 நிரந்தரமானதும் வலிமையானதுமான எல்நினோ நிகழ்வுகள் ஏற்பட்டன என்பதை வரலாற்று ரீதியான பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த வருடங்களில் இந்திய மொன்சூன் 8 வருடங்களில் பற்றாக்குறையாகவும், 3 வருடங்கள் மொன்சூன் மழைவீழ்ச்சி வழமைக்கு மாறாகக் குறைவாகவும், இருந்தது 2015 இல் நிகழ்ந்த எல்நினோ நிகழ்வில்

(மிகுதி அடுத்த வாரம்)



**கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்**
*முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்*
**கொழும்புப் பல்கலைக்கழகம்**

# அரிக்கன் லாம்பு



அமாவாசையை கடந்த இரண்டாம் நாள் கும்மிருட்டு. ஊரடங்கிய நிசப்தத்தில் ஒப்பாரிச் சத்தம் மூன்று தெருவை கடந்து வீடுவரை கேட்டது. சாமமாகியும் ஒருகண் தூக்கமின்றி புரண்டு கொண்டிருந்தேன். பக்கத்தில் தம்பி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். சிறுவயதிலிருந்தே மரணவீடுகளில் பாடும் ஒப்பாரியை கேட்டால் பேப்பயம் என்னை ஆட்கொண்டு விடும். அம்மாவை கெட்டியாக் கட்டிப் பிடித்துக் கொண்டு தான் தூங்குவேன். ஆனால் அன்றைக்கு அம்மாவும் வீட்டில் இல்லை. அப்பாவும் அம்மாவும் மரண வீட்டில் இழவு காக்க போய்விட்டார்கள். செத்துப் போனவர் அப்பாவின் தமக்கை மகளை கட்டியதால் எனக்கு அண்ணன் முறை. முப்பத்தாறு வயது. பாவம் இதற்கு மேல் வாழக் கொடுத்து வைக்கவில்லை போல. யாரோ செய்வினை வச்சுக் கொன்றுவிட்டதாக ஊருக்குள் அரசல் புரசலாக பேசிக்கொண்டார்கள். படுக்கையில் அந்தக் கதைகள் நினைவிற்கு வரும் போதெல்லாம் நெஞ்சு ஓங்கியோங்கி அடித்துக் கொண்டது. மூச்செடுக்கவே கடினமாக இருந்தது.

"ஐயோ... ஐயோ... என்மகனே..." என தொண்டை நரம்புகள் புடைக்க பாடும் ஒப்பாரிக் கலைஞர்களின் இழுவை அசரீரியாக என் காதுகளில் வந்தறைந்த சாமத்தில் அங்கே இரண்டு அதிவிசேசங்கள் காலியாகியிருக்கலாம்.

ஏன் இப்படி பேய்க்குப் பயம் காட்டுவது போல கூச்சலிடுகிறார்கள்? கொஞ்சம் அடக்கமாக பாடினால்தான் என்ன? இதையெல்லாம் சொல்ல இந்த ஊரிலே பெரிய மனுசர் யாரும் இல்லையா? என்று எனக்குள்ளே நியாயமற்ற கேள்விகள் எழுவது இப்போது ஒன்றும் புதிதல்ல.

ஊரில் உள்ள அத்தனை தெருநாய்களும் சேர்ந்து குரைத்து கூப்பாடு போடுவதும் ஊளையிடுவதுமாக பீதியை கிளப்பத் தொடங்கின. கைபேசியை உயிர்ப்பித்தேன். கடிகாரம் பன்னிரண்டு மணியைக் காட்டியது. ராத்திரி வேளைகளில் மீன்சந்தையை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பத்துப் பதினைந்து தெருநாய்கள் தான் எப்போதும் போல அன்றைக்கும் ஊளையிட்டு தொடக்கி வைத்தன. அவற்றுக்கு பதில் சொல்வது போலவே ஊரின் ஒவ்வொரு சந்தியிலிருந்தும் நாய்களின் ஊளைச் சத்தம் எழும்பியது. ஒப்பாரிச் சத்தமும் ஊளைச் சத்தமும் சேர்ந்து இரவின் அமைதியை சில்லுசில்லாக நொறுக்கிப் போட்டது. ஒரு அஞ்சலோட்டம் போல ஊளைச் சத்தம் சந்திக்குச் சந்தி பரிமாற்றப்பட்டு கடைசியாக சேமக்காலை அமைந்திருக்கும் திசையிலிருந்து எழும்பிய நாய்களின் பேரோலத்தோடு அடங்கிப்போக சாமம் ஒருமணியையும் தாண்டியது.

இது தினமும் நடந்தால் சாதரணமாக கடந்து விடலாம். ஊரில் எவராவது இறந்தால் மட்டும் தானே இப்படி நடக்கிறது. அதிலும் அவலச் சாவுகளென்றால் சொல்லவே வேண்டாம். ஊர்ப்பெரியவர்கள் சொல்வது போலவே ஆவிகளின் நடமாட்டம் நாய்களின் கண்களுக்கு புலப்படும் என்பது உண்மைதான் போல! என நினைத்து நானே என் மனதில் கனன்றெழும் பயத்துக்கு நெய்வார்ப்பதும், இல்லையில்லை பேய் பிசாசு ஆவியெல்லாம் வெறும் கட்டுக்கதை, மனப்பிரமையென்று கூறி அதை அணைப்பதுமான போராட்டத்தின் பின் பெரும் முயற்சியெடுத்து தூக்கத்தை வரவளைத்தாலும், பாம்புகளும் பேய்களுமாடும் பயங்கரமான கனவுகளெல்லாம் வந்து தூக்கத்தில் கல்லெறிந்தன. அவ்வப்போது சவப்பெட்டியில் கிடத்தப்பட்டிருந்த அன்ரனி அண்ணனின் ஊதிக் கறுத்த உருவமும் கண் முன்னே வந்து கிலியூட்டியது.

நான் படுக்கையிலிருந்து எழுந்திருக்க ஒன்பது மணியாகியிருந்தது. குளித்து விட்டு செத்தவீட்டுப் பக்கம் போனேன். உள்ளே நுழையும் போதே நெஞ்சு கிடந்து அடிக்கத் தொடங்கியது. இறால் கொம்பனியில் இரவு பகலாக வேலைசெய்து உழைத்த காசை இறைத்து, பார்த்துப் பார்த்து கட்டிய புது வீடு. நிலை கதவுகளெல்லாம் வன்னித் தேக்கில் செய்யப்பட்டிருந்தன. குடிபுகுந்து ஐந்து மாதங்கள் கூட ஆகியிருக்கவில்லை. அகன்ற விறாந்தையில் விலையுயர்ந்த சவப்பெட்டியில் அன்ரனி அண்ணனின் உடல் கிடத்தப்பட்டிருந்தது. சூழவும் வயதான பெண்கள் நின்று அழுது மூக்குச் சிந்தினார்கள்.

சவப்பெட்டியின் வலது பக்கத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் நிசா மச்சி கழுத்தை தொங்கப் போட்ட படி இருந்தாள். கண்ணீரால் கழுவிய முகம் காய்ந்து ஒடுங்கி சோபை இழந்து கிடந்தது. மைக்கல் அஞ்சலோவின் 'பியாட்டோ' சிற்பத்தின் மனதை உருக்கும் வியாகுலம் அவளின் முகத்தில் அப்பிக் கிடந்தது. சிக்காடிய தலையோடு வாய்க்குள் எதையோ முணுமுணுத்தபடி அவள் ' விசரி மாதிரி' உட்கார்ந்திருப்பதை சகிக்க ஆற்றாமையால் அவள் பக்கம் திரும்புவதை தவிர்த்துக் கொண்டு நின்றேன். மூன்றே வயதான ஆதன் தந்தையின் பிணத்தின் முன் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான்.

பிணத்தை கடவுளுக்கும் சற்றே குறைவாக புகழ்ந்து பேசுவது மரணச் சடங்குகளில் சகஜமான ஒன்று தானே! அங்குமிங்குமாக கூடிக் கூடியிருந்து அன்ரனி அண்ணனை பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். அதில் இளவட்டுகள் இருந்த மாமரத்து பக்கமாக நானும் ஒதுங்கினேன். வட்டமாக போடப்பட்ட கதிரைகளை சற்று அரக்கி என்னையும் உள்வாங்கிக் கொண்டனர். கதைப்பூதங்கள் என்னை விழுங்கக் காத்திருந்தன.

"நெருங்கின சொந்தக்காரங்கதான் ஆரோ செய்வினை செஞ்சதாம்" என்றான் வினோ.

"அதெல்லாம் நம்மட சனத்தட கட்டுக்கதை" என்று வலுவாக ஒரு குரல் மறுத்தது. வேறு யாராக இருக்கும் அனோஜன் தான். வினோ என்ன சொன்னாலும் அதற்கு எதிர்க்கருத்து வைத்திருப்பான்.

"ஒரு பாதரட்ட போய் செபிச்ச இடத்தில அப்பிடி தான் சொன்னவராம். ஏதோ வித்தியாசமா இருக்கு எண்டு" தட்டிலிருந்த வெற்றிலையில் சுண்ணாம்பை தடவி கடவாய்க்குள் திணித்துக் கொண்டான் வினோ.

"என்ன வித்தியாசம் கண்டவராம்? செய்வினை சூனியம் இருக்குது எண்டு கண்டு புடிச்ச பாதர், அதை எடுத்தல்லோ விட்டிருக்க வேணும்?அப்பிடியில்லையா செய்வினை வச்சது ஆரெண்டாவது சொல்லியிருக்க வேணும்?" அனோஜன் சொன்ன கருத்தில் ஒரு நியாயம் இருப்பதாகத்தான் எனக்கும் தோன்றியது.

"சொன்னா குடும்பங்களுக்குள்ள பெரிய சண்டை வந்து ஒரு கொலையே விழுமாம்!"

"ம்... இப்ப போனது உசிர் இல்லையா? அன்ரனி 'தின் குடி சாவு' எண்டு வாழ்ந்தவன். குடிச்சு குடிச்சு அவனுக்கு இரண்டு கிட்னியும் பழுதா போச்சு. இரண்டு வருசமாவே மருந்தும் கையுமா தான் அலைஞ்சவன். கிட்னி மாத்துறதுக்கு எங்கெங்கோ இருந்தெல்லாம் ஆக்கள கூட்டிக் கொண்டு வந்தவங்கள். ஒண்டும் பொருந்தி வரயில்ல. அவனுக்கு எழுதப்பட்டது இவ்வளவு தான்!

"ஓம்டா...'டயலஸ்' பண்ணுறதுக்கு என்ர ஆட்டோவில தான் ஆஸ்பத்திரிக்கு வாறவன். மாசத்தில ஒருக்கா இரத்தம் சுத்திகரிக்க போகும் போது ஆளே வீங்கி வெடிக்குறவன் போல இருப்பான். தனக்கு சாவு நெருங்கி வந்திட்டெண்டு அன்ரனிக்கு நல்லா தெரியும். அவன் ஒவ்வொரு நாளையும் எண்ணியெண்ணி தான் வாழ்ந்தவன் என்று சொல்லி அனோஜன் சொன்னதை ஆமோதித்தான் நிரூபன்.

"அது சரி 'டயலொக்' செய்யிறதெண்டால் என்னடா? என்று கேட்டான் ஒருத்தன். எல்லோரும் வெடித்துச் சிரித்தார்கள். சுற்றியிருந்தவர்கள் சிலர் எங்களையே பார்த்து வாய்க்குள் முணுமுணுத்தார்கள். பலர் ஏன்தான் வீண் சோலி என்று கண்டும் காணாமல் இருந்தார்கள். அழாத கல்யாண வீடும் இல்லை சிரிக்காத செத்தவீடும் இல்லை என்பார்களே! அது அங்கும் பொய்த்துப் போகவில்லை.

சிரிப்பு அடங்கிய கணப்பொழுதில் "இல்லையாமே... நிசா அக்காவட சின்ன மாமா தான் செய்வினை வச்சது எண்டு தான் எங்கட றோட்டு பக்கம் கதையடிபடுகுது" என்று ஒரு குண்டை தூக்கி போட்டான் இன்னொருத்தன். எனக்கு பக்கென்று ஆனது. அவன் சொல்வது என்னுடைய தேவராசா சித்தப்பாவை.

"அந்த மனிசன் இப்பிடி கரிவேலைகள் செய்யுற ஆளில்லை. கோயில் குளமெண்டு செபமாலையும் கையுமா திரியுற குடும்பம். அதுகள் இப்பிடி செய்யாதுகள்" என்று சொன்னான் நிரூபன். கதைகள் மந்திகள் போல கொப்பு விட்டு கொப்புத் தாவிக் கொண்டே சென்றன.

ஒரு நடுத்தர வயதான பெண் தேநீர் கொண்டு வந்து பரிமாறினாள். சூடான ஏலக்காய் போட்ட தேத்தண்ணியை எல்லோரும் சுவைத்துக் கொண்டிருந்தோம். அலைபேசியை நோண்டிக் கொண்டு தேநீர் வரும்வரை காத்திருந்தவன் போல கோப்பையிலிருந்து இரண்டு மிடறு உறிஞ்சிவிட்டு அடக்கமான தொனியில் குணா சொன்னான் " இது கிட்னி பெயிலியரும் இல்லை, செய்வினை சூனியமும் இல்லை. அதுக்கெல்லாம் மேல.. யாரோ உடன்பலி எடுத்திருக்குதாம்!"

எல்லோருடைய கண்களும் அவனை உற்றுப் பார்த்தன. யாரும் எதுவும் பேசவில்லை.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மரண வீடுகளிற்கேயுரிய வாசனை ஊரெல்லாம் பரவிக்கொண்டிருந்தது. முகங்களில் சோகம் பூசிக்கொண்ட மனிதர்கள் அங்கே மொய்க்கத் தொடங்கினார்கள். எல்லோருடைய பார்வையும் அங்கிருந்த 'பூ'வாச்சி மீது நிலை குத்தியது. அவள் தன் இளவயதிலேயே கணவனை இழந்த விதவைப் பெண். இப்போது வயது எழுவதை தாண்டியிருக்கும். அவள் நிசா மச்சாளின் திருமணக் கூறையை எடுத்து அன்ரனி அண்ணனின் உடலின் மீது போர்த்தினாள். பின் இம்மியும் இரக்கமற்றவள் போல முகத்தை 'உர்' என வைத்துக் கொண்டு நிசா மச்சியின் அருகில் சென்று அவள் கழுத்தில் அணிந்திருந்த தாலியை கழற்ற முயன்ற போது அது அவளிடமிருந்து பிரிவதற்கு விருப்பமற்றது போல அவளின் தலைமுடியில் சிக்கிக் கொள்ளவும், விடாது நிதானமாக பற்றியெடுத்து வெள்ளை கையுறைகள் அணிவித்து ஒன்றோடொன்று சேர்த்து வைக்கப்பட்டிருந்த அன்ரனியின் கரங்களின் மீது அதை வைத்தாள். ஏதோ அவனே அதை அவளிடமிருந்து அறுத்துக் கொண்டு போவதைப் போல... கூடியிருந்த பெண்கள் எல்லாரும் ஓவென்று ஓலமிட்டார்கள். மாதாகோயிலில் துக்கமணி ஒலித்தது. எல்லோரும் செபம் ஒன்றை சொல்லிக் கொண்டிருக்கையில், சூழ்ந்து நின்ற பெண்களை விலத்திக் கொண்டு முன்வந்த நடுத்தர வயதான ஆண்கள் சிலர் இமைக்கும் நொடியில் சவப்பெட்டியை மூடி தடையிட்டனர். அழுகைக் சத்தம் கூரையை பெயர்ப்பது போல எழுந்தது. நிசா மச்சி மயக்கம் போட்டு விழுந்தாள். சவப்பெட்டி தலைகளுக்கு மேலாக நகர்ந்து கொண்டே சென்றது.

மரண வீடுகளும் பிரேதம் எடுத்த பின்னர் திருமண வீடுகளைப் போலாகி விடுகின்றன. சிறுவர்களின் விளையாட்டும், கூடியிருந்து அரட்டையடிப்பவர்களின் சத்தமும், மெதுவாக துளிர்விடும் சிரிப்பொலிகளும், சமையலுக்கான ஏற்பாடுகளும் பருப்புக் கறியின் தாளிப்பு வாசமுமாக அந்த மாலை நேரம் நிறம் மாறியது. அப்போதுதான் எல்லோருக்கும் கிலியூட்டும் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

அன்ரனி அண்ணன் கடும் வருத்தமாக இருந்த போது மருந்து மாத்திரைகள் எதுவும் கைகொடுக்காது போக அவரை செபிப்பதற்காக ஒரு குருவானவரிடம் கொண்டு போனார்களே? அவர்தான்... இது செய்வினை சூனியமாக இருக்கலாம் என்று கூறிய இராயப்பு பாதர் ஏதோ சொல்லி அனுப்பியதாக அன்ரனியின் தம்பியும் இன்னும் சிலரும் வீட்டிற்கு வந்து பெரியவர்களோடு ஏதோ கிசுகிசுத்தார்கள். பிறகு எல்லோருமாக அவனுடைய படுக்கையறைக்குள் போனார்கள். அதில் இருவர் அறைக்கு மேலே பொருத்தப்பட்டிருந்த 'லெவல் சீற்'றை பிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். சற்று நேரத்தில் உள்ளே இறந்தபடி கிடந்த பெரிய சேவல் ஒன்றை தூக்கி தொப்பென கீழே போட்டார்கள்.

எல்லோருக்குமே ஆச்சரியமும் பயமும் தொற்றிக் கொண்டது. பூட்டிய வீட்டின் உள்கூரைக்குள் சேவலொன்று வருவதற்கு வாய்ப்பேயில்லை. யாரோ அன்ரனி அண்ணனை உடன் பலி எடுக்க இதை செய்திருக்கிறார்களாம். சுடுகாட்டின் நடுவே நள்ளிரவில் மண்டையோடுகளை வைத்துபெரிய பூஜை ஒன்றை நடத்தி சேவலை மந்திரித்து பில்லி வைத்து உடன் பலியெடுப்பதற்காக ஏவி விட்டிருக்கிறார்கள் என்றும். அந்தச் சேவல் தானாக பறந்து வந்து அவனுக்கு அருகே மறைந்திருந்து அன்ரனியை உடன்பலியெடுத்த பிறகே அதுவும் இறந்திருக்கிறதாம் என்றும் பலவாறும் பேசிக் கொண்டார்கள்.

அந்தக் கதைகளையெல்லாம் அவள் காதில் வாங்குவதேயில்லை. செய்வினை சூனியங்களில் அவளுக்கு அறவே நம்பிக்கை இல்லை. ஊர் பேசுவது போலவே யாராவது தன் கணவனுக்கு சூனியம் வைத்திருந்தால் கூட அதை செய்தது யாரென்று தெரிந்து கொள்ளும் ஆர்வமோ, பதிலுக்கு அவர்களை பழிக்குப் பழி முடிக்கும் குரோதமோ எதுவுமற்றவளாய் சித்தர் மனநிலையில் உலாவினாள். அவளை பொறுத்தவரை போன உயிர் போனது தான். என்ன செய்தும் தன் கணவனை உயிரோடு மீட்டெடுக்க முடியாதே என்ற கையறு நிலையில் அவள் மனம் ஊசலாடியது.

விறாந்தையில் அணையாது எரிந்து கொண்டிருந்த அரிக்கன் இலாம்பின் மங்கல் வெளிச்சம் அந்த வீட்டினை ஆட்கொண்டிருந்த அடர்த்தியான இருளை விலக்க போதாமலிருந்தது. ஆனாலும் அது அவனின் உடன் இருத்தலுக்கு சாட்சியென நிசா நம்பத் தொடங்கினாள். இராத்திரிப் பொழுதுகளில் அரிக்கன் இலாம்பின் சிம்மினியை மினுக்கி, அதன் திரியை சற்று தூண்டி ஒளியேற்றி விட்டு அதையே வெறித்துப் பார்தபடி அதன் முன்னால் அமர்ந்திருப்பதில் அவளுக்கு என்ன தேறுதல் கிடைக்கின்றதோ யாருக்கும் தெரியவில்லை. சுவாலையின் அசைவுகள் அவனுடனான தனிமைப் பொழுதுகளின் சில் மிஷங்களை நினைவுபடுத்தி விட உடல்கூசி சிலிர்ப்பாள். பின் தன்நிலை அடைந்த கணத்தில் தனக்குள்ளே குமுறி வெடிப்பாள்.

வீட்டில் எங்கு பார்த்தாலும் அவனின் நினைவுகளே படர்ந்து கிடந்தன. இருவரும் ஒன்றாக இருக்கும் திருமணப் புகைப்படம் உட்பட வீட்டில் மாட்டியிருந்த அன்ரனியின் அத்தனை புகைப் படங்களையும் கழற்றி அறைக்குள் போடப்பட்டிருந்த கட்டிலுக்கடியில் மறைத்து வைத்து விட்டாள். கட்டிலை எதற்குள் மறைப்பது? அதில் தானே அவனுடைய அத்தனை குறும்புத் தனங்களையும் அவளோடு அவன் கொட்டித் தீர்த்திருப்பான். அவனின் அணைப்பு இல்லாத கட்டிலில் உறங்குவது அக்கினிப் படுக்கை போல அவளை பொசுக்கியது. வெறும் தரையில் உறங்கி எழுவதே மனதிற்கு ஆறுதல் கொடுத்தது. எங்கு உறங்கினாலும் கண்களை மூடினால் அவனின் முகமே வந்து முகாந்தரமிட்டது.

அன்றொருநாள் பின்னிரவில் ஆழ்ந்த தூக்கத்தில் அவனின் தீண்டல்களை உணர்ந்திருக்கிறாள். அதே அழுத்தம்... அதே அணைப்பு.. அரண்டெழுந்த போது தன் உணர்வெழுச்சியை தூண்டிய அவனின் கைகளை மார்பின் மீது காணவேயில்லை. படுக்கையிலிருந்து எழுந்து மின்விளக்கை ஒளிர்வித்துப் பார்த்த போது அருகில் ஆதன் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தான். சற்றுத் தள்ளி அவளின் வயதான அம்மாவும் அப்பாவும் சத்தமாக மூச்செறிந்து கொண்டிருந்தார்கள். கதவு இறுகப் பூட்டி தாள்பாள் இடப்பட்டிருந்தது. தன் உணர்வுகளுக்கு அணைகட்ட முயன்று தோற்றுப் போய், அரவமின்றி நடந்து குளியலறைக்குள் சென்று கதவடைத்து கொண்டவள் சற்றுநேரத்தில் வியர்த்தடங்கி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு வெளியே வந்தாள்.


தினமும் பொழுது புலர்ந்தவுடன் எழுந்து குளித்து விட்டு அன்ரனிக்கு பிடித்த உணவுகளையும் பலகாரங்களையும் விதவிதமாக சமைத்து எடுத்து வந்து அந்த அரிக்கன் இலாம்பின் முன் படையல் வைத்து விட்டு எப்போதும் அவனோடு பேசுவதாக வாய்க்குள் முணுமுணுத்தபடியிருப்பாள்.

அவை தன்னுடைய அப்பா உண்பதற்காக வைக்கப்படுவதாக அறிந்த ஆதன், தினமும் படையலின் முன் உட்கார்ந்திருந்து அப்பாவை எதிர்பார்த்து ஏமாந்து போனது தான் மிச்சம். ஈயெறும்புகள் மொய்ப்பதை தவிர அந்த உணவுகள் ஒரு போதும் குறைவடைந்ததே இல்லை. அப்பா இனி வரவே போவதில்லை என்பது அவனுக்கு புரியத் தொடங்கியதும் வீட்டுக்கு வருகின்ற தனது அப்பா வயதையொத்த ஆண்களையும், அன்ரனியின் நண்பர்களையும் " இண்டைக்கு இரவு எங்கட வீட்ட படுங்களேன்." என்று கேட்கத் தொடங்கினான். அது நிசாவிற்கு சங்கடமாக இருந்தது. ஒரு தடவை வீட்டுக்கு வந்திருந்த பாதர் பெரியப்பாவிடமே கேட்டு விட்டான். அவருக்கும் முகம் வெளிறிப் போனது. பலரும் அப்படி கேட்கக் கூடதென்று அவனுக்கு இடித்துரைத்தாலும் தான் கேட்பதையெல்லாம் வாங்கித் தருவதற்கும், தன்னை முதுகில் ஏற்றிக் கொண்டு யானை அம்பாரி போகவும், வீதியில் சைக்கிள் ஓட்டப் பழக்கவும் அப்பாவின் வெற்றிடத்தை நிரப்ப இன்னொருவரை எதிர்பார்த்த அவனின் குழந்தைமையில் பச்சாத்தாபம் கசிந்தது.

முப்பத்தொன்று முடிந்தது. வாடகை பொருட்கள் வீட்டைவிட்டுப் போனதோடு மனிதர்களும் போனார்கள். நிசாவின் வயதான பெற்றோரோடு வீட்டில் வெறுமையும்' அட்டணக்கால்' போட்டு உட்கார்ந்து கொண்டது. அன்ரனியின் தாய் தந்தை கூட இருந்து விட்டு எப்போதாவது கடமைக்கு வருவது போல வந்து அழுது மூக்குச் சீறிவிட்டு போனார்கள். ஒப்புக்கு அழுத கூட்டம் போல சொந்த பந்தங்கள் எல்லாம் அவரவர் அலுவல்களில் மூழ்கிப் போனார்கள். அன்ரனியின் சாவு ஊருக்கு பேசிப் புளித்துப்போன பழங்கதை ஆகிப் போனது.

ஜெனார்த்தன்..

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 106



திரு/திருமதி.செல்வி ....................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ....................................

....................................

....................................

.................... ....................

திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 106
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 106

**இடமிருந்து வலம்**

1. இனிப்பானது அல்லது சுவையானது
5. இதுவும் போதை தரும் (திரும்பியுள்ளது)
7. இனிப்புச் சுவை தரும் ஒருவகைத் தாவரம் (குழம்பியுள்ளது)
9. வரம்பை மீறாத ஒழுங்கு முறை (குழம்பியுள்ளது)
11. விரைவு வண்டி திரும்பி ஓடுகின்றது.
12. பெருஞ்சீரகம்
14. குதிரை
16. மற்றொருவருடைய குழந்தையை சட்டபூர்வமாக தன் பிள்ளையாக ஏற்றுக் கொள்வது.
18. கருத்து வேறுபாட்டால் ஏற்படும் சச்சரவு.
20. சாப்பிடத் தூண்டும் உணர்வு
22. ஒரு வாத்தியக் கருவி (குழம்பியுள்ளது)
23. வானத்து நட்சத்திரம்

**மேலிருந்து கீழ்**

1. மனநிறைவு
2. களவு
3. விஷ ஜந்துக்கள் தீண்டும்போது ஏற்படும் வலி (குழம்பியுள்ளது)
4. அடுப்பின் சுற்றுப் புறத்திலுள்ள மேடு
6. ஒருவகை நடனம்
8. மனத்தை வருத்தும் துக்க உணர்வு (தலைகீழ்)
10. யானையைப் பராமரிப்பவன்
13. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள் (குழம்பியுள்ளது)
15. ஒத்துழைப்பு
16. நிறுக்கப் பயன்படும் சாதனம் (தலைகீழ்)
17. எழுச்சி
19. படிப்பதையும் குறிக்கும், நிலத்திலும் காணலாம்.
21. தலைமுடி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 105

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஆடவன்
4. வைகாசி
6. தேசம்
8. வலை
9. வாசல்
11. காதல்
13. சிரம்
14. சய
16. ஆரம்பம்
19. தர
20. பதவி
21. கன்னித்தாய்
22. மைதானம்
23. காது

**மேலிருந்து கீழ்**

1. ஆதிவாசி
2. வம்சம்
3. தேன்
4. காவல்
5. சிலை
7. சகாயம்
10. உரல்
12. தசரதன்
15. காப்பகம்
16. ஆதாரம்
17. விபத்து
18. தாமரை
19. தனிமை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 105

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
| --- | --- | --- |
| **எம். ஏ.எஸ். கதீஜா**<br>155/32, மொஹிடீன் மஸ்ஜித் வீதி, மருதானை | **வேல்நாயகம் ராஜேந்திரன்,**<br>இல 88, விபுலானந்த வீதி, காரைதீவு | **எம்.ஏ. அத்தாஸ்,**<br>141, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை |

### பாராட்டு பெறுவோர்

1. **கே.பி, மில்ஹானி** ஏறாவூர்
2. **எஸ்.கனகரெட்ணம்** திருகோணமலை
3. **ஆர். இஷால் ஹன்னா** கிண்ணியா
4, **சாஹிரா பானு லியாவுதீன்** புத்தளம்
5. **ஏ.வி.எம். உமைர்** வெலிகம
6. **கோபிநாத் ஜெரீஷ்** கல்முனை
7.**என். எஸ் ரஜீவ்** மன்னார்
8. **ந. ஹேமித்திரா** மட்டக்களப்பு
9. **த. யாழினி** கொழும்பு 06
10. **எம். ஆதவன்** நல்லூர்






## CAR CARRIER FOR HIRE



Colombo City Limit:
Rs. 7,850.00
Outside City Limit:
Rs 120.00 Per Km

AA CEYLON
The Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Marker Mawatha,
Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 210)
Web: www.aaceylon.lk



Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# பதவி வெற்றிடம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) HM 2-2
2. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) HM 2-1
3. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு நிதி) HM 2-1
4. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (செயல்பாட்டு நிதி) HM 2-1

இப்பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகுதிகள் மற்றும் விண்ணப்பங்கள் www.rda.gov.lk இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி, தொழில்முறை தகுதிகள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் நகல்களுடன் விண்ணப்பம் இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைத் தெளிவாக குறிப்பிட்டு 2024.02.07 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, "மக நெகும மஹ மெதுர", 4ஆம் மாடி, இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு : மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள்) அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
011 2046393 / 011 2046200.

**பணிப்பாளர் நாயகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

---

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture
THE WORLD BANK
Funded by The European Union

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
கமத்தொழில் அமைச்சு
**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்**
**சர்வதேச அபிவிருத்திச் சங்க கடன் இல.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

**மொனராகலை மாவட்டத்தில் கெவென்டிஷ் வாழைப்பழ சேகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்**
**(ஒப்பந்த இலக்கம்: LK-MOA-PMU-364766-CW-RFB)**

**மொனராகலை மாவட்டத்தில் மாம்பழ கொத்தணி பதப்படுத்தும் நிலையத்தை நிர்மாணித்தல்**
**(ஒப்பந்த இலக்கம்: LK-MOA-PMU-366008-CW-RFB)**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயத்திற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை பலவகையான நாணய அலகுகளில் கடனாக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையிலுள்ள தகுதியுள்ள கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பின்வரும் வேலைகளுக்கான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பிடப்பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | செல்லு படியாகும் காலப் பகுதி | மீளளிக் கப்படாத பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-364766-CW-RFB | மொனராகலை மாவட்டத்தில் கெவென்டிஷ் வாழைப்பழ சேகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் | 96.07 | 5 மாதங்கள் | C4 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் மற்றும் கனமான உருக்குக் கட்டுருவாக்கத்தில் EM 1 | 1,000,000.00 | 2024 ஜுலை 17ஆம் திகதி வரை | 20,000.00 |
| LK-MOA-PMU-366008-CW-RFB | மொனராகலை மாவட்டத்தில் மாம்பழ கொத்தணி பதப்படுத்தும் நிலையத்தை நிர்மாணித்தல் | 100.00 | 5 மாதங்கள் | C4 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் மற்றும் கனமான உருக்குக் கட்டுருவாக்கத்தில் EM 1 | 1,000,000.00 | 2024 ஜுலை 17ஆம் திகதி வரை | 20,000.00 |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக செல்லுபடியாகும் திகதியின் பிரகாரம் விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவார். ஒரு விலைமனுதாரர் ஒரு ஒப்பந்தத்திற்கு ஒரு விலைமனுக்கோரலை மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிர்மாணத்திற்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.
5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112073044/ 0714881265/ 0714961603 தொலைநகல்: 0112 877546) (மின்னஞ்சல்: procurementspasmp@hotmail.com) மற்றும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று பத்தரமுல்ல, 123/2, பன்னிப்பிட்டிய வீதி, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவில் 2024 பெப்ரவரி 06ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும் என்பதுடன் 2024 பெப்ரவரி 08ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு செவனகலயிலும் பி.ப. 2.00 மணிக்கு சியம்பலாண்டுவயிலும் தள விஜயத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
8. விலைமனுக்கள் 2024 ஜுன் 17ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024 ஜனவரி 29ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி 19ஆம் திகதி வரை பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
11. விலைமனுக்கள் 2024 பெப்ரவரி 19ஆம் திகதி முடிவுறுத்தப்படும்.
12. விலைமனுக்களை 2024 பெப்ரவரி 19ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்டப் பணிப்பாளர், கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
13. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி,பத்தரமுல்ல.**
**2024 ஜனவரி 28ஆம் திகதி.**

---

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture
THE WORLD BANK
Funded by The European Union

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
கமத்தொழில் அமைச்சு
**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்**
**சர்வதேச அபிவிருத்திச் சங்க கடன் இல.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

**ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் (பொரலந்தயில்) விதை உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையின் கீழ் ஏனைய வசதிகள் சகிதம் 300 மெ.தொ. குளிர் களஞ்சியத்தை நிறுவுதல்**

(ஒப்பந்த இலக்கம்: LK-MOA-PMU-247288-CW-RFB)

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயத்திற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை பலவகையான நாணய அலகுகளில் கடனாக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையிலுள்ள தகுதியுள்ள கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பின்வரும் வேலைகளுக்கான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பிடப் பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | விலை மனுப் பிணைத் தொகை (ரூபா) | செல்லு படியாகும் காலப் பகுதி | மீளளிக் கப்படாத பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU -247288-CW-RFB | ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் (பொரலந்தயில்) விதை உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையின் கீழ் ஏனைய வசதிகள் சகிதம் 300 மெ.தொ. குளிர் களஞ்சியத்தை நிறுவுதல் | 150.00 | 5 மாதங்கள் | 1. C3 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் மற்றும் 2. பொறிமுறை காற்றோட்டம் மற்றும் வளிச் சீராக்கத்தில் (MVAC) EM 1 மற்றும் 3. குளிர் பதனத்தில் (RF) (அல்லது கூட்டு முயற்சி) EM 1 | 1,500,000.00 | 2024 ஜுலை 17ஆம் திகதி வரை | 30,000.00 |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக செல்லுபடியாகும் திகதியின் பிரகாரம் விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவார். ஒரு விலைமனுதாரர் ஒரு ஒப்பந்தத்திற்கு ஒரு விலைமனுக்கோரலை மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிர்மாணத்திற்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.
5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112073044/ /0714881265/0714961603 தொலைநகல்: 0112 877546) (மின்னஞ்சல்: procurementspasmp@hotmail.com) மற்றும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று பத்தரமுல்ல, 123/2, பன்னிப்பிட்டிய வீதி, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவில் 2024 பெப்ரவரி 06ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும் என்பதுடன் 2024 பெப்ரவரி 07ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ரஹன்கலயில் தள விஜயத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
8. விலைமனுக்கள் 2024 ஜுன் 17ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024 ஜனவரி 29ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி 19ஆம் திகதி வரை பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
11. விலைமனுக்கள் 2024 பெப்ரவரி 19ஆம் திகதி முடிவுறுத்தப்படும்.
12. விலைமனுக்களை 2024 பெப்ரவரி 19ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்டப் பணிப்பாளர், கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
13. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல.**
**2024 ஜனவரி 28ஆம் திகதி.**

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர கருத்திட்டம் (TNSWSP)

# பதவி வெற்றிட அறிவித்தல்

**அறிமுகம்**

வர்த்தகர்கள் நாட்டின் எல்லைக்கு குறுக்கான தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கான (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பரிமாற்றங்கள்) ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைகளை எல்லை வர்த்தக ஒழுங்குமுறை முகவர் நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கான ஒற்றை நுழைவுப் புள்ளியாக வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வகையான செயல்முறைகளின் முடிவு, இத்தானியங்கி வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பின் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

இதன்படி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, முன்மொழியப்பட்ட வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பிரத்தியேக திட்ட அமுலாக்கப் பிரிவொன்றினை (PIU) நிறுவுவதற்கும், முன்மொழியப்பட்ட இப்பிரத்தியேக திட்ட அமுலாக்கப் பிரிவிற்காக கீழ்வரும் பதவிகளுக்கு மிகவும் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரவும் தீர்மானித்துள்ளது.

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்திற்மைவாக சம்பள அளவுத்திட்டம் |
|---|---|---|
| கருத்திட்டப் பணிப்பாளர் | 01 | PS1 |
| ஒற்றைச் சாளர வடிவமைப்பு நிர்மாணிப்பாளர் | 01 | PS2 |
| நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர் | 01 | PS3 |
| கொள்ளல் நிபுணர் | 01 | PS3 |
| ஒருங்கிணைந்த எல்லை முகாமைத்துவ நிபுணர் | 01 | PS3 |
| சிரேஷ்ட வணிக செயல்முறை மறுகட்டமைப்பு உத்தியோகத்தர் | 01 | PS5 |
| சிரேஷ்ட சட்ட மற்றும் ஒழுங்குமுறை விவகார உத்தியோகத்தர் | 01 | PS5 |

*குறிப்பு: 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபம் https://www.treasury.gov.lk/news

**1. கருத்திட்டப் பணிப்பாளர்**

- பொருளாதாரம் அல்லது சர்வதேச வர்த்தகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது பொதுக் கொள்கையில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையொன்றில் முதுமாணிப் பட்டம்; அல்லது
- சம்பந்தப்பட்ட துறையில் தகுதிக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியொன்று
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கருத்திட்ட முகாமைத்துவச் சான்றிதழ் விரும்பத்தக்கது; மற்றும்
- திட்ட முகாமைத்துவத்தில் குறைந்தபட்சம் 12 வருட அனுபவத்துடன் (இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனத்தில் நேரடி அனுபவம் விரும்பத்தக்கது) இதில் குறைந்தபட்சம் 06 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தலும் வேண்டும்;
- தேசிய ஒற்றைச் சாளரம் அல்லது அதையொத்த ஒரே இடத்திலான முதலீட்டு வணிகநிலையத்தில் பணிபுரிந்த தேர்ச்சி மற்றும் அனுபவம் விரும்பத்தக்கது.

**2. ஒற்றைச் சாளர வடிவமைப்பு நிர்மாணிப்பாளர்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருள் பொறியியல் அல்லது தொடர்புடைய துறையொன்றில் இளமாணிப் பட்டம்; அல்லது
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது;
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கருத்திட்ட முகாமைத்துவச் சான்றிதழ் விரும்பத்தக்கது; மற்றும்
- பெரிய அளவிலான த.தொ.தொ அமைப்புகளுடன் தொடர்புடைய குறைந்தபட்சம் 10 வருட சேவை அனுபவம், இதில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

**3. நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர்**

- நிதி அல்லது பொருளாதாரம் அல்லது வணிகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையொன்றில் இளமாணிப் பட்டம்; அல்லது
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது;
- பட்டய கணக்காளர்கள் அல்லது அதற்கு சமமான நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட சான்றிதழ் விரும்பத்தக்கது மற்றும்
- நிதி,நிர்வாகம், செயல்பாடுகள் மற்றும் சிக்கலான கருத்திட்டங்களுக்கு இணங்குதல் ஆகியவற்றில் குறைந்தபட்சம் 08 வருட அனுபவம், இதில் குறைந்தபட்சம் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும் அல்லது
- நாடளாவிய சேவைகளின் வகுப்பு I இல் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு சமமான நிலையில் வகுப்பு I பதவியில் குறைந்த பட்சம் 02 வருட அனுபவம்.

**4. கொள்ளல் நிபுணர்**

- வணிகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையொன்றில் இளமாணிப்பட்டம் அல்லது
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது;
- பொது கொள்முதல் மற்றும் சொத்து முகாமைத்துவம் அல்லது இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொள்முதல் பயிற்சியில் மேம்பட்ட சான்றிதழ் பாடநெறியைப் (குறைந்தபட்சம் 06 மாதங்கள்) பின்பற்றியிருத்தல் விரும்பத்தக்கது மற்றும்
- கொள்முதல் நடவடிக்கைகளில் அல்லது த.தொ. தொ. கருத்திட்டங்களுக்கான கொள்முதல் பற்றிய ஆலோசனை வழங்குவதில் 10 வருட அனுபவம் இதில் குறைந்தபட்சம் 04 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும் அல்லது
- நாடளாவிய சேவைகளின் வகுப்பு I இல் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு சமமான நிலையில் வகுப்பு I பதவியில் குறைந்த பட்சம் 02 வருட அனுபவம்.

**5. ஒருங்கிணைந்த எல்லை முகாமைத்துவ நிபுணர்**

- பொருளாதாரம் அல்லது வணிகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது சர்வதேச வர்த்தகம் அல்லது பொதுக் கொள்கையில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையொன்றில் இளமாணிப் பட்டம்; அல்லது
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது; மற்றும்
- வணிக செயல்முறை மேம்பாடு, வணிக செயல்முறை மறுகட்டமைப்பு அல்லது செயல்திறன் அளவீட்டுத் திட்டங்களுடன் தொடர்புடைய குறைந்தபட்ச 08 வருட அனுபவத்துடன் இதில் குறைந்தபட்சம் 04 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தலும் வேண்டும் அல்லது
- நாடளாவிய சேவைகளின் வகுப்பு I இல் அல்லது அதற்கு சமமான நிலையில் சம்பந்தப்பட்ட துறையில் வகுப்பு I பதவியில் குறைந்த பட்சம் 02 வருட அனுபவம்.

**6. சிரேஷ்ட வணிக செயல்முறை மறுகட்டமைப்பு உத்தியோகத்தர்**

- வணிகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது பொருளாதாரம் அல்லது சர்வதேச வர்த்தகம் அல்லது பொதுக் கொள்கையில் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையொன்றில் மற்றும்
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது; மற்றும்
- எல்லைக்குக் குறுக்கான வர்த்தகம் தொடர்பான வணிக செயல்முறை மறுகட்டமைப்பில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம்

**7. சிரேஷ்ட சட்ட மற்றும் ஒழுங்குமுறை விவகார உத்தியோகத்தர்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத் துறையிலான இளமாணிப் பட்டம்; அல்லது
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது; மற்றும்
- சர்வதேச வர்த்தக சட்டம் மற்றும் கொள்கை, சுங்கம் மற்றும் எல்லைக் கொள்கை, அரசாங்க வழக்கு மற்றும்/அல்லது கொள்கை இடர் பகுப்பாய்வு ஆகியவற்றுடன் தொடர்புடைய குறைந்தபட்ச 05 வருட அனுபவம்; மற்றும்
- இலங்கை உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராகவிருத்தல்.

**பொது நிபந்தனைகள்**

- வயது 2024.02.12 இல் உள்ளபடியாக 63 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் 36 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள், இது வருடாந்திர செயல்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் ஆண்டுதோறும் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு உட்பட்டது.
- தேவையான அனைத்து தகுதிகளும் 2024.02.12 அன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- வெற்றிடங்கள் நிரப்பப்படல் அவசியமா இல்லை என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரையே சாரும்.
- இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாட்டின் போது இதில் இல்லாத ஏதேனும் ஒரு விடயத்திலோ அல்லது ஏதேனும் சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பத்திலோ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமானதாக அமையும்.
- 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி சம்பளம் மற்றும் இதர சலுகைகள் வழங்கப்படும் (இணைப்பு).

**விண்ணப்பிக்கும் முறை**

கல்வி / தொழில்முறைத் தகுதி, சேவை அனுபவம் ஆகியவற்றின் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் விரிவான சுயவிபரக்கோவையொன்று இரண்டு நடுவர்களிடமிருந்து அவர்களின் தொடர்பு விபரங்கள் உட்பட்ட இரண்டு குறிப்புக் கடிதங்களுடன் பதிவுத் தபாலில் மட்டுமே 2024.02.12 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடிதஉறையின் மேல் இடது மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

**முகவரி:**
**பணிப்பாளர் நாயகம்**
**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**
**செயலகம்**
**கொழும்பு 01.**

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

பதவி விபரங்கள் உள்ளிட்ட மேலதிக விபரங்களுக்கு https://www.treasury.gov.lk/news

**செயலாளர்**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்**
**தேசிய கொள்கைகள் அமைச்சு**
**செயலகம்**
**கொழும்பு 01.**

**திகதி: 2024.01.28**

---

# இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

SPC

## பெறுகை அறிவித்தல்

**குத்தகைக்கு / வாடகைக்கு கட்டடமொன்றை பெற்றுக் கொள்ளல்**

**Tender Reference: AD/1/BLG-NEW/08/2024**

**2024 பெப்ருவரி 14 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு மூடப்படும்**

பின்வரும் அமைவிடங்களில் வாடகை/ குத்தகைக்கு இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனத்தினால் ராஜ்ய ஔசு சலவின் விற்பனைக் கிளைகளை தாபிப்பதற்காக கட்டடமொன்றை பெற்றுக் கொள்வதற்காக கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

1. அஹுங்கம
2. கேகாலை
3. மினுவாங்கொட
4. பத்தேகம
5. மஹியங்கனைய
6. திஸ்ஸமஹாராமய
7. எல்பிட்டிய
8. வவுனியா

**உத்தேசிக்கப்பட்டுள்ள அமைவிடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் தகவுத்திறன்கள் பின்வருமாறு:**

- கட்டடமானது 750-1000 சதுரஅடி பிரதேசமுள்ள தரைமாடியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வர்த்தக பிரதேசமொன்றில் அல்லது அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் அமைந்திருத்தல் வேண்டும் (நகரின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்)
- பொதுமக்களுக்கான சிறப்பான அணுகுவாசலிருத்தல் வேண்டும்.
- சிறந்த முன்தோற்றமிருத்தல் வேண்டும்.
- மூன்று வழி மின்சாரம், நீர், தொலைபேசி, வாகன நிறுத்துமிட வசதிகள் மற்றும் கழிவறை வசதிகள் அத்துடன் wash basin or sink.
- தரைப் பிரதேசத்தில் ஓடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- உள்ளக வெப்பநிலையை $25^{o}$ C இற்கு பேணக்கூடிய வளிசீராக்கப்பட்ட கட்டடமொன்று சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**முத்திரையிடப்பட்ட முன்வைப்புக்கள் பின்வரும் விபரங்களை கொண்டிருத்தல் வேண்டும்.**

- உரிமையாளரின் பெயர் :
- உரிமையாளரின் முகவரி :
- அமைவிட முகவரி :
- தொடர்பு இல. (செயற்படுத்துதலின் போது)
- சதுர அடியின் எண்ணிக்கை
- எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை
- எதிர்பார்க்கப்படின், பிணை வைப்புத் தொகை

மேலேயுள்ள விபரங்களுடன் அமைவிட வரைபடம், கட்டிட வரைபடம், உறுதியின் பிரதியொன்று, பிரித்தெடுப்பு ஆகியன ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு'', என முகவரியிடப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வழங்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விதாரர் பின்வரும் நிபந்தனைகளுக்கு கண்டிப்பாக அமைந்தொழுகல் வேண்டுமென்பதுடன் கேள்விகள் கட்டடத்தின் உரிமையாளரினால் மாத்திரமே முன்வைக்கப்படல் வேண்டும்.

1. முன்வைப்புக்கள் இரு பிரதிகளில் தெளிவாகவும் தனித்தனியாகவும் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல் பிரதியென'' அடையாளமிடப்பட்டு இரு தனித்தனியான தபாலுறைகளில் உள்ளடக்கப்படல் வேண்டும் (Staple Pins பாவிக்கப்படக்கூடாது)
2. ''கேள்வி இலக்கம், மூடும் திகதி மற்றும் நேரம்'' ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்துரைக்கப்படல் வேண்டும்.
3. மாற்றுவழியான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் அவைகளை மூடிய பின் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,**
**"மெஹெவர பியச", 16 ஆம் மாடி, இல. 41,**
**கிருள வீதி, கொழும்பு-05.**
**தொலைபேசி: 0112 320 356 – 9**

---

www.adz.lk
it's what you want

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

SPC

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

## விலைக்கோரலுக்கான அழைப்பு

### இரத்மலானையிலுள்ள வாய் மூல நீரேற்றம் உப்பு (ORS) கட்டிடத்திற்கு மத்திய வளிச்சீராக்கி முறைமையை (வெப்பமேற்றல் – காற்றோட்டம் – வளிச்சீராக்கம்) வழங்குதல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கான ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

**(Obtaining Consultancy Services for Supply, Fixing and Commissioning of Central Air Conditioning System (Heating - Ventilating - Air Conditioning) for Oral Rehydration Salt (ORS) Building at Rathmalana)**

**கேள்வி இலக்கம்: AD/M&C/HVAC-ORS-CONS/07/2024**

**முடிவுறுத்தல்: 2024 பெப்ரவரி 14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு**

இரத்மலானையிலுள்ள வாய் மூல நீரேற்றம் உப்பு (ORS) கட்டிடத்திற்கு மத்திய வளிச்சீராக்கி முறைமையை (வெப்பமேற்றல் - காற்றோட்டம் - வளிச்சீராக்கம்) வழங்குதல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கான ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தத் துறையில் தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த தனிநபர் / நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அழைக்கின்றது. முறைமைக்கான சகல வடிவமைப்பு / வரைதல் மற்றும் விபரக்குறிப்புகளை முன்வைப்பதற்கு (மின்சாரம் / பொறிமுறை போன்றன...) திட்டம் தொடர்பாக பட்டய பொறியியலாளர் ஒருவரினால் ஒப்புதல் அளிக்கப்படல் வேண்டும்.

**ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

I. குளிர்பதன பொறியியல், வளிச்சீராக்கம் அல்லது அது சார்ந்த துறையில் ஒரு இளமாணி அல்லது அதற்கு மேலான பட்டம் அத்துடன் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் 5 வருட கால அனுபவம்.

II. இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அங்கத்துவர் - CEng. MIE (SL)

III. இலங்கை கட்டிட பொறியியல் சேவைகள் சங்கத்தின் அங்கத்துவர் - LABSE

IV. 50 குளிர்பதன தொன்களுக்கு மேற்பட்ட இதனையொத்த வகையான திட்டங்களில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் வடிவமைப்பு / வரைதல், மதிப்பீடு, அளவுப் பட்டியல், கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல், கேள்வி மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் பற்றுச்சீட்டு பரிந்துரைகள்..... அத்துடன் சகல விபரங்கள், நிறுவனத்தின் விபரங்கள், 03 வருடங்களுக்குள் மேற்கொண்ட செயற்பாடுகளின் சுருக்கம் சகிதம் இதனையொத்த திட்டங்களின் வாடிக்கையாளர்களின் விபரங்கள் (50 குளிர்பதன தொன்களுக்கு மேற்பட்டது) போன்றவற்றை உள்ளடக்கிய தொடர்ச்சியான மேற்பார்வை ஆலோசனைக்கான சேவைக் கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய உங்களது தொழில்நுட்ப மற்றும் நிதியியல் முன்மொழிவுகளை தயவுசெய்து அனுப்பவும்.

உங்கள் கேள்விப் படிவங்களை 2024 பெப்ரவரி 14ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், ''மெஹெவர பியச'', 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லாவிடில் மேற்படி முகவரியில் அமைந்துள்ள இந்தக் கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி இலக்கம், கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம் என்பவற்றை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகோரல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விப் படிவங்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியஸ'' 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி.**
**தொலைபேசி: 2320356-9**

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடட் விற்பனையகங்களில் உள்ள மின்பிறப்பாக்கிகளின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு

EOI Number : LSL/PRO/05/05/Generators-SA/2024

**லங்கா சதொச லிமிடட்,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 440க்கும் மேற்பட்ட விற்பனையகங்களை கொண்ட பாரிய அரச பல்பொருள் விற்பனை வலையமைப்பாகும். **லங்கா சதொச லிமிடட், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால்** நாடு முழுவதும் அமைந்துள்ள 136 விற்பனையகங்களில் உள்ள மின்பிறப்பாக்கி இயந்திரங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தலுக்காக ஆர்வம் காட்டுகின்ற வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டுக்கான (EOI) கோரிக்கை விடுக்கப்படுகிறது.

அதன்படி மேல் குறிப்பிடப்பட்ட சேவையை வழங்குவதற்கு தொழில்முறை நிறுவனங்களை தேர்வு செய்யும்போது செலவு மற்றும் தகைமை அடிப்படையில், முன் தகைமை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கு லங்கா சதொச நிறுவனம் எதிர்பார்க்கிறது.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து கொள்முதல்களின் முன்கூட்டிய ஏலக் கூட்டம் **06 பிப்ரவரி 2024 அன்று காலை 11.00 மணிக்கு** மேற்கண்ட முகவரியில் நடைபெறும்.

**கீழுள்ள விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்:**

1. நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி, தொடர்பு இலக்கங்கள் உட்பட, இந்தத் திட்டத்திற்கு பங்கேற்பதற்கான விருப்பத்தை வெளியிடும் கடிதம்.
2. நிறுவனத்தின் விபரம்
3. வர்த்தகப் பதிவு சான்றிதழ் மற்றும் வெட் சான்றிதழ்
4. நிறுவனக் கட்டமைப்பு
5. குறித்த துறையில் அனுபவம்
6. நிதித் திறன்
7. அரச/ அரச சாரா நிறுவனங்கள் உட்பட, வாடிக்கையாளர் பட்டியல் மற்றும் செயற்பாட்டில் உள்ள பணிகளின் பட்டியல் (கடந்த 03 ஆண்டுகள்)

ஆர்வம் கொண்ட விண்ணப்பதாரர்கள் தமது ஆர்வ வெளிப்பாட்டை (EOI) **2024.02.19 ஆம் திகதி பி.ப. 01.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், லங்கா சதொச லிமிடட், அவதானத்திற்கு: பெறுகை மற்றும் விநியோகப் பிரிவு பிரதி பொது முகாமையாளர், இல. 27, CWE செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட EOI இனை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில **"LSL/PRO/05/05/Generators-SA/2024"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ஆர்வ வெளிப்பாட்டை (EOI) ஏற்பது **2024.02.19 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** நிறைவடையும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. இறுதித் தேர்வுப் பட்டியல் லங்கா சதொச லிமிடெட்டினால் தயாரிக்கப்படுவதோடு, தகுதிபெற்ற நிறுவனங்களுக்கு மாத்திரம் முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) விடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்
திலினி - 070 1560428

**ஆர்வ வெளிப்பாட்டை(EOI)** விண்ணப்பங்களை ஏற்பது மற்றும் நிராகரிக்கும் உரிமை **லங்கா சதொச லிமிடட்டின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவர்** வசமானது.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிடட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

---

## உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் (IBMBB)

## கொழும்புப் பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவி

உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தினை நிர்வகித்தும், வழிநடாத்தியும் செல்வதற்குப் பொருத்தமான தகைமையும் அனுபவமுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

IBMBB இன் பணிப்பாளரானவர், நிறுவகத்தின் முழுநேர அலுவலரும் முதன்மையான நிறைவேற்று அலுவலரும் கல்விசார் மற்றும் கணக்கீட்டு அலுவலருமாவார். அவர் (ஆண் அல்லது பெண்) நிறுவனத்தின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான பொறுப்புடையவராவார். அவர் முகாமைத்துவ சபையின் பதவி வழி அங்கத்தவரும், தலைவருமாவார்.

விண்ணப்பதாரி / முன்மொழியப்பட்டவர் சிறந்த கல்விசார் ஒழுக்க உயர்வு மற்றும் ஒருங்கிணைப்புடன் மிகச்சிறந்த ஆய்வுப் பிரசுர விபரக்குறிப்புக்களின் பதிவுகளுடன், தலைமைதாங்கி நடத்துவதற்கான உறுதிப்படுத்தப்பட்ட திறன் மற்றும் உயர் மட்ட சமூகரீதியிலான திறன்கள், அத்துடன் கொள்கை விடயங்களில் தெளிவான விளக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

1. **தகைமைகள்:**
   - உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியலில் அல்லது தொடர்புடைய துறையில் மருத்துவ கலாநிதிப் பட்டம் (MD/MS) அல்லது தத்துவமாணிக் கலாநிதிப் பட்டம் அல்லது அதற்கு நிகரான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - குறிப்பாக, உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் போன்ற அல்லது அதனுடன் தொடர்புபட்ட உயர்மட்ட கல்வியில் முன்னைய நிருவாக அனுபவத்தைக் கொண்டிருத்தல் அனுகூலமாக கருதப்படும்.
2. **வயது:** விண்ணப்பதாரரின் வயது விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியில் 63 இற்கும் குறைவாகவிருத்தல் வேண்டும்.
3. **சம்பள செய்விதி:**
   மாதாந்தம் 117,350 – 13x2700 - 152,450 ரூபா. U-AC 5(II) மற்றும் பதவிக்குரிய பல்கலைக்கழக சட்டமூலத்தில் வரையறுக்கப்பட்டவாறான கொடுப்பனவுகள்.

   விண்ணப்பதாரியானவர் ஆசிரியரொருவராகவிருப்பின் அத்துடன் மேற்குறிப்பிட்ட சம்பளத்தை விட அதிகமாகப் பெறுபவராகவுமிருப்பின், அவர் தற்போது பெற்றுக்கொள்ளும் சம்பளத்தில் கல்விசார் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் வழங்கப்படுவார்.

   **கவனம் செலுத்தவும் :** தற்போது அரசாங்க சேவையில் இருப்பவர்கள் மேலேயுள்ள ஆரம்ப சம்பள மட்டத்திற்கு மேற்படின், அதற்கு நிகரான சம்பளம் வழங்கப்படுவார்.

   நியமனத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டமூலம் மற்றும் (திருத்தப்பட்டவாறு) 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவக கட்டளைச்சட்டத்தினாலும் ஆளப்படுகின்றன.
4. **பதவிக்காலம் :**
   நியமனத் திகதியிலிருந்து மூன்று (3) வருடங்கள் அல்லது அவர் அறுபத்தைந்து (65) வயதை பூர்த்தி செய்யும் வரை, இவற்றில் முதலில் இடம் பெறும் நிகழ்வு வரையும் இப்பதவியை வகிக்கலாம்.
5. **ஏனைய அனுகூலங்கள் :**
   1. உத்தியோகபூர்வ போக்குவரத்து
   2. மகிழ்வூட்டல் கொடுப்பனவு.
   3. பல்கலைக்கழக சேமலாப நிதி பங்களிப்பு
   4. ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு
6. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை :**
   பொருத்தமான விண்ணப்பதாரிகள் அவர்களின் சுயவிபரக்கோவையை **2024 பெப்ரவரி 27 ஆம் திகதியன்று** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் **சிரேஷ்ட உதவி பதிவாளர், உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம், இல. 90, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு-03** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

   **"Application for the Post of Director"** என தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்துரைக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு வழிகாட்டல் வழங்கப்படுகின்றது.

   விண்ணப்பங்களுடன்/முன்மொழிவுகளுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.
   1. விண்ணப்பதாரியின் பிறந்த திகதி அடங்கலாக (அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்பு சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்) விண்ணப்பதாரியினால்/முன்மொழியப்பட்டவரினால் (சான்றுடன்) பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக்கோவை.
   2. நிறுவகத்தின் விருத்திக்கான தொலைநோக்கு அறிக்கை.
   3. தற்போது பொறுப்பிலுள்ள பணிப்பாளர் விண்ணப்பதாரியொருவராகவிருப்பின், 2 ஆம் இலக்கத்தில் கூறப்பட்ட தொலைநோக்கு அறிக்கைக்கு மேலதிகமாக அவரது (ஆண்/பெண்) முதலாம் அலுவலக காலப்பகுதியில் அடைந்துகொண்ட சாதனைகளை சிறப்புறக்கூறுகின்ற அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
   4. பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படின் எத்தகைய அடைவுகளை அடைய விரும்புகிறார் என்பது தொடர்பான அவரின் (ஆண்/பெண்) முன்மொழிவுகள் தொடர்பான சுருக்கமான சமர்ப்பணம்.
   5. முன்மொழியப்படுபவராயின், முன்மொழியப்பட்டவரிடமிருந்து பெற்றுக்கொண்ட இணக்கக் கடிதம்.
   6. கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் மற்றும் தலைமைத்துவம், ஆய்வுப் பிரசுரங்கள், பாராட்டுக்கள் மற்றும் நிருவாகம் ஆகியவற்றிற்கான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

* **இதற்கு மேலதிகமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மென்பிரதியொன்றும் வேறு ஏதாவது பெறுமதி சேர்க்கக்கூடிய ஆவணங்கள் PDF உருமாதிரியில் (vacancies@ibmbb.cmb.ac.lk) என்ற மின்னஞ்சல் வழியாக 2024 பெப்ரவரி 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். பதவிப் பெயரானது மின்னஞ்சலின் 'விடயப் பகுதியில்' குறித்துரைக்கப்படல் வேண்டும்.**

பல்கலைக்கழக சட்டமூலத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள், அரச சேவை, கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவற்றின் உரித்தான நிறுவகங்களுக்கூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

**பூர்த்தி செய்யப்படாத அல்லது தெளிவற்ற அல்லது மேலே குறிப்பிட்டுள்ள தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகாத அல்லது இறுதித் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொண்ட விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.**

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,**
**உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம்,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்,**
**இல.: 90, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு-03.**
**2024.01.28**

---

www.adz.lk
it's what you want

---

## அமெரிக்க தூதரகம், கொழும்பு

### வதிவிட தடுப்பு பராமரிப்பு மேற்பார்வையாளர் (ஆர்வமுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்குமானது) [ஆண் / பெண்]

இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் வசதிகள் முகாமைத்துவ காரியாலயத்திற்கென வதிவிட தடுப்பு பராமரிப்பு மேற்பார்வையாளர் பதவி நிலைக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
பல்துறைகளில் திறன்களைக் கொண்டுள்ள ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட திறன்களையுடைய பயிற்சி ஊழியர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் அனைத்து வதிவிட சொத்துக்கள் குறித்தும் தேவைப்படும் தடுப்பு வதிவிட பராமரிப்பு செயற்பாடுகளை நிறைவேற்றும் பணிகளை இந்த பதவி நிலையை வகிப்பவர் மேற்கொள்ள வேண்டும். நீரியல், செயற்பாடு, பழுதுபார்ப்பு மற்றும் குளிரூட்டல்களின் பராமரிப்பு வேலை, காற்றோட்டம் மற்றும் குளிரூட்டிகள், நிலக்கீழ் பணிகள், கட்டிட பொருட்கள், மின் பிறப்பாக்கிகள் மற்றும் வதிவிட சொத்துக்களுக்கான இலத்திரனியல் கட்டமைப்பு போன்றவற்றின் பராமரிப்பு பணிகளை இயக்குதல் மற்றும் அவற்றை செயல்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். வதிவிட சொத்துக்கள் மற்றும் வசதிகள் பொறியியலாளருடனான ஒருங்கிணைப்பில் வசதிகள் முகாமைத்துவத்துடன் காணப்படும் ஒப்பந்தக் குத்தகைதாரர்களின் அனைத்து கட்டமைப்புகளினதும் நாளாந்த, வாராந்த, மாதாந்த, அரையாண்டு மற்றும் வருடாந்த திட்டமிடல் உட்பட ஒழுங்கமைத்தலுக்கு பொறுப்புடையவராக பராமரிப்பு மேற்பார்வையாளர் செயற்படுவார். அனைத்து வதிவிட வசதிகள் மற்றும் கட்டமைப்புகளின் அபிவிருத்தி, அமுல்படுத்தல் மற்றும் தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சிகளின் கண்காணிப்பு, அவசர மற்றும் வழக்கமான பராமரிப்புகளின் செயற்பாடுகளை கண்காணித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கும் மேற்பார்வையாளர் தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அத்துடன் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் மற்றும் தர நிலைகளை செயற்படுத்தும் பணிகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

**பதவி நிலைக்கான வேலை நேரம் - முழு நேரம் - வாரத்திற்கு 40 மணித்தியாலங்கள்**
**பதவி நிலைக்கான மாதாந்த மொத்த சம்பளம் 636.83 அமெரிக்க டொலர்கள்**

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2024 ஜனவரி 16 அன்றைய நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா. 321.50 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மறுசீரமைப்பு என்பதுடன் கட்டாய உரிமையாக கருதப்படமாட்டாது.

**தேவைப்படும் தகுதிகள்:**

1. **கல்வி:** க.பொ.த சாதாரண தரத்தின் பின்னர் இலத்திரனியல், இயந்திரவியல், சிவில், கட்டிட சேவை அல்லது குளிரூட்டல் துறையில் பயிற்சியாளர் மட்டத்திலான தொழிற்பயிற்சி அல்லது பயிற்சி திட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரர் கணிதம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் குறைந்தது 3 பாடங்களிலாவது திறமை சித்தி அல்லது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்). **(உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)**
2. **பூரண தொழில் அனுபவம்:** இலத்திரனியல் / இயந்திரவியல் / கட்டிட சேவை அல்லது மின்பிறப்பாக்கிகள் தொடர்பில் மூன்று வருடகால தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல். குறித்த சேவை காலத்தில் பொறுப்புகள் படிப்படியாக அதிகரிக்கும் வகையில் அனுபவம் உட்பட கட்டிடத்தொகுதி உபகரணங்கள், கருவிகள் மற்றும் கட்டமைப்பு பழுதுபார்ப்பில் சேவை மற்றும் பராமரிப்பு திறனை வெளிப்படுத்தல். இதற்கு மேலதிகமாக கண்காணிப்பு பதவியில் ஒருவருடகாலம் சேவையாற்றியிருத்தல் வேண்டும். **(உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)**
3. **மொழித் திறன்:** மட்டம் III (சிறந்த தொழில் அறிவு) ஆங்கிலம் வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம். **(இவை பரிசோதிக்கப்படும்).**
   மட்டம் III (சிறந்த தொழில் அறிவு) சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம்.
4. **தொழில் அறிவு:** குளிரூட்டல், இலத்திரனியல், நீர்க்குழாய், மின் பிறப்பாக்கி, சிவில் பொறியியல் அல்லது கட்டிட சேவை போன்ற பிரதான பராமரிப்பு பிரிவில் பயிற்சி தொழிலாளர் மட்டத்திலான அறிவு மற்றும் திறன் அவசியமாகும். பராமரிப்பு முகாமைத்துவம் தொடர்பில் சிறந்த செயல்திறன் அறிவைக் கொண்டிருத்தல். கட்டிட சேவை மற்றும் வசதிகள் முகாமைத்துவம் தொடர்பில் தொழிற்துறை தரங்கள், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார தரங்கள் உட்பட பயன்பாடு, நவீன இலத்திரனியல் கருவிகள் மற்றும் கோளாறுகளை அடையாளம் காணும் உபகரணங்கள், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள், எரிசக்தி சேமிப்பு, மேம்படுத்தல் மற்றும் முகாமைத்துவ நுட்பங்கள் தொடர்பில் பரந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. **திறன்கள் மற்றும் ஆற்றல்கள்:** திட்டங்கள், இலத்திரனியல், கட்டமைப்பு, இயந்திர வடிவமைப்பு வரைபடங்கள், பல்வேறு உபகரணங்களின் கால அட்டவணை, செயற்பாடு மற்றும் பராமரிப்பு கையேடுகள், பல்வேறு கட்டிட நிர்மாண ஆவணங்களை வாசித்து கிரகிக்கும் ஆற்றல் அவசியமாகும். அத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் திறன்கள் மற்றும் ஆற்றல்கள் இருக்க வேண்டும் ; இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை பரிசோதித்தல், பல்வேறு அளவீட்டு உபகரணங்களை வாசித்து அளவுகளை குறித்துக்கொள்ளுதல், கோளாறுக்கான அடிப்படை காரணத்தை கண்டறிதல் மற்றும் தேவையான பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்வதற்கு கைகளால் இயக்கப்படும் கருவிகள், மின்சார உபகரணங்கள் மற்றும் விசேடமான உபகரணங்களை பயன்படுத்தல், வதிவிட கட்டிடங்களில் குளிரூட்டல், மின்சார விநியோகம், மின் பிறப்பாக்கி, நீர்க்குழாய் உள்ளிட்டவற்றை பொருத்துதல், கோளாறுகளை நிவர்த்தி செய்தல், பழுதுபார்ப்பிற்கு தேவையான தொழில்சார் உபகரணங்களின் பயன்பாடு, பணிகளை பூர்த்தி செய்வதற்கென சிறிய இடைவெளியிலுள்ள பகுதிகளிலும் மிகவும் உயரத்தில் காணப்படும் ஏணிகளிலும் ஏறி வேலை செய்தல், மிகவும் உயர்ந்த அல்லது குறைந்த வெப்பநிலையில் வெளி இடங்களில் அல்லது உட்பகுதியில் பணிகளை மேற்கொள்ள நேரிடும் சிரம சூழலிலும் சேவையாற்றுவதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல். MS Office தொகுப்பில் உள்ள மென்பொருட்களின் பயன்பாடு உள்ளிட்ட கணனி பயன்பாட்டு அறிவு அவசியமாகும். B வகுப்பில் இரட்டை – பணிகளின் வாகன ஓட்டுநருக்கான செல்லுபடியான, காலாவதியாகாத சாரதி அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டும். **(வாகன அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).**

**விண்ணப்பிக்கும் முறை**

மேலதிக விபரங்களுக்கு **https://lk.usembassy.gov/embassy/jobs/** என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை **இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA]** மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- உரிய கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை / கடவுச்சீட்டு / வேறு ஆவணங்கள்)
- வாகன அனுமதிப் பத்திரம் (இரு பக்கங்களும்).

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பம் **பிப்ரவரி 08, 2024** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எங்களுக்குக்கிடைக்கப்பெற வேண்டும். தயவு செய்து கவனிக்கவும். தகுதியானவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

---

## அமெரிக்க தூதரகம், கொழும்பு

### கொத்தனார் (ஆர்வமுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்குமானது) ஆண்/பெண்

**இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது**

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக காரியாலயத்தினால் வசதிகள் முகாமைத்துவ காரியாலயத்தின் கொத்தனார் பதவி நிலையில் பணிபுரிவதற்கென தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அமெரிக்க அரசிற்கு சொந்தமான வதிவிட அல்லது குத்தகை அடிப்படையில் காணப்படும் வளாகங்களின் நிர்மாணம், பராமரிப்பு, பழுதுபார்ப்பு உள்ளிட்ட அனைத்து வகையிலுமான பயிற்சி கொத்தனார் வேலைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் கொங்கிறீட் கற்களை கட்டுதல், பலவகைப்பட்ட கொங்கிறீட் வேலைகள், கல் சார்ந்த கட்டுமான வேலைகள் உட்பட மண் - சீமெந்து பிளாஸ்டர், ஜிப்சம் பிளாஸ்டர், சுவர்களின் மேற்பரப்பு சீரமைப்பு உள்ளிட்ட செயற்பாடுகளின் போது பிரதான கொத்தனாராக செயற்படுதல்.
அத்துடன் சுவர்களில் பொருத்தும் பணிகள், சேதமடைந்துள்ள சுவர்களை பழுதுபார்த்தல் மற்றும் வர்ணப்பூச்சு பூசுவதற்கென மேற்பரப்பை தயார்ப்படுத்தல் உள்ளிட்ட பணிகளை செய்தல் வேண்டும். பதவி நிலையை வகிப்பவர் தச்ச தொழில் மேற்பார்வையாளரின் பொதுவான கண்காணிப்பின் கீழ் கடமையாற்றுவதுடன் குறித்த மேற்பார்வையாளரிடமிருந்து கிடைக்கப்பெறும் கட்டளைகள், வாய்மூல ஆலோசனைகள், வேலைகளின் நிறைவேற்றலுக்கு தேவைப்படும் பராமரிப்பு, பழுதுபார்ப்பு அல்லது பொருத்தலுக்கென உரிய தொழிற்துறைகளின் பயன்பாடு, தரங்கள் மற்றும் செயன்முறைகளுக்கமைய பூர்த்தி செய்தல் வேண்டும்.

**பதவி நிலைக்கான வேலை நேரம் - முழு நேரம் - வாரத்திற்கு 40 மணித்தியாலங்கள்**
**பதவி நிலைக்கான மாதாந்த மொத்த சம்பளம் 371.41 அமெரிக்க டொலர்கள்**

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2024 ஜனவரி 2 அன்றைய நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா. 321.50 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மறுசீரமைப்பு என்பதுடன் கட்டாய உரிமையாக கருதப்படமாட்டாது.

**தொழிலுக்கான தகுதி:**

1. **கல்வி** : க.பொ.த சாதாரண தரத்திற்கு முயற்சி செய்திருத்தல் வேண்டும். (தேவைப்படும் பாடங்களில் குறைந்தபட்சம் 50% பாடங்களுக்கு முகங்கொடுத்திருத்தல்) அத்துடன், கொத்தனார் தொழில், கட்டுமானம், சிவில் பொறியியல் அல்லது அதனுடன் தொடர்புடைய தொழிற்துறையில் பயிற்சி மட்டத்திலான தொழில்நுட்ப தொழிலாளர்களை உருவாக்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதகால தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்திருத்தல். **(குறித்த கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.)**
2. **முன்னைய தொழில் அனுபவம்** : அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது நிர்மாணத் துறை தொடர்பில் பயிற்சி மட்டத்திலான கொத்தனாராக குறைந்தபட்சம் இரண்டு வருடகால அனுபவத்தைக் கொண்டிருத்தல். **(உரிய சேவை மற்றும் தொழில் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.)**
3. **மொழித்திறன்** : மட்டம் II (வரம்புக்குட்பட்ட அறிவு) சிங்களம் மற்றும /அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம். **(இந்த ஆற்றல் பரிசீலிக்கப்படும்.)**
   அத்துடன் மட்டம் III (சிறந்த தொழில் அறிவு) சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம்.
4. **தொழில் அறிவு** : ஐந்து நட்சத்திர ஹோட்டல் நிர்மாணத் துறையுடன் தொடர்புடைய கட்டிட சேவை மற்றும் தரங்கள் தொடர்பில் சிறந்த பிரயோக ரீதியிலான அறிவைக் கொண்டிருத்தல், பராமரிப்பு தொழிற்துறை, கருவிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயன்பாடுகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பில் சிறந்த அவதானத்தைக் கொண்டிருத்தல். பாதுகாப்பு செயன்முறைகள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பில் சிறந்த அறிவைப் பெற்றிருத்தல்.
5. **திறன்கள் மற்றும் ஆற்றல்** : பொதுவாக பயன்படுத்தப்படும் கைக்கருவிகள், கையடக்க மின் கருவிகள், வெக்கியும் கிளீனர், கொத்தனார் கருவிகள் மற்றும் ஏணிகளை பயன்படுத்தும் ஆற்றல் அவசியமாகும்.
   வேலை செய்யும் இடத்தை சுத்தமாகவும், நேர்த்தியாகவும் வைப்பதில் தேர்ச்சிபெற்றிருத்தல். சிறந்த பாதுகாப்பு பயன்பாடு இருக்க வேண்டும். அத்துடன் பணிகளை மேற்கொள்ளும் போது நிறைவேற்றப்பட்ட பாதுகாப்பு செயன்முறைகளை கையாண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். தேவைப்படும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை உரிய முறையில் பயன்படுத்தும் திறன் வேண்டும். B வகுப்பில் இரட்டை – பணிகளின் வாகன ஓட்டுநருக்கான செல்லுபடியாகும், காலாவதியாகாத சாரதி அனுமதிப்பத்திரம் அவசியமாகும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை **மின்னணு பிரதிகளுடன் மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.** அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- உரிய கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை / கடவுச்சீட்டு / வேறு ஆவணங்கள்)
- வாகன அனுமதிப் பத்திரம் (இரு பக்கங்களும்).

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலதிக விபரங்களுக்கு **https://lk.usembassy.gov/embassy/jobs/** என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு **[ERA]** மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பங்கள் **2024 பிப்ரவரி 08** ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

# களனி பல்கலைக்கழகம் - இலங்கை

## பதவி வெற்றிடங்கள்

2022/2023 ஆம் கல்வி ஆண்டிற்காக பின்வரும் பதவிகளுக்காக 2024.02.09 ஆம் திகதியன்று வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்.

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்விளக்கம் காட்டுனர் (Demonstrator)

## விஞ்ஞான கற்கைநெறிப் பீடம்

கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம்

**விண்ணப்பிக்கும் முறை:**

விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்லைனூடாக மாத்திரமே அழைக்கப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல். சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அணுகுவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**22.01.2024**

# LITRO GAS

## SALE OF SCRAP METAL CYLINDERS

**Tender No. LGLL/SCRAP/010/LOCAL/2024**

Litro Gas Lanka Limited invites sealed offers in respect of the sale of Metal Cylinders (Scrapped) as mentioned below:

| Number of Cylinders | Approximate Metal Weight |
|---|---|
| 4,667 Nos | 95,907 Kg |

The Tenderer shall furnish as part of its bid, a bid security in the form of a Bank Guarantee from a registered commercial bank operating in Sri Lanka (Format is given in the Tender documents).

The Value of the bid security is **LKR 150,000.00**

The Tender document can be obtained from the address mentioned below on the payment of a non-refundable fee of LKR 3,500/= and a refundable deposit of **LKR 25,000/=** by cash on any working day (Mon – Fri) between 9.30 am – 3.00 pm from **31st January 2024** up to **06th February 2024**.

The duly filled Tender Documents should be deposited in the Tender Box at the Litro Gas Head Office on or before 3.00 pm on **07th February 2024**.

The Chairman
Department Procurement Committee
Litro Gas Lanka Limited
267, Union Place
Colombo 02
Sri Lanka
T.P. - 011 2327714
Fax – 011 2327688

it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com




Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE &
GET FREE AD ON WEBSITE

# இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

## வெற்றிடங்கள்

அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனமானது அரச மருத்துவமனைகளுக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களின் ஏக இறக்குமதியாளர் என்பதோடு இலங்கையில் உள்ள தனியார் துறைக்கான மருந்துகளின் விநியோகஸ்தராகவும் உள்ளது.

பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1.) பகுப்பாய்வாளர் JM 1.1 - தரம் II

**தகைமைகள்**

a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இரசாயனவியல் துறை உட்பட BSc பொது பட்டம்/ இரசாயனவியலில் BSc சிறப்பு பட்டம் அல்லது அதற்கு இணையான தகைமை.

மற்றும்

b) கணினி அறிவு

மற்றும்

c) அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ சட்டரீதியான சபை/ புகழ்பெற்ற வணிக அமைப்பு ஒன்றின் மருந்துகளின் ஆய்வுகூட பகுப்பாய்வு துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**குறிப்பு:** பகுப்பாய்வு இரசாயனவியல் துறையில் பின்னணியை பெற்றிருப்பது மேலதிக தகைமையாக கருதப்படும்.

**சம்பள அளவு :** ரூபா 42,600/- 755/- x 10,1135/- x 18 – 70,580/-
(தோராயமான மாதாந்த ஊதியம் சுமார் ரூபா 97,780/- ஆக அமையும்)

**வயது எல்லை:** 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 2). முகாமைத்துவ உதவியாளர் (மருந்தாளர்) (MA 2.1 – தரம் III)

**தொழில்முறை தகைமை**

a) அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ புகழ்பெற்ற வணிக அமைப்பு ஒன்றின் பதிவு செய்யப்பட்ட மருந்தகம் ஒன்றில் மருந்து கலவை விநியோகத்தில் குறைந்தது 01 ஆண்டு தகைமைக்கு பின்னராக அனுபவத்துடன் N.V.Q. அளவு 5 இற்கு குறையாத, இலங்கை மருத்துவ சபையினால் வழங்கப்பட்ட மருந்தாளர் ஒருவராக பதிவுச் சான்றிதழை பெற்றிருத்தல்.

மற்றும்

b) கணினி அறிவு

**சம்பள அளவு :** ரூபா 30,310/- 300/- x 10,350/- x 7,495/- x 4,660/- x 20 – 50,940/-
(தோராயமான மாதாந்த ஊதியம் சுமார் ரூபா 77,216/- ஆக அமையும்)

**வயது எல்லை:** 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 3). முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) MA 1.1 - தரம் III

**தகைமைகள்:**

a) க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம்/ வர்த்தக எண் கணிதம் மற்றும் ஒரு பாடம் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

b) (i) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர) குறைந்தது 02 வர்த்தக படங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் 03 வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (பழைய பாடத்திட்டம்)

மற்றும்

c) கணினி அறிவு

மற்றும்

d) அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ புகழ்பெற்ற வணிக அமைப்பு ஒன்றின் காசாளர் ஒருவராக குறைந்தது மூன்று ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**சம்பள அளவு :** ரூபா 27,910/- 300/- x 10,350/- x 7,495/- x 4,660/- x 20 – 48,540/-
(தோராயமான மாதாந்த ஊதியம் சுமார் ரூபா 73,200/- ஆக அமையும்)

**வயது எல்லை :** 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**நலம்சார் கொடுப்பனவுகள்:**

தேர்வு செய்யப்படும் அபேட்சர்களுக்கு மாதாந்த முன்கூட்டிய ஊக்கத்தொகை, பயன்படுத்தப்படாத விடுப்புகளை பணமாக்கல், வருடாந்த மிகையூதியம், நலன்புரி நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்காக ஊழியர் மற்றும் குடும்பத்தினருக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம் உட்பட கவர்ச்சிகரமான பல்வேறுபட்ட நன்மைகளை பெறுவர்.

வயது, தகைமைகள், பெற்ற பயிற்சி, தொழில் அனுபவம், தற்போதைய பதவி, சம்பளப் புள்ளி மற்றும் அளவு, முன்னர் வகித்த பதவி, முந்தைய தொழில் வழங்குநரிடம் இணைந்த மற்றும் விலகிய திகதிகள், கல்வி மற்றும் சேவை சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் உட்பட முழுமையான சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும்.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கருத்தில் கொள்ளவும்.

அரச துறை அமைப்புகளின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இடும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு 12.02.2024 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**பிரதிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்**
**"மெஹவர பியச"**
**16ஆவது மாடி, 41, கிருல வீதி,**
**கொழும்பு - 05.**
**தொ.: 011 2320356 / 9**

SPMC

## பதவி வெற்றிடங்கள்

# அரச மருந்தாக்கல் உற்பத்திக்கூட்டுத்தாபனம்

### சுகாதார அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

1. பொது முகாமையாளர் (HM 2-1)
2. மருந்தாக்கல் தொழில்நுட்ப வல்லுநர் - உற்பத்தி (JM 1-1)
3. தரக் கட்டுப்பாட்டு அதிகாரி (JM 1-1)
4. பொறியியல் உதவியாளர் (பொறிமுறை) (JM 1-1)
5. பிரத்தியேக செயலாளர் (JM 1-1)
6. நிதி அதிகாரி (JM 1-1)
7. மருந்தாக்கல் தொழில்நுட்பவியலாளர் உற்பத்தி (MA 2-1)
8. தரக் கட்டுப்பாட்டு தொழில்நுட்பவியலாளர் (MA 2-1)
9. தொழில்நுட்ப உதவியாளர் - உருவாக்கத்துடனான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (MA 2-1)
10. பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர் - (மின்சாரம்/ இலத்திரனியல்/ வளிச்சீராக்கம்) (MA 2-1)
11. கணக்கு பேணுநர் (Book Keeper) (MA 2-1)
12. சாரதி (PL 3)

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் இணையதளத்திற்கு (https://www.spmc.gov.lk) பிரவேசிக்கவும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை**

இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரசாங்கத் திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / புகழ்பெற்ற தனியார் துறையில் பணியாற்றுபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

இணையதளத்தில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம்,**
**இரத்மலான.**
**28-01-2024.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

**Repeat Your Ad For Better Offers**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## சுகாதார அமைச்சு

### விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை – சீதுவ

### பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

1. **Cardiographic Technician**

**தகைமைகள் :** மின் Cardiographic Technician பயிற்சி பாடசாலையிலிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் மின் Cardiographic Technician ஆக பதிவு செய்திருத்தல்.

**சம்பள அளவு :** ரூ.38,987.50 - 10X556.25 - 11X825 - 10X912.50 - 10X937.50 - 72,125.00 (மாதாந்தம்)

2. **Eye Tachnician**

**தகைமைகள் :** Eye Technician பயிற்சி பாடசாலையிலிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் Eye Technician ஆக பதிவு செய்திருத்தல்.

**சம்பள முறை :** ரூ.40,100 - 10X556.25 - 11X825 - 10X912.50 - 10X937.50-73237.50 (மாதாந்தம்)

**பொதுவான நிபந்தனைகள்**

- 45 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அரச சேவைகளுக்கு வழங்கப்படும் சம்பளத்திற்கு மேல் 25% சம்பள அதிகரிப்பொன்று மேற்படி சம்பள அளவுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சம்பளம் வழங்கப்படுவது 03/2016 அரச நிர்வாக சுற்று நிருபத்திற்கு அமைவாக
- அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் அச் சேவைகளின் பிரிவுத் தலைவர்/ நிறுவனத் தலைவர் ஊடக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்வி / தொழில்சார் / சேவை சான்றிதழ்களின் உறுதி செய்த பிரதிகளுடன் 2024.02.12ம் திகதிக்கு முன் கிடைக்குமாறு தலைவர், விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவ என்ற முகவரியை அடையுமாறு அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பக்கும் பதவிப் பெயரை உறையின் இடதுபக் மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**கவனிக்கவும்:** அரச சேவையில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவை**

# அன்னை முத்துமாரி அருள்பாலிக்கும் புண்ணிய பூமி மாத்தளை



மாத்தளை மலையகத்தின் தலைவாயில். இராமேஸ்வரம் கரையிலிருந்து படகுகள் மூலமும் பாய்மரக் கப்பல் மூலமும் கடலைக் கடந்து, கொடிய காடுகளுக்கிடையே கால்நடையாக உயிர்தப்பி வந்ததற்காக நன்றி கூறும் முதல் தெய்வம், எங்கள் மாத்தளை முத்துமாரி. எங்களது வரலாறு மாத்தளை முத்துமாரியம்மன் வரலாற்றுடன் இணைந்துள்ளது. வரலாற்று சிறப்பும் புராதன தொன்மையும் கொண்ட ஆலயத்தின் மாசி மகோற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் காலை, மாலை திருவிழாக்கள் நடைபெற்று, சுவாமி உள்வீதி, வெளிவீதி வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். காரைநகர் ஈழத்து சிதம்பரம் மங்களேஸ்வரர் குருக்களின் பேரனும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் பிரதான குருக்களுமான சுப்பிரமணிய குருக்களின் மருமகனும், சிவஸ்ரீ மணி சரவணபவாநந்த குருக்கள் மற்றும் சாமி விஸ்வநாத குருக்களிடம் வேதங்களை கற்றவருமான சிவஸ்ரீ கிரியா பானு சு.கிருஸ்ணகுமார் கிரியைகளை நடத்துவார்.



தமிழ் மக்கள் எங்கெல்லாம் புலம் பெயர்ந்து சென்றார்களோ, அங்கெல்லாம் மாரியம்மனையும் உடன் கூட்டிக் கொண்டே சென்றிருக்கின்றார்கள். பிரித்தானியப் பேரரசின்போது உலகத்தின் பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்த தமிழக மக்கள் அங்கெல்லாம் மாரியம்மனைக் கொண்டு சென்று வழிபட்டு வருகின்றார்கள். தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ், தாய்லாந்து மற்றும் பிஜி, மாட்டினிக், குவாதலோப் சென் வின்ஸ்டன், ரீ நாட்இடுபாக்கோ, சுரிநாம், பிரெஞ் கயானா உட்பட பிரெஞ்சு மொழி பேசுகின்ற தீவுகளில் கூட மாரியம்மனைப் போற்றி அருள்பாலித்து வழிபடும் பாங்கினை இன்று காண்கின்றோம். மாத்தளை முத்துமரியம்மையின் தெய்வீக கோலத்தில் சிந்தை இழந்து போனவர்கள் பலர். சைவப் பெரியார் முருகேசுப் பிள்ளை, கவிஞர் நவாலியூர் சு. சொக்கநாதன், கவிஞர் ஈழவாணன், கவிஞர் வி. கந்தவனம் என அம்பிகையைப் பாடி பரவியவர் பலர். 1983ஆம் ஆண்டு ஜுலை மாதக் கலவரத்தில் அசுரர்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட பஞ்சரதங்களையும் மீள நிர்மாணித்து மாத்தளை நகர வீதிகளில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் 1993 அம்பாள் பவனி வரப் பணி செய்த ஸ்ரீமான் மாரிமுத்துச் செட்டியார் மற்றும் பூரண ஒத்துழைப்பு வழங்கிய பரிபாலன சபை உறுப்பினர்கள் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள்.

மாத்தளை முத்துமாரியம்மன் தெய்வீகக் கோலத்தில் சிந்தை இழந்துபோன கவிஞர் நாவலியூர் சொக்கநாதன், 1964ஆம் ஆண்டு எழுதிய "மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி" என்ற நூலை பலரும் மறந்து போயிருந்த நிலையில் பெரும் பொக்கிஷம் எனப் பேணப்படுவதுடன் இளைய தலைமுறையினர் கற்றறிந்து பயன்பெறும் வகையில் மாத்தளை எச். எச். விக்கிரமசிங்க மறுபதிப்பு செய்து 1993ஆம் ஆண்டு தலைவராக இருந்த ஸ்ரீமான் மாரிமுத்துச் செட்டியாரிடம் சமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது. முருகேசுபிள்ளை அன்னை முத்துமாரியை பற்றி பகிரும் அந்தாதி ஊரில் பாடிப்பரவியமை குறிப்பிடத்தக்கது. மலரன்பனின் "மூங்கிலின் நாதம், தென்றலின் கீதமும்" சிலை வடித்து உயிர் கொடுத்த சிற்பி வாழனும் மலையகம் மாத்தளையில் தேரும் ஓடனும் (சீர்காழி சிவ சிதம்பரம்) "பன்னாகமம் என்னும் பொன்னகர் மாத்தளையில்" ஆவணி சதுர்த்தியில் அருளும் சக்தி என மாத்தளை வடிவேலனின் வரிகளில் சங்கீத ரத்னம், என். ரகுநாதன் குரலின் பாடல் ஒலிக்க, ஈழத்து ரத்தினத்தின் வரிகளில், மாத்தளையில் மாசிமாதம் திருவிழா" முதலான பாடல் காதுக்கினிய கீதமாக காற்றில் மிதந்து பக்திப் பரவசத்தை இன்றும் ஊட்டுவனவாகும். மாத்தளையில் மாசிமக திருவிழா என்ற பாடல் வரிகளோடு 'அவள் ஒரு ஜீவநதி' என்ற திரைப்படத்தின் ஊடாக மாத்தளை தேர்த்திருவிழா காட்சிகளை பூஜை வழிபாடுகளை மாத்தளை கார்த்திகேசு பதிவுசெய்திருக்கிறார். மாத்தளை பெ. வடிவேலன் மலையகத்தில் 'மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' உட்பட பல நூல்களை எழுதி வெளியிட்டமை சிறப்பு நிகழ்வாகும்.

மாசிமகமும் பஞ்ச இரத பவனியும் சிறப்பாக நடைபெற அயராது உழைக்கும் ஆலய பரிபாலன சபை தலைவர் விக்கினேஸ்வரர் சர்வானந்தா, செயலாளர் செல்லையா ஜெயராஜ், பொருளாளர் பெரியசாமி மனோகரன், மற்றும் வேலாயுதம் சுதர்ஷன், அங்கமுத்து யோகராஜா செட்டியார், கந்தையா கனகரட்ணம், வேலு அழகேஸ்வரன், அங்கமுத்து திருச்செல்வம் ஆசாரியார், வீரையா முத்துசாமி, இராமசாமி கிருஷ்ணகுமார், சுப்பையா பிரதீபன், மாரிமுத்து நாகேந்திரன், செல்லதுரை விஸ்வநாதன், தியாகராஜா கிஷோகுமார் ஆகியோர் ஆலயத்தை சிறந்த முறையில் பரிபாலித்து வருகின்றனர்.

மாத்தளை முத்துமாரியம்மன் அருளின் அன்பின் இரக்கத்தின் கருணையின் ஒரு குறியீடு. வன்முறையும் கோரமும் தலைவிரித்தாடும் இன்றைய சூழலில் பொறாமையும் எரிச்சலும் பிறர் வாழப்பொறுக்காத தன்மையும், சமூக வாழ்வில் நன்கு வேரூன்றி விட்ட கால கட்டத்தில் மாத்தளை முத்துமாரி அம்பிகையைத் தரிசித்து தேர்திருவிழாவில் கலந்து அன்பையும் இரக்கத்தையும் யாசிப்பது தார்மீகக் கடமையாகும்.



காயத்திரி விக்கிரமசிங்க

## எடிசன் திரை விருது பட்டியலில்

# அதிக பிரிவுகளில் ஜெயிலர், லியோ ஆக்கிரமிப்பு



2023 ஆம் ஆண்டு வெளியீடு கண்ட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் திரைப் படங்களுக்கான எடிசன் திரை விருதுகள் தேர்வு பட்டியல் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள் www.edisonawards.in இணையதளம் மூலம் தங்களுக்கு பிடித்தமான திரை கலைஞர்களுக்கு இணையவாக்குகள் மூலம் வாக்களித்து வருகின்றனர்.

பல்வேறு பிரிவுகளில் தேர்வு பட்டியலில் அதிகப்படியான இடம் பிடித்திருக்கும் திரைப்படங்களில் ரஜினி காந்த் நடித்த ஜெயிலர், விஜய் நடித்த லியோ திரைப்படங்கள் இடம் பிடித்துள்ளன. கடந்த ஆண்டு இணையம் மற்றும் சமூக வலைதளங்களின் மூலம் 40 மில்லியன் பார்வையாளர்களை கொண்டு ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களித்திருந்தனர்.

இவ்வாண்டு தேர்வுப் பட்டியல் வெளியிட்ட ஒரு வாரத்தில் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களித்துள்ளனர். இவ்வாக்களிப்பு கடந்த ஆண்டை விட அதிகமாகும் என சமூக வலைதள நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக விஜய் ரசிகர்களும், ரஜினி ரசிகர்களும் அதிகப்படியான வாக்குகளை செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

எடிசன் விருதுக் குழு தலைவர் செல்வகுமார், "இன்னும் எடிசன் விருதுக்கான விளம்பர யுக்திகளை ஆரம்பிப்பதற்கு முன்பே 10 லட்சம் பேர் வாக்களித்திருப்பது பெருமைக்குரியதாகும். மேலும் பெப்ரவரி 1ஆம் திகதி முதல் பல்வேறு நாடுகளில் உள்ள நாளிதழ்கள், பண்பலை தொலைக்காட்சிகள், இணையதளங்கள், சமூக வலைதளங்கள் மூலம் விளம்பரம் செய்ய உள்ளோம். அதன் பிறகு கடந்த ஆண்டை விட அதிகப்படியான வாக்குகள் மற்றும் பார்வையாளர்களைக் கொண்ட விருதாக மக்களால் கொண்டாடப்பட உள்ளது" எனத் தெரிவித்தார்.



தொடர்புக்கு : **+60166167708.**





கலை ஒளி முத்தையா பிள்ளை நினைவு அறக்கட்டளை சார்பில், மு. நித்தியானந்தன், எச்.எச். விக்கிரமசிங்க ஆகியோர் தொகுத்த தெளிவத்தை ஜோசப்பின் "தெளிவத்தை ஜோசப் கதைகள்" என்ற 59 சிறு கதைகள் அடங்கிய தொகுப்பை, இந்தியாவிலுள்ள பிரபலமான எமரால்டு பதிப்பகம், கோ. ஒளி வண்ணன் வெளியிட்டுள்ளார். தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் இலங்கை புஸ்ஸல்லாவயைச் சேர்ந்த பதிப்பாசிரியர் அர்ஷா, சென்னை புத்தகத் திருவிழாவில், வழங்குவதையும் மருத்துவர் மற்றும் மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் மூத்த பத்திரிகையாளர் இந்து என் ராம் மற்றும் டாக்டர் மோகன் காமேஸ்வரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# வாரபலன்

28.01.2024 - 03.02.2024



கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பர். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் லாபம் குறையாமல் இருக்கும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வது நல்லது. குழந்தைகள் பற்றிய கவலை உண்டாகும். பெண்களுக்கு நெருக்கடியான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சக மாணவர்களின் ஒத்துழைப்பு மனதிருப்தியை தரும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் ஏற்படும். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். பங்குதாரர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலைதூக்கலாம். உத்தியோகத்தில் வேலைப் பளு, வீண் அலைச்சல் குறையும். எதிர்பார்த்த அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும். குடும்ப விவகாரங்களில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். கணவன், மனைவிக்கிடையே மனம்விட்டு பேசுவது கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும். பிள்ளைகளிடம் கோபமாக பேசாமல் அன்பாக பேசுவது நல்லது. பெண்கள் எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மன உறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பர். மாணவர்கள் டென்ஷனை குறைத்து பாடங்களில் கவனம் செலுத்தி படிப்பது நல்லது.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

மற்றவர்களின் உதவியால் காரிய அனுகூலம் உண்டாகும். நீண்ட தூரப் பயணங்களால் இலாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். வாக்கு வன்மை ஆதாயத்தை பெற்று தரும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமாகும். உத்தியோகத்தில் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். நிலுவையில் உள்ள பணம் வரும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனவருத்தம் உண்டாகலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பெண்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் நீங்கும். எதிர்காலம் பற்றிய திட்டம் தோன்றும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

காரியங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். புதுவியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினரின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், பயணங்களின் போதும் கூடுதல் கவனம் தேவை. பெண்கள் அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். நீண்ட தூர தகவல்கள் நல்லவையாக இருக்கும். மாணவர்கள் பதற்றம் கொள்ளாமல் நிதானமாக பாடங்களை படிப்பது நல்லது.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். எதிர்ப்புகள் குறையும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும் எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். சரக்குகளை வாங்கும் போது கவனித்து வாங்குவதும், பாதுகாப்பாக வைப்பதும் நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்பட்டாலும் மனதில் இறுக்கம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்படும். பிள்ளைகளின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பீர்கள். பெண்கள் கோபத்தை குறைத்து நிதானமாக பேசுவது பிரச்சினை ஏற்படாமல் தடுக்கும். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் அலட்சியம் காட்டாமல் இருப்பது நல்லது

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

அதிக கோபத்தால் வீண்பகை உண்டாகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிச் செல்வது நல்லது. ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய ஆர்டர்கள் பெறுவதில் தடுமாற்றம் உண்டாகும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பர். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் குடும்பத்தினருடன் கலந்து கொள்வீர்கள். பெண்கள் உறவினர்களிடம் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் நீண்ட நேரம் கண்விழிப்பதை தவிர்க்கவும். அன்றைய பாடங்களை அன்றைய தினமே படித்து விடுவது வெற்றிக்கு வழிவகுக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்கள் செய்யத் தயங்கும் வேலையை செய்து முடித்து பாராட்டுக் கிடைக்கப் பெறுவீர்கள். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதற்றத்துடன் காணப்படுவர். நீண்ட நாட்களாக இருந்து வந்த மனக்கிலேசங்கள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையில் அன்னியோன்யம் அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். மற்றவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

காரியதாமதம் ஏற்படும். அடுத்தவர்களுக்காக எந்த உத்தரவாதமும் கொடுக்காமல் இருப்பது நல்லது. வீண் மனக்கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதும் நல்லது. சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். பெண்கள் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண எடுக்கும் முயற்சிகள் கைகூடும். எதிர்காலக் கல்வி பற்றிய சிந்தனை மேலோங்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம். எதிலும் திருப்தி இல்லாத மனநிலை இருக்கும். கடித போக்குவரத்து நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்குவர தாமதம் ஆகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். பிள்ளைகள் கல்வியில் அக்கறை காண்பிப்பர். பெண்களுக்கு திட்டமிட்டு செய்தாலும் காரியங்களில் தடை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்கள் தாமதமாக நடக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தினரிடம் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது. சகோதரர் வகையில் உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு எதிலும் தேவையற்ற வீண் கவலை உண்டாகும். கடன் விஷயங்களில் கவனம் தேவை. மாணவர்கள் பாடங்களை படிப்பது அவசியம். சக மாணவர்களுடன் நிதானமாக பழகுவது நல்லது.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

மன உறுதி அதிகரிக்கும். சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். உயர்நிலையில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன் கிடைக்கும். தொழில் வியாபாரத்துக்கு புதிதாக இடம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலைப் பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் சொல்வதை சாதாரணமாக எடுத்துக் கொள்வது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் மனஅமைதி கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனை எழும். பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்யும்போது கவனமாக இருப்பது நல்லது. மாணவர்கள் கல்வி பற்றிய கவலையை தவிர்த்து கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். வாக்கு வன்மை நன்மை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். வியாபார வளர்ச்சி பற்றிய சிந்தனை எழும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் உங்களுடன் இன்முகம் கொடுத்து பேசுவார்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த வருத்தங்கள் நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு ஆடை, ஆபரணங்கள் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்விக்கு தேவையான உபகரணங்கள், புத்தகங்கள் வாங்குவர்.



# படித்ததும் பகர்வதும் 176



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### நல்லிணக்கமும், நல்லுறவும்



இலங்கை போன்ற பல்லின, பல மத, பல மொழிகள் பேசுகின்ற மக்கள் வாழுகின்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு, அந்நாட்டில் வாழும் பலதரப்பட்ட மக்களிடையே நல்லிணக்கமும், நல்லுறவும் இருப்பது அவசியமாகும்.

இலங்கை நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட அண்மையில் யாழ். மாவட்டச் செயலகத்தில், தான் பங்குபற்றிய ஒரு நிகழ்வில் இவ்விடயத்தை வலியுறுத்தி பேசியுள்ளார்.

இனம், மதம் என்ற அடிப்படையில் மக்கள் பிளவுபட வேண்டிய அவசியமில்லை. அனைத்து மக்களும் தமது உரிமைகளைப் பெற்றுக் கொண்டு, ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்கமைய, அனைத்து மதம் தொடர்பிலும் செயற்பட புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் ஆலோசனைக் குழுக்களை நியமிப்பது குறித்து தாம் ஆலோசித்து வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இக்கருத்துக்கள் இன்றைய காலத்துக்கு மிகவும் பொருத்தமானதாகவும், அவசியமானதாகவும் இருக்கின்றன. குறிப்பாக தேர்தல் ஒன்றை எதிர்பார்த்திருக்கின்ற வேளையில் சில அரசிய கட்சிகள் தமது வெற்றிக்காக இன, மத, மொழி வேறுபாடுகளை தூண்டி இலாபமடைய முயற்சிக்கும் வாய்ப்புகள் உள்ளன. கடந்த கால இலங்கையின் தேர்தல் அனுவவங்கள் இத்தகைய எண்ணங்களை தோற்றுவிக்கின்றன.

சுய இலாபங்களுக்காக அல்லது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அல்லது வேறு சில சுய நலன்களுக்காக சிலர் பல்வேறு மதங்களை பின்பற்றுவோர்களிடையே பிரிவினையை தோற்றுவித்து பிரச்சினையை வளர்த்து தமது சுய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள பல்வேறு வகையான தவறான நடைமுறைகளை அல்லது செயற்பாடுகளை முன்வைத்து செயல்படுவது சில அரசியல்வாதிகளின் தவிர்க்க முடியாத நடவடிக்கைகளாக இருந்து வருகிறது.

இதனால் சிலர் தமது உண்மையான நோக்கங்களையும் இலட்சியங்களையும் மறந்துவிட்டு அல்லது மறக்கடிக்க வைத்துவிட்டு தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயல்கின்றனர். இதனால் இவற்றை சரியாக புரிந்துகொண்ட ஒவ்வொருவரும் பிற சமய சமூகத்தவரிடம் நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் வளர்த்து நாடு சுபீட்சம் அடைய துணைபுரிவது அவசியமாகும்.

இவ்வாறான பிரிவினை அரசியல் செயற்பாடுகள் நிச்சயம் அழிவுகளுக்கே வழி வகுக்கும். பொருளாதார அபிவிருத்தி மட்டுமன்றி நாட்டின் அனைத்து முன்னேற்ற முயற்சிகளும் பாதிப்புக்குள்ளாகும். நாட்டு மக்களை துன்பத்திலும், துயரத்திலும் தள்ளிவிடும்.

இவற்றைக் கவனத்தில் எடுத்து, எந்த வகையான அரசியல், அல்லது வேறு நோக்கங்களுக்காகவும், நாட்டு மக்களிடையே துவேசங்களையும், பிரிவினைகளையும், பிளவுகளையும் தோற்றுவிக்கும் எந்தவொரு விடயத்துக்கும் இடமளிக்கக் கூடாது. அது எந்த வழியில், எந்த தோற்றத்தில், எவரால் தோற்றுவிக்கப்பட்டாலும், அதனை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும்.

பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமன்றி, நாட்டின் சகலவிதமான அபிவிருத்திக்கும், சகவாழ்வுக்கும், அமைதிக்கும், நன்மைக்கும் மிக அவசியமானதாகும்.

## நெஞ்சோடு நெஞ்சம்

**எமது நூற்றி எழுபத்தைந்தாவது ‘படித்ததும் பகர்வதும்’ பத்தியினை வாசித்த பின் உள்நாட்டிலிருந்தும்,, வெளிநாடுகளிலிருந்தும் அன்போடு வாழ்த்துக்கள் தெரிவித்து உற்சாகமூட்டிய வாசகர்கள் அனைவருக்கும் மிக்க நன்றிகள்.**

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### சிறப்பான அரசாட்சி



தத்துவஞானி கன்பூசியஸ், தன்னுடைய மாணவர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு மாணவன் எழுந்து, ‘குருவே! என்னை அரச அதிகாரியாக நியமனம் செய்ய இருக்கிறார்கள்? எனக்கு உங்களுடைய அறிவுரை வேண்டும்?’ என்று கேட்டான்.

உடனே அவர் பின்வருமாறு கூறினார்,

‘எந்தச் செயலைச் செய்தாலும், அதில் உடனடியாகப் பலன் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதே. குறுகிய காலத்தில் இலாபம் கிடைக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது. அற்ப இலாபங்களையும் எதிர்பார்க்கக் கூடாது. எதிலும் அவசரம் காட்டாதே. நீ முதலாவதாக செய்யும் தவறு, உன் மேலான மதிப்பை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க வைக்கும். இரண்டாவதும் தவறு செய்தாய் என்றால், அது உன்னுடைய பெரிய சாதனைகளைக் கூட கோட்டைவிடச் செய்துவிடலாம்’.

‘சரி குருவே. அரச அதிகாரி என்ற முறையில் என்னிடம் எதுபோன்ற குறைகள் இருக்கக் கூடாது?’ என்று மீண்டும் அந்த மாணவன் கேட்டான்.

‘உன்னுடைய முடிவுகளில் சுயநலம் அறவே கூடாது. பிடிவாதம் இருக்கக் கூடாது. பாரபட்சமும் காட்டக் கூடாது. அவசரப்பட்டு முடிவெடுப்பது என்பதும் கூடவே கூடாது’ என்றார் கன்பூசியஸ்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான் அங்கிருந்த மன்னனின் மகன். உடனே அவன் எழுந்தான். ‘குருவே! முன்னோர்களின் ஆவிகளுக்கு, நாம் எப்படி கடமைகளைச் செய்வது?’ என்று ஒரு வித்தியாசமான கேள்வியைக் கேட்டான்.

உடனே கன்பூசியஸ் ,‘முதலில் உயிருடன் இருப்பவர்களுக்கு உன் கடமைகளைச் செய். ஆவிகளை பிறகு பார்த்துக் கொள்ளலாம்’ என்றார்.

அந்த இளவரசனிடமிருந்து மீண்டும் ஒரு கேள்வி வந்தது. ‘ஒருவரது ஆட்சி சிறப்பாக இருக்க வேண்டும் என்றால், எவை இருக்க வேண்டும்?’

‘ஆட்சி சிறப்பாக அமைய மூன்று விஷயங்கள் முக்கியம். முதல் தேவை. இருப்பில் போதிய அளவு உணவு. இரண்டாவது மக்களின் பாதுகாப்புக்கு பலமான இராணுவம். மூன்றாவது, மக்களின் நம்பிக்கையை அரசு பெற்றிருப்பது. இந்த மூன்றிலும் தன்னிறைவு பெற்றிருப்பதே சிறப்பான அரசாட்சி.’ என்றார் குரு.

இளவரசன் மீண்டும் கேட்டான். ‘இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றை விட வேண்டும் என்ற நிலை வந்தால் முதலில் விட வேண்டியது எதனை?’

‘இராணுவம்’

‘இரண்டாவதாக ஒன்றை விட வேண்டும் என்றால். ?’

குருவிடமிருந்து பதில் வந்தது, ‘உணவின் இருப்பு’

இப்பதிலைக் கேட்ட மாணவர்கள் அனைவருக்குமே ஆச்சரியம். அவர்களின் ஆச்சரியத்தைக் கண்ட கன்பூசியஸ், அதற்கான விளக்கத்தை அளித்தார்.

‘மாணவர்களே! உணவு இல்லையென்றால் பஞ்சம் ஏற்படும். மக்கள் இறக்க நேரிடும். மனித சமுதாயத்துக்கு இதுபோன்ற நிலை பலமுறை வந்திருக்கிறது. ஆனால், அப்போதெல்லாம் மனித சமுதாயம் அதில் இருந்து மீண்டிருக்கிறது. ஆனால், ஒரு அரசின் மீதுள்ள நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டால், அந்த நாட்டின் நிலை அதோ கதியாகிவிடும்’ என்றார் கன்பூசியஸ்.

இது இன்றைக்கு மட்டுமல்ல. எப்போதைக்கும் பொருந்தும் அல்லவா?

## தகவல் களஞ்சியம்

### ‘ரின் நம்பர்’ (TIN NUMBER)




‘ரின் நம்பர்’ (TIN NUMBER) என்று இன்று எல்லோராலும் பரவலாகப் பேசப்படுகின்ற ‘வரி செலுத்துனர் அடையாள இலக்கம், (TAXPAYER IDENTIFICATION NUMBER) எல்லோருக்கும் அவசியப்படும் ஒன்றாக இன்று மாறியுள்ளது.

வங்கிக் கணக்குகளைத் திறக்கும்போது, கட்டடத் திட்ட அனுமதி கோரும்போது, மோட்டார் வாகனத்தைப் பதிவு செய்யும்போது, உரிமத்தைப் புதுப்பிக்கும்போது, நிலத்தின் உரிமையைப் பதிவு செய்யும் போது என பல விடயங்களுக்கு, இந்த இலக்கம் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

இதனால் இவ் இலக்கத்தைப் பெறுவது கட்டாயம் என்பதால் அதனைப் பெற்றுக்கொள்ள ஒவ்வொருவரும் முயற்சிக்கின்றனர். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்தல் மற்றும் இவ் வரி எண்ணை (TIN), இணையத்தின் மூலம் ஆன்லைனிலும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம் என இறைவரித்திணைக்களம் தெரிவிக்கின்றது. இந்த வரி எண்ணைப் பெறுவதற்காக விண்ணப்பத்தைப் பெறுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. விண்ணப்பத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து அதன் நகலைப் பெற்றிடலாம். மற்றும் திணைக்களத்தின் இணையத்தளத்தில் ஆன்லைனிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

வரி இலக்கத்திற்கான விண்ணப்பத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் www.ird.gov.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று அங்கு கூறப்படும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க முடியும்.

கோரிக்கையை பரிசீலித்த பிறகு, சம்பந்தப்பட்ட நபர் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு இவ் அடையாள எண் (TIN) மற்றும் ஒரு முறை கடவுச்சொல் (PIN) ஆகியவற்றைக் குறிப்பிடும் சான்றிதழ் அனுப்பப்படும் என்று இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனிநபர் ஒருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே, குறிப்பிட்ட நபரின் வரி செலுத்துவோர் அடையாள இலக்கமாகவும், மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளமை இவ்விடயத்தை இலகுவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாடம் தரும் பாடல்

### பகை கொண்ட உள்ளம்


பகை கொண்ட உள்ளம்
துயரத்தின் இல்லம்
தீராத கோபம் யாருக்கு லாபம்
தீராத கோபம் யாருக்கு லாபம்
வீட்டுக்கு வெளிச்சம் வருவதற்காக
கூரையை எரிப்பாரோ
வேதனை தன்னை
விலை தந்து யாரும்
வாங்கிட நினைப்பாரோ
இதயத்தை திறந்து நியாயத்தை பேசு
இதயத்தை திறந்து நியாயத்தை பேசு
வழக்குகள் முடிவாகும்
இருக்கின்ற பகையை வளர்த்திடத்தானே
வாதங்கள் துணையாகும்
வற்றிய குளத்தை பறவைகள் தேடி
வருவது கிடையாது
வாழ்க்கையில் வறுமை வருகின்ற போது
உறவுகள் கிடையாது
பாலைவனத்தில் விதைப்பதனாலே
பயிர் ஒன்றும் விளையாது
பட்ட பின்னாலே வருகின்ற ஞானம்
யாருக்கும் உதவாது

**கவிஞர் புலமைப்பித்தன்**

## நலமே வாழ்வோம்

### நுண்ணுயிர் எதிர்ப்பிகள்!

“மருத்துவர்களின் பரிந்துரையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பு (Antibiotics) மருந்துகளை உட்கொள்ள வேண்டாம். மருத்துவ அனுமதியின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை அதிகமாகப் பயன்படுத்துவதால், பாக்டீரியா தொற்றுகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் திறன் வேகமாகக் குறைந்து வருகிறது” என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. இவ்விடயம் குறித்த விழிப்புணர்வினை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் வேலைத் திட்டங்களை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மேற்கொண்டு வருகின்றது. தவறான பயன்பாடு காரணமாக, நோய்க்கிருமி, பாக்டீரியாக்கள், தற்போது நம்மிடம் உள்ள மிகவும் சக்திவாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு கூட செயல்படாத வகையில் வேகமாக உருவாகி வருகின்றன. இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான மனித உயிர்கள் பலியாகின்றன.




இதிலிருந்து பாதுகாப்புப் பெற கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை தவறாமல் பின்பற்ற முன் வாருங்கள்.

தகுதிவாய்ந்த மருத்துவரின் பரிந்துரையின்றி, தாம் விரும்பியபடி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை (Antibiotics) ஒருபோதும் எடுத்துக்கொள்ளாதீர்கள்.

பரிந்துரைக்கப்பட்ட காலம், நேரம், அளவு என்பவற்றை மிக்ஸ் சரியாகப் பின்பற்றுங்கள்.

மருத்துவரின் அனுமதி இல்லாமல் உங்களுக்கு கொடுக்கப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்பு(Antibiotics) மருந்துகளை வேறொருவருக்கு கொடுக்காதீர்கள்.


பாவித்த பின் எஞ்சியிருக்கும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை (Antibiotics) மீண்டும் பயன்படுத்தாதீர்கள்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**




# செல்வராகவனின் மீது துர்காவுக்கு வெறுப்பா! அவரது கொலைக்கு அவள்தான் பொறுப்பா!

சிறிது நேரம் வரையில்,
தோமஸை பார்த்துக் கொண்டிருந்து விட்டு,
“அப்படியானால் செல்வி துர்கா, சேகர் நேற்றிரவு இங்கே வரவே இல்லையா?”
கேட்டார் சிரஞ்சீவி!
இல்லை என்பதைப் போல்,
அப்படியும் இப்படியும்,
தலையை ஆட்டினார் தோமஸ்!
பிறகு,
“அதுசரி, நீங்கள் ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? அவர் வீட்டில்தானே இருப்பார்? செல்வராகவனின் கொலையைப் பற்றி அவளிடம் நீங்கள் எதுவும் சொல்லவில்லையா?”
பொய் சொல்லுகின்ற பலரையும் தனது தொழிலில் சந்தித்திருக்கின்ற சிரஞ்சீவிக்கு,
அவர் நன்றாகவே பொய் போசுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது!
ஆனாலும்,
அதை,
எவ்வித ஐயமும் ஏற்படாத விதத்தில்,
சொல்லுவதைப் பார்க்கும் போதுதான்
சிரஞ்சீவிக்கு வியப்பாக இருந்தது!
“ஏன் மிஸ்டர் தோமஸ், செல்வராகவனின் மரணச் செய்தியைக் கேட்டு, வியப்படையவோ, கவலைப்படவோ இல்லையல்லவா?” கேட்டுவிட்டு
சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கெண்டார்!
இதைக் கேட்டுவிட்டு,
தோமஸின் வதனத்தில்,
கேலிப் புன்னகை ஒன்று அரும்பியது!
நாற்காலியில் இன்னும் கொஞ்சம் வசதியாக சாய்ந்து அமர்ந்து கொண்டார்.
“திருவாளர் சிரஞ்சீவி அவர்களே, செல்வராகவனின் இழப்பை விட பெரிய இழப்புகளை எல்லாம் சந்தித்த போதும் நான் கவலைப்படவில்லை. அதேநேரம் இப்படி ஒரு மரணம் அவருக்கு நடந்ததையிட்டும் நான் வியப்படையவில்லை!”
“ஏன் அப்படி?” படாரென்று கேட்டார் சிரஞ்சீவி,
அவரிடமிருந்து
இப்படி ஒரு கேள்வி பிறந்ததும்,
சற்று நேரம்,
அமைதியாக இருந்துவிட்டு,
மீண்டும் பேசினார்.
“அவருடைய பொலிஸ் தொழில் பயணத்தில் பல எதிரிகளை அவர் சம்பாதித்து வைத்திருந்தார்! பயங்கரமாக குற்றவாளிகள், புகழ் பூத்த திருடர்கள் போன்றவர்கள் எல்லாம் அவருக்கு ‘தண்ணி’ காட்டிக் கொண்டிருந்தார்கள்! ஆனாலும், அவசரத்துக்கு மருந்து வாங்குவதற்காக விளக்கில்லாமல் மோட்டார் பைக்கில் போனவர்களையும், சைக்கிளில் ‘டபுள்’ போனவர்களையும் அவர் விட்டு வைக்கவில்லை! அதுமட்டுமல்ல நல்லவர்கள் பலருடைய வாழ்க்கை அவரால் சூன்னியமாகிப் போனதை நான் அறிவேன்!”
“ஓ, அவருடைய வாழ்க்கையைப் பற்றி நீங்கள் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்! ஆனால் ஒன்று, நான் இப்படி கேட்கிறேன் என்று நீங்கள் தப்பாக ஏதும் நினைக்கக் கூடாது”
“ம். அப்படி என்ன கேட்கப் போறீங்க? புருவங்களை வில்லாக்கினார் தோமஸ்!
“அவரால் உங்களுக்கும் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டதா?”
இதைக்கேட்டுவிட்டு,
தோமஸ் மீண்டும் சிரித்தான்.
“அவரால் எனக்கு எப்படி பிரச்சினை ஏற்பட்டிருக்க முடியும்? அவரது காலத்தில் நான் வெளிநாட்டில் அல்லவா இருந்தேன்! இங்கே வந்த பிறகுதான் இந்த விஷயங்களை எல்லாம் கேள்விப்பட்டேன்! அது சரி, அவருக்கு எங்கோ வைத்து வெடி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னீர்கள்?”
“ஹா, அவருக்கு வெடி வைத்தார்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?” உற்சாக பானம் அருந்தினார் சிரஞ்சீவி,
இந்த கேள்வியினால்,
தோமஸ், பரபரப்படைவது தெரிந்தது.
ஆனாலும்
ஒரு சில வினாடிகள்தான் அது!
“ம், உங்களுக்கும் ஒரு சந்தேகம் ஏற்பட்டதல்லவா, எனக்கும் அப்படித்தான், துப்பாக்கிச் சூடு நடந்திருப்பதாகத் தான் எனக்குத் தோன்றியது, ஏன் தெரியுமா? நேற்று நள்ளிரவில் அந்தத் தோட்டத்துப் பக்கமிருந்து வெடிச்சத்தமொன்று கேட்டது!” பதற்றத்தை சமாளித்துக் கொண்டு அவர் பேசினார்.
சிரஞ்சீவியின் கழுகு விழிகள், அந்த அறை முழுவதும் ஊர்வலம் வந்தன!
திடீரென்று,
ஓர் இடத்தில் குத்திட்டு நின்றது!
அங்கே இருந்தது,
ஓர் ஊத்தைக் கூடை!
அதற்குள் இருந்த ஏதோ ஒன்று,
அவரைக் கவர்ந்தது!
மெல்ல நடந்து,
அதன் அருகில் வந்து;
அதை வெளியே எடுத்துப் பார்த்தார்!



அதைப் பார்த்ததும்,
வியப்பு அவர் விழிகளில் விளையாடியது!
அது,
அந்த நீரோட்டத்தின் அருகில் இருந்து எடுத்து காலணியின்,
மற்றது,
“ம், மிஸ்டர் தோமஸ் இந்த சப்பாத்தைப் பற்றி உங்களால் ஏதாவது சொல்ல முடியுமா?”
அதைக் காட்டிய படியே,
தோமஸிடம் கேட்டார் சிரஞ்சீவி!
இப்போது!
மிகவும் பரபரப்படைந்தார் தோமஸ்!
ஆனாலும்,
மிகவும் சிரமப்பட்டு,
அடக்கிக் கொண்டதை
சிரஞ்சீவி கவனித்து விட்டார்.
“ஓ, இந்த சப்பாத்தைப் பற்றியா கேக்குறீங்க? இது துர்காவினுடையதுதான், சில தினங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவில் இங்கே வந்தாள். சப்பாத்தில் ஒன்று துலைந்து போயிருந்தது, அதனால் இங்கே இருந்து தனது செக்கட்டரி மேனகாவின் சப்பாத்தை அவளுக்கு கொடுத்து அனுப்பினேன். இதைத் தூக்கி ஊத்தைக் கூடையில் போட்டுவிட்டேன்!
அந்த சப்பாத்தைப் பற்றி,
அதற்கு மேலும் கேள்விகள் கேட்பதற்கு,
சிரஞ்சீவி முயற்சி செய்யவில்லை!
சிந்துஜனின் கையில் இருந்த சிகரட் கேஸை கையில் வாங்கிக் கொண்ட சிரஞ்சீவி!
“ம், மிஸ்டர் தோமஸ் குடிக்கிறீர்களா சிகரெட் ஒன்று?” என்று கேட்டபடியே,
சிகரெட் கேஸை நீட்டினார் சிரஞ்சீவி.
“ம், அதுவும் நல்ல யோசனைதான்! சிகரெட் கேஸை வாங்கி,
சிகரெட் ஒன்றை எடுத்த பற்ற வைத்துக் கொண்டார்!
அப்போது,
சிரஞ்சீவி,
சிந்துஜனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்!
பிறகு,
“சரி, மிஸ்டர் தோமஸ் அப்போ நாங்க கிளம்புறோம்! தேவை ஏற்பட்டால் உங்களை வந்து சந்திக்கிறோம்!”
இருவரும் விடைபெற்றுச் சென்றார்கள்!
“எனக்கொரு சந்தேகம் மாமா?”
வரும் வழியில் கேட்டான் சிந்துஜன்,
“என்ன சந்தேகம்?”
“இல்லை, என்கையில் இருந்த சிகரெட் கேஸை ஏன் திடீரென்று வாங்கி எடுத்து தோமஸின் கையில் கொடுத்தீர்கள்? அதைத் திருப்பித்தராமல் இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது ஏன்?”
“அந்த சிகரெட் கேஸ் இன்னும் இரண்டு நாட்கள் வரை உனக்குக் கிடைக்காது”
“ஏன் அப்படி?”
“தோமஸின் கைரேகைகளை அதில் பதிய வைத்திருக்கிறேன். அதை கொழும்புக்கு அனுப்பி பரிசோதனை செய்வதற்கு இன்னும் இரண்டு தினங்களாவது செல்லும்!”
“ஓ, அதுவும் அப்படியா?”
இருவரும் கஜு மரத்தின் அடிக்கு மீண்டும் திரும்பிவந்த போது,
கிராமத்துவாசிகளின் உதவியோடு ,
இன்ஸ்பெக்டர்,
செல்வராகவனின் பிணத்தைக் கீழே இறக்கி வைத்திருந்தார்!
பிணப் பரிசோதனைகள் யாவும் முடிந்தபிறகு,
தன்னை வீட்டில் வந்து சந்திக்கும் படி அவரிடம் கூறிவிட்டு,
சிந்துஜனையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றார் சிரஞ்சீவி.
“நடந்துவிட்ட இந்த துயர சம்பவம் துர்காவுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையென்று நினைக்கிறேன்! என்னதான் இருந்தாலும் துர்காவுக்கு இருந்த ஒரே உறவினர் செல்வராகவன் மட்டும்தானே இல்லையா மாமா?” வீட்டுக்குள் நுழைந்தபடியே சொன்னான் சிந்துஜன்!
“உண்மைதான்!” என்று சொல்லியபடியே,
சிரஞ்சீவியும் உள்ளே நுழைந்தார்.
அங்கே இருந்த வேலைக்காரர்களின் நடவடிக்கைகளைப் பார்த்தபோது,
செல்வராகவனின் மரணச் செய்தி,
அவர்கள் எவருக்கும் தெரியவில்லை என்பதை இருவரும் புரிந்து கொண்டார்கள்.
பிரதம வேலைக்காரன் மாதுரை அழைத்து விஷயத்தை அறிவித்தபோது,
வியப்பு மிகுதியால்,
அவன் கையில் இருந்த தும்புத்தடி,
அவனையறியாமலேயே கீழே நழுவிச் சென்றது.
மாடியில் இருந்த துர்காவுக்கு தகவல் அனுப்பப்பட்டது.
“சரி, துர்கா வரும்வரை நாம் போய் செல்வராகவனின் அறையைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம்!” என்று சொல்லியபடியே,
சிந்துஜனையம் அழைத்துக் கொண்டு அங்கே சென்றார் சிரஞ்சீவி!
ஆனாலும்,
அந்த அறையின் முன்பக்க வாசல்,
உள் பக்கத்தால் பூட்டப்பட்டிருந்தது.
வியப்புடன் சிந்துஜனைப் பார்த்த சிரஞ்சீவி,
“சரி, பின்பக்க வாசல் பக்கமாகப் போக முடியுமா என்று பார்ப்போம்!”
இருவரும் நடந்தார்கள்!
ஆனால்,
செல்வராகவனின் அறையின் பின் பக்க வாசல் கதவு,
திறந்தே கிடந்தது!
சிரஞ்சீவியும் சிந்துஜனும் ஒருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள்

**(தொடரும்)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 99

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| | 06 | 07 | | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| 14 | | 15 | 16 | | 17 |
| | 18 | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | 25 | 26 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) ஜனநாயக ஆட்சி முறைமை நிலவுகின்ற நாடுகளில், ஆட்சியாளர்களை மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக குறித்த காலப்பகுதிக்கு ஒரு தடவை நடத்தப்படுவது இது.
(6) முட்டையின் உள்ளே காணப்படுவது.
(8) நாம் குடியிருக்கின்ற இருப்பிடம். (தலைகீழான சொல்)
(10) இன்றைய தினத்தின் மறுநாள். (தலைகீழான சொல்)
(12) கழிவுநீர் வடிந்தோடும் கால்வாய். (தலைகீழான சொல்)
(15) ஆறு, குளம், கடல் போன்றன தரையைத் தொடுகின்ற இடம் இது. (தலைகீழான சொல்)
(19) ஆண் ஒருவன் உரிய வயதை அடைந்ததும் திருமணம் செய்த பின்னர், அவனது வாழ்க்கைத் துணைவி இவள்.
(22) முதுகில் மூன்று கோடுகள் அமைந்த பாலூட்டி இன பிராணி இது.
(25) வீதி, தெரு, சாலை என்பது போன்று இதுவும் ஒரு ஒத்தபொருள் சொல்.

**மேலிருந்து கீழ்**

(2) இலங்கையில் வாழ்ந்த சுதேச இனத்தவரில் இயக்கர் ஒருவராவர். மற்றைய இனத்தவர் இவர். (தலைகீழான சொல்)
(3) மரத்தின் ஒத்தபொருள் சொல்.
(5) நரம்பிசை வாத்தியக்கருவி. (தலைகீழான சொல்)
(8) மரங்கள் அடர்ந்த பகுதி இது. பிராணிகள் நிறைந்த உயிர்ச்சாகியம். (தலைகீழான சொல்)
(10) எருது மாட்டை (ஆண் மாடு) குறிக்கின்ற மரபுச்சொல். (தலைகீழான சொல்)
(12) பெற்றோரின் பாசத்துக்குரியவன் இவன். (தலைகீழான சொல்)
(17) கவிஞர்களின் படைப்பு இது.
(18) இந்து, பௌத்த, கிறிஸ்தவ ஆலயங்களில் இதனைக் காணலாம். ஒலி எழுப்புவது.
(20) சமையல் பாத்திரம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 98

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மாலே 08. மான் 06. தைரியம்
13. இமயம் 20. தேனீ 22. சிறுமி

**மேலிருந்து கீழ்**

01. மாகாணம் 03. மாரி 04. ஆயன்
06. மமதை 16. இஞ்சி 17. அம்மி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 97

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எச்.எம். சைத்**
தரம் 04B, அல் ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு.

2. **அப்தார் நூரி**
தரம் 07, டி.எஸ். சேனாநாயக்க கல்லூரி, கொழும்பு.

3. **ஏ. ஷம்றக்ஷா**
தரம் 01A, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, மீசாலை கிழக்கு.

4. **எம்.ஏ.எப். அலீனா**
தரம் 08B, க/ பதிஉத்தீன் ம. வித்தியாலயம், இல. 98/A, மடிகே, கலகெதர.

5. **தி. மனுஜன்**
தரம் 07V, கமு/ விபுலானந்த மத்திய கல்லூரி, இல. 186, திருமால் முக வீதி, காரைதீவு 07.


6. **எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம், இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

7. **எம்.வை. யூசுப் உமர்**
தரம் 04, ஜமியுல் அசர் ம. கல்லூரி, இல. 17/1, தரகமுவ வீதி, உடதலவின்ன, மடிகே.

8. **ரமீஸ் இமாரா இஸ்ரா**
தரம் 10, அல் - அமான் மு.ம. கல்லூரி, கல்லொலுவ, மினுவாங்கொடை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 99
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**இல்வாழ்க்கை :** துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந் தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை.

**தெளிவுரை :**
துறந்தவர்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க் கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கிறவன் துணையா வான்.

# கஷ்டமும் அனுபவம் தான்

பேரறிஞர் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா தனது முதுமைக் காலத்தில் ஒருநாள் மிகவும் நெஞ்சுவலியால் அவதிப்பட்ட போது, தன்னுடைய டொக்டருக்கு போன்செய்து நெஞ்சு வலி அதிகமாக இருக்கிறது. எனவே, தன் வீட்டிற்கு உடனே வருமாறு அழைத்தார்.

அதற்கு மருத்துவர் தன்னுடைய கிளினிக்கில் நிறைய நோயாளிகள் காத்திருக்கின்றனர். எனவே, தன்னால் வரமுடியாது... ஏன் நீங்கள் கிளினிக் வரவேண்டியது தானே? என்றார். ஷா, தன்னால் எழுந்து நடக்க முடியவில்லை, தேநீர் கூட போட்டு குடிக்க முடியவில்லை, தொடர்ந்து நிற்கவே முடியவில்லை என்றார். சரியென்று டொக்டரும் பெர்னார்ட் ஷா வீட்டிற்கு வந்தார். மாடியில் தங்கியிருந்த ஷாவைப் பார்க்க படியேறிவந்தார்.

ஷாவைக் காட்டிலும் முதியவரான மருத்துவருக்கு மூச்சுவாங்க தன்னுடைய நெஞ்சைப் பிடித்தபடி கதிரையில் அமர்ந்துவிட்டார். அதைப்பார்த்து பதறிப்போன ஷா எழுந்து சூடாக தேநீர் போட்டுவந்து மருத்துவருக்கு கொடுத்து, அவரின் நெஞ்சைத் தடவிவிட்ட படி நின்றார். அவரும் தேநீர் குடித்து முடித்து, நிதானமாக தன்னுடைய பேப்பர்பேடை எடுத்து 30 பவுண்ட்ஸ் பில் எழுதி பெர்னார்ட் ஷா கையில் கொடுத்தார். ஷா, சிரித்துக் கொண்டே டொக்டரைப் பார்த்து, என்னப்பா டொக்டர் இது? எனக்கு வைத்தியம் பார்க்க வந்த உனக்கு நெஞ்சு வலி வந்து நான்தானே பணிவிடை செய்தேன். எனக்கே பில் எழுதி தருகிறாயே? எனக்கேட்டார்.

அதற்கு டொக்டர்;

உங்களுக்கு பார்த்த வைத்தியத்துக்குத் தான் இந்த பில் என்றார். மீண்டும் டொக்டர் சொன்னார், போனில் என்னிடம் என்னவெல்லாம் பிரச்சினை சொன்னீர்கள்? 'எழுந்து நடக்க முடியவில்லை' என்றீர்கள். இப்போது ஓடோடி வந்தீர்கள். உங்களுக்கே தேநீர் கூட போட்டுக்கொள்ள முடியவில்லை என்றீர்கள். ஆனால், எனக்கும் தேநீர் போட்டு தந்தீர்கள். தொடர்ந்து நிற்கவே முடியவில்லை என்றீர்கள். இப்போது அரைமணி நேரமாக நிற்கிறீர்கள். உங்கள் கஷ்டத்தை மட்டும் பார்த்தீர்கள்; அதனால் அவை பெரிதாக தெரிந்தன. இப்போது எனது கஷ்டத்தைப் பார்த்ததால் உங்களின் கஷ்டம் மறந்துவிட்டது என்றார்.

கஷ்டமும் அனுபவம் தான்.

## இவ்வார மழலை



**ஸெய்த் அஜமத்**
தன்ஸீஹ் அனிபா – மிப்ராஸ் வபா

## சிந்தனைத் துளிகள்

- ★ சுயநலம் என்பது நெருப்பை போன்றது.
- ★ ஒருவரின் அவசரம் அவன் செயல் அனைத்தையும் பாழாக்கி விடும்
- ★ செல்வத்தைப் பாதுகாப்பதை விட பேச்சை பாதுகாப்பது நலம்.
- ★ நல்ல மனச்சாட்சி என்பது ஒரு மென்மையான தலையணையைப் போன்றது.

கே.எல். ஹில்மி - தேசிய பாடசாலை, சம்மாந்துறை

## தங்கச் சிலந்தி

இரும்பு இழையை விட பலமான சிலந்தி வலைகளை பின்னும் சிலந்திகள் இருப்பதாக ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

Golden Spider "தங்கச் சிலந்தி" என்ற ஒருவகை சிலந்தியின் இழைகள், அதே தடிமனுள்ள இரும்பு இழையை விட பலமானது. அதேபோல், மடகஸ்காரில் இருக்கும் Darwin Bark Spiders வகை சிலந்திகள் 82 அடி நீள இழைகளை உருவாக்கும் திறன் பெற்றவை.

இவை உருவாக்கும் வலைகள் 30 சதுர அடிகள் வரை இருக்கும்.

சிலந்திகள் தங்கள் வலைகளை ஓரங்களில்தான் முதலில் பின்னத்தொடங்குகின்றன. கொஞ்சம் கொஞ்சமாக நடுப்பகுதியை நோக்கி பின்னிக் கொண்டே வந்து முடிக்கின்றனவாம்.


சிலந்திகளின் வயிற்றுப்பகுதியில் இருக்கும் நாளங்கள்தான் வலை பின்னத் தேவையான பசை போன்ற இழைகளைத் தருகின்றன என்பது நமக்குத் தெரிந்திருக்கும். புரோட்டீன் நிறைந்திருக்கும் அந்த இழைகள் சிலந்திகளின் வயிற்றிலிருந்து வெளிப்பட்ட உடனே கெட்டியாகி நூல் போல் மாறி விடுகிறதாம்.





ஏ.வி.ஏ அப்துல்லாஹ்
தரம் 7B, அரபா தேசிய பாடசாலை, வெலிகம.

## அதிக சத்தத்தை எழுப்பும் மீனினம்



ஒரு ஜெட் விமானத்தின் இயந்திரத்தில் இருந்து வரும் சத்தத்தை விட அதிகம் சத்தம் எழுப்பும் மீனினங்கள் உள்ளன என்பது நம்ப முடியாத காரணியாக உள்ளது. *Pistol Shrimp* எனப்படும் இறால் மீன் வகை மூன்றிலிருந்து ஐந்து சென்டிமீற்றர் நீளமே வளரக்கூடியது. ஆனால், இந்த வகை மீன்கள் எழுப்பும் சத்தமோ மிக அதிகம்.

இவற்றின் இரண்டு நக்ங்களில் (கொடுக்கு) ஒன்று மட்டும் பெரிதாக இருக்கும். இந்தப் பெரிய நகத்தில், பின் பக்கம் நகரக்கூடிய சுத்தியல் போன்ற பகுதி ஒன்றும், நகர முடியாத அடிப்பகுதி ஒன்றும் இருக்கின்றன. இதில் சுத்தியல் போன்ற பகுதி வேகமாக மற்றொரு பகுதியுடன் மோதும் போது மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் தண்ணீரை வெளியே தள்ளுகின்றன. இந்தச் செயலால் தண்ணீரில் ஏற்படும் நீர்க்குமிழிகள் உடையும்போது தான் ஜெட் எஞ்சினை விட அதிக அளவில் சத்தம் வருகின்றன. மிருகக்காட்சி சாலைகளில் இருக்கும் பெரிய பெரிய மீன் தொட்டிகள் கூட இந்தச் சத்தத்தால் உடைந்துவிடும்.

## மண்பானையும் குளிர்ந்த நீரும்



மண் பானையில் வைக்கப்படும் நீர் மட்டும் வெயில் காலங்களில் குளிர்ச்சியாக இருப்பதன் காரணமென்ன தெரியுமா?

நவ நாகரிக வளர்ச்சியில், மண்பானை என்பது மறந்தே போய்விட்டது.

அதை மீண்டும் பழக்கத்திற்குக்கொண்டு வந்த பெருமையெல்லாம் பொருளாதார நெருக்கடியில் ஏற்படுத்தப்பட்ட மின் வெட்டையே சாரும்.

பானைகளில் இருக்கும் சிறு சிறு துளைகள் வழியாக உள்ளிருக்கும் நீர் வெளியேறி, வெயில் மிகுதியால் நீராவியாக மாறுகிறது. இந்த நீராவியே, பானைக்குள் இருக்கும் நீரை குளிர்ந்த நீராக மாற்றுகிறது.

குளிர்/ மழைக்காலங்களில் வெயில் குறைவாக இருப்பதால், நீர் நீராவியாக மாறுவதில்லை, பானைக்குள் இருக்கும் நீரும் ஜில்லென்று மாறுவதில்லை.

வீட்டிலிருக்கும் மண் பானையின் வெளிபுறத்தில் படிந்திருக்கும் நீர் துளிக்கு இது தான் காரணம்.

## மனிதனாய் வாழ்வோம்

பெரியவர் சொல் கேட்போம்
பெரிதா யதை யேற்போம்
சிறுவ ருரிமை காப்போம்
சேர்ந் தொழுகி சிறப்போம்

பொதுமறை வழி செல்வோம்
பொறுமையால் மனம் வெல்வோம்
பொதுநல வழி வாழ்வோம்
புதுமையா வுல காள்வோம்

பள்ளிப் பாடம் பயிலுவோம்
பாகா யறிவை பருகுவோம்
அள்ளி யேழைக் கேகுவோம்
அதிலே யின்பம் காணுவோம்

எறும்பு போல் இணைவோம்
இனத்தைக் காக்க முயல்வோம்
அரும்பு போல் எழுவோம்
அகிலம் காத்து மகிழ்வோம்

கரும்பு போல் இனிப்போம்
கசடுகள் மனதில் தனிப்போம்
வரம்பைப் போல் இருப்போம்
வயல் நதிகளைக் காப்போம்

தந்தை சொல் பணிவோம்
தாயைக் கண்டதல் குனிவோம்
மந்தை செயல் மறப்போம்
மனிதனாய் வாழ்ந்து மரிப்போம்

வரக்காமுறையூர் ராசிக்...

## 'ஐஸ்' எரிமலை



*Cryovolcano* என்றால் *Ice Volcano* என்று அர்த்தம். இந்த வகை எரிமலைகள் வெடிக்கும்போது வழக்கமாக வரும் எரிமலைக்குழம்போ, பாறைகளோ வெளிவருவதில்லை. மாறாக இவற்றிலிருந்து நீர், அமோனியா, மீத்தேன் போன்றவை வெளிவருகின்றன. பெரும்பாலும் திரவ/திட வடிவிலும், சில சமயங்களில் வாயு வடிவிலும் வெளிவரும் இவற்றின் பெயர் *cryomagma (icevolcanic melt)*.

இந்த வகை எரிமலைகள் முதன்முதலில் நெப்டியூன் கோளின் நிலா *Triton*இல் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டன. அதேபோல் ஜுபிட்டர், மிரண்டா, ஜெனிமீடி, டைடேன் *Europa(sixthclosest moon of the planet Jupiter), Miranda(the smallest and innermost of Uranus's five major moons), Ganemede( satellite of Jupiter and the largest moon in the Solar System), Titan(Ice Moon of Saturn)* போன்ற நிலவுகளிலும் ஐஸ் எரிமலைகளைக் கண்டுபிடித்துள்ளனர் ஆராய்ச்சியாளர்கள். இந்த "ஐஸ்" எரிமலைகள், நிலவுகளில் மட்டுமே காணப்படுகின்றன.

## அறிந்து கொள்வோம்

1. கடல்களில் எஜமானி என்றழைக்கப்படும் நாடு
இங்கிலாந்து
2. உலகிலேயே மிகவும் பெரிய தேசியக் கொடி கொண்ட நாடு
டென்மார்க்
3. இந்திய அரசு அளிக்கும் பத்ம ஸ்ரீ விருதில் 'பத்ம' என்ற வார்த்தை எந்த பூவை குறிக்கும்?
தாமரை
4. ஆர்டிக் பெருங்கடலின் வடிவம்
வட்டம்
5. முதல் இரும்பு கப்பலை செய்தவர்
வில்கின்சன்
6. தீப்பெட்டியை கண்டுபிடித்தவர்
லேண்ட் டார்ம்
7. மாலைதீவின் தேசிய மரம்
தென்னை மரம்

ஹரிஹர சுதன்
கேம்பிரிட்ஜ் பாடசாலை – கொழும்பு

# விளையாட்டு

# இலங்கை கிரிக்கெட்டும் யாப்பு மாற்றமும்

இலங்கை கிரிக்கெட் யாப்பை மாற்ற வேண்டும் என்பது பெரும்பான்மையானவர்களின் கருத்து. இலங்கை கிரிக்கெட்டில் இருக்கும் நிர்வாகப் பிரச்சினைகள் தொடக்கம் மைதானத்தில் சந்திக்கும் தோல்விகள் வரை அனைத்தையும் சரி செய்வதற்கு முதலில் யாப்பை மாற்ற வேண்டும் என்பது அவர்களின் கூற்று.



யாப்பு மாற்றம் பற்றிய கதை பல தசாப்தங்கள் பழையது. என்றாலும் கடந்த ஒரு தசாப்தத்தில் இந்தப் பேச்சு வலுப்பெற்று இலங்கை கிரிக்கெட் மீதான சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் தடையுடன் தீவிரம் பெற்றிருக்கிறது.

பதவிக்கு வருகின்ற விளையாட்டுத் துறை அமைச்சர்கள், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் ஏன் சில நேரங்களில் இலங்கை கிரிக்கெட் நிர்வாகங்கள் கூட யாப்பை மாற்ற வேண்டும் என்று வாயளவில் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

முன்னாள் அணித் தலைவர் மைக்கல் திசேரா மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கும் முத்தைய முரளிதரன் இது தொடர்பில் நீதிமன்றம் வரை சென்றார்கள்.

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் ஆலோசனையை பெற்று இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக புதிய யாப்பு ஒன்றை தயாரிப்பதாக 2022 டிசம்பரில் அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதி அளித்திருந்தார்.

என்றாலும் குழுக்கள் அமைப்பதும், யாப்பு வரைவுகள் முன்வைக்கப்படுவதும் முடிந்ததாகத் தெரியவில்லை. இதன் தொடர்ச்சியாக தற்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ இலங்கை கிரிக்கெட்டுக்கு புதிய யாப்பை வரைவதற்கு ஐந்து பேர் கொண்ட குழுவை நியமித்திருப்பதாக செய்தி வெளியாகி இருக்கிறது.

இந்தக் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான குவேரா டி சொய்ஸா, நவீன் மாரப்பன மற்றும் சட்டத்தரணிகளான சந்திமால் மெண்டிஸ் மற்றும் பந்துல கீர்த்திரத்னவுடன் சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலால் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசகர் ஒருவரும் உள்ளக்கப்பட்டிருக்கிறார்.

இந்த குழு தமது முன்மொழிவுகளை முதலில் ஐ.சி.சி. மீளாய்வுக்கு அனுப்பி அதன் பரிந்துரைகள் அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் அங்கத்தவர்களால் யாப்பை நிறைவேற்ற எதிர்பார்க்கிறது.

நியமிக்கப்பட்டிருக்கும் இந்த புதிய குழுவின் நோக்கமும் வழக்கமானது தான். இலங்கை கிரிக்கெட்டின் செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்துவது பிரதான நோக்கம் என்பதோடு நிதிகளை தனிப்பட்ட விருப்பு மற்றும் நலன்களுக்கு அப்பால் கிரிக்கெட் வளர்ச்சிக்கு பயன்படுத்துவது பிரதானமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

என்றாலும் இலங்கை கிரிக்கெட் யாப்பு மாற்ற முயற்சி என்பது ஒரு கட்டத்திற்கு மேல் நகர்வதாக தெரியவில்லை.

அண்மையில் தான் நீதிமன்றம் பச்சைக் கொடி காட்டியதை அடுத்து ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் கே.டீ. சித்ரசிறி இலங்கை கிரிக்கெட்டுக்கான புதிய யாப்பு வரைவு ஒன்றை பூர்த்தி செய்திருந்தார்.

அந்த யாப்பு வரைவில் இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மை, சபை நிர்வாகத்தில் அதிக தொழில்முறையாளர்களை உள்ளடக்குவது, வாக்களிக்கும் முறையில் மாற்றங்கள் செய்வது ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

நீதியரசர் கே.டி. சித்ரசிறி தலைமையிலான குழுவின் இந்த யாப்பு வரைவு, பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் நிறைவேற்றப்படும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை கிரிக்கெட்டில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பதில் அரசு மற்றும் எதிர்க்கட்சி இரு தரப்பும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன.

குறிப்பாக இலங்கை கிரிக்கெட் விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அமைச்சரவை உபகுழுவும், கிரிக்கெட் நிர்வாகத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்று உறுதியாகக் குறிப்பிட்டிருக்கிறது.




எனினும் ஹரீன் பெர்னாண்டோ புதிய குழு ஒன்றை நியமித்திருப்பதாக வெளியான செய்தி சித்ரசிறி குழுவின் நகல் யாப்பை செல்லுபடியற்றதாக்கும் ஒன்றாகவே இருக்கும். யாப்பு வரைவு என்ற பேச்சு மீண்டும் பூஜ்யத்தில் இருந்து ஆரம்பிப்பதாகக் கூட எடுத்துக் கொள்ளலாம்.

என்றாலும் இலங்கை கிரிக்கெட் யாப்பு மாற்றத்திற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்படுவது ஒன்றும் புதிதல்ல. பல தரப்புகளும் யாப்புத் திருந்தங்கள் பற்றிய நகல்களை முன்வைத்திருக்கின்றன.

குறிப்பாக முன்னாள் இலங்கை வீரர் சிதத் வெத்தமுனி யாப்பு மாற்றம் பற்றி அடிக்கடி பேசி வருகிறார். 2015இல் அவர் இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை தலைவராக இருந்தபோது கூட யாப்பு வரைவு ஒன்றை முன்வைத்திருந்தார்.

அதிலும் இலங்கை கிரிக்கெட் உறுப்பினர்களில் ஒப்புதலால் அன்றி பாராளுமன்ற சட்டம் ஒன்றினாலேயே யாப்பை மாற்ற வேண்டும் என்கிறார் வெத்தமுனி.

"உறுப்பினர்களால் அன்றி பாராளுமன்றத்தின் சட்டத்தின் மூலம் யாப்பை மாற்றுவதுதான் இலங்கை கிரிக்கெட்டுக்கு இருக்கும் ஒரே வழி, ஏனெனில் (உறுப்பினர்கள் மூலம்) தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஒருபோதும் பெற முடியாது" என்கிறார்.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் பற்றி குறை கூறுபவர்கள், அதன் வாக்களிப்பு முறை மற்றும் நிதியை கையாளும் முறை பற்றியே பெரிதாக பேசுகிறார்கள். அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அமைச்சரவை உபகுழு கூட வாக்களர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு பரிந்துரைக்கிறது.

தற்போது இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை தேர்வு செய்வதற்கு 147 வாக்குகள் உள்ளன. என்றாலும் அது சர்வதேச தரத்துக்கு குறைக்கப்பட வேண்டும் என்பது முக்கியமான பரிந்துரை.

குறிப்பாக அவுஸ்திரேலியாவில் வாக்குரிமை எண்ணிக்கை வெறும் ஆறு என்பதோடு பாகிஸ்தானில் கூட அது 17 ஆகத்தான் இருக்கிறது. 1.408 பில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்தியாவிலும் 38 வாக்குகள் தான் இருக்கின்றன.

சாதாரண அரசியல் மட்டத்திலான தேர்தல்களில் அனைவருக்கும் வாக்குரிமை இருக்க வேண்டும் என்ற கோட்பாடு இப்படியான நிர்வாகத் தேர்தல்களுக்கு பொருந்தாது. அங்கே வாக்காளர்கள் கூடக் கூட அவர்களை திருப்திப்படுத்த வேண்டி தேவை கூடுகிறது.

அதாவது வாக்களிக்க உரிமை பெற்றிருக்கும் விளையாட்டு சங்கங்கள், பிரதிநிதிகளை வளைத்துப்போடவும் அவர்களை திருப்திப்படுத்தவும் ஓட்டுக் கேட்கும் தரப்பு தாம் வந்த வேலைக்கு அப்பால் வேறு வேலைகளை செய்ய வேண்டி ஏற்படுகிறது. இதனால் குறிப்பிட்ட தரப்பினருக்கு மாத்திரமே நிர்வாகத்திற்கு வர முடியும்.

இது தான் இலங்கை கிரிக்கெட் முகம்கொடுக்கும் பிரச்சினைகளின் ஆரம்பப் புள்ளி என்பது சீர்திருத்தங்களை எதிர்பார்க்கும் தரப்பின் கூற்று.

நாட்டின் கழகமட்ட கிரிக்கெட் முறைமை மற்றும் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்து வரும் பழைமையான கிரிக்கெட் சபை வாக்களிப்பு முறை இலங்கை கிரிக்கெட்டின் தற்போதைய அவல நிலைக்கு காரணம் என்று வெத்தமுனி தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

இலங்கையில் இருக்கும் மாகாணங்களின் எண்ணிக்கை 9 தான். ஆனால் கிரிக்கெட் சபை தேர்தலில் 147 வாக்குகள் உள்ளன. அதிகாரம் மிக்க கிரிக்கெட் கழகங்கள் என்று கருதப்படும் பிரபலமான எஸ்.எஸ்.சி., என்.சி.சி., ப்ளூம்பீல்ட், தமிழ் யூனியன் மற்றும் கோல்ட்ஸ் கழகங்களுக்கு தலா 2 வாக்குகள் உள்ளன.

ஆனால் முதல்தர போட்டிகளில் கூட ஆடாத, பெயரளவில் மாத்திரம் இருக்கும் கிரிக்கெட் கழகங்களுக்கும் இரண்டு வாக்குகள் உள்ளன. ஊர் பேர் தெரியாத அந்தக் கழகங்களும் பிரபல கழகங்களும் நிர்வாகத் தேர்வு என்று வரும்போது சரிசமமாக பார்க்கப்படுவது ஒரு பக்கம் சமத்துவம் என்று குறிப்பிட முடியாது.

இது குறிப்பிட்ட தரப்புகள் மாத்திரமே கிரிக்கெட் நிர்வாகத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த மாத்திரமே வழிவகுக்கும்.

மற்றது இலங்கை கிரிக்கெட் நிதி விவகாரம் பெரும் குழப்பத்திற்குரியது. முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இலங்கை கிரிக்கெட்டில் ஊழல் நடப்பதாக தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தார்.

இலங்கையின் ஏனைய விளையாட்டுடன் கிரிக்கெட் நிர்வாகத்தை ஒப்பிட முடியாது. அது நாட்டில் இருக்கும் மிகச் செல்வந்த விளையாட்டு நிர்வாகம். அதன் சொத்துகள் இலங்கை ரூபாவில் அன்றி அமெரிக்க டொலர்களில் மதிப்பிட முடியுமானது. அப்பேர்ப்பட்ட கிரிக்கெட் நிர்வாகத்தின் நிதியை கையாள்வதை முறைப்படுத்துவது என்பது மற்றொரு முக்கிய தேவையாக இருக்கிறது.

இதற்கு புதிய யாப்பு ஒன்றை கொண்டுவருவது முக்கியம்.

ஆனால் தற்போதைய போக்கை பார்த்தால் அதனை கொண்டுவருவது நினைத்த அளவு இலகுவானதாக தெரியவில்லை.



**எஸ்.பிர்தௌஸ்...**

# உச்சம் தொடும் சமரி அத்தப்பத்து



ஆடவர் கிரிக்கெட்டை விடவும் நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் பலமானது. அதனை சாய்ப்பது எதிரணிகளுக்கு சவாலானது. என்றாலும் இலங்கை மகளிர் அணி அத்தனை வலுவான அணியாக பார்க்கப்படுவதில்லை. ஆனால் சமரி அத்தபத்து என்ற ஒரே ஒருவர் ஒட்டுமொத்த இலங்கை அணியையும் வலுவான அணியாக மாற்றிய கதை உலகறிந்தது.

கடந்த 2023 ஜூன், ஜூலை மாதங்களில் இலங்கை வந்த நியூசிலாந்து மகளிர் அணி ஆடிய ஒருநாள் தொடரில் சமரி அத்தப்பத்துவை சமளிப்பது பெரும்பாடாகிப் போனது.

முதல் ஒருநாள் போட்டி மழையால் 28 ஓவர்களுக்கு மட்டுப்பட நியூசிலாந்து 172 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. ஆனால் ஆரம்ப வீராங்கனையாக வந்த சமரி பந்தை பௌண்டரிகள், சிக்ஸர்கள் விளாச 9 விக்கெட்டுகளால் இலங்கை மகளிர் அணியால் வெல்ல முடிந்தது. அத்தபத்து 83 பந்துகளில் 10 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 108 ஓட்டங்களை விளாசினார்.

> **சாமரி இதுவரை 98 ஒருநாள் போட்டிகளில் 3255 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு இதிலே 8 சதங்கள் மற்றும் 15 அரைச்சதங்கள் அடங்கும். ஓட்ட சராசரி கூட 34.26 என சிறப்பாக உள்ளது. மகளிர் டி20 சர்வதேச போட்டியில் இதுவரை 122 போட்டிகளில் விளையாடி இருக்கும் அவர் 2651 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். இதில் ஒரு சதம் மற்றும் 8 அரைச்சதங்கள் அடங்கும்.**

இரண்டாவது ஒருநாள் போட்டியில் சமரியை பூஜ்யத்திற்கு வெளியேற்றிய நியூசிலாந்து அந்தப் போட்டியில் வெற்றியீட்டியது. ஆனால் மூன்றாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணிக்கு 29 ஓவர்களில் 196 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலங்கை வீராங்கனைகள் 6 ஓட்டங்களுக்கே முதல் இரண்டு விக்கெட்டுகளையும் இழந்தனர். ஆனால் ஒரு முனையில் இருந்த சமரி ஆட்டத்தை முழுமையாக திசை திருப்பினார். ஆட்டமிழக்காது 80 பந்துகளில் 13 பௌண்டரிகள் மற்றும் 9 சிக்ஸர்களுடன் 140 ஓட்டங்களை விளாசினார்.

இதனால் இலங்கை மகளிர் அணி அந்தப் போட்டியில் 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது மாத்திரமல்ல வரலாற்றில் முதல் முறையாக ஒருநாள் தொடர் ஒன்றில் நியூசிலாந்தை வீழ்த்தியது.

உண்மையில் கடந்த அரைத் தசாப்தத்திற்கு மேலாக இலங்கை மகளிர் கிரிக்கெட் என்பது சமரி அத்தப்பத்துவை சுற்றியே இயங்கி வருகிறது. அவரது திறமை ஏனைய வீராங்கனைகளுடன் ஒப்பிடுகையில் அசாதாரணமானது, விதிவிலக்கானது.

இடது கை வீராங்கனையான அவரது துடுப்பாட்டம் மிக நேர்த்தியானது. எந்த பிசகும் இல்லாமல் பந்தை பௌண்டரிக்கு செலுத்தக் கூடியவர். லாவகமாக சிக்ஸர் அடிப்பார்.

அவர் இதுவரை படைத்திருக்கும் சாதனைகள் இலங்கை மகளிர் கிரிக்கெட்டில் வேறு எவரும் தொடாதது. ஒருநாள் துடுப்பாட்டத்தில் இன்னிங்ஸில் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற வீராங்கனை வரிசையில் முதல் 10 இடங்களிலுமே சமரி அத்தபத்துதான் இருக்கிறார். டி20 கிரிக்கெட்டிலும் இதே கதைதான்.

33 வயதான சமரி இதுவரை 98 ஒருநாள் போட்டிகளில் 3255 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு இதிலே எட்டு சதங்கள் மற்றும் 15 அரைச்சதங்கள் அடங்கும். ஓட்ட சராசரி கூட 34.26 என சிறப்பாக உள்ளது. மகளிர் டி20 சர்வதேச போட்டியில் இதுவரை 122 போட்டிகளில் விளையாடி இருக்கும் அவர் 2651 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். இதில் ஒரு சதம் மற்றும் 8 அரைச்சதங்கள் அடங்கும்.

இப்போது சர்வதேச மட்டத்தில் லீக் டி20 தொடர்களிலும் சமரியின் கிராக்கி அதிகரித்திருக்கிறது. கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த மகளிர் பிக் பாஷ் தொடரில் அதிக ஓட்டங்கள் பெற்றவர் வரிசையில் அவரால் இரண்டாவது இடத்தை பிடிக்க முடிந்தது. பின்னர் நியூசிலாந்தின் மகளிர் சுப்பர் ஸ்மாஷ் தொடரிலும் சோபித்தார்.

இந்தியாவின் மகளிர் பிரீமியர் லீக் தொடருக்கான ஏலத்தில் பங்கேற்ற அவர் விலைபோகாதது எல்லோருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் இப்போது அவர் மாற்று வீராங்கனையாக ஒப்பந்தமாகி இருக்கிறார்.

யுபி வொரியர்ஸ் அணியில் இங்கிலாந்தைச் சேர்ந்த வெளிநாட்டு வீராங்கனை லோரன் பெல் விலகியதால் அந்த இடத்தில் அவரது அடிப்படை விலையான இந்திய நாணயத்தில் 30 இலட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தமாகி இருக்கிறார்.

இது எல்லாவற்றுக்கும் உச்சமாக சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் அவரை ஐ.சி.சி சிறந்த ஒருநாள் வீரங்கனையாக அறிவிக்கப்பட்ட சமரி, ஐ.சி.சி. ஒருநாள் மற்றும் டி20 அணிகளின் தலைவியாகவும் பெயரிடப்பட்டார்.

சமரி அத்தபத்து என்பவர் இப்போது சர்வதேச தரம் வாய்ந்த வீராங்கனை. மகளிர் கிரிக்கெட்டில் அவர் தவிர்க்க முடியாத ஓர் ஆளுமை. அவரது திறமை என்பது இலங்கை மகளிர் கிரிக்கெட்டின் திருப்பமாக மாறினால், மாற்றிக் கொண்டாலே உச்சம் பெறும். அதனை புரிந்து அவரை பயன்படுத்திக் கொள்வது அவசியம்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



ஐஸ்வர்யா ராஜேஷ்

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்


# ‘பூமி ஒளி’



பூமியில் இருந்து நிலவை பார்ப்பதை விடவும் நிலவில் இருந்து பூமியை பார்த்தால் பூமி 16 மடங்கு பெரிதாகத் தெரியும். அதே போன்று நிலவில் இருந்து முழு பூமியை பார்க்கும்போது அது 16 மடங்கு பெரிது மாத்திரமல்ல மூன்று மடங்கும் அதிக ஒளியை பிரதிபலிப்பதாக இருக்கும். அதாவது பூமிக்கு நிலவில் இருந்து வரும் வெளிச்சத்தை விடவும் நிலவுக்கு பூமியில் இருந்து வரும் வெளிச்சம் 50 மடங்கு அதிகமாக இருக்கும்.

விண்வெளியில் பூமி என்பது அதிக வெளிச்சத்தை பிரதிபலிக்கும் ஒரு பொருள். இதற்கு நல்ல உதாரணம் பிறை நிலவு. பிறை நிலவில் பிறை மாத்திரம் தெரிவதில்லை. நிலவின் முழு வட்டத்தையும் மங்கலாக பார்க்க முடியும். பிறை நிலவில் சூரியனில் இருந்து பட்டுத் தெரிக்கும் ஒளி பூமியை அடைந்து அந்த ஒளி பூமியில் பட்டுத் தெறிப்பதாலே பிறை நிலவின் இருண்ட பக்கத்தையும் எம்மால் பார்க்க முடிகிறது. இதனை ‘பூமி ஒளி’ என்று அழைப்பார்கள்.

## கொலையை விஞ்சிய மர்மம்



வட அயர்லாந்தின் பெல்பாஸ் நகரில் உள்ள மதுபான விடுதி ஒன்றில் 2005 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி இரவு ரொபர்ட்ட மெக்கட்னி என்ற ஆடவர் சில நபர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் படுகொலை செய்யப்பட்ட அவரது உடல் அடுத்த நாள் காலையில் வீதியில் கிடந்தது.


இந்தக் கொலை வட அயர்லாந்தில் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவமாக மாறியது. ஏனென்றால் இந்தக் கொலையின் பின்னணியில் வட அயர்லாந்து சுதந்திர போராட்டக் குழுவான ஐ.ஆர்.ஏ. படை இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. என்றாலும் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தியபோதும் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை.

மெக்கட்னி மதுபான விடுதியில் சண்டை போடும்போது அங்கே இருந்த 155 பேரிடம் பொலிஸார் விசாரணை நடத்தினார்கள். ஆனால் அதில் 71 பேர் சண்டை நடக்கும்போது தாம் கழிப்பறைக்கு சென்றிருந்ததாக குறிப்பிட்டார்கள். வெறுமனே 4 அடி நீளம் மற்றும் 3 அடி அகலம் கொண்ட அந்தக் கழிப்பறையில் ஒரே நேரத்தில் இத்தனை பேர் எப்படி இருந்தார்கள் என்பதுதான் அந்தக் கொலையை விடவும் மிகப் பெரிய மர்மமாக நீடித்து வருகிறது.

## இரண்டு முறை இறந்த பெண்

ரஷ்யாவின் கசான் நகரைச் சேர்ந்த பஜிலியு முகமட்சியானோ வீட்டில் திடீரென்று மயங்கி விழ அவசரமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர் மாரடைப்பால் மரணித்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள்.

இறுதிக்கிரியையும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவரது உடல் சவப்பெட்டியில் வைக்கப்பட்டது. இறுதிக் கிரியைக்கு உறவினர்களும் சூழ்ந்திருந்தார்கள். அப்போது சவப்பெட்டியில் இருந்து திடீரென்று எழுந்திருந்த முகமட்சியானோ கண்ணை அகல விரித்து கூச்சலிட்டார். அப்போது மற்றொரு மாரடைப்பு தாக்கி மீண்டும் மயங்கி விழுந்தார். மீண்டும் அவர் மருத்துவமனைக்கு அவசரமாக அழைத்துச் செல்லப்பட்டார். 12 நிமிடங்கள் கழித்து அவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள்





மீண்டும் கூறினார்கள். ஆனால் இந்த முறை அவர் உண்மையாக உயிரிழந்துவிட்டார்.

அவரது கணவர் கூறியதாவது, “அவளது கண்கள் படபடத்தன. நாம் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். என்றாலும் அவர் அவசர சிகிச்சை பிரிவில் மேலும் 12 நிமிடங்கள் மாத்திரமே உயிர் வாழ்ந்தார். அவர் மீண்டும் உயிரிழந்தார். இம்முறை உண்மையாக இருந்தது. நான் மிக்க ஆத்திரத்துடன் இருக்கிறேன். இதற்கு எனக்கு பதில் தேவை” என்றார்.


இந்த சம்பவம் 2011 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. என்றாலும் மரணித்ததாக கூறியவர்கள் உயிர்த்தெழுந்த பல சம்பவங்கள் உலகில் நிகழ்ந்துள்ளன.

## சாகசக்காரரின் சாதாரண மரணம்

பொப்பி லீச் உலகப் பிரபலம் பெற்ற சாகசக்காரர்.

மரணத்துடன் போட்டியிடும் சாகசங்களைச் செய்வதில் வல்லவர் என்று பலரும் புகழ்பாடினார்.

அவரது பிரபலமான சாகசம் நயாகரா நீர்வீழ்ச்சியில் இருந்து குதித்ததுதான். 1911 ஆம் ஆண்டு அவர் அந்த சாகசத்தைச் செய்து காட்டினார்.



தூர நின்று பார்க்கவே பயங்கரமாக இருக்கும் நயாகரா நீர்வீழ்ச்சியின் 188 அடி உயரத்தில் இருந்து ஒரு பீப்பாய்க்குள் இருந்து விழுந்து காட்டினார். இதனால் சில மாதங்கள் மருத்துவமனையில் இருந்தபோதும் லீச்சின் உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

இப்பேர்ப்பட்ட லீச் 1926 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்திருந்தபோது தோடம்பழத் தோலில் வழுக்கி விழுந்து உயிரிழந்தார்.




## விமானத்தில் இருந்து தப்பினாலும் காரில் இருந்து தப்ப முடியாது

1977 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி அமெரிக்காவின் எவன்ஸ்வில்லே பல்கலைக்கழக கூடைப்பந்து அணியை ஏற்றி புறப்பட்ட எயார் இன்டியானா விமானம் 216 அடி தரையில் இருந்து மேலெழுந்த விரைவிலேயே கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் இருந்த ஒருவரும் தப்பவில்லை. ஆனால் எவன்ஸ்வில்லே கூடைப்பந்து அணியைச் சேர்ந்த அனைவருமே கொல்லப்பட்டார்கள் என்று குறிப்பிட முடியாது. 18 வயது பிரஷ்மான் மேவிட் பூருவுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டதால் அந்தப் பருவத்தில் அவரால் அணியில் இணைய முடியவில்லை. அதனால் அவர் அந்த விமானப் பயணத்திலும் பங்கேற்கவில்லை. ஆனால் விபத்து நிழ்ந்து இரண்டு வாரங்கள்தான் கடந்திருந்தது. பூர் மற்றும் அவரது சகோதரர் சென்ற கார் பயங்கர விபத்துக்கு உள்ளானது. பூர் கொல்லப்பட்டார். அதாவது எவன்ஸ்வில்லே பல்கலைக்கழக கூடைப்பந்து அணியின் ஒட்டுமொத்த வீரர்களும் கொல்லப்பட்டார்கள்.



அமலன் : நான் புதுசா ஒரு பாட்டு எழுதினேன்!
விமலன்: எதை வைத்து?
அமலன் : பேனாவை வைத்து தான் எழுதினேன்!



மலர் : அவங்க ரெண்டு பேருக்குள்ளே என்ன சண்டை.
விமல் : அவங்களுக்குள்ளே ஆயிரம் இருக்கும்.
மலர் : அப்ப ஆளுக்கு ஐநூறா பிரிச்சுக்க வேண்டியதுதானே!



மகன்: அப்பா 30 + 40 எவ்வளவு பா?
அப்பா: அட தடி மாடு, மாங்கா மடையா, மாடு மாதிரி வளந்திருக்கியே இது கூடவா தெரியல. போ போய் கால்குலேட்டர் எடுத்துட்டு வா



விமலா : அவர் கோயிலுக்கு போகும் போது பாய்ந்து பாய்ந்துதான் போவார்..
மாலா :ஏன்?
விமலா : அவர்தான் பக்தி மான்ஆச்சே..



**அமல் : உங்க மாமா கொழும்பில என்னவா இருக்காரு..?**
**விமல் : அங்கேயும் எங்க மாமாவாதான் இருக்காரு..**






கண்ணன் : நீ வீட்ல வெப்சைட் வெச்சிருக்கியா..?
ராசா: இல்லடா..
கண்ணன் : பக்கத்து வீட்டுல ஒரு சைட் வெச்சிருக்கேன்.



அமலா : பைனான்ஸ் கம்பெனிக்காரரைக் காதலிச்சது தப்பாய் போச்சு!
விமலா : ஏன்?
அமலா : எங்கள் காதலுக்குப் பச்சைக் கொடி காட்டினாலும் ஓடிப் போய் தான் கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிறார்.

விமலன் : "என்ன உன் கணவர் தூக்கத்துல 'ஹலோ.. ஹலோ..'ன்னு டெலிபோன்ல பேசறது மாதிரி பேசறாரு?"
கமலா : "நான்தான் சொன்னேனே, அவருக்கு தூக்கத்துல 'கால்' போட்ற பழக்கம் இருக்குன்னு."

ராமன் : உங்க மகன் சிகரெட் பிடிக்கிறானே.. உங்களுக்கு தெரியுமா..?
சோமன் : எனக்கு சிகரெட் பிடிக்க தெரியாதுங்க...





ஆசிரியர் : அந்த பொண்ணு 98 மார்க் எடுத்துட்டு 2 மார்க் எப்படி போச்சுன்னு அழுதுகிட்டு இருக்கு.. நீ 12 மார்க் எடுத்துட்டு எப்படி டா சிரிச்சுகிட்டு இருக்க?
மாணவன்: எப்படி அந்த 12 மார்க் வந்ததுன்னு பார்த்துகிட்டு இருக்கேன் சார்.

ராமு : வரதட்சணை வாங்குவது தப்புன்னு முன்னாடி சொன்னீங்க. இப்ப சரின்னு சொல்றீங்களே, ஏன்?
சோமு : அப்ப என் பொண்ணுக்குக் கல்யாணம். இப்ப என் பையனுக்குக் கல்யாணம்.



கலை : சிகை அலங்காரம் செய்ய வந்த பெண்ணுக்கு லவ் லெட்டர் கொடுத்தியே... என்னாச்சு?
நிலவன் : பின்னி எடுத்துட்டா



தசரன் : இந்த ஆள் காலடிபடாத இடமே இல்லை இலங்கையில...
சந்திரன் : அப்படியா..?
தசரன் : ஆமாம்,.. கீழகிடந்த இலங்கை மெப்பை முழுசா மிதிச்சிட்டாரு...

செல்வம் : 20 வருஷம் முன்னாடி நீங்க எழுதின கதைகளை இப்பப் படிச்சாலும் நீங்களா இப்படி எழுதினீங்கன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு.
செல்வன்: உங்களுக்கு ஆச்சரியம்,,,,, எனக்கு சந்தேகம்.



**அமலா : என்னது உன் கணவரை அந்த பிரபலமான பாகவதர் கச்சேரிக்கு கூப்பிட்டாரா ஆச்சரியமா இருக்கே!**
**விமலா : இதுல என்ன ஆச்சரியம் அவர் எனக்கு போட்ற ஜால்ராவ பாத்துட்டு அந்த பாகவதர் ஜால்ரா தட்ட கூப்பிட்டிருக்கார்.**



# வத்தளை, கெரவலப்பிட்டிய பிரதேச சபையில் அரங்கேற்றம், சலங்கை பூஜை







தொட்டதெல்லாம் துலங்கும் தைபூசம் இன்றாகும். இந்த தைப்பூச நன்னாளிலே வத்தளை, கலைத்தென்றல் நாட்டிய கலா நிலையம் வத்தளை, கெரவலப்பிட்டி, பிரதேச சபை மண்டபத்தில் பரத நாட்டியம் பயின்ற மூன்று மாணவிகளின் அரங்கேற்ற நிகழ்வுகளையும் சலங்கை பூஜையையும் நடத்தியது. வத்தளை கலைத்தென்றல் நாட்டிய கலா நிலையத்தின் ஆஸ்தான குருவும் இந்த கலா நிலையத்தை நடத்திவரும் அதன் உரிமையாளருமான கலைத்தென்றல் திருமதி செல்வராணி இளங்கோவன் அம்மையார் இன்றைய தினம் புதிய மாணவ மாணவிகளுக்கான கலைத்துறை வகுப்புகளை ஆரம்பித்தார். இங்கு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டர் உரிமையாளருமான துரைராசா சுரேஷை கலைத்தென்றல் நிறுவனத்தின் உரிமையாளர் இளங்கோவன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# கவிஞர்களால் நிறைந்து வழிந்தது வலம்புரி



## கவிதா வட்டத்தின் 96 ஆவது கவியரங்கம்



வலம்புரி கவிதா வட்டம் தனது தொடர் கவியரங்க வரிசையில் 96 ஆவது கவியரங்கை கடந்த பௌர்ணமி தினமான 25 ஆம் திகதி கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடத்தியது. வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்திய நிகழ்வுக்கு வகவ ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரையும் வழங்கினர். 96 ஆவது கவியரங்கிற்கு கவிஞர் பவானி சச்சிதானந்தன் தலைமைத் தாங்கினார். எம்மை விட்டும் மறைந்த வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜனின் மாமியார், கலைஞர்கள் கே. எம். எம். நசீர், ஜோபு நஸீர், கலைவாதி கலீலின் மனைவி ஆகியோருக்கான மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது. கவியரங்கில் கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், வதிரி சி. ரவீந்திரன், பதுளை ஒகஸ்டீன் கபிலகன், தி. ஸ்ரீதரன், வாழைத்தோட்டம் எம். வஸீர், ராஜா நித்திலன், வாசுகி பி. வாசு, இ. கலைநிலா, ரகீப் அல் ஹாதி, சிந்தனைப் பிரியன் முஸம்மில், எம். என். அய்யான் அஹமத், எம். எச். ரஷீத் அல் ஹாமி, கிண்ணியா அமீர் அலி, இளநெஞ்சன் முர்ஷிதீன்மஸீதா அன்சார், ந. தாமரைச் செல்வி, உணர்ச்சிப் பூக்கள் ஆதில், காலஞ்சென்ற மாவை வரோதயன் மகன் ச. அருணன், அமீன் பவாஸ், ஆர். தங்கமணி, பி.தங்கவேலுமலாய்கவி டிவாங்ஸோ, அருந்தவம் அருணா, ரிஸ்மினா ரபீக், பிறைக்கவி முஸம்மில் ஆகியோர் கவிதை பாடினர். கவிஞர்கள் ரவூப் ஹஸீர், ஏ. கே. இளங்கோ, கவிநேசன் நவாஸ், எம். பீ. எம். சித்தீக், இல்யாஸ் தாஸிம், பி. சுசீலா, சு. ஜெகதீஸ்வரன், எம். எம். நவாஸ்தீன், கவிதா இளங்கோ. ஜே. கமல்ராஜ், தி. கௌதம் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.



ஸ்ரீமதி மீனா சபேசன் சர்மாவின் "வித்யாலயா இசையகம்" நடத்திய சிறப்பு தைப்பொங்கல் இசை விழாவில் அவரின் சிறப்பு வாய்ப்பாட்டு கச்சேரியும் மாணவர்களின் இசை விருந்தும் மிகவும் சிறப்பாக கொழும்பு தம்பையா சத்திரம் மண்டபத்தில் நடைபெற்றது.



பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவின் தலைமையில் கொழும்பு ரமடா ஹோட்டலில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவொன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஸ்வபிரம்ம ஸ்ரீஏ கோபால கிருஷ்ணன் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் விருது பெறுவதை காணலாம்.




# கெரவலப்பிட்டி Royal Aquariums & Pet Accessories நிறுவனம்

*Royal Aquariums & Pet Accessories* நிறுவனம் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் வத்தளை, கெரவலப்பிட்டிய என்ற இடத்தில் சாதாரண சிறிய நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு எம்மாலான சிறந்த சேவையினை தொடர்ந்து வழங்கி வந்தோம். அதனால் எமது வியாபாரம் அதிகரிக்கத் தொடங்கியது. வெளி மாவட்டங்களில் இருந்து வாடிக்கையாளர்கள் எம்மை தேடிவரத் தொடங்கினர். இதுதான் எமது வியாபாரத்தை இவ்வளவு பிரமாண்டமாக விஸ்தரிக்க ஏதுவாக அமைந்தது.

இன்று நாம் ஆரம்பித்திருக்கும் இந்த *Royal Aquariums & Pet Accessories* நிறுவனத்தில் ஒரே கூறையின் கீழ் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அலங்கார மீன்கள் மற்றும் பறவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு அவற்றுக்கான உணவு உள்ளிட்ட பல்வேறு சாதனங்களையும் பெற்றுக் கொள்ளலாம். விசேடமாக எமது இந்த நிறுவனத்தில் விற்பனைக்கு பின்னரான சேவையும் உண்டு.

இலங்கையில் இது போன்ற பல நிறுவனங்கள் இருந்தாலும் எமது இந்தப் புதிய நிறுவனத்தை போன்று மிக பிரமாண்டமான நிறுவனம் இல்லை என்றே நினைக்கின்றோம். அந்த அளவிற்கு வசதியான நவீன நிறுவனமாக இதனை நாம் கட்டமைத்துள்ளோம். இங்கு சாதாரண விலையிலான மீன்கள் முதல் மிக விலையுயர்ந்த மீன்களும் அதேபோன்று சாதாரண விலை முதல் மிக பெரிய விலையிலான பறவைகளும் எம்மிடத்தில் உள்ளன.

விரைவில் ஏனைய பல செல்லப்பிராணிகளையும் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம். எனவே வாடிக்கையாளர்கள் சிறந்த ஒரு அனுபவத்தை பெற்றுக் கொள்ள இலக்கம் 03, நீர்கொழும்பு வீதி, ஒலியமுள்ள என்ற எமது நிறுவனத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.



**பெண் ஆளுமை அறிமுகம் 38**

# எழுத்துத் துறையில் முத்திரை பதித்து வரும் ஆண்டிப்பட்டி புனித ஜோதி

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி



**உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்...?**

என் பெயர் செ.புனிதஜோதி. சொந்த ஊர் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி. M.A வரலாறு படித்திருக்கின்றேன். திருமணத்திற்கு பிறகு சாத்தூரில் பள்ளி ஆசிரியராய் பணியில் இருந்தேன். தற்போது சென்னையில் வசிக்கின்றோம். என் கணவர் செந்தில்குமார் தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் A.E.E பணிபுரிகிறார். ஒரே மகன் ரிதன் ஆதித் Georgia Institute Of Technology, Atlanta, USA படிக்கிறார்.

**எழுதுவதற்கு எப்படி ஆர்வம் வந்தது?**

என் தந்தை மிகச் சிறப்பான நீதி நெறிக்கதைகளையும், பாடல்களையும் எழுதவும், பாடவும் செய்பவர். என் சகோதரர் எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர் ஜானபாரதியாவார். இவர் இளங்குயில்கள் பத்திரிகை ஆசிரியர், சமூகநல ஆர்வலர்.

என் குடும்பத்திலுள்ள அனைவரும் இலக்கியவாதிகள். அக்கா, அண்ணன்மார்களால் நான் வளர்க்கப்பட்டவள். இதுவே நானும் இலக்கியப்பாதையில் பயணிக்க ஆர்வத்தை தூண்டியது.

**எவ்வாறான கருப்பொருளை உள்ளடக்கி கவிதைகளை எழுதுகிறீர்கள்?**

சமூக அக்கறையுள்ள கவிதைகளையும், பெண்ணியம், இயற்கை, அம்மா, அப்பா உறவுகளைப் பற்றியும், எவற்றையெல்லாம் பார்க்கிறேனோ, எது என் மனதை பாதிக்கிறதோ அவற்றையெல்லாம் கருப்பொருளாக்கி வார்த்துவிடும் உணர்வைக் கொண்டது என் கவிதை

**இலக்கியப் பயணத்தில் உங்கள் அனுபவம் பற்றிக் கூறுங்கள்?**

எனது குடும்பம் இலக்கியக் குடும்பம் என்பதால் சிறு வயதிலே மேடையில் பேசுவதற்கும், கவிதை புனைவதற்கும் வாய்ப்பு அமைந்தது. தொடர்ந்து பள்ளியிலும், கல்லூரியிலும் பல பரிசுகள், விருதுகள் பெற்றேன். திருமணத்திற்கு முன் நான் கவிதை எழுதுவது என் கணவர் வீட்டாருக்கு தெரியாது. ஆனால் எழுதிக்கொண்டே இருந்தேன். மாத இதழ் நடாத்திய கதைப்போட்டியில் கலந்து கொண்டு அதில் பரிசு பெற்ற பிறகே அவர்களுக்கும் தெரிய ஆரம்பித்தது. அதன் பின் என் கணவர் அவர் வேலைபார்க்கும் அலுவலகத்தில் *Chief engineer retirement* க்கு வாழ்த்துக் கவிதையை வாசிக்க அழைத்துச் சென்றார். அந்த விழாவிற்கு வந்த கவிஞர் தமிழ் இயலனால் கவிதை உறவு இலக்கிய மன்றம் அறிமுகமானது. பல்வேறு ஊடகங்களில் பட்டிமன்றம், கவியரங்கங்களில் கலந்து கொள்வதும், பல்வேறு தமிழ் மன்றங்களில் பேசவும் வாய்ப்புக் கிட்டியது. பல்வேறு இதழ்களில் என் கவிதைகள் வெளிவந்தன.

ஆனந்தவிகடன், இனிய உதயம் தாமரை, பேசும் சக்தி, கதிர்ஸ், தகவு கவிதை உறவு, மக்கள் மனம், கணையாழி, கொலுசு, அகவல், உரத்த சிந்தனை, வளரி, பூபாளம், காற்றுவெளி, வட அமெரிக்காவிலிருந்து வெளிவரும் கொக்கரக்கோ போன்ற இன்னும் பல இதழ்களிலும் என் கவிதைகள் வெளிவந்தன.

**கவிஞர் வைரமுத்துவிடம் சிறந்த பேச்சாளர் பட்டம் வாங்கியதாக கூறினீர்கள்..... அப்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

பல்வேறு பள்ளி மாணவ, மாணவிகள் போட்டியில் கலந்துகொண்டார்கள். இறுதிச் சுற்றில் தற்போதைய சென்னை SP ஆக பணியாற்றும் IPS திருநாவுக்கரசு அண்ணாவிற்கும் எனக்கும் தான் போட்டி திக்,திக் மனநிலை. முதல் பரிசு பெற்றதை வைரமுத்து ஐயா தான் அறிவித்தார். மிகப்பெரிய மகிழ்ச்சி. இன்றும் பசுமரத்தாணி போல் பதிந்திருக்கின்றது.

**உங்கள் புத்தக வெளியீடுகள் பற்றி கூறுங்கள்..........?**

அக்காக்களும் தங்கையும் நானும் இணைந்து சகோதரரின் திருமண விழாவில் சட்டமன்ற உறுப்பினர் செல்வேந்திரன் ஐயா முன்னிலையில் நான்கு புள்ளியும் நாற்பது கோலங்களும் கவிதைத்தொகுப்பை வெளியிட்டோம்.

பொதிகை தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளர் விஜயகிருஷ்ணன் நடாத்தும் எழுதுக இயக்கத்தின் வழியாக இல்லத்தரசிகள், மாணவ, மாணவிகள் இணைந்து இரண்டு நாளில் நூறு புத்தகங்களை, தனித்தனியாகத் தொகுத்து மறைந்த அப்துல் கலாம் ஐயாவின் பிறந்தநாளில் கல்வி அமைச்சர் மகேஷ் பொய்யாமொழியின் முன்னிலையில் வெளியிட்டோம். இங்கு என் கவிதைப் புத்தகமான "சுப்புவின் கனாமகள்" என்ற கவிதைப் புத்தகமும் வெளியிடப்பட்டது. என் இரு கவிதை நூல்களான மௌனக்கூத்து, நிழல்களின் இதயம் டிஸ்கவரி பதிப்பகத்தின் மூலம் வெளியிடப்பட்டது.



இந்த நூலுக்கு தமிழன்பன் ஐயா, பழநி பாரதி வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். பல்வேறு ஆசிரியர்கள் தொகுத்த கவிதை நூலிலும் என் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

**சிறுகதைகள் எழுதுவதற்கு நீங்கள் கையாளும் உத்திகள் பற்றி கூறுங்கள் ?**

உத்திகள் என்று ஒன்றுமில்லை. நம்மைச் சுற்றி நடக்கக் கூடிய சமூக பிரச்சினைகள், பெண்ணிற்கு ஏற்படும் இன்னல்கள் போன்ற பாடுபொருளை எடுத்துக் கொண்டு எளிமையான சொற்களால் நகர்த்துவதுதான் என் பாணியாக இருக்கிறது.

**பெண்கள் எழுத்துத் துறையில் பயணிப்பது பற்றி இன்றைய சமூகக் கண்ணோட்டம் எப்படி உள்ளது ?**

பாரதி, பெரியார், பாரதிதாசன் பெண் விடுதலை பற்றி பேசிய பகுத்தறிவாளர்கள் வாழ்ந்த சமூகம் நம் சமூகம். அவர்களின் சிந்தனையைக் கடைப்பிடிப்பவர்கள் ஆதரவையும் உற்சகாத்தையும் தரக்கூடியவர்களும் இருக்கிறார்கள்.

"ஏம்மா நீ ங்க வீட்டில் வேலையே பார்க்க மாட்டீங்களா?" எப்போதும் எழுதுவும்,பேசுவதுமாக இருக்கிறீர்கள் எதிர்வினை ஆற்றுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தனையும் மீறித்தான் பெண்கள் தன் முத்திரையைப் பதித்தவண்ணம் இருக்கின்றார்கள்.

**தொலைக்காட்சிகளில் கவியரங்கம், பட்டிமன்றங்கள் செய்துள்ளீர்கள் அது பற்றி கூறுங்களேன்?**

பொதிகை தொலைக்காட்சியில் கவிஞர் கமலநாதன் தலைமையில் பாரதியாரைப் பற்றிய கவியரங்கம் மக்கள் தொலைக் காட்சியில் ஏர்வாடியார் தலைமையில் காந்தியச் சிந்தனையைப் பற்றிய பட்டிமன்றம், தமிழன் தொலைக்காட்டியில் கவியரங்கம், வேந்தர் தொலைக்காட்சியில் விண் தொலைக்காட்சியில் விவாதமேடை , நீயா? நானா? நிகழ்ச்சியில் பங்கேற்பு... இப்படியாக என் ஊடகப்பயணம் தொடர்கிறது.

**சான்றிதழ்கள் வெளியீடுகள் விருதுகள் பற்றி கூறுங்கள்?**

பல்வேறு தமிழ்மன்றங்களில் தொடர்ந்து தமிழ் பணியாற்றியதன் காரணமாக பல விருதுகள் கிடைத்தன.

கவிதை உறவு மூலம் கவிச்செல்வம் விருது, தமிழன்பன் விருது, கவிவொலி விருது, பாரதிமணி விருது, கவிமுரசு விருது, எழுச்சிமுரசு விருது, கவியுலக்காரிகை விருது, இலக்கியச் செம்மல் விருது, சொல்லறிவி விருது, சுரதாவிருது விருது, கண்ணதாசன் விருது, சுப்புவின் கனாமகள் என்ற கவிதைப் புத்தகத்திற்கு அசோகமித்திரன் நினைவு படைப்பூக்க விருதினை நவீன கலை இலக்கிய மேடை மன்றம் வழங்கியது. மௌனக்கூத்து நூல் சௌமா விருது பெற்றுள்ளது.

பெண்ணாக நீங்கள் இத்துறையில் சந்தித்த சவால்கள் இருப்பின் கூறுங்களேன்.

போட்டி, பொறாமை நிறைந்த சமூகம். கணவர் பக்கத்துணையாய் இருப்பதாலும் நல்லவர்கள் சிலர் இருப்பதாலும் எந்தக் கடுமையான சவால்களையும் சந்திக்கவில்லை. உறவுகளையும், வீட்டு வேலைகளையும் சமாளித்து வெளிவருவது தான் பெரிய சவாலாக இருக்கின்றன.

**வளர்ந்து வருகின்ற இளம் எழுத்தாளர்களுக்கு ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?**

நிறைகுடங்கள் தூண்டுகோலாய் இருந்து ஒளிரச் செய்வார்கள். குறைகுடங்கள் நம்மை மேலே எழுந்து வரக்கூடாது என்பதற்காகத் தூற்றவும் செய்வார்கள். எதனையும் பொருட்டாக எண்ணாமல் மன உறுதியுடன் தொடர் வாசிப்பை நிகழ்த்தினால் இருள் விலகி ஒளி கூடும்.

# கவிமணி என். நஜ்முல் ஹுசைனின் வேறாகா வேர்கள் நூல் கண்ணோட்டம்




கவிமணி நஜ்முல் ஹுசைன், பனித்தீ (1992), இனிவரும் நாட்களெல்லாம் (2017), நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள் (2017) ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளை வெளியிட்டு கவிதை உலகில் முத்திரைப் பதித்தவர். கவிமணி நஜ்முல் ஹுசைனின் நான்காவது நூல் வெளியீடாகவே "வேறாகா வேர்கள்" என்ற சிறுகதைத் தொகுதி ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

சிறுகதைகள் பற்றி வாசுதேவன் என்ற இந்திய அறிஞர், "சிறுகதை என்பது சிறு கால அளவுக்குள் படித்து முடிக்கப்பட வேண்டியது" என்றும், "அதன் உருவம் சிறியதாக அமைந்திருக்கும்" என்றும் கூறுகிறார். "சிறுகதை ஒரு தொடக்கம், மையச் சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரமாகும். அதேபோல வாழ்க்கையின் ஒரு பகுதியை, கவலையை மறந்துவிட்டுக் கவனிப்பதாகவே சிறுகதை அமைந்துள்ளது". புதுமைப்பித்தன் "சிறுகதையின் வடிவம் கதை எழுதுபவரின் மனோ தர்மத்தைப் பொறுத்தது" என்று சிறுகதையின் போக்கைப் பற்றி விளக்கியுள்ளார். கதைகள், கதைகூறல் ஆகியவற்றில் கதைக்கரு, கதை மாந்தர், விடய நோக்குநிலை என்பன முக்கிய கூறுகளாக அமைகின்றன.

மனிதத்தை நேசிக்கும் படைப்பாளிகளுக்கு மத்தியில் கவிமணி நஜ்முல் ஹுசைன் ஒரு நயகரா நீர் வீழ்ச்சி என்று நூலின் பின்னட்டையில் நூலாசிரியர் பற்றி இளநெஞ்சன் முர்ஷிதீன் குறிப்பிடுவது ஈழத்துக் கவிதை வரலாற்றில் கவிஞர் நஜ்முல் ஹுசைன் தவிர்க்க முடியாத ஒருவர் என்பதை உறுதிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

நூலுக்கான அணிந்துரையை இந்திய நாட்டைச் சேர்ந்த பன்னுலாசிரியர், கவிஞர் ஏம்பல் தஜம்மல் முகம்மத் வழங்கியுள்ளார். அதே போன்று நூலுக்கான வாழ்த்துரைகளை



பிரபல திரைப்பட இயக்குனர், தயாரிப்பாளர், கதாசிரியர், நூலாசிரியர், கலாபூஷணம் பேராதனை ஏ.ஏ. ஜுனைதீன் மற்றும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றத்தின் செயலாளர் கவிஞர் எம்.எஸ்.எம். ஜின்னா ஆகியோரும் வழங்கியுள்ளார்கள். அடுத்து கரிகாற்சோழன் விருது பெற்ற பிரபல எழுத்தாளர் கலாபூஷணம் மு. சிவலிங்கம் "கவிஞர் எழுதிய கதைகள்" என்ற தலைப்பில் நூலுக்கான நயவுரையை வழங்கியுள்ளார். அதேபோன்று ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் தமிழ் தென்றல் அலி அக்பர் நூலுக்கான வெளியீட்டுரையை வழங்கியுள்ளார்.

நூலாசிரியரின் கதைகள் யாவும் நேர் கொண்ட இலட்சியப் பார்வையாகவே தோன்றுகின்றன. எல்லாமே மனிதத்தைப் பாடும் கவிதைகளைப் போன்றே உள்ளன. மனிதாபிமானமே பேசு பொருளாக எல்லாக் கதைகளுக்குள்ளும் மின்னுகின்றன. "மதத்தின் போதனைகளை, மார்க்கச் சிந்தனைகளை வாசகனிடம் திணிக்க வராமல் அதன் தத்துவார்த்தங்களை கதை மாந்தர்கள் ஊடாகவே சொல்லிப் போகின்றார்" என்று நூலாசிரியரின் கதைகள் குறித்து மு. சிவலிங்கம் தனது நயவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக நூலாசிரியர் வழங்கியுள்ள என்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "நான் சிறுவயதில் வாசித்த நூல்கள், சஞ்சிகைகள் போன்றன நாம் எப்போதுமே பிறருக்கு நன்மை செய்ய வேண்டும், நாங்கள் நல்லவர்களாக வாழ வேண்டும் என்பதை நிறையவே போதித்துள்ளன. அவையே எனது சிறுகதைகளில் பெரும்பாலான கருப்பொருள்களாக அமைகின்றன. எனது எழுத்துகள் எப்போதுமே எவரையும் தவறான பாதைகளில் அழைத்துச் சென்று விடக்கூடாது என்பதில் நான் கண்ணும் கருத்துமாய் இருக்கிறேன். ஒரு சம்பவம் இப்படித்தான் நடந்தது என்பதைவிட இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்ற எனது எதிர்பார்ப்பே சில கதைகளின் கருக்களாகும். கதையைப் படிப்பவர்கள், நாமும் இப்படி வாழ வேண்டும் என்று நினைப்பார்களாயின் அதனை எனது எழுத்தின் வெற்றியாகவே கருதுவேன்" என்று குறிப்பிடுகின்றார்.

"வேறாகா வேர்கள்" என்ற இந்த நூல் 87 பக்கங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. அவனில்லாமல் நானில்லை, நிலைக் கண்ணாடி, எனக்குக் கிடைக்கும், இப்படி செஞ்சிட்டீங்களே, இதயக் கன்னிக்கு பர்தா போடு, நடந்தது என்ன?, மீண்டும் டயானா, அருமையான என்விலப், வேறாகா வேர்கள், ஏன் சொல்லவில்லை?, தீர்க்கமான முடிவு, யார் அநாதை?, உயிர் காப்பான் தோழன், எந்த சீட் வேண்டும்?, **(அடுத்த வாரம் தொடரும்)**

(அடுத்த வாரம் தொடரும்)

வெலிகம
ரிம்ஸா முஹம்மத்











மாத்தளை யுனிட்டி சமூக அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமான பெ.முத்துலிங்கம் எழுதிய 'மலையகம் நிலைமாற்றத்தினை நோக்கி' எனும் கட்டுரைத்தொகுதி அறிமுகவிழா அண்மையில் மாத்தளை மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. மாத்தளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி மொனிக்கா கோமஸ் தலைமை உரை ஆற்றினார். பேராதனைப் பல்கலைக்கழக கல்வித்துறை வருகைத்தரு விரிவுரையாளர் ஜெ. சற்குருநாதன் நூல் கருத்துரை வழங்கினார். சமூகநீதிக்கான மலையக வெகுசன அமைப்பின் செயலாளர் செபஸ்டியன் மோகன் ராஜ் விமர்சன உரை ஆற்றினார். இங்கு நூலாசிரியர் கௌரவிக்கப்பட்டார்.
படங்கள் இரா.அ.இராமன்







சிங்கள இசைத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய இசையமைப்பாளர் முத்துசாமியின் திருவுருவப்படமொன்று அண்மையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, இசையமைப்பாளர் முத்துசாமியின் பாரியார் திருமதி முத்துசாமி ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.
படங்கள் : சுதத் மலவீர



Fassy Zubair, Mohamed, Muneef



சங்கவி பிலிம்ஸ் சுரேஸ்

Senthooram செந்தூரம்



## சூர்யாவின் ‘கங்குவா’



சூர்யா நடித்துள்ள ‘கங்குவா’ படத்தின் இரண்டாவது போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. சூர்யா நடிப்பில் அடுத்ததாக திரையரங்குகளில் வெளியாக உள்ள திரைப்படம் ‘கங்குவா’. இதில் திஷா பதானி, பாபி தியோல், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி உட்பட பலர் நடிக்கின்றனர். யு.வி கிரியேஷன்ஸ் மற்றும் ஸ்டூடியோ கிரீன் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் இந்தப் படத்தை சிறுத்தை சிவா இயக்குகிறார். வெற்றி பழனிச்சாமி ஒளிப்பதிவு செய்கிறார். தேவிஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். தற்போது இதன் இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

3டியில் உருவாகும் இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தி உட்பட 10 மொழிகளில் வெளியாக இருக்கிறது. இப்படத்தின் டீசர் சில மாதங்களுக்கு முன்னால் வெளியாகி வரவேற்பை பெற்றது. இந்நிலையில் தற்போது படத்தின் புதிய போஸ்டர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. கடந்த முறை வெளியான முதல் தோற்றம் சூர்யாவை ஓர் அரசன் போல சித்தரித்திருந்தது. அது பீரியட் படத்துக்கான நியாயத்தை சேர்த்திருந்தது. ஆனால் தற்போதைய போஸ்டரில் மற்றொரு சூர்யாவின் தோற்றம் கவனம் பெற்று வருகிறது. காரணம், ஈர்க்கும் ஹெர்ஸ்டைலுடன் கூடிய நிகழ்காலத்தையொத்த லுக், படம் இரு வேறு காலங்களில் நடப்பதை உணர்த்தும் வகையில் உள்ளது. இரண்டு கதாபாத்திரங்களில் சூர்யா நடிக்க இருக்கிறாரா என்ற கேள்வியும் எழுகிறது. ஃபேன்டஸி தன்மையுடன் கூடிய இந்த போஸ்டரை சூர்யா ரசிகர்கள் ஷேர் செய்து வருகின்றனர்.

## லெஜெண்ட் சரவணன்



பிரபல தொழிலதிபர் ‘லெஜெண்ட்’ சரவணன் தயாரித்து நடித்த படம், ‘லெஜெண்ட்’. கடந்த 2022ம் ஆண்டு வெளியான இந்தப் படத்தை ஜேடி ஜெர்ரி இயக்கி இருந்தனர். ஊர்வசி ரவுதெலா, விவேக், பிரபு உட்பட பலர் நடித்திருந்தனர். ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைத்திருந்தார். இதையடுத்து அவர் அடுத்தப் படத்தில் நடிக்க இருக்கிறார். இதுபற்றி அவர் தனது சமூக வலைதளத்தில், அடுத்த படத்தின் பணி தொடங்கிவிட்டது. விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்று தெரிவித்துள்ளார். கூடவே வெளிநாடுகளில் எடுத்துள்ள போட்டோஷூட் புகைப்படங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.



## ஃபஹத் பாசில் வடிவேலு இணையும் ‘மாரீசன்’



‘மாமன்னன்’ படத்துக்குப் பிறகு ஃபஹத் பாசில், வடிவேலு இணைந்து நடிக்க உள்ள புதிய படத்துக்கு ‘மாரீசன்’ என தலைப்பிடப்பட்டுள்ளது.

ஆர்பி சௌத்ரியின் சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனத்தின் 98வது படமாக உருவாகும் இப்படத்தை சுதீஷ் சங்கர் இயக்குகிறார். இவர் கடந்த 2009ம் ஆண்டு வெளியான ‘ஆறு மனமே’ படத்தை இயக்கியிருந்தார். 2014ம் ஆண்டு திலீப் நடிப்பில் மலையாளத்தில் வெளியான ‘வில்லாலி வீரன்’ படத்தை இயக்கியிருந்தார். படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

மாமன்னன்’ படத்துக்குப் பிறகு வடிவேலுவும், ஃபஹத் பாசிலும் இணைந்து நடிக்க உள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இப்படத்துக்கு ‘மாரீசன்’ என தலைப்பிடப்பட்டுள்ளது. கலைசெல்வன் சிவாஜி ஒளிப்பதிவு செய்யும் இப்படத்துக்கு ஸ்ரீஜித் சாரங் படத்தொகுப்பு பணிகளை கவனிக்கிறார்.

## பெப்ரவரியில் "துருவ நட்சத்திரம்"

நடிகர் விக்ரம் நடித்துள்ள "துருவ நட்சத்திரம்" படத்தை பெப்ரவரியில் வெளியிட திட்டமிட்டுள்ளதாக இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனன் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கி, தயாரித்திருக்கும் "துருவ நட்சத்திரம்" திரைப்படத்தில் விக்ரம் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்தப் படம் உலகம் முழுவதும் 2023, நவ.24ம் தேதி வெளியாக இருந்தது. இந்தப் படத்தை வெளியிட இடைக்கால தடை விதிக்கக் கோரி ஆல் இன் பிக்சர்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக உள்ள விஜய் ராகவேந்திரா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில், "சிம்புவை நாயகனாக வைத்து "சூப்பர் ஸ்டார்" என்ற படத்தை இயக்குவதற்காக, கவுதம் வாசுதேவ் மேனன் தங்களது நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டார். அதற்கு முன்பணமாக கடந்த 2018ம் ஆண்டு 2 கோடியே 40 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தப்படி அந்த பட வேலைகள் நடைபெறாத நிலையில் வாங்கிய முன்பணத்தை இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனன் திருப்பித் தரவில்லை. எனவே எங்களிடம் பெற்ற தொகையை திருப்பி அளிக்காமல் துருவ நட்சத்திரம் படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும்" என மனுவில் கோரியிருந்தார்.



இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், பணத்தை திரும்பக் கொடுக்கும்பட்சத்தில், படத்தை வெளியிடலாம் என்று கடந்தாண்டு நவ.22ம் திகதியன்று உத்தரவிட்டிருந்தது. ஆனால், இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனன் பணத்தைத் திரும்ப செலுத்தாததால், இதுவரை துருவ நட்சத்திரம் திரைப்படத்தை வெளியிட முடியவில்லை.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி சி.சரவணன் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, கவுதம் மேனன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ரேவதி மணிகண்டன் ‘துருவ நட்சத்திரம்’ படத்தை பெப்ரவரியில் வெளியிட திட்டமிட்டுள்ளதால், இந்த வழக்கை மூன்று வாரத்துக்கு தள்ளிவைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இதையடுத்து, வழக்கின் விசாரணையை 3 வாரத்துக்கு தள்ளி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

## ‘தங்கலான்’ ஏப்ரல் மாதம் திகதி

பா.ரஞ்சித் இயக்கியுள்ள ‘தங்கலான்’ திரைப்படம் இம்மாதம் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது இறுதிக்கட்ட பணிகள் தாமதம் காரணமாக ஏப்ரல் மாதத்துக்கு ரிலீஸ் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் ‘தங்கலான்’. அதிக பொருட்செலவில் வரலாற்றுப் பின்னணியுடன் உருவாகியுள்ள இப்படத்துக்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். இதனை ஸ்டுடியோ கிரீன் நிறுவனத்துடன் இணைந்து பா.ரஞ்சித்தின் நீலம் புரொடக்ஷனும் தயாரித்துள்ளது.

தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னட மொழிகளில் இந்தப் படம் வெளியாக இருக்கிறது. பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி உள்ளிட்ட பலர் இதில் நடித்துள்ளனர். கோலார் தங்க சுரங்கத்தில் தமிழர்கள் பட்ட துயரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.




பீரியட் படமான இதன் டீஸர் வெளியாகி வரவேற்பைப் பெற்றிருந்தது. இந்தப் படம் ஜன. 26ம் திகதி வெளியாக இருப்பதாக அறிவித்திருந்தனர். இந்நிலையில், இறுதிக்கட்ட பணிகள் முடிவடையாததால் ஏப்ரல் மாதம் படம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், திகதி குறிப்பிடப்படவில்லை

## “உங்களுடன் சரிசமமாக நடிக்க ஆசை” சத்யராஜை நெகிழவைத்த விஜய் சேதுபதி



“உறுதுணைக் கதாபாத்திரமாக இல்லாமல் டபுள் ஹீரோ சப்ஜெக்டில் உங்களுடன் சரிசமமாக நடிக்க வேண்டும்” என்று சத்யராஜிடம் தனது விருப்பத்தை விஜய் சேதுபதி வெளிப்படுத்தியுள்ளார்.

கோகுல் இயக்கத்தில், ஆர்.ஜே.பாலாஜி நடித்துள்ள ‘சிங்கப்பூர் சலூன்’ படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழா இன்று சென்னையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பேசிய நடிகர் விஜய் சேதுபதி மேடையில் அமர்ந்திருந்த சத்யராஜை நோக்கி, “உங்களுடன் இணைந்து பணியபுரிய வேண்டும் என ஆசைப்படுகிறேன். என்னை இன்ஸ்பிரேஷன் என நீங்கள் சொல்வது அநியாயம். அப்படியெல்லாம் இல்லை. நீங்கள் மிகச் சிறந்த நடிகர். நான் உங்களை அதிகமாக ரசித்திருக்கிறேன்.

சமீப காலமாகவே தொடர்ந்து உங்களது பழைய படங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் நடித்த ‘தெற்கு தெரு மச்சான்’,’ அமைதிப்படை’ உள்ளிட்ட சில படங்களை இப்போது வரைக்கும் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். உங்களுடைய காமெடி சென்ஸ், ரொமான்டிக் காட்சிகள், சண்டைக்காட்சிகள் அனைத்தையும் நான் மிகவும் ரசிப்பேன்.

டப்பிங் ஸ்டூடியோக்களுக்குச் செல்லும்போது சவுண்ட் இன்ஜினியர்களிடம் சிறந்த நடிகர் குறித்து கேட்பேன். எல்லோரும் உங்கள் பெயரைத்தான் சொல்வார்கள். கச்சிதமாக டப்பிங் பேசுவார் என பாராட்டுவார்கள். மேடைக்காக சொல்லவில்லை. உங்களுடன் சரிக்கு சமமாக நடிக்க வேண்டும் என ஆசை. சப்போர்ட்டிங் ரோல் இல்லாமல் டபுள் ஹீரோ சப்ஜெக்ட் படமாகத்தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நன்றி” என்றார் விஜய் சேதுபதி.

## ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித்

மகிழ் திருமேனி இயக்கும் ‘விடா முயற்சி’ படத்தில் நடிகர் அஜித்குமார் இப்போது நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு அஜர்பைஜானில் நடந்து வந்தது. லைகா தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். இதில் த்ரிஷா, அர்ஜுன், ரெஜினா, ஆரவ் உட்பட பலர் நடிக்கின்றனர். இது அஜித்தின் 62வது படம்.

இதையடுத்து அவரது 63வது படத்தை ஆதிக் ரவிச்சந்திரன் இயக்க இருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருந்தன. இந்நிலையில் இந்தப் படத்தின் அலுவலக பூஜை, சென்னையில் பொங்கலன்று நடந்துள்ளது. இதன் மூலம் இருவரும் இணைவது உறுதியாகி உள்ளது. பிரபல தெலுங்கு தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. படப்பிடிப்பு ஏப்ரல் இறுதி அல்லது மே முதல் வாரம் தொடங்க இருக்கிறது. ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால், எஸ்.ஜே.சூர்யா நடித்த ‘மார்க் ஆண்டனி’ படம் சூப்பர் ஹிட்டானது குறிப்பிடத்தக்கது.



## அறிவிப்பு வீடியோ:

மலையாள நடிகர் ஷேன் நிகாம் ‘மெட்ராஸ்காரன்’ படம் மூலம் தமிழில் அறிமுகமாகிறார். இது தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு வெளியான ‘கிஸ்மத்’ படம் மூலம் மலையாள சினிமாவில் நாயகனாக அறிமுகமானவர் நடிகர் ஷேன் நிகாம். அவரின் ‘இஷ்க்’, ‘கும்பளாங்கி நைட்ஸ்’, ‘ஆர்டிஎக்ஸ்’ படங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன. இந்நிலையில், தற்போது அவர் தமிழில் நடிகராக அறிமுகமாகிறார். ‘மெட்ராஸ்காரன்’ என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை வாலி மோகன் தாஸ் இயக்குகிறார். கலையரசன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். த்ரில்லர் கதைக்களத்தில் உருவாகும் இப்படத்தை ஜெகதீஸ் தயாரிக்கிறார்.

‘மெட்ராஸ்காரன்’ மூலம் ஷேன் நிகாம் அறிமுகம்|கதை என்ன?

ஒரு சிறு ஈகோ, ஒருவனின் வாழ்வை எந்த எல்லைக்கு கூட்டிச்செல்லும் என்பதே இப்படத்தின் மையம். சிறு சம்பவம் பெரும் பிரச்சினையாக, மாறி இருவர் வாழ்க்கையை எப்படி புரட்டி போடுகிறது என்பதை த்ரில்லர் பாணியில் சொல்லும் படமாக இது இருக்கும் என படக்குழு தெரிவித்துள்ளது. பிப்ரவரி மாதம் தொடங்கும் இப்படத்தின் படப்பிடிப்பை சென்னை, மதுரை, கொச்சி ஆகிய இடங்களில் ஒரே கட்டமாக நடத்தி முடிக்க படக்குழு திட்டமிட்டுள்ளது.

# பிள்ளைகளை வளர்க்கும் தகுதி

**(கடந்த வாரத் தொடர்)**

இன்று பிள்ளைகளுக்கு கேட்பதெல்லாம் வாங்கிக் கொடுக்கும் பெற்றோருக்கு தெரியவில்லையா தங்கள் பிள்ளைகள் எப்படி வளர்கிறார்கள் என்று.........

காரணம் பல வீடுகளில் இன்று தாய், தந்தை இருவரும் வேலைக்கு செல்பவர்களாக இருப்பதால் பெரியோர்கள் இன்றி பல பிள்ளைகள் தனியே வீடுகளில் வசிக்கின்றனர். அவர்கள் பொழுது போக்க அதிகமாக தொலைக்காட்சி அல்லது வலைத்தளங்களில் உலா வருகின்றனர். தாய் உறவுகள் இருக்கும் சில வீடுகளில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த அவர்களே பிள்ளைக்கு தொலைக்காட்சி, கைபேசியை கொடுத்து அமர்த்தி விடுகிறனர். இதன் பாதிப்பு என்ன!!!

குழந்தைகள் பல நேரங்களில் வயதுக்கு அதிகமாக பேசுகிறார்கள், மரியாதைத் தெரியாமல் வளர்கிறார்கள்.

குழந்தையிடம் அவர்களின் உறவுகள் கதைத்து வளர்வதை விட தானாகவே தொலைக்காட்சி, வலைத்தளங்களில் அவர்களாவே கற்று கொள்கின்றர். சரியெது பிழையெதுவென தெரியவில்லை.

இதனால் சகல விடயங்களிலும் பிள்ளைகள் மூக்கை நுழைப்பது , அறிவுரைகளை ஏற்றகாமை அல்லது அதற்கு எதிர்வாதம் பேசுவது, சரியான காரணம் இல்லாவிட்டால் ஏற்றுக் கொள்ளவதில்லை என்கிற போர் ஒவ்வொரு வீட்டிலும் அநேகமாக நடக்கிறது.

காலத்திற்கேற்ப அறிவுரை சொல்ல கேட்பதில்லையென பெரியவர்களும் அறிவுரையை கேட்டு நடக்கும் அளவு நாங்கள் முட்டாள்கள் அல்ல என்கிற மமதை குழந்தைகளிடம் முரண்பாட்டை உருவாக்குகிறது.

தொழில்நுட்ப வளர்ச்சியில் தாங்கள் எல்லாம் தெரிந்து விட்டோம் என்கிற பிள்ளைகளின் குணம் பல பெற்றோரை வேதனைக்குள் தள்ளி விடுகிறது. உண்மையில் யோசித்துப் பார்த்தால் இதற்குக் காரணம் பெற்றோராகிய நாமே.

சிறுவயதில் அவர்கள் பேசுவதை இரசித்துப் பெருமையாக பார்க்கிறோம். தவறான வார்த்தைகளை நாம் திருத்துவது குறைவு. வளரும் போது சரியாகி விடும் என்கிற நமது எண்ணமே அதற்கு காரணமாக அமைகிறது. ஐந்தில் வளையாதது ஐம்பதிலா வளையும் என்பதை யோசிக்க மறக்கிறோம்.

கொஞ்சம் வளர்ந்த 10,12 வயதை அடையும் போதும் பின் நம் கண்களுக்கு அவர்கள் குழந்தைகளாகவே தெரிக்கின்றனர். நமக்கு குழந்தையாகத் தெரியும் அவர்களின் பேச்சு, நம் சுற்றத்தாருக்கு வேறு மாதிரி தெரியும். அவர்கள் அந்த குழந்தைகளின் பேச்சைக் கேட்டு முகம் சுளிப்பதை நாம் பார்க்க அல்லது கவனிக்க தவறுகிறோம். அப்படியே யாராவது சுட்டிக் காட்டும் போது சுட்டிக் காட்டும் நபரை குறைசொல்வது அல்லது" எங்கள் பிள்ளை அப்படியெல்லாம் பேச மாட்டார்கள்" என்று குறையை மூடி மறைக்க முயலுகிறோம். அல்லது பெற்றோராகிய நாம் உணர மறுக்கிறோம் என்பதே உண்மை. 13,14 வயதுக்கு பின் அவர்கள் எமக்கு பதில் சொல்ல ஆரம்பிக்கும் போதும் அல்லது வார்த்தைகளின் பிரயோகம் தவறாக மாறும் போதும் போராட்டம் ஆரம்பிக்கிறது.

"என் பிள்ளை முன்பெல்லாம் அப்படியல்ல. இப்போ எது சொன்னாலும் அவனுடைய பேச்சு வழக்கு சரியில்லை எங்கு படித்தானோ" என்று நம் குழந்தையின் தவறை நிறுத்தாமல் யாரவது அவர்களுடைய நட்பு வட்டத்தினுள் திணிக்க பார்க்கிறோம். 15,16 வயதுக்கு பின் அவர்கள் யாரோ நாம் யாரோ என்கிற நிலையை பெற்றோராகிய நாமே உருவாக்கி விட்டு அது புரியாமல் தவிப்போம் . பெற்றோராகியநாம்திருத்திக்கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம் உண்டு. அதாவது பிள்ளைகளை வளர்க்கும் தகுதியை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.








கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# மூக்குத்தி முத்தழகு!

## இடது பக்கம் மூக்கு குத்துவது சிறப்பு









பெண்கள் அதிகம் விரும்பி அணியும் ஆபரணங்களுள் மூக்குத்தியும் ஒன்று. முகத்தின் அழகை மெருகூட்டுவதே மூக்குதான். அந்த மூக்கிற்கு அழகு சேர்க்கும் ஆபரணமாக மூக்குத்தி திகழ்கிறது. மூக்குத்தி வைத்து பல பாடல்கள் சினிமாவிலும் கவித்தொகுப்புகளிலும் காணப்படுகின்றன. பெண்ணின் மூக்குத்திக் கொண்டு அவள் குணங்களை கணிக்கும் பழக்கமும் நம் வீட்டின் பெரியவர்களிடம் உண்டு. இவ்வாறான பல சிறப்புக்களைக் கொண்ட மூக்குத்தி பற்றிய பல சுவாரசியமான தகவல்கள்.

இதோ! உங்களுக்காக,

**மூக்குத்தி குத்துவதற்கான காரணம்**

பெண்கள் மூக்குத்தி குத்துவது பழங்காலந்தொட்டு கடைபிடிக்கபடும் ஓர் சம்பிரதாய நிகழ்வாக திகழ்கிறது. நம் முன்னோர் கண்ட ஒவ்வொரு பழக்கங்களின் பின்னும் ஒவ்வொரு காரணம் இருப்பதுப் போல் மூக்குத்தி குத்துவதன் பின்னும் மறைந்துள்ளது. உடலில் உள்ள வாயுவினை வெளியேற்றுவதற்காக பெண்களுக்கு மூக்கில் மூக்குத்தி குத்தப்படுகிறது.

**மூக்குத்தியின் வகைகள்**

நவீன யுக பெண்களின் விருப்பங்களுக்கு ஏற்ப மூக்குத்தி பல வகையான வடிவங்களில் கடைகளில் கொள்வனவுக்காக வைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில பிரபல்யமான மூக்குத்தி வகைகள்,

**பஞ்சாபி நாத்**
**நாத்னி**
**லவங்க மூக்குத்தி**
**புள்ளக்கு**

மூக்குத்தி வெள்ளி, தங்கம், பித்தளை என பல உலோகங்களாலும் வைரக்கல், இரத்தினக்கல் என பல வகையான கற்கள் பதிக்கப்பட்டும் செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும் தங்க மூக்குத்தி குத்துதல் சிறப்பான ஒன்றாகும். ஏனெனில், தங்கத்திற்கு உடலில் உள்ள வெப்பத்தினை தன்னுள் ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியுள்ளது.

**மூக்குத்தி குத்துவதால் ஏற்படும் நன்மைகள்**

உடலில் உள்ள கெட்ட வாயுக்கள் வெளியாகும். மூக்கின் மடல் பகுதியில் துவாரமிடும் போது அதன் வழியாக நரம்பு மண்டலங்களிலுள்ள கெட்ட வாயுக்கள் அகலும்.

பருவமடைந்த பெண்களுக்கு தலைப்பகுதியில் சில விதமான வாயுக்கள் காணப்படும். மூக்கு குத்தும் போது அவை அகன்று விடும்.

சளி மற்றும் மூக்கு சம்பந்தமான பாதிப்புக்கள் குறையும்.

ஒற்றைத் தலைவலி நீங்கும்.

பார்வைக் கோளாறுகள் ஏற்படாதிருக்கும்.

நரம்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படாதிருக்கும்.

அடிக்கடி ஏற்படும் மனத்தடுமாற்றத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மூக்கு குத்தும் முடிவோடு இருப்பவர்களுக்காக இந்த டிப்ஸ்,

வலது பக்கம் மூக்கு குத்தினால் இடது பக்க மூளையின் இயக்கம் சீராகயிருக்கும் அதே போல் இடது பக்கம் மூக்கு குத்தினால் வலது பக்க மூளை சீராகயிருக்கும் இருப்பினும் பெண்களுக்கு இடது பக்கம் மூக்கு குத்துவது சிறப்பானதாகும். இதனால் மாதவிடாய் பிரச்சினைகள் மற்றும் பிரசவ காலத்தில் ஏற்படும் வலி குறைவானதாகயிருக்கும் ஏனெனில், பெண்களின் இனப்பெருக்க உறுப்புகள் இடது பக்க மூக்கோடு தொடர்புடையது.







புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 16 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 2346 பிள்ளைகளுக்கு 51 லட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக்கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ் வள்ளிபுனம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. *Au lanka* முகாமையாளர் *T.* யூறிசன் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெயக்காந், *Au lanka* நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி *K.*கஜேந்திரன், திட்ட இணைப்பாளர் ஜெகன் இராஜரட்ணம், அனுசரணை திட்ட உத்தியோகத்தர் *A.r* மேரியன், கள உத்தியோகத்தர் தமிழேந்தி, கிராம சேவையாளர் திருமதி சோபனா , அபிவிருத்தி உத்தியோகத்தர் யசோதரன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். *Child fund* நிறுவனத்தின் நிதி அனுசரணையில் *Au lanka* நிறுவனம் குறித்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.












**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கலா சங்கமம் என்ற இசை நிகழ்ச்சி அண்மையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் ஆலோசனையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் ஆர். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இதில் பொறியியலாளர் சண்குகவரதன், டொக்டர் எச். எம். ரபீக் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர்.**




# அல் மஸ்ஜிதுன் நஜ்மி ஜூம்ஆப் பள்ளிவாசலின் 100 வருட பூர்த்தி









**கொழும்பு தினகரன் நிருபர்**

கொழும்பு 12 வாழைத் தோட்டம் அல் மஸ்ஜிதுன் நஜ்மி ஜூம்ஆப் பள்ளிவாசலின் 100 வருட பூர்த்தியை முன்னிட்டு கல்வியில் சாதனை படைத்தவர்களையும் பள்ளிக்கு சேவையாற்றியவர்களையும் கௌரவிக்கும் வகையில் நஜ்மி ஆச்சிவ்ஸ் எவேர்ட் 2023 எனும் தொனிப் பொருளில் நிகழ்வு ஒன்று மருதானை டவர் மண்டபத்தில் பள்ளிவாசலின் தலைவர் எம்.ஏ.எம்.நிஸ்வான் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக அப்துல்லா சூ இன்டஸ்ரீஸ் உரிமையாளர் சீ.எம்.நூர், டி.எப். கோல்டிங்ஸ் பணிப்பாளர் ஏ.எம்.பசூல்டீன் மற்றும் அல் ஹிக்மா கல்லூரியின் அதிபர் எம்.எம். மஹ்ரூம் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். விசேட பேச்சாளராக அகில இலங்கை ஜமிய்யதுல் உலமாவின் கொழும்பு மத்திய கிளையின் பிரதித் தலைவர் அல் ஹாபிழ் மௌலவி இர்ஸாட் உவைஸ் (இனாமி) கலந்து கொண்டிருந்தார். இதன்போது அல் ஹிக்மா கல்லூரியில் கல்வி கற்று உயர் தரப் பரீட்சையில் மூன்று ஏ சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்ற 5 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களின் பல்கலைக்கழக படிப்பிற்காக நலன் விரும்பி ஒருவரால் ஒரு மாணவருக்கு தலா ஒரு இலட்சம் வீதம் ஐவருக்கும் பணப்பரிசு வழங்கப்பட்டது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது ஏ சித்திகளைப் பெற்றவர்களுக்கும், தரம் ஐந்தாம் ஆண்டு பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் நினைவுச் சின்னங்கள், பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளிவாசலினால் நடாத்தப்படும் குர்ஆன் மத்ரஸாவில் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், நஜ்மி பாலர் பாடசாலையினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங் கப்பட்டன. விசேட அம்சமாக பள்ளிவாசல் நிருவாக சபையில் நீண்ட காலமாக இருந்து சேவையாற்றிய மூவரும் இதன்போது நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் வரவேற்புரையை நம்பிக்கையாளர் சபையின் எம்.என்.எம்.பர்ஹான் வழங்கினார். தலைவர் எம்.ஏ.எம்.நிஸ்வான் தலைமை உரையை வழங்கினார். பொருளாளர் யு.எல்.எம். அஸ்லம் பள்ளிவாசல் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாகவும் உரை நிகழ்த்தியதுடன் நன்றியுரையை ஏ.எச். கரீம் ஆசிரியர் வழங்கினார்.

# அகில இலங்கை எம்ஜிஆர் மன்றத்தின் கௌரவிப்பு நிகழ்வு
























தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் அகில இலங்கை எம்ஜிஆர் மன்றம் மக்கள் திலகம் எம்ஜிஆரின் ஜனன தின நிகழ்வை மிகவும் எளிமையாக நினைவு கூர்ந்து அனுஷ்டித்தது. இந்த நிகழ்வு (18/01/2024) கொழும்பு 11, புறக்கோட்டை பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், அண்மையில் கலாசார அமைச்சினால் சிறந்த கலைஞனாக தேர்வு செய்யப்பட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட கலைஞர் கலாபூஷணம் கலைச்செல்வன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

படங்கள் : கலைஞர் எம்.நஸார்

# வரமாய் வந்த தாவரம்



புவிக்கு வரமாய்க் கிடைத்த தாவரங்களுள் ஒன்று வாழை. "என்ன வாழை தாவரமா? அது மரமன்றோ!" எனும் வியப்பு பலருக்கும் எழலாம். வாழையின் தோற்றம் பார்ப்பதற்கு மரம்போலக் காட்சியளித்தாலும் அஃது மரமன்று; நெடிது வளரும் தாவரமே! மரமெனில் அதன் தண்டுப்பகுதி தடித்து உறுதியாய் இருக்கவேண்டும்; ஆனால் வாழையில் அப்படியில்லை; வெளியில் தண்டுபோல் நம் பார்வைக்குத் தெரிவது வாழையின் போலித்தண்டே (Pseudostem) ஆகும்; அதன் உண்மைத்தண்டு பூமிக்கடியில் காணப்படும்; அதனை வேர்க்கிழங்கு என்பர். வாழையில் இலையடி உறைகள் ஒன்றைச் சுற்றி ஒன்று உருவாகின்றன; வாழை வளர்கின்றபோது முதிர்ந்த இலை உறைகள், வளர்கின்ற இளம் இலைகளால் அதனுள்ளே தள்ளப்படுவதால் வழவழப்பான – வாளிப்பான பொய்த்தண்டு உருவாகின்றது.

மூலிகை வகையைச் சேர்ந்த பூக்கும் தாவரம் (*herbaceous flowering plant*) என்றுதான் வாழையை அறிவியல் அடையாளப்படுத்துகின்றது. வாழையின் தாவரவியல் பெயர் மூசா அகுமினாடா (*Musa acuminata*) என்பதாகும். தென்கிழக்காசிய நாடுகளான மலேசியா, இந்தோனேசியா ஆகியவற்றைத் தாயகமாகக் கொண்டது வாழை.

வாழைக்குக் கதலி என்ற பெயருமுண்டு!

"உறுதியான கருங்காலிக் கட்டையைப் பிளக்கக்கூடிய கோடரி, வலுவற்ற கதலித்தண்டை (வாழைத் தண்டு) வெட்டும்போது சறுக்கும்" என்கிறார் பிற்கால ஔவையார் தம் தனிப் பாடலொன்றில். ஈண்டு வாழையைக் குறிக்கக் கதலி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக்
கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்
(ஔவையார் தனிப்பாடல்)

**வாழையின் பயன்கள்:**

வாழையைப் பொறுத்தவரை அதில் மக்களுக்குப் பயன்படாத பகுதியே இல்லை எனலாம். அவை ஒவ்வொன்றின் பயன்பாடு குறித்தும் சிறிது ஆராய்வோம்.

**வாழையிலை:**

வாழையிலையை உண்கலமாக/பரிகலமாக (plate) பயன்படுத்தும் மரபு தமிழரிடையே நெடுங்காலமாய் இருந்துவருகின்றது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள.

"மான்தடி புழுக்கப்பட்ட புலால் நாற்றம் வீசும் பானையிலே புதிதாய் விளைந்த, பெரிய தோகையை உடைய, சிறுதினையை இட்டு அதிலே காட்டுப்பசுவின் பாலைப் பெய்து, சந்தன விறகால் அவித்து உருவாக்கப்பட்ட பொங்கற் சோற்றை வாழையின் அகன்ற இலையிலே படைத்து, கூதளமும் மலைமல்லிகையும் கவினோடு காட்சிதருகின்ற முன்றிலில் பலரோடு பகுத்துண்பவன் குதிரைமலைத் தலைவனாகிய பிட்டங்கொற்றன்" என்று அவனுடைய விருந்தோம்பலைப் புகழ்கின்றார் கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார் எனும் புலவர்.

**வாழைப்பூ:**

உலகில் எல்லாப் பூக்களும் மேல் நோக்கிப் பூக்கும்; வாழைப்பூ மட்டுமே கீழ்நோக்கிப் பூக்கும். வாழைப்பூவானது மூலரத்தம், பிரமேகம், வெள்ளைப்படுதல், பித்தம், கோழை (கபம்), வயிற்றுக் கடுப்பு, கொல்லும் நோயான காசம், ஆழியனல் எனும் கைகால் எரிச்சல் ஆகியவற்றை நீக்கி உடலை அழியாமல் நன்முறையில் வைத்திருக்கும் என்கின்றது 'அகத்தியர் குணவாகடம்' எனும் நோய்கள் அவற்றுக்கான சிகிச்சைகள் ஆகியவற்றை விளக்கும் மருத்துவ நூல்.

வாழைப்பூவை நன்கு ஆய்ந்துவிட்டு அதன் உட்புறமுள்ள மென்மையான பகுதியைப் பயன்படுத்த வேண்டும். இப்பூவை வைத்துச் சூப்பு, பொரியல், வடை எனப் பலவும் செய்யலாம்.

இலக்கியங்களில் வாழைப்பூவானது மகளிரின் கூம்புபோன்ற கூந்தல் முடிப்புக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

வாழை யீன்ற வையேந்து
கொழுமுகை
மெல்லியல் மகளிர் ஓதி யன்ன
(நற்:225)

'ஓதி' என்பது பெண்களின் கூந்தலையும் 'ஓரி' என்பது ஆண்களின் தலைமயிரையும் குறிக்கும் சொற்களாகப் பண்டைக்காலத்தில் வழக்கிலிருந்தன.

**வாழைத்தண்டு:**

வாழைத்தண்டு சாற்றுக்குச் சிறுநீரைப் பெருக்கும் பண்பு உண்டு. இச்சாற்றை நீர்ச்சுருக்கு, எரிச்சல் போன்றவை தீர அருந்திவரலாம். தேவையற்ற உடல் பருமனைக் குறைக்க வாழைத்தண்டு சாறு பயன்படும். சிறுநீரகக் கற்களைக் கரைக்கவும், சிறுநீரகப் பாதையில் ஏற்படும் தொற்றை நீக்கவும், நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைக்கவும் வாழைத் தண்டு சாறு உதவும்.

**வாழைக்காய்:**

வாழைக்காயில் மாவுச்சத்து, நார்ச்சத்து, வைட்டமின் ஏ, சி, பி6, மக்னீசியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், கால்சியம் போன்ற உடலுக்குத் தேவையான சத்துக்கள் பலவும் உள்ளன.

மலச்சிக்கல், வயிற்றுப்புண் போன்றவற்றை நீக்கும் குணம் வாழைக்காய்க்கு உண்டு. பொட்டாசியம் இருப்பதால் இதய நலத்துக்கு நல்லது. பெருங்குடல் மற்றும் சீரண உறுப்புக்களில் தங்கும் கழிவுகளையும் நச்சுக்களையும் வாழைக்காய் வெளியேற்றுகின்றது.

எனவே, வயிற்றில் புற்றுநோய் ஏற்படாமல் இருக்க வாழைக்காய் உதவிபுரியும். இதில் உயிர்வளியேற்ற எதிர்ப்பொருள் (*Antioxidants*) அதிகமிருப்பதால் உடலின் நோயெதிர்ப் பாற்றலைக் கூட்டவும், முதுமையைத் தள்ளிப்போடவும் பயன்படும்.

கருவிலிருக்கும் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் அனைத்தும் வாழைக்காயில் இருப்பதால் கருவுற்றிருக்கும் பெண்கள் இதனை உணவில் எடுத்துக்கொள்ளலாம்.

வாழைக்காயின் குறையாகச் சுட்டப்படுவது அது வாயுத் தொல்லையை ஏற்படுத்தும் என்பது. வாழைக்காயைச் சமைக்கும்போது பெருங்காயம், இஞ்சி, மிளகு, சீரகம் போன்றவற்றைச் சேர்ப்பதன் வாயிலாக இக்குறையைத் தவிர்க்கலாம்.

**வாழைப்பழம்:**

வாழைக்காயில் இருக்கின்ற அனைத்துச் சத்துக்களும் வாழைப்பழத்திலும் உள்ளன. கூடுதலான நன்மை யாதெனின் வாழைக்காயைச் சமைத்துத்தான் சாப்பிட முடியும்; பச்சையாய்ச் சாப்பிட முடியாது.

ஆனால், வாழைப்பழத்தை அப்படியே சாப்பிடலாம். உண்ட உணவைச் செரிக்கச் செய்யும் நற்பணியையும் வாழைப்பழம் பார்த்துக்கொள்ளும்.

வாழைப்பழத்தை வைத்துப் பல்வேறு விதமான உணவு வகைகள் இந்நாளில் செய்யப்படுகின்றன.

வாழைப்பழத்தில் செவ்வாழை, மொந்தன், பேயன், கற்பூரம், பூவன், மலை வாழைப்பழம், இரசுத்தாளி, ஏலரிசி, நேந்திரம்பழம், பச்சை வாழைப்பழம், மட்டி வாழைப்பழம் எனப் பலவகைகள் உள்ளன. ஒவ்வொன்றும்தனிச்சுவையோடுமக்களைக் கவர்பவை.

**வாழைத் தார் என்பது சரியா?**

வாழைக்காயின்/பழத்தின் குலையைத் 'தார்' என்றழைக்கும் வழக்கம் நம்மிடம் இருக்கின்றது. அது சரியா என்றுகேட்டால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் தார் என்பது பூமாலை, பூங்கொத்து, தார்க்குச்சு, கொடிப்படை போன்றவற்றைக் குறிக்கும் சொல்லாகும்.

வாழை, கமுகு (பாக்கு) ஆகியவற்றின் குலையைக் குறிக்க நாம் 'தாறு' என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும். தறுதல் என்றால் கூட்டாகச் சேர்ந்திருத்தல் என்று பொருள். வாழை, கமுகு போன்றவற்றின் காய்கள் கூட்டாக இணைந்திருத்தலால் வாழைத் தாறு, கமுகந் தாறு எனப் பெயர்பெற்றன.

**வாழையடி வாழை:**

வாழையானது அதன் நிழலிலேயே கன்றுகளை ஈனக்கூடியது; அதனால்தான் 'வாழையடி வாழை' எனும் மரபுத்தொடர் ஏற்பட்டது.

தம் பரம்பரையும் வாழைபோல் தழைக்க வேண்டும் எனும் கருத்திலேயே திருமணங்கள் மற்றும் பிற மங்கல நிகழ்வுகளில் பூவும் குலையுமாக உள்ள வாழைமரத்தைக் கட்டும் வழக்கம் நம் மக்களிடையே ஏற்பட்டது.

தன் உச்சிமுதல் அடிவரை பயன் நல்கக்கூடிய அற்புதத் தாவரம் வாழை என்பதைச் சான்றுகளோடு கண்டோம். வாழைக்கனியானது முக்கனிகளுள் ஒன்று எனும் சிறப்பினைப் பெற்றது; அத்தோடு ஏழைகளும் வாங்கும் மலிவு விலையில் அது கிடைப்பதால் 'ஏழைகளின் கனி' எனும் பெருமைக்குரியதாயும் திகழ்கின்றது.

உலகிலேயே இந்தியாதான் அதிக அளவில் வாழையை உற்பத்தி செய்கின்றது. மருத்துவப் பயன்கள் மிகுந்ததாகவும் உடல்நலத்திற்கு உகந்த சத்துக்கள் செறிந்ததாகவும் திகழும் மூலிகைத் தாவரமான வாழையை நாம் தக்கமுறையில் நம் உணவில் பயன்படுத்தினால் நோயின்றி வாழலாம்.

மேகலா இராமமூர்த்தி...

# போரிலக்கிய வாசிப்பு



போரிலக்கிய வாசிப்பு என்ற சொல்லாடல் பெரும் கனதியானது.

போர் சார்ந்த இலக்கியங்களைப் முனைவது; அதன் மீதான வாசிப்பைச் செலுத்துவது; வாசக நிலை வாசிப்பைப் பெருக்குவதென போரிலக்கியக்களம் பெரியது.

உலகில் எல்லாத்தேசங்களிலும் போர் இலக்கியம் இருக்கிறது; எல்லாக் காலத்திலும் போர் இலக்கியமாக்கப்பட்டிருக்கிறது. எல்லா மொழிகளிலும் போர் புனைவாகவும், அபுனைவாகவும் வந்திருக்கிறது. கால நீட்சியுடைய மைய இலக்கியப் பெறுமானமாக போர்சார்ந்தெழுந்த இலக்கியங்கள் அமைகின்றன.

போரிலக்கியத் தேடலும், திரட்டலும், ஒழுங்கு முறைப்படுத்தலும் முறையாகி அவற்றின் மீது வாசிப்புச் செலுத்தப்பட வேண்டும். தமிழில் சங்க காலத்திலேயே போர் எனும் புற இலக்கியம் புறநாநூறாகத் தோன்றிவிட்டது.

காலாகாலமாக சமூக,அரசியல், பொருளாதாரம் மற்றுமுண்டான காரணங்களால் சமூகங்களுக்கிடையில், பிரதேசங்களுக்கிடையில் இனங்களுக்கிடையில், மொழிகளுக்கிடையிலென போர்மூண்டபடியே இருக்கிறது.

போர் ஏற்படுத்தும் வடு ஒரு மரணத்துள் வாழ்தல் தான்.

பல்ப் பெயர்வு, இடப்பெயர்வு,துரத்தியடிப்பு, வெளியேற்றம் என சமூகச்சிதறல் போரூடே நிகழ்கிறது.

இந்தப்பின்புலம் தமிழ்ப் புனைவுகளில் எங்ஙனம் தோற்றம் காட்டி நிற்கிறதென எல்லாப்புலம் சார்ந்தும் அல்லது பக்கநிலைச் சார்பற்ற வாசிப்பொன்று தமிழில் நிகழ்த்தப்படல் வேண்டும்.

மொழிபெயர்ப்பின் தமிழில் பிறமொழிப் புனைவுகள் வந்து சேர்ந்த நிலைமையும் வாசிப்பின் ஒப்பீட்டாய்வுக்கு அல்லது அனுபவப் பரிமாறலுக்கு அவசியமெனலாம்.குறிப்பாக தமிழில் போரிலக்கியங்களை வாசிப்புச்செய்வோர்அல்லதுசாதாரணமான வாசகர்கள் பல்நிலை வாசிப்பில் கவனம் செலுத்தல் வேண்டும்.

'பட்டியலிடல்' என்கிற சார்புநிலை தவிர்த்த பொதுநிலை வாசிப்பு முறையொன்றும் போரையும்,போரிலக்காயத்தையும் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்குமென நம்பலாம்




# வாசிப்பின் குறியீடும் குறியீட்டு வாசிப்பும்

வாசிப்பு நிகழ்த்தும் குறியீட்டாக்கம், வாசிப்புப் பொருளை புதிய தளத்தில் உணர்த்தும்.

பனுவல்காரனின் எண்ணம் அல்லது நோக்கு மறைமுகமாகச் சொல்லப்படுமிடத்தில் குறியீடு எனும் தொடர்பாடல் உத்தி தொழில்படுகிறது.

தமிழில் குறியீட்டுப் பாவனை நீண்ட வரலாறுடையது. பாரதிக்குப் பின் எழுந்த பாரதிதாசன் படைப்புகளிலும் குறியீட்டு வாசிப்பை நிகழ்த்தலாம்.

பாரதிதாசனின் படைப்புகளில் புதுமைப்பித்தன் உச்சமெனக்காணும் புரட்சி மனசை வெளிப்படுத்துவதாக அமையும் 'புரட்சிக்கவி' பில்கணீயம் என்கிற வடநூல் தழுவலாக தமிழில் பாரதிதாசன் வழி வெளிவந்தது.

பாரதிதாசனின் பொதுவுடமை நோக்கு வெளிப்படும் பனுவலாக புரட்சிக்கவி அமைகிறது.


நாடகப்பாங்காக நகரும் புரட்சிக் கவியில் பாத்திர இயக்கமும் உரையாடல் போக்கும் கதையோட்டமும் உயிர்ப்பானவை;

உணர்வுகளைக் கிளர்த்தி விடுவன.

சூழ்ச்சிகளை வென்று காதல் உள்ளங்கள் இணையும் காட்சியை காதல் வெற்றியை அதற்கான முயலுமையை குறியீடாக வாசிக்க முடியும்.

காதலின் கதை சொல்லும் பாரதிதாசன்; கதையூடாக முன்னிறுத்தும் இலட்சிய நோக்கு மீது கவனம் செலுத்த வாசகரை அழைக்கிறார் என வாசிப்புச் செய்யமுடிகிறது.

உதாரன் மீது அமுதவல்லி புரட்சி விதை வீழ்கிறது. ஜனநாயகத்தின் மீது பொதுமகன் கொள்ளும்



காதலாக இதனை வாசிப்புச் செய்ய முடியும்.

அமுதவல்லி என்கிற அரசிளங்குமரி(பொதுமகன்) தமிழ்க்காதலனாகிய உதாரனை (சுதந்திரம்)அடைந்துவிடக்கூடாதென்பதற்காக அவனை குருடென (பயனற்றது) நம்பச்செய்வதும், பொதுமகன் அறிவும் அன்புமற்றவன் சுதந்திரம் பெறத்தகுதியுமற்றவனென்பதை (குஸ்டநோயாளி)என்கிற குறியீடு மூலமும் சூழ்ச்சி கட்டமைகிறது.

உண்மையில் அடக்கு முறையும் ஏமாற்றும் பொய்மையும் தெரியவரும் போது அத்தடைகளை உடைத்தெறிய விடுதலை உணர்வு மேலெழும் என்கிற வாசிப்பு இங்கு முக்கியமாகிறது.

சுதந்திர உணர்வு காதல் போல உறுதியானது என்பதுதான் புரட்சிக்கவியின் குறியீட்டு வாசிப்பு.

இந்த வாசிப்பில் காதல், இயலாமை, வர்க்க முரண்,மனத்துணிவு,எதிர்கொள்ளல், வெற்றி பெறுதல் என் அடக்கு முறை அரசியலுக்கு எதிரான புத்தெழுச்சியை புரட்சிக்கவி மையம்கொண்டுள்ளது.

எனவே பாரதிதாசனின் புரட்சிக்கவியின் காதலுணர்வை வெளிப்படுத்தும் நோக்குடையதல்ல.மாறாக சமூக விடுதலைக்குரலொன்றை எழுப்பும் மக்கள் இலக்கியமாகி நிற்கிறது.இது மானுட நேயத்தினதும் சுதந்திரதாகத்தினதும் அதிர்வெழுச்சியாகவும் இதனை வாசிப்புச் செய்யலாம்.

ஒரு கட்டத்தில் உதாரன் சொல்லுகிறான்.

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலாவென்று காட்டுகிறாய் ஒளி முகத்தை...." மேகம்அதிகாரம்

நிலாசுதந்திரம் என் வாசிப்புச் செய்வதால் சுதந்திர தாகத்தின் பெறுமானத்தை அறியலாம்.அதேபோல் "காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ கரைச்சேற்றால் தாமரையின் வாசம் ப்ரோமோ...."என்கிறான். இருள்அடக்குமுறையின் சூழ்ச்சி, சூரியன்விடுதலையின் எழுச்சியின் வாசிப்புச் செய்யலாம்.

இவ்வாறு புரட்சிக்கவியின் மீது செலுத்தப்படும் குறியீட்டு வாசிப்பு விடுதலையுணர்வைக் கனதியாக்கும்.

மேலும் புரட்சிக்கவி படைப்பின் உச்சமாக அமையும் காதலருக்கு கொலை உத்தரவு பிறப்பித்த லும்;அதற்கான எத்தணிப்பும், பின் மக்கள் திரள் எழுச்சியும் உதவும்,தீர்ப்பு வழங்குதலும், சமூக விடுதலை மீது ஜனநாயக எழுச்சி நோக்கிய மக்கள் சக்தியின் முன்னெழுகை எனகுறியீட்டு வாசிப்பு பெறும் முக்கியம் மிகுந்த அவதானிப்புக்குரியது.




(ஊ)

பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் நீண்ட பக்கங்களில் வேர் போல் படிந்திருக்கிறது நினைவுகளின் படிவு கல்வி கோட்பாடுகளாலானது; கல்வி செயற்பாடுகளினாலானது; கல்வி மதிப்பீடுகளினாலானது;

கல்வி என்பது அனுபவங்களின் திரட்சி;கல்வி என்பது பண்பாடுகளின் கிளர்ச்சி கல்வி சமூகங்களின் பற்றினாலானது; சமூகங்களின் விழிப்புணர்வினாலானது பாடசாலை தர்ம விதிப் புத்தகம் சமூக ஈடுபாட்டினால் நிரம்பொளி பெற வேண்டியது

(எ)

பல்லின பன்மொழிச் சமூகத்தின் பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் அட்டைப்படத்திலிருக்கிறது பெயரிடு வகைகள் சிங்களம், தமிழ், முஸ்லிம், இனவழிப்பெயர்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கமென மதவழிப் பெயர்கள் சிங்களம்,தமிழ், ஆங்கிலமென மொழி வழிப்பெயர்கள் முத்திரை குத்தப்பட்ட பாடசாலை தர்மவிதிப் புத்தகம் எல்லைப்படுத்தப்படும் கூறுபாட்டுக் கூட்டுக்குள் வளருதல் எங்ஙனம் தேசியமொரு கொடியென விரியும் உணர்வு பாடசாலையொரு தேசிய உணர்வின் கூடம் என்பதனை வளர்த்தல் வேண்டும்

**(தொடரும்)**

# நினைவுறு கவிதை

**மஜீத் ஈழத்துக்கவிதையில் நவீனமும், நவீனத்தின் பின்னாலானதுமான கவிதைகளின் புனைவாளராக வெளிப்பட்டவர். கவிதைகளை உணர்வின் சாரமாக,அனுபவத்தின் பிரவாகமாக,மொழிப்புதுமையின் லாவகமாகக் கையாண்டார்.**

**ஏறுவெயில் முதல்கொண்டு பல பனுவல்கள் தந்தவர்.**

**மஜீதின்**

**'ஒரு இலையின் மரணம்'**



**வயதைக் கவனிக்க முடியாத**
**அந்த மரத்திலிருந்து ஒரு இலை**
**காற்றை விலக்கிக் கொண்டு நிலத்தில் விழுகிறது**
**மரத்தடியில் கால் நீட்டி நான் அமர்கிறேன்**
**அந்த இலை முதுமையடைந்திருந்தது**
**பழுக்கவுமில்லை**
**கிளையில் ஒட்டியிருக்கும்போது**
**உற்றுக் கவனிக்காத இலைதான்**
**இன்று என் முழுக்கவனத்தையும் தின்றது**
**அங்கு இடையிடையே வீசும் காற்றில் ஒத்தி விடப்பட்டு தாவி**
**நிலத்தில் உரசி நகர்கிறது**
**வெயிலில் உலர்கிறது**
**கிளையில் இருக்கும் போது**
**நிலத்தில் விழாது காத்த கடைசி மழைத் துளியை**
**என் நேரல்களில் நினைவு கூரலாம்.**



# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா 07

(கடந்த வாரத் தொடர்)

“புனிதமான ஒரு நட்பை கேவலப்படுத்தாதே. ஒரு ஆணும் பெண்ணும் பழகினால் அது காதலா? ஏன் நட்பாக இருக்கக் கூடாதா? எங்கள் நட்பு தூய்மையானது. என்றுமே கலங்கப்படாது. நாம் இருவருமே என்றுமே நல்ல நண்பர்களே தவிர காதலர்கள் அல்ல என்று சீறினான் மண்டேலா. மதோனாவிற்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது.

ஜோங்கிந்தாபாதான் இருவரையும் ஒருவாறு சமாளித்துவிட்டு வழியனுப்பி வைத்தார். மண்டேலா கூறியது முற்றிலும் உண்மை என்பதை ஜஸ்டிஸ் பின்னாட்களிலேயே புரிந்து கொண்டான். அவன் கேலி பேசியதற்காக மண்டேலாவிடம் மன்னிப்பும் கேட்டான்.

மண்டேலாவிற்கு 1937 இல் கிளார்க்பெரி இன்ஸ்டிடியூட் படிப்பு முடிவடைந்தது. அப்போது அவனுக்கு பத்தொன்பது வயது. அதன்பின்னர் ஜஸ்டிஸ் படித்துக்கொண்டிருந்த ஹில்டன் எனும் வெஸ்லியன் கல்லூரியில் மண்டேலா சேர்க்கப்பட்டான். பியூஃபோர்ட் கோட்டையில் இக் கல்வி நிலையம் அமைந்திருந்தது.

ஹில்டன் உயர்பள்ளியும் கிளார்க்பெரி இன்ஸ்டிட்யூட் போலவே மெதடிஸ்ட் தேவாலயத்தால் நடாத்தப்பட்டது. அந்தப் பள்ளியில் இருந்தது போன்றே இந்தப் பள்ளியிலும் ஒரு கண்டிப்பான பேர்வழிதான் அதிபராக பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் பெயர் டொக்டர் ஆர்தர் வெலிங்டன். அவரும் ஒரு வெள்ளைக்காரர். பருத்த தோற்றமுடைய அவர் பென்னாம் பெரிய வயிற்றுடன் காணப்பட்டார்.

மண்டேலாவுக்கு முதன் முதலாக அவரைப் பார்த்தவுடனேயே அவனை அறியாமலேயே சிரிப்பு வந்துவிட்டது. புது அதிபர் வெள்ளைக்காரர் என்ற செருக்குடன் நடந்து கொண்டார். அது மண்டேலாவுக்கு சற்றும் பிடிக்கவில்லை. இப் புது அதிபர் ஹாரிஸ் பாதிரியார் போல நல்ல குணமுடையவர் அல்ல என்பதை வெகு சீக்கிரத்திலேயே மண்டேலா புரிந்து கொண்டான்.

வரலாற்றுக் கதைகளை படிப்பிக்கும் போது பூர்வ குடிகள், பழங்குடிகள் எனும் பதத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் புது அதிபரின் குரலில் அலட்சியமும் அருவருப்பும் மேலோங்கியிருப்பதை மண்டேலா கண்டுகொண்டான். அவன் செய்வதறியாது வாய்மூடி மௌனியாக நின்றான். ஆனால் அவன் உள்ளக் குமுறல்கள் வெடித்தன.

ஒரு சந்தர்ப்பத்தில் டொக்டர் ஆர்தர் வெலிங்டன் என்ற புது அதிபர் “ஆபிரிக்கர்கள் நாகரிகமற்ற காட்டுவாசிகள். நாங்கள் தான் நாகரிகத்திலேயே பிறந்தவர்கள். இன்று ஆபிரிக்கா ஓரளவேனும் நாகரிகமாக இருக்கின்றதென்றால் அதற்கு காரணம் நாங்கள்தான். சிறந்த நாடு இங்கிலாந்து, சிறந்த மொழி ஆங்கிலம்” என்று மார்தட்டி பேசினார்.

இதனைக் கேட்ட மண்டேலாவிற்கு கோபம் தலைவிரித்து தாண்டவமாடியது. நேராக அரண்மனைக்கு வந்து ஜோங்கிந்தாபாவிடம் நடந்ததைக் கூறினான். ஜோங்கிந்தாபா அவனை அமைதிப்படுத்தி “நீ பொறுமையாக இருந்து முதலில் நன்றாகப் படி. படித்து முன்னேறி மக்களுக்குத் தலைவனாகி நியாயத்திற்காக போராடு. அதுவரைக்கும் பொறுத்துக்கொள் மகனே.

உன் இளம் இரத்தம் கொதிக்கிறது. இந் நாட்டுப் பற்றும் எனக்குப் புரிகிறது. என்ன செய்வது நாம் இன்று ஆங்கிலேயர்களின் பிடியில் தான் சிக்குண்டு சின்னாபின்னமாக கிடக்கின்றோம். இதற்கு விடிவு காலம் வெகு சீக்கிரத்திலேயே வரும். நீ அதற்கு தயாராகு. சென்று வா மகனே வென்று வா” என்று கூறி அவனை ஹில்டன் உயர்பள்ளிக்கு அனுப்பி வைத்தார்.

மண்டேலாவும் எதிர்காலத்தை எண்ணியபடி மனதில் தைரியத்தையும் பொறுமையையும் வரவழைத்துக்கொண்டு சினங்கொண்ட சிங்கமும் வெறிகொண்ட வேங்கையுமாக பள்ளிக்கு விரைந்தான்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்



# நடிப்பின் சகாப்தம் நடிகையர் திலகம் சாவித்திரி 02

**(கடந்த வாரத் தொடர்)**

ஏற்கனவே ஜெமினிகணேசன் அலமேலு என்ற பாபுஜியையும், புஷ்பவல்லி என்பவர்களை திருமணம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தான் ஜெமினியை விரும்புவதை லக்ஸ் சோப் விளம்பரம் மூலம் "சாவித்திரி கணேஷ்" எனக் கையெழுத்திட்டு சூசகமாக தெரிவித்தார் சாவித்திரி. இத்தம்பதிகளுக்கு விஜய சாமுண்டீஷ்வரி, சதீஷ் கிருஷ்ணா என்ற இரு வாரிசுகளும் உள்ளனர். சிவாஜி, எம்ஜிஆருக்கு முன் "வணங்காமுடி" படத்தில் மூன்று வேடங்களில் நடித்தவர் சாவித்திரி. மொடர்ன் தியேட்டர்ஸின் "மஹேஷ்வரி" படத்தில் திருடர்கள் தலைவியாக "ராணி ரங்கம்மா" வேடத்தில் பிரமிக்க வைத்தார் நடிகையர் திலகம். 1957 களில் மட்டும் எங்கவீட்டு மகாலட்சுமி, மாயா பஜார், கற்புக்கரசி, வணங்காமுடி, யார்பையன், மஹாதேவி(எம்ஜிஆருடன் நடித்த முதல் படம்), அமரதீபம் (சிவாஜியுடன் இணைந்து நடித்த முதல் படம்) என பத்து படங்களில் நடித்தார் சாவித்திரி. ஆயிரம் ரூபாய் படத்தில் மெட்ராஸ் பாஷை பேசி அசத்தியிருந்தார் சாவித்திரி. சிவாஜி கணேசன்,சாவித்திரி நடிப்பில் உருவான அண்ணன் தங்கை பாசம் கொண்ட "பாசமலர்" இரு திலகங்களையும் உலக சினிமா வரலாற்றில் சரித்திரம் பேசவைத்தது. அன்றும் இன்றும் என்றும் "பாசமலர்"வாடாமல் இருப்பதற்கு நடிகர் திலகமும், நடிகையர் திலகமும் சிந்திய கண்ணீர்த் துளிகளே காரணம். இப்படத்தில் ஆரூர்தாஸ் என்ற சிறந்த கதாசிரியரை சிவாஜிக்கு அறிமுகம் செய்தவர் சாவித்திரியே. ஆரூர்தாஸின் வீரியம் மிக்க வைர வரிகளுக்கு சிவாஜியும்,சாவித்திரியும் வசனம் பேசி "பாசமலரில்"உயிரோட்டம் வழங்கினார்கள். சிவாஜி கணேசன்,எம்ஜிஆர் போன்ற உச்ச நட்சத்திரங்கள் தனக்கான கதைக்களத்தில் தன் பாத்திரம் பளிச்சிடும் வகையில் கதையில் மாற்றங்கள் மேற்கொள்வர். அதே கொள்கையை பானுமதிக்குப் பின் கடைப்பிடித்தவர் சாவித்திரி.வேட்டைக்காரன் படத்தில் முதலில் தேர்வானவர் சரோஜாதேவி.பின் கால்ஷீட் பிரச்சனையில் அவரின் தாயாருடனான கருத்து வேறுபாடு காரணமாக அவ்வேடத்தை சாவித்திரிக்கு வழங்கினார் அதன் தயாரிப்பாளர் சாண்டோ சின்னப்பா தேவர். வேட்டைக்காரன் போன்ற படங்களில் இவரின் சம்பளம் மட்டும் அக்காலத்திலேயே இரண்டரை லட்சம் இப்போது அதன் மதிப்பு பல கோடிகள். "கொஞ்சும் சலங்கை "சாவித்திரிக்கு நூறாவது படமாக அமைந்தது. அதுவரை சாவித்திரிக்கு பி.லீலா,ஜிக்கி,பி.சுசீலா பின்னணி பாடினர். "கொஞ்சும் சலங்கை"யில் எஸ்.எம். சுப்பையா நாயுடு இசையில்,காருக்குறிச்சி அருணாச்சலத்தின் நாதஸ்வர கானத்துடன் கு.மா.பால சுப்பிரமணியம்

இயற்றிய "சிங்கார வேலனே தேவா"என்ற ஜனரஞ்சக பாடலை எஸ். ஜானகி பாடி அசத்தினார். தெலுங்கில் "பெல்லி சேசிச்சூடு", பல்லாத்தூரு, சந்திரஹாரம், தேவதாஸ், ஆர்தங்கி,மிஸ்ஸியம்மா,டொங்கா ராமுடு, மாயா பஜார் என பல வெற்றிப் படங்களை கண்டவர் சாவித்திரி. தமிழில் காத்தவராயன்,பதிபக்தி,கர்ணன்,வேட்டைக்காரன்,பந்த பாசம்,பாவ மன்னிப்பு,பார்த்தால் பசி தீரும்,படித்தால் மட்டும் போதுமா,களத்தூர் கண்ணம்மா,ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்,

கற்பகம்,காத்திருந்த கண்கள்,கை கொடுத்த தெய்வம்,கப்பலோட்டிய தமிழன் என பல தமிழ் படங்களில் சிறப்பாக நடித்தார் சாவித்திரி.காத்திருந்த கண்கள் படத்தில் பணக்கார வீட்டுப்பெண்ணாகவும்,கிராமப் பெண்ணாகவும் சாவித்திரி நடித்த பின் பல நடிகைகள் அதைப்பின் பற்றி இரட்டை வேடங்களில் நடிக்க ஆரம்பித்தனர். இதற்கு அடித்தளம் இட்ட முதல் நடிகை என்ற பெருமைக்குரியவர் நடிகையர் திலகமே. தேவிகா,சரோஜா தேவி,விஜயகுமாரி போன்ற நடிகைகளின் வரவால் சாவித்திரியின் சினிமா வாய்ப்புகள் சற்று குறையத் தொடங்கின. இருப்பினும் ரத்தத்திலகம்,நவராத்திரி, திருவிளையாடல்,

சரஸ்வதி சபதம் போன்ற படங்கள் இவருக்கு மீண்டும் வரவேற்வளித்தன.சரஸ்வதி சபதத்தில் கலைவாணியாகத் தோன்றி நடித்த நடிப்பு அபாரம். நவராத்திரியில் இவர் ஏற்ற "நளினா"பாத்திரம் இவருக்கு பெரும் ஏற்றத்தை அளித்தது.இப்படத்தில் சத்யவான் சாவித்திரி ஓரங்க நாடகத்தில் சிவாஜியும்,இவரும் தோன்றி நடித்த காட்சிகள் பிரமாதம்....

தெலுங்கு திரையுலகில் என்.டி.ராமராவ்,அக்கினேனி நாகேஷ்வரராவ்,எஸ்.வி.ரங்காராவ்,காந்தாராவ் போன்ற உச்ச நட்சத்திரங்களுடன் நடித்தவர் நடிகையார் திலகம்,தமிழும்,தெலுங்கும் சாவித்திரிக்கு இரு கண்கள்.

சாவித்திரி சிறந்ததோர் பரோபகாரி, உதவி என யார் வந்தாலும் முகம் சுளிக்காமல் வாரி வழங்கும் தன்மை கொண்டவர். இந்தியா பாக்கிஸ்தான் யுத்த நிதிக்காக நாடகங்கள் பல நடத்தி அதன் நிதியை அப்போதைய பிரதமர் லால் பஹதூர் சாஸ்திரியிடம் வழங்கினார். தன் சொந்த நகைகளையும் யுத்த நிதியாக வழங்கியவர் சாவித்திரி.

உடல் ஆரோக்கியத்தை கவனிக்கத் தவறிய சாவித்திரி நாளடைவில் பருமனாகத் தோற்றமளித்தார். எனவே சில படங்களில் சாவித்திரி கதாநாயகியாக நடித்ததை ரசிகர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

(தொடரும்)



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# அகத்திமுறிப்பு, அளக்கட்டு, மர்ஹபா பாலர் பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வு




மன்னார், அகத்திமுறிப்பு, அளக்கட்டு, மர்ஹபா பாலர் பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வு கடந்த (19) வெள்ளிக்கிழமை பள்ளிபரிபாலன சபைத் தலைவர் சியாவுத்தீன் மௌலவி தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து பெறுமதியான பரிசில்களையும் வழங்கிவைத்தார். இந் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், மன்னார் வலய பாலர் பாடசாலைகளுக்கான பிரதிப்பணிப்பாளர் அஸ்லம், முசலி கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் உவைஸ், முசலி பிரதேச சபை செயலாளர் நஜீம், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாஹிர், கிராம சேவகர் சஹீல், சமுர்த்தி உத்தியோகத்தர்களான எல்பக் மற்றும் ஆஷிக், ஆசிரிய ஆலோசகர் ஜலீஸ், பாலர் பாடசாலைகளுக்கான இணைப்பாளர் அமீருன் நிஸா, முசலி பிரதேச செயலக சிறுவர் சீர்திருத்த உத்தியோகத்தர் ஹில்மான், குடும்பநல மருத்துவ மாது திருமதி சுதர்சன், சக்கரியா ஆசிரியர், அஸ்கர், உவைஸ், நைசர், மாஹிஸ், றம்சின், அஸ்வர், இணைப்பாளர் முனவ்வர், இளைஞர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், பள்ளிவாசல் தலைவர் உட்பட நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.